# Introduction to Sociology and Social Anthropology

**Prof. (Dr.) S.M. Ayoob**

**Published by**

**Centre for External Degrees and Professional Learning**

**South Eastern University of Sri Lanka**

**Oluvil**

Centre for External Degrees and Professional Learning

# சமூகவியல் மற்றும் சமூக மானிடவியலுக்கான அறிமுகம்

Centre for External Degrees and Professional Learning

Centre for External Degrees and Professional Learning

# சமூகவியல் மற்றும் சமூக மானிடவியலுக்கான அறிமுகம்

பொது கலைமாணி பட்டத்திற்குரியது

ஆண்டு - 01, பருவம் - I

**பாடநூல்**

**பேராசிரியர். கலாநிதி. எஸ். எம். அய்யூப்**

**வெளியீடு:**

வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் மற்றும்
தொழில்சார் கற்கைகளுக்கான நிலையம்
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஒலுவில்.

**Centre for External Degrees and Professional Learning (CEDPL)**

**South Eastern University of Sri Lanka (SEUSL)**

**University Park, Oluvil, Sri Lanka**

Title: SOM 10013

Introduction to Sociology and Social Anthropology

Author: Prof. (Dr.) S.M. Ayoob, Professor in Sociology, SEUSL

Type of Book: Text Book

First Edition: 2023

ISBN:

@2023 South Eastern University of Sri Lanka

All rights reserved. No part of this text book may be reproduced, translated, stored in a retrieval system, or transmitted in any form or by means, electronic, mechanical, photocopying and recording or otherwise, without prior permission of copy right owner and the author.

## நன்றியுரை

சமூகவிஞ்ஞானக் குடும்பத்தில் காணப்படும் மிக இளமையான கற்கைதான் சமூகவியலாகும். சமூகவியல் சமூகத்தைப் பற்றிக் கற்கும் விஞ்ஞானமாகும். சமூகம் பற்றிய அறிவு எல்லாத் தரப்பினருக்கும் அவசியமான அறிவாகும். சமூகம் பற்றித் தெரிந்துகொள்ள முனையும் பொதுமகனுக்கும் சமூகவியலை ஒரு பாடமாக கற்றுக்கொள்ள விரும்பும் ஒரு மாணவனுக்கும் இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகளுக்கான நிலையத்தினால் வெளியிடப்படும் இந்நூல் நிச்சயம் உதவும் என்பதில் சந்தேகமில்லை.

இந்நூலை எழுதி முடிப்பதற்கு ஆரோக்கியத்தைத் தந்த அல்லாஹ்வுக்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். தட்டச்சு செய்து கொடுத்த பாத்திமா றிசாதா, பாத்திமா சிப்னா, ஏ.ஆர். அஸ்றஜ் மற்றும் பாத்திமா நூறாவுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்நூலை எழுதுவதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தந்த CEDPL அங்கத்தவர்களுக்கும் எனது நன்றிகள் சென்று சேரட்டும்.

**பேராசிரியர், கலாநிதி எஸ். எம். அய்யூப்**
தலைவர், சமூகவியல் துறை
சமூகவியல் பேராசிரியர்
இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

## பாடவிதான அறிமுகம்

| | | |
|---|---|---|
| பாடத்தலைப்பு | : | **சமூகவியல் மற்றும் சமூக மானிடவியலுக்கான அறிமுகம்** |
| பாடக் குறியீடு | : | **SOM 10013** |
| வருடம் | : | **01** |
| பெறுமானப் புள்ளி | : | **03** |
| மணித்தியாலங்கள் | : | **45** |

## அறிமுகம்

இப்பாடவிதானம் சமூகவியல் மற்றும் சமூக மானிடவியல் தொடர்பான அடிப்படை அறிவினை வழங்க முற்படுகின்றது. சமூகவியல் மற்றும் சமூக மானிடவியல் தொடர்பான எண்ணக்கருக்கள், அணுகுமுறைகள் மற்றும் கோட்பாடுகளை மாணவர்கள் புரிந்துகொள்ளக் கூடிய வகையில் இலகுவாக இந்நூல் முன்வைக்கின்றது.

## குறிக்கோள் (Aim)

சமூகவியலின் தோற்றம் மானிடவியல், சமூகமயமாக்கம், பண்பாடு, சமூகக் குழுக்கள், அடுக்கமைப்பு, சமூக மாற்றம் போன்ற சமூகவியலுடனும் சமூக மானிடவியலுடனும் தொடர்புடைய எண்ணக்கருக்களை மாணவர்கள் புரிந்துகொள்ளும் வகையில் விளக்குவதே இந்நூலின் நோக்கமாகும்.

## கற்றல் பெறுபேறு (Learning Outcome)

இந்நூலைக் கற்பதன் மூலம்

- சமூகவியலுடன் தொடர்புடைய எண்ணக்கருக்கள், அணுகுமுறைகள் மற்றும் கோட்பாடுகளை புரிந்துகொள்ள முடியும்.
- சமூக மானிடவியலை தெளிவாக கற்றுக் கொள்ள முடியும்.
- சமூகம் பற்றித் தெரிந்துகொண்டு சமூக நலனுக்காக உழைக்க வேண்டும் எனும் ஊக்கத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.
- சமூகத்தின் விதிமுறைகளுக்கேற்ப நடந்துகொள்வதற்கான அறிவைப் பெற்றுக் கொள்ள முடியும்.

## கற்றல் கற்பித்தல் முறை (Teaching & Learning Method)

இப்பாடவிதானம் கற்றல், கற்பித்தல் முறைகளாக பின்வருவனவற்றைக் கையாளுகின்றது.

க.க.மு. 01 : விரிவுரைகள் (Lectures)

க.க.மு. 02 : சிறு குழுக் கலந்துரையாடல் (Small Group Discussion)

க.க.மு. 03 : சமர்ப்பித்தல் (Presentation)

## மதிப்பீட்டு முறை (Method of Evolution)

மாணவர்கள் பருவ இறுதி எழுத்துப் பரீட்சை (Semester - End Written Exam) மூலமாகவும் தொடர்ச்சியான கணிப்பீடுகள் (Continues Assessment) மூலமாகவும் மதிப்பீடுகள் செய்யப்படுவார்கள்.

| | | |
|---|---|---|
| பருவ - இறுதிப் பரீட்சை | - | 70 புள்ளிகள் |
| தொடர் கணிப்பீடுகள் | - | 30 புள்ளிகள் |
| மொத்தம் | - | 100 புள்ளிகள் |

## கணிப்பீட்டு முறை (Method of Assessment)

பின்வரும் அடிப்படையில் தொடர் கணிப்பீடுகள் அமைந்திருக்கும்.

க.மு. 01 : வகுப்பறை கருத்தரங்குப் பரீட்சை / பயிற்சி (Seminar Test / Tutorial)

க.மு. 02 : ஒப்படை (Assignment)

## உள்ளடக்கம்


| அத்தியாயம் | விடயம் | பக்கம் |
|---|---|---|
| 01 | சமூகவியல்: ஓர் அறிமுகம் | **01** |
| 02 | மானுடவியல் | **19** |
| 03 | சமூகவியலும் ஏனைய சமூக விஞ்ஞானங்களும் | **33** |
| 04 | சமூகமயமாக்கல் | **46** |
| 05 | பண்பாடு | **68** |
| 06 | சமூக அந்தஸ்த்தும், சமூக வகிபங்கு | **89** |
| 07 | சமூக குழுக்கள் | **98** |
| 08 | சமூகக்கட்டுப்பாடு | **112** |
| 09 | சமூக வேறுபாடும் சமூக அடுக்கமைப்பு | **125** |
| 10 | சமூக நிறுவனங்கள் | **142** |
| 11 | சமூக இடைவினை | **150** |
| 12 | சமூகம், சமுதாயம் | **164** |
| 13 | சமூக அமைப்பு, சமூக செயல் | **171** |
| 14 | சமூகமாற்றம் | **179** |
| | உசாத்துணை நூல்கள் | **193** |

# அத்தியாயம் 01
# சமூகவியல்: ஓர் அறிமுகம்

**பொருளடக்கம்**

1.1 சமூகவியலின் தோற்றம்
1.2 சமூகவியல் தொடர்பான வரைவிலக்கணங்கள்
1.3 சமூகவியலின் பாடப்பரப்பு/விடயதானங்கள்
1.4 சமூகவியலின் ஆய்வு பரப்பு எல்லை
1.5 சமூகவியலின் பயன்கள்

**அத்தியாயச் சுருக்கம்**

சமூக விஞ்ஞானங்களில் இளமையான கற்கையாகவும் சமூகத்தின் அசைவுகளை முறையாக ஆய்வு செய்கின்ற ஆய்வுகூடமாகவும் சமூகவியல் அமையப்பெற்றுள்ளது. சமூகவியல் தொடர்பான வரைவிலக்கணங்கள், சமூகவியலின் தோற்றம், சமூகவியலுக்கு பங்களிப்புச் செய்த காரணிகள், சமூகவியலின் பாடப்பரப்பு எல்லைகள் மற்றும் சமூகவியலை கற்பதன் முக்கியத்துவம் போன்றவை குறித்து இவ்வத்தியாயம் பேசுகின்றது.

**அத்தியாயத்தின் நோக்கம்**

சமூகவியல் எனும் கற்கையின் தோற்றம் மற்றும் வளர்ச்சி குறித்து மாணவர்களுக்கு தெளிவுபடுத்துவதே இவ்வத்தியாயத்தின் நோக்கமாகும்.

**கற்றல் பெறுபேறுகள்**

இவ்வத்தியாயத்தினை கற்பதன் மூலம் மாணவர்கள்,

- ✓ சமூகவியலின் அடிப்படை எண்ணக்கருக்களை தெரிந்து கொள்ளவார்கள்.

- ✓ சமூகவியலின் தோற்றத்திற்கு வழிவகுத்த பின்னணிக் காரணிகளைப் புரிந்து கொள்ளவார்கள்.
- ✓ சமூகவியலைக் கற்பதன் மூலம் ஏற்படும் மாற்றங்களை தெரிந்து கொள்வார்கள்.

## 1.1. சமூகவியலின் தோற்றம்

சமூகத்தைப் படிப்பதும், அதனை ஆய்வுக்குட்படுத்துவதுமே சமூகவியலின் முதன்மையான இலக்காக இருப்பதனால் சமூகத்தின் விஞ்ஞானம் (Science of society) என சமூகவியலை அறிஞர்கள் அடையாளப்படுத்துகின்றனர். ஓப்பிட்டுரீதியில் சமூகவியலானது அண்மைக் காலத்தில் தனக்குரிய ஆய்வு முறைகளையும் எண்ணக்கருக்களையும் முறையாக விருத்தி செய்து கொண்டதனால் காரணமாக சமூகவியலை ஒரு இளைய பிரிவாகப் பார்ப்பவர்களும் அதே நேரம் நாகரீகத்தின் உதயத்தோடு சமூகம் பற்றிச் சிந்திக்கும் செல்நெறி சமூகத்திலே காணப்பட்டதனால் சமூகவியலை விஞ்ஞானங்களில் முதியது எனக் கருதுகின்றவர்களும் புத்திஜீவித்துவப் புலத்தில் காணப்படவே செய்கின்றார்கள். எனினும் சமூக விஞ்ஞானங்களில் மிகவும் இளைய பிரிவாகவே பெரும்பான்மையோரால் சமூகவியல் பார்க்கப்படுகின்றது.

### ஒகஸ்ட் கொம்டேயிக்கு முற்பட்ட சமூகவியல்

பிரஞ்சு நாட்டு தத்துவவியலாளரான ஒகஸ்ட் கொம்டேயின் அயராத உழைப்பினால் சமூகவியல் ஒரு முறையான கற்கை நெறியாக 19 ஆம் நூற்றாண்டில் வளர்ச்சியடைந்தது. இதன் அர்த்தம் அதற்கு முன் எத்தகைய சமூக சிந்தனையும் (Social thought) இருக்கவில்லை என்பதல்ல. பண்டைக் காலத்தில் சமூக சிந்தனை பல வடிவங்களில் இருந்து வந்துள்ளதனை பல நிகழ்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. தத்துவவியலாளர்கள், சிந்தனையாளர்கள், ஞானிகள் மற்றும் வரலாற்றாசிரியர்கள் தத்தமது எழுத்துக்களில் சமூகவியல் கருத்துக்களை வெளிப்படுத்தி இருக்கிறார்கள்.

பிளேற்றோ, அரிஸ்டோட்டில், கவுடில்யா மற்றும் கன்பூசியஸ், சிசரோ போன்ற பலரின் எழுத்துக்களிலே சமூகத்தின தன்மைகள் குறித்த முறையான விளக்கங்களைக் காணலாம். பிளேற்றோவின் 'குடியரசு' (Republic), அரிஸ்ரோட்டிலின் 'அரசியல்' (Politics), கவுடில்யாவின் 'அர்த்தசாஸ்திரா' (Arthashastra) மற்றும் சிசரோவின் 'நீதி மீது' (On Justice) போன்றவை பண்டைய காலத்தில் சமூக சிந்தனை குறித்து எழுந்த எழுத்துக்களாகும்.

மத்திய காலத்திலும் நவீன யுகத்தின் ஆரம்ப காலகட்டங்களிலும் மனித சிந்தனையை திருச்சபையின் கருத்துக்கள் ஆக்கிரமித்திருந்தனால் மானிட சிந்தனையானது விஞ்ஞான விசாரணைக்கு மாற்றமாக பௌதீகஅதீத அனுமானம் (Metaphysical speculation) குறித்தே அதிகம் அக்கறைகொண்டது. 16ம் நூற்றாண்டுக்கு பின்னர் புத்திஜீவிகளின் செயற்பாடுகள் துரிதமடையத் தொடங்கி, மானிட சமூகம், அதன் இயல்பு, சமூக-அரசியல் அமைப்பு மற்றும் சமூக பிரச்சினைகள் குறித்து ஆவலோடு ஆராயும் போக்கு மேலோங்கியது.

மக்கியவல்லியின் இளவரசன் (The Prince), தோமஸ் ஹொப்ஸின் 'லெவியாதன்' (Leviathan), ரூசோவின் 'சமூக ஒப்பந்தம்' (Social Contract), மொன்டஸ்குவின் 'சட்டங்களின் ஆத்மா' (The Spirit of Laws) மற்றும் அடம்ஸ்மித்தின் 'நாடுகளின் செல்வம்' (Wealth of Nations) போன்றவை இக் காலத்து புலமைத்துவ எழுத்துக்களாகும். இதேபோல் சேர் தோமஸ் மோர், சேர் பிரான்ஸ் பேகன், ஜேம்ஸ் ஹரிங்டன் மற்றும் எச். ஜீ. வெல்ஸ் போன்றோரின் பிரயத்தனங்கள் அனைத்து வகையான குறைபாடுகளிலிருந்தும் விடுபட்ட ஒப்பற்றதொரு கருத்தியல் சமூகத்தை உருவாக்க முயன்றததற்கான சான்றுகளாகும்.

எனினும் 19 ஆம் நூற்றாண்டில்தான் ஒகஸ்ட் கொம்டே, ஹேர்பட் ஸ்பென்சர், எமில் டேர்க்கைம், மற்றும் மெக்ஸ் வெபர் போன்ற பலராலும் சமூகத்தைப் படிப்பதற்கான முறையான முயற்சிகள் தொடக்கிவைக்கப்பட்டன.

**சமூகவியலின் தோற்றத்திற்கு வழிவகுத்த காரணிகள்**

19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில்தான் சமூகவியலானது தனித்துவமான சமூக விஞ்ஞானமாக மாறுவதற்கான எத்தனங்களை எடுத்தது. இதற்கு பின்புலங்களாய் அமைந்த மூன்று காரணங்களை ஈயன் றொபேட்சன் (Ian Robertson) பின்வருமாறு விளக்குகின்றார்.

**அ. கைத்தொழில் புரட்சியும் கைத்தொழில்மயமாக்கமும் (Industrial revoluation and industrialization)**

18 ஆம் நூற்றண்டில் ஐரோப்பாவில் தோன்றிய கைத்தொழில் புரட்சி ஐரோப்பா முழுவதும் மிகையான மாற்றங்களை அள்ளி இறைத்தது. வரலாற்றிலே அதற்கு முன் அப்படியொரு மாற்றம் அங்கு இடம் பெற்றிருக்கவில்லை. புதிய கைத்தொழில் நிறுவனங்களும் தொழில்நுட்ப விருத்திகளும் சமூகத்தையும் பௌதீக சூழலையும் மாற்றியமைத்தன. கிராமியம் நகர வாழ்வாக மாறத் தொடங்கியது. வீட்டிலே இடம்பெற்ற உற்பத்திகள் கைத்தொழில்சாலைகளுக்கு கொண்டு செல்லப்பட்டன. சமூகம் அதுவரை கட்டிக்காத்த நம்பிக்கைகள், நடைமுறைகள், கருத்தியல்கள் மற்றும் வழக்கங்கள் மாற்றமுறத் தொடங்கின. புதிது புதிதான சமூகப் பிரச்சினைகள் தோன்றி சமூகத்தை ஆட்டங்காணச் செய்தன. அதுவரை சமயத்துக்கு (Religion) இருந்த செல்வாக்கு மெது மெதுவாக சரியத் தொடங்கியது. இந்தப் பின்னணியிலேயே சமூகம் பற்றி சிந்திக்கும் தனித்துவமானதொரு கற்கையின் தேவை குறித்து பலராலும் உணரப்பட்டது.

**ஆ. இயற்கை விஞ்ஞானத்தின் வளர்ச்சியினால் ஏற்பட்ட உந்துதல்கள் (Inspirattion from the growth of natural science)**

19 ஆம் நூற்றாண்டில் இயற்கை விஞ்ஞானம் வளர்ச்சியின் உச்சத்தில் காணப்பட்டது. இயற்கை விஞ்ஞானிகளின் பாரிய அடைவுகள் சமூக விஞ்ஞானிகளையும் அத்தகைய அடைவுகளின்பால் தூண்டின. பௌதீக அல்லது இயற்கை தோற்றப்பாடுகளை கட்சிதமாக புரிந்து கொள்ள முடியுமானால் ஏன் சமூக தோற்றப்பாடுகளை (Social phenomena)

புரிந்து கொள்ள முடியாது எனும் கேள்விக்கு விடையாக சமூக உலகைப் (Social world) புரிந்து கொள்ளும் முயற்சியில் சமூகவியல் தோற்றம் பெற்றது. ஒகஸ்ட் கொம்டே, ஹேர்பட் ஸ்பென்ஸர், எமில் டுர்கைம் மற்றும் மெக்ஸ் வெபர் போன்றோர் சமூக உலகை தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும் என நம்பி தொழிற்பட்டார்கள்.

**இ) காலணித்துவ நாடுகளில் காணப்பட்ட சமூகங்கள் மற்றும் பண்பாடுகளினது பல்வகைத்தன்மை**

ஐரோப்பிய காலணித்துவ சக்திகள் வித்தியாசமான சமூகங்களையும் பண்பாடுகளையும் தத்தமது காலணித்துவ நாடுகளிலே கண்டார்கள். இந்த சமூகங்கள் கொண்டிருக்கும் பண்பாடுகளின் பல்வகைத்தன்மை அக்கால சமூக விஞ்ஞானிகளிடையே சிக்கல் மிகுந்த புத்திஜீவித்துவ சவாலை (Intellectual challenge) தோற்றுவித்தது. ஏன் சில சமூகங்கள் மட்டும் அதீத முன்னேற்றத்தை அடைந்துள்ளன? சமூக மாற்றத்தின் வேகம் ஏன் வேறுபட்ட நாடுகளில் வேறுபட்ட அளவில் காணப்படுகின்றது? இவை போன்ற இன்னும் பல கேள்விகளுக்கு விடையளிக்கும் முகமாகவே சமூகவியல் எனும் சுதந்திரமான கற்கை தோற்றம் பெற்றது.

**சமூகவியல் ஒரு விஞ்ஞானமாக ஸ்தாபிக்கப்படல்**

சமூகவியலை இஸ்திரப்படுத்தி, அதனை சுதந்திரமான மற்றும் தனித்துவமானதொரு விஞ்ஞானமாகவும், சமூக விஞ்ஞானக் குடும்பத்தில் மகத்தானதொரு கற்கை நெறியாகவும் மாற்றி வைத்த பெருமை ஒகஸ்டே கொம்டே மற்றும் ஹேபர்ட் ஸ்பென்சர் எனும் இரு முக்கிய சமூகவியலாளர்களுக்கு சென்றுசேரும். பிரெஞ்சு தத்துவவியலாளரான ஒகஸ்டே கொம்டே (Auguste Comte : 1798-1857) சமூகவியல் (Sociology) என்னும் சொல்லை அறிமுகப்படுத்தினார். சமூகக் கோட்பாடுகளை உருவாக்குவதன் மூலம் சமூகத்தை முன்னேற்ற முடியும் என அவர் கருதினார். பௌதீகத் தோற்றப்பாடுகளைப் போலவே சமூகத் தோற்றப்பாடுகளையும் புறவயமாக புரிந்து கொள்ள முடியும் என

அவர் நம்பினார். அதற்கான முறைகளையும் சமூகவியலிலே அவர் விருத்தி செய்தார்.

சமூகவியலின் இரண்டாவது தந்தையாக கொள்ளப்படுகின்ற ஆங்கில நாட்டுப் புத்திஜீவியான ஹேபர்ட் ஸ்பென்சர் (Herbett Spencer : 1820-1903) சமூகவியலை ஒரு முறையான கற்கையாக (Systematic discipline) மாற்றுவதற்கு மும்முரமாக உழைத்தார். மூன்று பாகங்களிலே வெளியிட்ட ‘சமூகவியலின் கொள்கைகள்’ (Principles of Sociology) எனும் நூல் இதற்கு ஆதாரமாகும். சமூகவியல் ஆய்வு செய்யவேண்டிய தலைப்புகளையும் அவர் செவ்வனே விளக்கினார். சமூகத்தின் வேறுபட்ட பாகங்கள் ஒன்றுடன் ஒன்று ஒருங்கிணைந்து சமூகம் முறையாக மற்றும் தொடராக இயங்க அப்பாகங்கள் எவ்வாறு உதவுகின்றன என விளக்கிக் காட்டினார்.

இவர்கள் இருவரோடும் கார்ல்மாக்ஸ் (Karl Marx: 1818-1883), எமில் டுர்கைம் (Emil Durkheim: 1858-1917), மெக்ஸ் வெபர் (Max Weber: 1864-1920) போன்றவர்களும் சமூகவியலை நன்கு வளப்படுத்தியிருக்கிறார்கள்.

கார்ல் மார்க்ஸ் 19 ஆம் நூற்றாண்டின் முக்கிய சிந்தனையாளர்களுள் ஒருவராவார். இவர் தன்னை சமூகவியலாளராக அறிமுகப்படுத்திக் கொள்ளாத போதும் இவருடைய பணிகள் சமூகவியலை மேம்படுத்தியிருக்கின்றன. இவரினால் விருத்தியாக்கப்பட்ட முரண்பாட்டு அணுகுமுறை (Conflict approach) இன்னும் உயிர்ப்புடனேயே இருக்கின்றது. சமூகத்தில் காணப்படும் முரண்பாடுகளை இவர் கண்டறிந்ததோடு முரண்பாடுகளை ஒழிப்பதற்குத் தேவைப்படும் புரட்சி (Revolution) யின் அவசியம் குறித்தும் கருத்துத் தெரிவித்தார்.

கார்ல் மார்க்ஸ் சமூக முரண்பாடு பற்றி அதிக அக்கறை கொண்ட போதும் பிரான்ஸ் நாட்டு சமூகவியலாளரான பேராசிரியர் எமில் டுர்கைம் சமூகங்கள் கூட்டாக இயங்கும் தன்மை குறித்து அதிக கவனம் செலுத்தினார். இவருடைய சமூகவியல் ஆய்விலே தனியனிலும் பார்க்க

குழுக்களுக்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. சமூக வாழ்வானது சமூக உண்மைகள் (Social facts) எனும் அடிப்படையைக் கொண்டே பார்க்கப்பட வேண்டும் என அவர் கருதினார்.

மெக்ஸ் வெபரின் அணுகுமுறை டுர்கைமிற்கு மாற்றமானதாகக் காணப்பட்டது. சமூகத்தின் அடிப்படையான கூறாக தனியனே மெக்ஸ்வெபரின் ஆய்வில் கொள்ளப்பட்டான். அதேபோல் முக்கியமான பல விடயங்களில் கார்ல்மாக்ஸிக்கு மாற்றமான சிந்தனைகளையும் கொண்டிருந்தார். பணிக்குழுவாட்சி, அதிகாரம், சமூக அடுக்கமைவு, சமயம் மற்றும் முதலாளித்துவம் போன்றவை குறித்த இவருடைய கருத்துக்கள் புதிய சிந்தனைப் போக்கை புலமைத்துவப் புலத்திலேயே உருவாக்கியது.

இந்த ஐவருமே (கொம்டே, ஸ்பென்ஸர், கார்ல் மாக்ஸ், டேர்க்ஹைம், வெபர்) சமூகவியலின் முன்னோடிகள் அல்லது உருவாக்கத் தந்தைகள் (Pioneers or founding fathers of sociology) என அழைக்கப்படுகின்றார்கள். மறுபுறம் சமூகவியலின் உண்மையான தந்தையாக (Real father of sociology) இப்னு கல்தூன் (Ibn Khaldun:1332AD - 1406 AD) எனும் வட ஆபிரிக்காவில் உள்ள தூனூசியா நாட்டில் தூனிஸ் (Tunis) என அழைக்கப்படுகின்ற இடத்தில் பிறந்த முஸ்லிம் புத்திஜீவியே கொள்ளப்பட வேண்டும் எனும் வாதம் பல்வேறு புத்திஜீவித்துவ மட்டங்களிலே நிலவுகின்றது. சமூகவியலுக்கு மட்டுமல்லாது சமூக விஞ்ஞானக் கற்கைகளான பண்பாட்டு வரலாறு (Culture History) மற்றும் வரலாற்றின் தத்துவம் (Philosophy of History) போன்ற பல கற்கைகளின் தந்தையாகவும் இவர் கொள்ளப்படுகின்றார். இவர் அரபு மொழியிலே எழுதிய 'முகத்திமா' அதாவது 'முன்னுரை' (Prolegomenon) என்னும் நூல் இதற்கான ஆதாரமாகும். ஒகஸ்டே கொம்டேயிற்கு பல ஆண்டுகளுக்கு முன்னரேயே சமூகவியலின் அடிப்படைகளை (Foundations of sociology) இவர் உருவாக்கிவிட்டதாக ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள்.

**20 ஆம் நூற்றாண்டில் சமூகவியலின் விருத்தி**

19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் பெருந்தொகையான சமூகவியலாளர்களும் சமூக சிந்தனையாளர்களும் சமூகவியலின் விருத்திக்காக உழைத்திருக்கின்றார்கள். லெஸ்டர் எப்.வாட் (Lester F. Ward:1841-1913), ஜோர்ஜ் சிம்மல் (George Simmel:1858-1918), காப்ரியல் டார்ட் (Gabrial Tard:1843-1904) சிமோல் (Small:1854-1926), கிட்டிங்ஸ் (1855-1931), சி.எச். கூலி (C.H. Cooly:1864-1929), ஜேம்ஸ்வார்ட் (1843-1925), எல்.ரீ.ஹொப் ஹவுஸ் (L.T. Hophouse:1864-1929), ஈ.ஏ வெஸ்டர்மார்க் (E.A.Westermark:1862-1939), பரேடோ (Pareto:1848-1923), சீ.ஏ எல்வூட் (Charles A. Elwood:1873-1946), பென்ஜமின் கிட் (Benjamin kidd:1858-1916), ஈ.பி ரைலர் (E.B. Tylor:1832-1917), ஜே.ஜி. பிரேசர் (J.G. Pireser: 1854-1941) மற்றும் பீ. மலினோஸ்கி (B. Malinowski: 1884-1942) போன்றவர்கள் இவர்களுள் முக்கியமானவர்கள்.

20 ஆம் நூற்றாண்டில் பிரான்ஸ், ஜேர்மனி, அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து போன்ற நாடுகளில் சமூகவியலானது துரித வளர்ச்சியைக் கண்டது. பீ.ஏ சொறோகின் (P.A. Sorokin), தல்கொட் பார்சன் (Talcott Parson), ஆர்.கே.மேட்டன் (R.K. Merton), ஆர். எம். மகில்வர் (R.M. MacIvar), மொரிஸ் கிங்ஸ்பேர்க் (Morris Kinsberg), கிங்ஸ்லி டேவிஸ் (Kingsley Davis), டபிள்யூ.எப்.ஒக்போர்ன் (W.F. Ogburn), கிம்போல் யங் (Kimball Young), பீ.ஜீ. மேர்டக் (P.G. Murdock), ஈ.ஏ றொஸ் (E.A. Ross), எம்.என் சிறினிவாஸ் (M.N . Srinivas) மற்றும் ஜீ.எஸ். கூரே (G.S.Ghurye) போன்ற பிரபலமான சமூகவியலாளர்கள் தமது எழுத்துக்களாலும் சமூக விசாரணைகளாலும் சமூகவியலை வளப்படுத்தினார்கள்.

இத்தகையோரது சிந்தனைகள் மற்றும் அணுகுமுறைகளின் செல்வாக்கினால் அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் பல பல்கலைக்கழகங்களில் சமூகவியல் ஒரு பாடமாக கற்பிக்கப்பட்டது.

காலப்போக்கில் அப்பல்கலைக்கழகங்களில் சமூகவியல் தனித்துறையாகவும் தோற்றுவிக்கப்பட்டது. முதன்முதலாக 1890 இல் கன்சாஸ் பல்கலைக்கழகத்தில் சமூகவியல் ஒரு தனிப்பாடமாக அறிமுகப்படுத்தப்பட்டது. 1892 இல் அல்பியன் று.சிமோல் என்பவர் சிக்காகோ பல்கலைக்கழகத்தில் சமூகவியல் துறையை ஆரம்பித்து வைத்தார். ஐரோப்பாவில் முதலாவதாக 1895 இல் போர்டியாக்ஸ் பல்கலைக்கழகத்தில் (University of Bordeaux) சமூகவியல் துறையை எமில் டுர்கையிம் தொடக்கி வைத்தார். 1919 இல் மெக்ஸ் பெவர் மியூனிச் பல்கலைக்கழகத்தில் சமூகவியல் துறையை ஆரம்பித்தார் (கருணாநிதி, 2008). மேற்கின் பல்கலைக்கழகங்களிலும் கீழைத்தேய பல்கலைக்கழகங்களிலும் சமூகவியல் தனித்துறையாக வளர்ச்சியடைந்தது. மாணவர்கள் விரும்பி கற்கின்ற பாடமாகவும் அது மாறத்தொடங்கியது.

முதலாவது உலக யுத்தத்தின் பின்புதான் இந்தியாவில் சமூகவியல் ஒரு கற்கை நெறியாக (Academic discipline) அறிமுகப்படுத்தப்பட்டது. ஜீ.எஸ் கூரே (G.S. Ghurye), ஆர் .கே. முகர்ஜி (R.K. Mukherjee), டீ.பீ முகர்ஜி (D.P. Mukherjee), ஹுமாயுன்கபீர் (Humayun Kabir), ஏ. அய்யப்பன் (A. Aiyappan), டீ.ன்.மஜும்தார் (D.N.Majumdar), எம்.என். சினிவாஸ் (M.N. Srinivas), எஸ்,சீ. டியூப் (S.C. Dube) பீ.என். பிரபு (P.N. Prabhu) மற்றும் ஏ.ஆர்.தேசாய் (A.R. Desai) போன்ற சமூகவியலாளர்கள் இந்தியாவில் சமூகவியலின் வளர்ச்சிக்காக உழைத்தார்கள். இந்தியாவில் காணப்பட்ட பல்வகைச் சமூகங்கள் அவர்கள் பண்பாடுகள் ஏராளமான சமூகவியல் ஆய்வுகளை வேண்டி நின்றன. இந்தியப் பல்கலைக்கழகங்கள் பலவற்றிலே சமூகவியல் ஒரு கற்கை நெறியாக இன்று கற்பிக்கப்படுகின்றது. இந்தியாவைப் போன்றே இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்கள் அனைத்திலும் சமூகவியல் ஒரு முன்னணிக்கற்கையாகவும் மாணவர்கள் அதிகம் விரும்பி படிக்கும் கற்கையாகவும் மாறியுள்ளது.

## 1.2. சமூகவியல்: வரைவிலக்கணங்கள்

ஆரம்பத்தில் சமூகத் தத்துவமாகவும் (Social philosophy) வரலாற்றின் தத்துவமாகவும் (Philosophy of history) கருதப்பட்ட சமூகவியலானது சுதந்திரமான சமூக விஞ்ஞானமாக 19ஆம் நூற்றண்டில்தான் மாறியது. பாரம்பரியமாக பிரெஞ்சு சிந்தனையாளரான ஒகஸ்ட் கொம்டே (Auguste Comte) என்பவரே சமூகவியலின் உருவாக்கத் தந்தையாகக் கருதப்படுகின்றார். சமூகவியல் என்னும் சொல்லை இவர் 'ஒன்றிணைதல்' எனும் கருத்தைக் குறிக்கும் சோசியஸ் (Socius) எனும் சொல்லைக் கொண்டும் விஞ்ஞானம் மற்றும் கற்கை எனும் பொருளைக் குறிக்கும் 'லோகோஸ்' (Logos) என்னும் சொல்லைக் கொண்டும் உருவாக்கினார். சமூகவியல் என்பதன் பொருளாக (Etymological meaning) 'சமூகம் பற்றிய கற்கை' (Science of society) எனக் கொள்ளப்படுகின்றது. 19ஆம் நூற்றாண்டின் சமூக சிந்தனையாளரும் தத்துவவியலாளருமான ஜே.எஸ் மில் (J.S.Mill) இப் புதிய கற்கை நெறிக்கு 'நெறியியல்' (Ethology) என்னும் பெயரைச் சூட்டினார். எனினும் 'ஹேபட் ஸ்பென்சர்' உட்பட பலர் செய்த அயராத உழைப்பின் காரணமாக சமூகவியல் (Sociology) என்னும் பெயரே வரலாற்றில் நிலைத்தது.

சமூகவியல் குறித்து கச்சிதமான வரைவிலக்கணத்தை வழங்குவதில் வேறுபட்ட சமூகவியலாளர்கள் தத்தமது சிந்தனை மரபில் நின்று வேறுபட்ட வரைவிலக்கணங்களை வழங்கியுள்ளார்கள்.

சமூகவியல் என்பது சமூக நிகழ்வுகள் (Social phenomena) பற்றிய விஞ்ஞானமாகும் என்கின்றார் ஒகஸ்ட் கொம்டே.

சமூகம் பற்றிய பொதுவான விஞ்ஞானமாகும் என்பது கிங்ஸ்லி டேவிஸ் (Kingsly Davis) இன் வரையறை.

சமூகக் குழுக்களுடன் தொடர்புறும் விஞ்ஞானமாகும் என்பது ஹரி எம் ஜோன்சன் (Hurry M. Johnson) இன் வரைவிலக்கணம்.

சமூக நிறுவனங்கள் பற்றிய விஞ்ஞானமாகும் என்பது எமில் டுர்கைம் (Emil Durkheim) சொல்லும் வரைவிலக்கணம்.

கூட்டு நடத்தை (Collection behavior) பற்றிய விஞ்ஞானமாகும் என பார்க் (Park) கூறுகின்றார்.

சமூக உறவுகள் பற்றிய விஞ்ஞானமாகும் என சிமோல் (Small) கூறுகின்றார்.

மனிதனைப் பற்றியும் அவன் உறவு கொள்ளும் மானிட சூழல் பற்றியதுமான கற்கையாகும் என்பது ஹென்றி பெயாசைல்ட் (Henry Fairchild) சமூகவியல் பற்றி கூறும் வரையறையகும்.

ஒரு பரந்துபட்ட பார்வையில் நோக்கும் போது சமூகவியல் என்பது மானிட இடைவினைகள், இடைத் தொடர்புகள், அவர்களது நிலைமைகள் மற்றும் விளைவுகள் போன்றவை பற்றிய கற்கையாகும் என மொரிஸ் கிங்ஸ்பேக் (Morris Ginsberk) குறிப்பிடுகின்றார்.

மானிட சமூக வாழ்க்கை குழுக்கள் மற்றும் சமூகங்கள் பற்றிய கற்கையாகும் என்பது அந்தோனி கிட்டின்ஸ் (Anthony Giddens) சமூகவியல குறித்து கூறும் விளக்கமாகும்.

மேலே கூறப்பட்ட வரைவிலக்கணங்கள் வேறுபட்ட கோணங்களையும், பார்வைகளையும் கொண்டிருந்த போதும் மனிதன் அவனது சமூக உறவு மற்றும் அவனது சமூக அக்கறை போன்றவற்றின் மீது சமூகவியல் அக்கறை கொள்கின்றது என பொதுவாகக் கூறலாம்.

## 1.3. சமூகவியலின் பாடப்பரப்பு / விடயதானங்கள் (Subject matter of sociology)

ஆரம்பம் முதலே மனிதன் மீதும் அவன் வாழும் சமூகத்தின் இயக்கம் (Dynamic) மீதுமே சமூகவியலாளர்கள் தமது கவனத்தை செலுத்தி வந்திருக்கிறார்கள். மனிதன் - சமூகம் என்ற இரண்டின் மீதே அவர்களது கவனக்குவிப்பு மாறி மாறி இருந்து வந்துள்ளது. பொதுவாக பின்வரும்

மூன்று கேள்விகளுக்கு சமூகவியல் பதிலளிக்க முயல்வதாகக் சமூவியலாளர்கள் சுட்டிக்காட்டுகின்றார்கள்.

அ. எப்படி/ ஏன் சமூகங்கள் தோற்றம் பெறுகின்றன?

ஆ. எப்படி/ ஏன் சமூகங்கள் தொடர்ந்தும் நிலைபெறுகின்றன?

இ. எப்படி/ ஏன் சமூகங்கள் மாற்றமடைகின்றன?

சமூகவியல் ஆராயும் விடயதானம் குறித்து சமூகவியலாளர்கள் பல்வேறு அவதானங்களையும் கருத்துக்களையும் தெரிவித்திருக்கின்றார்கள். அவ்வகையில் சமூகவியலின் ஆய்வு விடயங்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிட முடியும்.

மானிட சமூகம் மற்றும் பண்பாடு குறித்த பகுப்பாய்வை சமூகவியல் கண்ணோட்டத்தில் சமூகவியலாளர்கள் மேற்கொள்கின்றார்கள். அவர்கள் தமது கவனத்தைச் சமூகத்தின் பரிணாமம் (Evaluation of society) மீது குவிப்பதோடு சமூகத்தின் வரலாற்று உருமாற்றம் (Historical transformation of society) ஏன் நிகழ்கின்றது? அதற்கான காரணங்கள் யாவை? எனும் கேள்விகளுக்கு விடைகாணும் விதத்தில் அமைத்துக் கொள்கின்றார்கள். மேலும் சமூகவியல் பகுப்பாய்விலே விஞ்ஞான முறைக்கு (Scientific method) உரிய முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது.

சமூக செயல்கள் (Social action) சமூக உறவுகள், தனிநபர் ஆளுமை, நகர கிராமிய பழங்குடி சமூதாயங்கள், சங்கங்கள், ஒழுங்கமைப்புகள் மற்றும் சனத்தொகை போன்ற சமூக வாழ்வின் பிரதான கூறுகள் மீது சமூகவியல் தனது கவனத்தை செலுத்துகின்றது.

சமூகவியலானது குடும்பம், உறவுமுறை, சமயம், சொத்து, பொருளாதாரம், அரசியல் மற்றும் கல்வி போன்ற அடிப்படையான சமூக நிறுவனங்களின் விருத்தி, கட்டமைப்பு மற்றும் தொழிற்பாடு குறித்து பேசுகின்றது.

சமூகவியலானது அடிப்படை சமூக செயன்முறைகளான (Fundamental social processes), ஒற்றுமை, போட்டி, சமூக முரண்பாடுகள் (யுத்தம், புரட்சி) தொடர்பாடல், சமூக வேறுபாடு, அடுக்கமைப்பு, சமூகமயமாதல், கருத்தேற்றம் (Indoctrination), சமூக கட்டுப்பாடு, பிறழ்வு (குற்றம், தற்கொலை), சமூக ஒருங்கிணைப்பு (Social integration) சமூக மாற்றம் போன்றவை குறித்து முன்னிலைப்படுத்தி பேசுகின்றது.

தற்கால சமூகவியல் தத்துவரீதியான மற்றும் கருத்தியல் ரீதியான பார்வைகளை விட தர்க்கரீதியான மற்றும் அனுபவரீதியான (Empirical) பார்வைக்கு முன்னுரிமை கொடுக்கின்றது. மேலும் சமூக ஆய்வுகளிலே விஞ்ஞான முறைகளை பயன்படுத்த முயல்கின்றது.

சமூகவியலானது எண்ணக்கருக்கள் (Concepts) மற்றும் கோட்பாடுகள் (Theories) போன்றவற்றை உருவாக்குவதில் கவனமெடுக்கின்றது.

இன்றைய நவீன யுகத்தில் சமூகவியவாளர்கள் சமூகவியலின் புதிய புதிய கிளைகளைத் தோற்றுவிப்பதில் ஆர்வம் காட்டுகின்றனர். கல்விச் சமூகவியல், வரலாற்றுச் சமூகவியல், சமயச் சமூகவியல், மருத்துவ சமூகவியல், பிரயோக சமூகவியல், விவசாயச் சமூகவியல், சமூகபொறியியல், நீர்ச்சமூகவியல், குற்றச் சமூகவியல் மற்றும் குடும்பச் சமூகவியல் போன்றவை அவற்றுள் சிலவாகும்.

### 1.4. சமூகவியலின் ஆய்வு பரப்பு எல்லை (Scope of sociology)

எல்லா விஞ்ஞானங்களும் தனக்கேயுரிய ஆய்வு எல்லைகளையும் வரையறைகளையும் கொண்டிருக்கின்றன. சமூகவியலின் எல்லை எது என்பதில் சமூகவியலாளர்களிடையே ஒருமித்த கருத்து இல்லை. வீ.எப். கல்பேர்டன் (B.F. Calberton) சமூகவியலின் எல்லை எங்கே தொடங்குகின்றது, எங்கே முடிகின்றது என வரையறுப்பது கடினமான ஒரு பணியாகும் எனக் கூறுகின்றார். எனினும் இது தொடர்பாக இரு வகையான சிந்தனை முகாம்கள் (School of thought) காணப்படுகின்றன.

அ. விசேட முகாம் / வடிவவியல் முகாம் (The specialistic or formalistic school)

ஆ. பல்துறை முகாம் (The synthetic school)

முதல் சிந்தனை முகாமை நிறுவியவராக ஜேர்மன் நாட்டு சமூகவிலாளரான ஜோர்ஜ் சிம்மல் (George Simmel) கொள்ளப்படுகின்றார். இவரோடு சேர்த்து மெக்ஸ்வெபர், சிமோல் மற்றும் டொனிஸ் போன்ற இன்னும் பலரும் இத்துறையை வளர்த்திருக்கிறார்கள். சமூகவியல், சமூக உறவின் சில வடிவங்களை (Forms) மட்டும் படித்தால் போதுமானது என்றும் அதன் உள்ளடக்கங்களை (Contents) படிக்க தேவையில்லை என்றும் இவர்கள் கூறுகின்றார்கள். சமூகவியலின் எல்லைகளை இவர்கள் குறுக்கிவிட்டதாக ஏனைய முகாம்களை சேர்ந்தோர் விமர்சிக்கின்றார்கள்.

இரண்டாம் வகை அணியினர் சமூகவியலை ஒரு பொதுவான சமூக விஞ்ஞானமாக (General social science) மாற்ற முயல்கின்றனர். இவ்வணியைச் சேர்ந்தவர்களாக எமில் டுர்க்கைம், ஹொப் ஹவுஸ், கிங்ஸ்பேக் மற்றும் சொறோகின் போன்றோர் கொள்ளப்படுகின்றனர். சமூக வாழ்வின் பகுதிகள் ஒன்றையொன்று பிரிக்க முடியாத வண்ணம் இணைந்து காணப்படுவதனால் ஒரு சமூகத்தின் மொத்தத்தையும் படிக்க விரும்பும் ஒருவர் இணைந்திருக்கும் பகுதிகளில் ஒன்றை மட்டும் படிக்கும் போது பூரண தெளிவை பெற்றுக்கொள்வது சாத்தியமற்றது என இவர்கள் கூறுகின்றார்கள்.

## 1.5 சமூகவியலின் பயன்கள் (Uses of sociology)

ஒப்பீட்டளவில் சமூகவியல் இளைய கற்கையாகும். எனினும் சமூகவியலின் பங்களிப்பு பல தரப்பினராலும் ஏற்கப்பட்டுள்ளது. இன்றைய நவீன சிக்கல் நிறைந்த சமூகத்தில் சமூகவியலின் பெறுமதியும தேவையும் பல வகைகளிலும் உணரப்பட்டுள்ளது. எனவே சமூகவியலின் முக்கியத்துவத்தை பின்வருமாறு கூறலாம்.

சமூகவியலானது சமூகத்தை விஞ்ஞான வழியில் (Scientific way) ஆராய்கின்றது. சமூகவியலின் தோற்றத்திற்கு முன்னர் மானிட சமூகத்தை அதன் எல்லா சிக்கல் தன்மைகளோடும் விஞ்ஞான பூர்வமாக ஆராய்வதற்குரிய முயற்சிகள் எடுக்கப்படவில்லை. இந்த இடைவெளியை சமூகவியல் பக்குவமாக நிரப்புகின்றது. மானிட சமூகம் பற்றிய விஞ்ஞான அறிவு வேறுபட்ட துறைகளில் முன்னேற்றங்களை அடைவதற்கு அவசியமானதொன்றாகும்.

மனிதனது சமூக இயற்கை (Social nature) பற்றிய அம்சங்களில் சமூகவியல் அதிக அக்கறை கொள்கிறது. மனிதன் ஏன் சமூகப்பிராணியாகக் காணப்படுகின்றான்? ஏன் அவன் சமுக வாழ்வில் பங்கேற்கிறான்? போன்ற கேள்விகளுக்கு சமூகவியல் பதிலளிக்க முயல்வதோடு மற்றும் தனிமனிதன், சமூகம் கொண்டிருக்கும் உறவையும் மனிதன் மீது சமூகம் செலுத்தும் தாக்கத்தையும் ஆராய்கின்றது.

சமூகவியல், சமூகம் பற்றிய புரிதலைப் பலப்படுத்துவதோடு சமூக செயலின் வலுவையும் (Power of social action) அதிகரிக்கின்றது.

சமூகவியலானது நாம் வாழும் சமூகத்தையும் அதன் மனிதர்களையும் மட்டுமன்றி அவர்களது ஊக்கிகள், விருப்புகள், அபிலாசைகள், அந்தஸ்துகள், தொழில்கள், மரபுகள், வழக்காறுகள், நிறுவனங்கள் மற்றும் பண்பாடுகள் குறித்தும் படிக்கின்றது. சுமூகமான வாழ்வு, சகிப்புத் தன்மை மற்றும் புரிந்துணர்வு போன்றவற்றிக்கு இது வழி வகுக்கின்றது.

சமூகவியல் அதனைப் படிக்கும் மக்களிடம் தர்க்கரீதியான அணுகுமுறையை வளர்க்கின்றது. மேலும் அது புறவயமான (Objective) மற்றும் விமர்சனரீதியான பார்வைகளை துண்டுகின்றது. தான் சார்ந்திருக்கும் மக்களது சமயம், பண்பாடு, நிறுவனங்கள மற்றும் கருத்தியல்கள் குறித்து மட்டுமின்றி அடுத்த சமூகம் பற்றியும் இவ்வாறு பார்க்கும் அணுகுமுறையை வளர்க்கின்றது. சமூகங்கள் குறித்த இத்தகைய ஆய்வு, மக்களைப் பரந்த மனம் கொண்டவர்களாக ஆக்குவதோடு காழ்ப்புணர்ச்சி, பிழையான கருத்துக்கள், சுயநலம்,

வர்க்கம் மற்றும் சமய கசப்புணர்வுகள் போன்றவற்றுக்கு அப்பாற்பட்ட ஒரு சமுதாயத்தை உருவாக்க உதவுகின்றது. இந்நிலை வாழ்க்கையை வளப்படுத்துவதோடு அர்த்தம் கொண்டதாகவும் மாற்றுகின்றது.

சமூகவியல், சமூக நிறுவனங்கள் (குடும்பம், பாடசாலை, சமய நிறுவனங்கள் மற்றும் அரசாங்கம்) போன்றவை பற்றிப் படிப்பதோடு அந்நிறுவனங்களுடன் தொடர்புபடும் தனிநபர்களின் உறவு குறித்தும் படிக்கின்றது. சமூகவியல் கொடுக்கும் இத்தகைய அறிவு தனிநபர்களை பலப்படுத்துவதோடு சமூக நிறுவனங்களைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்துகின்றது.

கல்வி நிறுவனங்களில் கற்பிக்கப்படும் ஒரு பாடமாக (Teaching subject) சமூகவியல் மாறிவிட்டது. அத்தகைய கல்விப் புலத்தை தாண்டி நடைமுறை (Practical) சார்ந்தும் சமூகவியல் தொழில்படுகின்றது. இது பிரயோக சமூகவியல் (Applied sociology) என அழைக்கப்படுகின்றது. பொதுமக்கள் நடைமுறையில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை ஆராய்ந்தெடுத்து தீர்வு காணமுயல்கின்றது.

அபிவிருத்தியடையாத நாடுகளில் சமூகவியலின் தேவை மென்மேலும் உணரப்படுகின்றது. பொருளாதார முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்ட எந்தத் திட்டமும் சமூகப் பின்புலங்களைக் கருத்திற் கொண்டு வரையப்பட வேண்டும். அவ்வாறல்லாத போது அத்திட்டம் தோல்வியையே தழுவும் என்பதால் பொருளியலாளர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்களின் கவனங்களை சமூகவியல் ஈர்த்துள்ளது.

சமூகத்திலே காணப்படுகின்ற சமூகப் பிரச்சனைகளை தீர்ப்பதற்கு சமூகவியலின் தேவை அவசியமானதாகும். சமூகமானது வறுமை, பிச்சையெடுத்தல், வேலையின்மை, விபச்சாரம், அதிக சனத்தொகை, குடும்ப-சமூதாய சீர்குலைவு, இனப்பிரச்சனைகள், குற்றம், நெறிபிறழ்வு, சூதாட்டம், போதைவஸ்த்துப் பாவனை, இளைஞர் அவதி மற்றும் தீண்டாமை போன்ற சமூகப் பிரச்சனைகளை கொண்டிருக்கின்றது. இவற்றைத் தீர்ப்பதற்கு கவனமான ஆய்வுகள் தேவைப்படுகின்றன. சமூகவியல் அவற்றைச் செய்கின்றது. சமூகம் பற்றிய திட்டமிடலுக்கும்

புரிதலுக்கும மற்றும் விருத்திக்கும் சமூகவியல் பற்றிய அறிவு முக்கியமானதாகும். எனவேதான் புனரமைப்பையும் சீர்திருத்தத்தையும் சமூகத்திற்கு கொண்டுவரும் வாகனமாக சமூகவியல் கருதப்படுகின்றது.

பழங்குடி மக்களது நல்வாழ்வை (Welfare of tribal society) மேம்படுத்தும் திட்டங்களை அரசாங்கம் வகுப்பதற்கு சமூகவியலின் பங்களிப்புகளும் அதன் ஆய்வுகளும் பெரிதும் துணை புரிந்திருக்கின்றன. நாகரீகமடைந்த மக்களோடு பழங்குடி மக்களும் சரிக்குச் சமமாக பார்கப்பட வேண்டும் எனும் மனப்பாங்கை சமூகவியல் வளர்திருக்கின்றது.

**சுருக்கம்**

- ✓ ஒகஸ்ட் கொம்டே சமூகவியல் கற்கையை தொடங்கிவைப்பதற்கு முன்னரேயே சமூக சிந்தனை இருந்துள்ளது.
- ✓ சமூகவியலின் தோற்றத்திற்கு பல்வேறு காரணிகள் வழிவகுத்துள்ளன.
- ✓ ஒகஸ்ட் கொம்டே, ஹேர்பட் ஸ்பென்ஸர், கார்ல் மாக்ஸ், எமில் தொர்கைம், மெக்ஸ் வெபர் ஆகிய ஐவரும் சமூகவியலின் முன்னோடிகள் என அழைக்கப்படுகின்றார்கள்.
- ✓ சமூகவியலின் ஆய்வு பரப்பு எல்லை குறித்து இருவகையான நிலைப்பாடுகள் காணப்படுகின்றன.

**பயிற்சி வினாக்கள்**

1. சமூகவியல் தொடர்பான அறிஞர்களின் கருத்துக்களை குறிப்பிடுவதோடு சமூகவியலின் தோற்றத்திற்கு பின்புலனாய் அமைந்த காரணங்களை விளக்குக.
2. சமூகவியலை ஏன் கற்க வேண்டும் என்பதற்கான நியாயங்களை தருக.
3. சமூகவியலின் ஆய்வு பரப்பு எல்லையையும் சமூகவியல் தொடர்பான வரைவிலக்கணங்களையும் தருக.

**திறவுச் சொற்கள்**

சமூக சிந்தனை, கைத்தொழில் புரட்சி, இயற்கை விஞ்ஞானம் மற்றும் சமூக தோற்றப்பாடுகள்.

**உசாத்துணை நூல்கள்**


1. அய்யூப், எஸ்.எம். (2013). *சமூகவியல் அடிப்படை எண்ணக்கருக்கள்*. ஒலுவில்: சமூக விஞ்ஞானங்கள் துறை, இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.
2. கருணாநிதி, மா. (2008). *கல்விச் சமூகவியல்*. கொழும்பு-சென்னை: குமரன் புத்தக இல்லம்.
3. Giddens Anthony. (2005). *Sociology*. Cambridge: Polity Press.
4. Haralambos, M., & Heald R.M. (2004). *Sociology: Themes and perspectives*. London: Harper Collins Publishers Limited.
5. Landis Paul, H. (1990). *Sociology: An introduction*. Massachusetts: Ginn and Company a Xerox Education Company.
6. Rao Shankar. (2002). *Sociology*: *Primary principles*. New Delhi: S. Chand and Company Ltd.

# அத்தியாயம் 02

# மானிடவியல்

**பொருளடக்கம்**

2.1 மானிடவியல் அறிமுகம்
2.2 மானிடவியலின் பிரிவுகள்
2.2.1 உடல்சார் மானிடவியல்
2.2.2 பண்பாட்டு மானிடவியல்
2.2.3 மொழி மானிடவியல்
2.2.4 தொல்லியல் மானிடவியல்

**அத்தியாயச் சுருக்கம்**

மனிதனைப் பற்றி படிப்பதே மானிடவியலாகும். மானிடவியல் மனிதனை உயிரியல் நிலையிலும், பண்பாட்டு நிலையிலும் படிக்கின்றது. மேலும் கடந்த கால மனிதனையும் படிக்கின்றது. மனிதனின் மொழி தொடர்பாகவும் ஆராய்கின்றது.

**அத்தியாயத்தின் நோக்கம்**

மானிடவியலையும் அதன் பிரிவுகளையும் மாணவர்களுக்கு தெளிவுபடுத்துவதே இவ்வத்தியாயத்தின் நோக்கமாகும்.

**கற்றல் பெறுபேறுகள்**

இவ்வத்தியயத்தைக் கற்பதன் மூலம் மனிதனைப் படிக்கும் மானிடவியலையும் அதன் பிரிவுகளையும் மாணவர்கள் தெளிவாக கற்றுக் கொள்வார்கள்.

## 2.1 அறிமுகம்

மானிடவியல் என்பது மனித சமூகங்கள் மற்றும் பண்பாடுகளின் தோற்றம் மற்றும் விருத்தி பற்றிய கற்கையாகும். மக்களின்

கற்றுக்கொண்ட நடத்தையே (Learnt behaviour of people) பண்பாடு ஆகும். மொழிகள், நம்பிக்கை, அமைப்புகள், சமூக கட்டமைப்புகள், நிறுவனங்கள் மற்றும் சடப்பொருட்கள் போன்றவற்றை பண்பாடு உள்ளடக்குகின்றது.

கடந்தகால மற்றும் தற்கால சமூகங்களின் பண்புகளை பல்வேறு நுட்பங்களைப் பயன்படுத்தி மானுடவியலாளர்கள் ஆய்வு செய்கின்றார்கள். அவ்வாறு செய்வதன் மூலம் வரலாறு தோறும் உலக மக்கள் எவ்வாறு வாழ்ந்து வந்திருக்கின்றார்கள் என்பதை ஆராய்ந்து விபரித்துக் காட்டுகின்றார்கள். மானுடவியலாளர்கள் மானுட பாடங்களை (Human subjects) தெளிவாகவும் பக்கச்சார்பற்ற வகையிலும் ஆய்வு செய்வதை பிரதான இலக்காக கொள்கின்றார்கள்.

மக்களது நாளாந்த வாழ்வில் பங்கேற்பதன் மூலம் மானுடவியலாளர்கள் உள்ளூர் நிறுவனங்கள், பண்பாடுகள் மற்றும் நடைமுறைகள் குறித்த விளக்கங்களை வழங்க முடியும். இது பங்குபற்றல் அவதானம் (Participant observation) என அழைக்கப்படுகின்றது.

மானிடவியல் (Anthropology) எனும் சொல் மனிதன் (Human) எனும் கருத்தைக் குறிக்கும் அந்திரபோஸ் (Anthropos) எனும் சொல்லிலிருந்தும் கற்கை (Study) எனும் கருத்தைக் குறிக்கும் லோகோஸ் (Logos) எனும் சொல்லிலிருந்தும் உருவாக்கப்பட்டது. எனவே மானிடவியல் என்பது மனிதர்களைப் பற்றிய ஆய்வு என சுருக்கமாக சொல்லலாம். நேரம் மற்றும் கால எல்லைக்கப்பால் மனிதர்களோடு தொடர்புடைய அனைத்தையும் மானிடவியலாளர்கள் கற்றுக்கொள்வதற்கும் புரிந்து கொள்வதற்கும் முனைகின்றார்கள்.

மானிடவியல் என்பது மானிட சனத்தொகை பற்றிய கற்கையாகும். அங்கே மானிட இருப்புடன் தொடர்புடைய உயிரியல், பண்பாடு, தொல்லியல் மற்றும் மொழியியல் அம்சங்கள் முழுமையாக

ஆராயப்படுகின்றன. மானிடவியலாளர்களுக்கு இவ்வனைத்து அம்சங்கள் பற்றிய அறிவு இருக்கவேண்டும் என சுட்டிக்காட்டப்படுகின்றது.

**மானிடவியல் வரைவிலக்கணங்கள்**

அரிஸ்டோட்டிலே மானிடவியலாளர் (Anthropologist) எனும் சொல்லை எவன் ஒருவன் அவனைப்பற்றி பேசுகிறானோ அவனே மானிடவியலாளர் எனும் கருத்தில் பயன்படுத்தியுள்ளார். கி.பி. 1789 இல் 'அன்த்ரோபோலஜி' (Anthropology) எனும் தலைப்பில் ஒரு நூலை இமானுவல் கான்ட் வெளியிட்டுள்ளார். இந்நூல் மனிதனின் தோற்றம் பற்றிக் கூறுகின்றது. கி.பி. 1655 இல் கான்ட் இற்கு முன்னர் 'Anthropologie-Abstracted' எனும் நூல் வெளிவந்திருக்கின்றது. அந்நூல் மனித ஆன்மாவின் வரலாறு மற்றும் மனித உடல் கூற்றியலை அறியும் துறை என மானிடவியலை வரையறுக்கின்றது (பக்தவத்சலபாரதி, 1999).

மானிடவியல் என்பது பண்பாடு மற்றும் அனுபவத்தின் முழுமையான கற்கை என பிரான்ஸ் போவாஸ் (Franz Boas) குறிப்பிடுகின்றார்.

மனிதன் மற்றும் அவனது வேலைகள் பற்றிய விஞ்ஞானமே மானிடவியலாகும் என குரோபர் குறிப்பிடுகின்றார்.

மானிடவியல் என்பது இந்தப் பூமியில் மனிதன் தோன்றியதிலிருந்து அவர்களின் உடல், சமுக மற்றும் பண்பாட்டு வளர்ச்சி மற்றும் மனிதர்களின் நடத்தை பற்றியதான விஞ்ஞனமாகும் என ஜோக்கோப்ஸ் மற்றும் ஸ்டெர்க் கூறுகின்றார்கள்.

மானிடவியலின் ஒரு பிரிவு மனிதனை உயிரியல் நிலையில் ஆராய்கின்றது. மானிடவியலின் மற்றுமொரு பிரிவு மனிதனை சமூதாய விலங்காக எடுத்துக்கொண்டு அவனை பண்பாட்டு நிலையில் ஆராய்கின்றது. தொல்லியல் மானிடவியல் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்த மனிதனைப் பற்றிப் படிக்கின்றது. மொழி மானிடவியல் மனிதனின் மொழி பற்றி பல்வேறு நிலைகளில் நின்று

படிக்கின்றது. இப்படி கடந்தகால மனிதன், நிகழ்கால மனிதன், மனிதனின் உயிரியல் நிலை மற்றும் பண்பாட்டு நிலை என நான்கு கோணங்களிலும் மானிடவியல் மனிதனைப் படிப்பதால் மானிடவியல் மனிதனைப் பற்றிய ஒரு முழுமையான விஞ்ஞானம் என்றும் அதன் அணுகுமுறை முழுதளாவிய அணுகுமுறை (Holistic approach) எனவும் கூறப்படுகின்றது (பக்தவத்சலபாரதி, 1999).

## 2.2 மானிடவியலின் பிரிவுகள்

### 2.2.1 உடல்சார் மானிடவியல் (Physical anthropology)

இது உயிரியல் மானிடவியல் (Biological anthropology) எனவும் அழைக்கப்படும். மக்களின் தோற்றம், பரிணாமம் மற்றும் பல்வகைத் தன்மை குறித்து உடல்சார் மானிடவியல் ஆராய்கின்றது. உடல்சார் மானிடவியலாளர்கள் மூன்று விடயங்களில் கவனம் செலுத்துகின்றார்கள்.

அ. மனிதன் மற்றும் மனிதனற்ற உயர்ப்பாலூட்டிகளின் பரிணாமம்.

ஆ. மனித மாறுபாடு (Variation) மற்றும் அதன் முக்கியத்துவம்.

இ. மனித நடத்தையின் உயிரியல் அடிப்படைகள்.

உடல்சார் மானிடவியல் மூன்று கேள்விகளுக்கு விடையளிக்கின்றது.

அ. மனிதன் எப்போது தோன்றி எந்த எந்த நிலையில் விருத்தியடைந்து இன்றுள்ள நிலையை அடைந்துள்ளான்?

ஆ. மனிதன் இன்றுள்ள நிலையை அடைவதற்கு எந்தெந்த நிகழ்ச்சிகள் காரணமாய் இருந்தன? அவை எவ்வாறு நிகழ்ந்தன?

இ. இக்கால மக்கள் வெள்ளையர்கள், கறுப்பர்கள், நெட்டையானவர்கள், குட்டையானவர்கள், தடித்த உதட்டினர்,

மெலிந்த உதட்டினர், சுருள் மயிரினர், சுருளற்ற மயிரினர் போன்ற எண்ணற்ற உயிரியல் கூறுகளில் வேறுபட்டுப் பல்வேறு இனங்களாக இருப்பதற்கு காரணமென்ன? எதிர்காலத்தில் இவர்களிடையே எவ்வகையான மாற்றம் நிகழும்? (பக்தவத்சலபாரதி, 1999).

உடல்சார் மானிடவியலில் பல்வேறு பிரிவுகள் காணப்படுகின்றன.

1. **தொல்மானிடவியல் (Palaeoanthropology)**

இது புதைவடிவ (Fossil) மற்றும் தொல்பொருள் பதிவுகள் மூலம் மனிதனது பரிணாம வளர்ச்சி பற்றி ஆராய்கின்றது.

2. **மூலக்கூற்று மானிடவியல் (Molecular anthropology)**

டிஎன்ஏ (DNA) யில் உள்ள பரம்பரை அலகு பற்றிய தகவல் மூலம் மனித பரிணாமம் ஆராயப்படுகின்றது.

3. **பல் மானிடவியல் (Dental anthropology)**

இது பல்லின் பரிணாமம் மற்றும் வளர்ச்சி குறித்தும் பற்களின் மாறுபாடு குறித்தும் கவனம் செலுத்துகின்றது.

4. **மானிடஉடலளவையியல் (Anthropometry)**

மனித உடலின் அளவீடுகள் மற்றும் விகிதாசாரங்கள் பற்றிய ஆய்வு இதுவாகும்.

5. **விலங்கின நடத்தையியல் (Ethology)**

விலங்குகளின் நடத்தை பற்றிய அறிவியல் ஆய்வு இதுவாகும். விலங்குகளின் தொடர்பாடல், வேட்டை, பாதுகாப்பு போன்றவை இவ்வாய்வினுள் உள்ளடங்கும்.

### 6. மருத்துவ மானிடவியல் (Medical anthropology)

பண்பாட்டு, வரலாற்று மற்றும் அரசியல் சக்திகளின் சூழலில் ஆரோக்கியம் மற்றும் நோய் எவ்வாறு வடிவமைக்கப்படுகின்றது மற்றும் புரிந்துகொள்ளப்படுகின்றது என இப்பிரிவு ஆராய்கின்றது.

### 7. ஊட்டச்சத்து மானிடவியல் (Nutritional anthropology)

மனித உணவுப் பயன்பாட்டை வடிவமைக்கும் உயிரியல் மற்றும் சமூக சக்திகளின் தொடர்புகளில் இது அக்கறை செலுத்துகின்றது.

### 8. தடயவியல் மானிடவியல் (Forensic anthropology)

இது ஒரு வகை எலும்புக்கூடு பகுப்பாய்வாகும். குற்ற வழக்குகளைத் தீர்ப்பதற்கு தொல்லியல் நுட்பங்களை இது பயன்படுத்துகின்றது.

### 9. உயர்பாலூட்டியல் (Primatology)

பாலூட்டித் (Mammal) தொகுதியில் மனிதன் இடம்பெறும் வரிசை உயர்பாலூட்டி (Primate) ஆகும். உயர்பாலூட்டி வரிசையில் மனிதன், மனிதனின் நேர் மூதாதையர்களான வாலில்லாக் குரங்குகள் (Apes), அவற்றின் மூதாதையர்களான குரங்கினங்கள், அக்குரங்குகளின் மூதாதையர்களான தொடக்ககால குரங்கினங்கள் போன்றவை அடங்கும். மனிதனைத் தவிர ஏனைய குரங்கினங்கள் அனைத்தும் மனிதரல்லாத உயர்பாலூட்டிகள் (Non-human primates) என அழைக்கப்படுகின்றது (பக்தவத்சலபாரதி, 1999). உயர்பாலூட்டிகள் பற்றிய ஆய்வு மனிதனின் உயிரியலையும் பண்பாட்டையும் அறிய உதவுகின்றன.

### 10. பரிணாமவியல் (Study of evolution)

இது உயிரினங்களின் பரிணாமம் குறித்து ஆராய்கின்றது.

**11. ஒப்பீட்டு உடற்கூற்றியல் (Comparative anatomy)**

இரண்டு இனங்களின் உடற்கூற்றியல் ஒற்றுமைகள் மற்றும் வேறுபாடுகள் பற்றிய ஆய்வு இதுவாகும்.

**12. இனவியல் (Raciology)**

ஓர் இனத்தைச் சேர்ந்தவர்கள் ஏனைய இனத்தவர்களிடமிருந்து எவ்வாறு வேறுபடுகின்றார்கள் என்பது பற்றி இது ஆராய்கின்றது.

**13. தோல்கூற்றியல் (Dermatoglyphics)**

மனிதனின் உள்ளங்கைகளிலும், உள்ளங்கால்களிலும், விரல்களிலும் உள்ள இரேகைகள், வரியமைப்புக்கள் முதலானவற்றையும் தலைச்சுழிகளையும் பற்றி அறியும் பிரிவே இதுவாகும் (பக்தவத்சலபாரதி, 1999).

**14. மனிதச் சூழலியல் (Human ecology)**

மனிதனுக்கும் இயற்கைக்கும் உள்ள உறவை இது ஆராய்கின்றது.

**15. சனத்தொகை மரபியல் (Population genetics)**

சனத்தொகையின் மரபணுக் கலவை (Genetic composition) பற்றி இது படிக்கின்றது.

**16. கருவியலும் உடலியங்கியலும் (Embryology and physiology)**

கரு உருவாவதிலிருந்து இறப்புவரை மனித உடலியக்கத்தில் ஏற்படும் அனைத்தின் கூறுகளையும் இது படிக்கின்றது.

**17. இனமேம்பாட்டியல் (Eugenics)**

உன்னதமான மற்றும் குறைபாடுகள் இல்லாத மனிதர்களை திட்டமிட்ட அடிப்படையில் விஞ்ஞான ரீதியாக உருவாக்க முயலும் பிரிவே இதுவாகும்.

18. **பிரயோக உடல்சார் மானிடவியல் (Applied physical anthropology)**

இது சமூகத்தில் குறிப்பாக உயிரியல் அம்சங்களில் மானிடவியலின் பயன்பாட்டைப் பற்றி பேசுகின்றது.

### 2.2.2 பண்பாட்டு மானிடவியல் (Cutural anthropology)

உலகம் முழுவதும் வாழும் சமூகதாயங்களின் பண்பாட்டை கால ஒழுங்கில் ஆராயும் பிரிவே பண்பாட்டு மானிடவியலாகும். பண்பாட்டை ஆய்வுப் பொருளாக எடுத்துக்கொண்டு ஆராய முற்பட்ட ஆரம்பகால ஆங்கிலேய மற்றும் அமெரிக்க அறிஞர்களின் அணுகுமுறையை அடிப்படையாகக் கொண்டு இது சமூதாய மானிடவியல் (Social anthropology) மற்றும் பண்பாட்டு மானிடவியல் எனும் இரு பிரிவுகளில் வைத்து நோக்கப்படுகின்றது. சமூதாய மானிடவியல் ஆங்கில மானிடவியல் என்றும் பண்பாட்டு மானிடவியல் அமெரிக்க மானிடவியல் என்றும் அழைக்கப்படுகின்றது (பக்தவத்சலபாரதி, 1999).

இனக்குழுவியல் (Ethnography) இனக்குழு ஒப்பாய்வியல் (Ethnology) என பண்பாட்டு மானிடவியல் பிரிக்கப்படுகின்றது. ஒரு தனிப்பட்ட இனக்குழு அல்லது மக்களைப் பற்றி படிப்பது இனக்குழுவியல் ஆய்வாகும். வெவ்வேறு மக்களின் பண்புகள் அவர்களிடையே உள்ள வேறுபாடுகள் மற்றும் ஒற்றுமைகள் பற்றி ஒப்பீடு செய்து ஆராய்வது இனக்குழு ஒப்பாய்வியலாகும்

| இனக்குழுவியல் | இனக்குழு ஒப்பாய்வியல் |
|---|---|
| விபரிப்பு முறை (Description) பயன்படுத்தப்படுகின்றது. | ஓப்பீட்டு முறை (Comparative) பயன்படுத்தப்படுகின்றது. |
| நேரடியான கள ஆய்வு மூலம் தரவுகள் சேகரிக்கப்படுகின்றன. | ஏனையவர்கள் திரட்டிய தரவுகள் இங்கு பயன்படுத்தப்படுகின்றன. |

| | |
|---|---|
| ஒரு பண்பாடு அல்லது துணைப் பண்பாட்டின் மீது கவனம் செலுத்துகின்றது. | பல பண்பாடுகள் அல்லது துணைப் பண்பாடுகள் மீது கவனம் குவிகிறது. |

மனித பண்பாடுகள் பற்றிய ஆய்வு மற்றும் ஒப்பீடு பண்பாட்டு மானிடவியலாகும். 19ம் நூற்றாண்டின் இரண்டாம் பாதியில் பண்பாட்டு மானிடவியலில் தோற்றம் பெற்றது. உயிரினங்களின் தோற்றம் பற்றிய டாவினின் கருத்துக்களால் ஈர்க்கப்பட்ட பிரிவே இதுவாகும். பல சமூக-பண்பாட்டு மானிடவியலாளர்கள் சமூகம் மற்றும் பண்பாடுகளில் ஏற்பட்ட பரிணாம வளர்ச்சி குறித்த ஆய்வில் ஈடுபட்டார்கள். மானிட சமூகத்தினதும் அவர்கள் பண்பாடுகளினதும் ஆரம்பநிலையை எழுத்தறிவற்ற சமூகங்கள் புலப்படுத்துகின்றன எனும் நம்பிக்கையை சமூக-பண்பாட்டு மானிடவியலாளர்கள் கொண்டுள்ளனர்.

**பண்பாட்டு மானிடவியலின் துணைப்பிரிவுகள்**

### 1. பொருளாதார மானிடவியல் (Economic anthropology)

உற்பத்தி, நுகர்வு, விநியோகம் (Distribution) பரிமாற்றம் (Exchange) போன்றவை எழுத்தறிவல்லாத மற்றும் விவசாய சமூகங்களில் எவ்வாறு நிகழ்கின்றது என்பதை இது படிக்கின்றது.

### 2. அரசியல் மானிடவியல் (Political anthropology)

ஐரோப்பாவில் 1940 முதல் 1970 வரை சமூக மானிடவியலில் பிரதானமான ஒரு பகுதியாக அரசியல் மானிடவியல் காணப்பட்டது. இது சமூகங்களின் அதிகார அமைப்புக்களை ஆராய்கின்றது.

### 3. உளவியல் மானிடவியல் (Psychological anthropology)

இது உளவியல், நடத்தையியல் மற்றும் மானிடவியல் கருத்துக்களையும் மற்றும் முறைகளையும் பயன்படுத்தி உளவியல் தலைப்புக்களை ஆராயும் முறை இதுவாகும். ஞபகம், பைத்தியம்,

மன ஆரோக்கியம், மனவெழுச்சி போன்ற தலைப்புக்கள் இதற்கு உதாரணங்களாகும்.

**4. சூழலியல் மானிடவியல் (Ecological anthropology)**

மனிதனுக்கும் அவன் வாழும் சூழலுக்குமுள்ள உறவை இது படிக்கின்றது.

**5. இன தொல்லியல் (Ethno- archeology)**

வாழும் மக்களால் தொல்பொருள் தளங்கள் எவ்வாறு உருவாக்கப்படுகின்றன என்பதனைப் புரிந்து கொள்ள சமூக பண்பாட்டு மற்றும் தொல்பொருள் ஆராய்ச்சி முறைகளை இது பயன்படுத்துகின்றது.

**6. சமயத்தின் மானிடவியல் (Anthropology of religion)**

இயற்கை சக்திகள் மீதான நம்பிக்கை, இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்திகள் மீதான நம்பிக்கை இங்கு ஆராயப்படுகின்றன. எழுத்தறிவற்ற மற்றும் விவசாய சமூகங்களின் சடங்குகள் மற்றும் சம்பிரதாயங்கள் இங்கு ஆராயப்படுகின்றது. இது சமயங்களை அவற்றின் சமூக, பண்பாட்டு, வரலாற்று மற்றும் பொருள்சார் நிலையில் ஒப்பிட்டுப் பார்க்கின்றது.

### 2.2.3 தொல்பொருள் மானிடவியல் (Archeological anthropology)

தொல்பொருள் மானிடவியல் கடந்தகால மனிதர்கள் மற்றும் பண்பாடுகளை பொருள் எச்சங்கள் மூலம் கண்டறிய முனைகின்றது. கலைப்பொருட்கள், மண் மற்றும் பண்பாட்டு செயல்முறைகளை அகழ்வாராய்ச்சி மற்றும் பகுப்பாய்வு செய்து தகவல்களை வழங்குகிறது.

முன்வரலாற்றுக் காலத்தில் (Prehistoric period) வாழ்ந்த மக்களின் வரலாற்றையும் வாழ்க்கை முறைகளையும் அவர்களின் பண்பாட்டில் ஏற்பட்ட மாற்றங்களையும் வளர்ச்சியையும் விளக்கும் அறிவியலே தொல்லியல். வேறு வகையில் கூற வேண்டுமாயின் மனித சமுதாயத்தின் வரலாறு எழுத்து வடிவத்தில் ஏறுவதற்கு முன்னர் வாழ்ந்த மக்களின் வாழ்வியலைப் பற்றியதே தொல்லியல். மண்ணுக்கடியில் பெரும்பாலும் மக்கள் பயன்படுத்திய தொழிற்கருவிகளும் இறந்த மக்களுக்காகச் செய்யப்பட்ட ஈமச்சடங்குப் பொருட்களும் புதைபடிவங்களும் மட்பாண்டங்கள், அணிகலன்கள் போன்ற சில பொருள்களும் மட்டுமே கிடைக்கின்றன. அவற்றைகொண்டு அம்மக்கள் வாழ்ந்த காலம், சூழ்நிலை, தொழில், சமுதாயவாழ்க்கை, சமய நம்பிக்கைகள், கலை போன்ற பண்பாட்டுக் கூறுகளை தொல்லியலாளர்கள் ஆராய்கின்றனர் (பக்தவத்சலபாரதி, 1999).

### 2.2.4 மொழியியல் மானிடவியல் (Linguistic anthropology)

இது மானிட மொழிகளின் தன்மையை அவற்றை உருவாக்கிய பண்பாடுகளின் சூழலில் ஆய்வு செய்கின்றது. இத்துறையில் உள்ள மானிடவியலாளர்கள் மொழியின் சமுக மற்றும் பண்பாட்டு அடிப்படைகளை புரிந்து கொள்ள முனைகின்றார்கள்.

அதுபோல் சமுக பண்பாட்டு உருவாக்கம் மொழியியல் நடைமுறைகளில் (Practice) எவ்வாறு அடித்தளமாக உள்ளன என்பதையும் ஆராய்கின்றனர். மொழி எவ்வாறு தகவல் தொடர்புகளை வடிவமைக்கிறது, சமுக அடையாளம் மற்றும் உறுப்பினர்களை உருவாக்குகின்றது, பெரியளவிலான பண்பாட்டு நம்பிக்கைகள், சித்தார்ந்தங்களை ஒழுங்கமைக்கின்றது, இயற்கை மற்றும் சமுக உலகில் பொதுவான பண்பாட்டு பிரதிநிதித்துவத்தை உருவாக்கின்றது என்பதனைப் படிப்பதே மொழி மானிடவியலின் இலக்காகும்.

மொழியியல் மானிடவியல் உலகில் உள்ள பல்வோறு பண்பாடுகளில் உள்ள மொழியின் பல்லினத்தன்மை பற்றிப் படிக்கின்றது. மேலும் மொழிகள் பண்பாட்டை எவ்வாறு பாதிக்கின்றது அல்லது பண்பாடுகளால் எவ்வாறு பாதிப்படைகின்றது என்பதைப் படிக்கின்றது. மொழிசார் மானிடவியலில் பல பிரிவுகள் காணப்படுகின்றன.

1. **ஒப்பீட்டு மொழியியல் அல்லது வரலாற்று மொழியியல் (Comparative or historical linguistics)**

காலப்போக்கில் மொழிகள் எவ்வாறு மாறுகின்றன என்பதில் வரலாற்று மொழியியல் கவனம் செலுத்துகின்றது. ஒப்பீட்டு மொழியியல், ஒலி, சொல்லுருவாக்கம், வாக்கிய அமைப்பு, அர்த்தம் போன்றவற்றில் தோன்றும் வேறுபாடுகள் மற்றும் மாற்றங்களில் கவனம் செலுத்துகின்றது.

2. **விளக்க மொழியில் (Descriptive linguistics)**

மொழிகளின் அமைப்பிலும் பயன்பாட்டு நிலையிலுமுள்ள வோறுபாடுகளைப் பார்க்கின்றது.

3. **அமைப்பியல் மொழியியல் (Structural linguistic)**

அனைத்து மொழிகளிடையேயுமுள்ள பொதுவான கட்டமைப்புகளை ஆராய்கின்றது.

4. **சமுக மொழியியல் (Social linguistics)**

சமுகங்களுக்கிடையே காணப்படும் பேச்சுவழக்கு குறித்து கவனம் செலுத்துகின்றது.

**சுருக்கம்**

- ✓ மனிதனைப் பற்றிய விஞ்ஞானமே மானிடவியலாகும்.
- ✓ உயிரியல் நிலையிலும் பண்பாட்டு நிலையிலும் மனிதனை மானிடவியல் படிக்கின்றது. மேலும் கடந்தகால மனிதனையும் அவனது மொழி வளர்ச்சியையும் படிக்கின்றது. இவ்வாறு எல்லா நிலையிலும் மனிதனை மானிடவியல் படிப்பதனால் அதன் அணுகுமுறை முழுதளாவிய அணுகுமுறை என கூறப்படுகின்றது.
- ✓ உடல்சார் மானிடவியல், பண்பாட்டு மானிடவியல், தொல்லியல் மானிடவியல், மொழியியல் மானிடவியல் ஆகியவை மானிடவியலின் பிரதான பிரிவுகளாகும்.

**பயிற்ச்சி வினாக்கள்**

01. 'மனிதனைப் பற்றிய விஞ்ஞானமே மானிடவியலாகும்'. இக்கூற்றை ஏற்கின்றீரா? சுருக்கமாக விளக்குக.
02. 'மானிடவியலின் அணுகுமுறை முழுதளாவிய அணுகுமுறையாகும்' எனும் கூற்றின் பொருளை விளக்குக.
03. மானிடவியலின் பிரிவுகளை தெளிவாக அராய்க.

**திறவுச்சொற்கள்**

முழுதளாவியம், இனக்குழுவியல், இனக்குழு ஒப்பாய்வியல், உயிர்ப்பாலூட்டியல், பரிணாமவியல்

**உசாத்துணை நூல்கள்**


1. அய்யூப், எஸ்.எம். (2013). *சமூகவியல் அடிப்படை எண்ணக்கருக்கள்*. ஒலுவில்: சமூக விஞ்ஞானங்கள் துறை, இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.
2. பக்தவத்சலபாரதி. (1999). *பண்பாட்டு மானிடவியல்*. சென்னை: மணிவாசகம் பதிப்பகம்.
3. Giddens Anthony. (2005). *Sociology*. Cambridge: Polity Press.
4. Haralambos, M., & Heald R.M. (2004). *Sociology: Themes and perspectives.* London: Harper Collins Publishers Limited.
5. Landis Paul, H. (1990). *Sociology: An introduction*. Massachusetts: Ginn and Company a Xerox Education Company.
6. Rao Shankar. (2002). *Sociology*: *Primary principles.* New Delhi: S. Chand and Company Ltd.

# அத்தியாயம் 03

# சமூகவியலும் ஏனைய சமூக விஞ்ஞானங்களும்
# (Sociology and other social sciences)

**பொருளடக்கம்**

3.1 சமூகவியலும் அரசியலும்
3.2 சமூகவியலும் பொருளியலும்
3.3 சமூகவியலும் மானிடவியலும்
3.4 சமூகவியலும் வரலாறும்
3.5 சமூகவியலும் உளவியலும்
3.6 சமூகவியலும் கல்வியும்
3.7 சமூகவியலும் குற்றவியலும்
3.8 சமூகவியலும் தத்துவமும்

**அத்தியாயச் சுருக்கம்**

சமூக விஞ்ஞானக் குடும்பத்தில் தோன்றிய இளைய கற்கைதான் சமூகவியலாகும். சமூகவியல் ஏனைய சமூக விஞ்ஞானங்களான அரசியல் விஞ்ஞானம், பொருளியல், மானிடவியல், வரலாறு, உளவியல், கல்வி, குற்றவியல் மற்றும் தத்துவம் போன்றவற்றோடு நெருங்கிய தொடர்பையும் சில வேறுபாடுகளையும் கொண்டிருக்கின்றது.

**அத்தியாயத்தின் நோக்கம்**

சமூக விஞ்ஞானமான சமூகவியல் ஏனைய சமூக விஞ்ஞானங்களோடு எத்தகைய தொடர்புகளைக் கொண்டிருக்கின்றது என விளக்குவதோடு எத்தகைய புள்ளிகளில் வேறுபடுகின்றது என்பதனை விளக்குவதே இவ்வத்தியாயத்தின் நோக்கமாகும்.

**கற்றல் பெறுபேறுகள்**

இவ்வத்தியாயத்தைக் கற்பதன் மூலம் மாணவர்கள்,

- ✓ சமூகவியல் ஏனைய சமூக விஞ்ஞானங்களோடு எத்தகைய தொடர்புகளைக் கொண்டிருக்கின்றது என புரிந்து கொள்வார்கள்.
- ✓ சமூகவியல் ஏனைய சமூக விஞ்ஞானங்களிலிருந்து எத்தகைய புள்ளிகளில் வேறுபடுகின்றது என தெரிந்து கொள்வார்கள்.

## 3.1 சமூகவியலும் அரசியல் விஞ்ஞானமும்

**ஒற்றுமைகள்**

- சமூகவியலும் அரசியலும் நெருக்கமானதும் மற்றும் ஆழமானதுமான தொடர்பைக் கொண்டுள்ளது. மொரிஸ் கின்ஸ்பேர்க் வரலாற்று ரீதியாக சமூகவியல் அதன் பிரதான வேர்களை அரசியலிலும் வரலாற்றுத் தத்துவத்திலும் கொண்டுள்ளது எனக் கூறுகின்றார். ஆரம்பத்தில் அரசியல் விஞ்ஞானத்தின் மையமாக கொள்ளப்பட்ட அரசு, ஒரு அரசியல் நிறுவனம் என்பதை விட சமூக நிறுவனமாகவே பார்க்கப்பட்டது.
- சமூகவியல் சமூகத்தின் அனைத்து விடயங்களையும் ஆராய்கின்றது. அரசியல் விஞ்ஞானம் பிரதானமாக அரசியல் கோட்பாடு மற்றும் அரசாங்க நிர்வாகம் தொடர்பாக படிக்கின்றது.
- அரசாங்கம் உட்பட சமூக நிறுவனங்களுக்கிடையிலான இடைத்தொடர்பு குறித்து ஆராய்கின்றது சமூகவியல். அரசியல் விஞ்ஞானம் பிரதானமாக அரசாங்கம் குறித்து அக்கறை கொள்கின்றது.
- சமூகவியலும் அரசியல் விஞ்ஞானமும் ஒன்னுடன் ஒன்று தொடர்புடைய மற்றும் ஒன்றில் ஒன்று தங்கியிருக்கும் இரண்டு சமூக விஞ்ஞானக் கற்கைகளாகும். எனினும் இவை இரண்டும் தனித்துவமான கற்கைகள். தனித்துவமான ஆய்வுப்பரப்பு மற்றும் முறையியல் போன்றவற்றை அவை கொண்டுள்ளன.

- அரசியல் விஞ்ஞானம் அரசுடன் தொடர்புடையது. சமூகவியலும் அரசை மானிட சமூகத்தின் ஒரு சங்கம் (Human association) எனும் வகையில் படிக்கின்றது.
- அரசாங்கம் ஆரம்பத்தில் அரசியல் நிறுவனம் என்பதைவிட சமூக நிறுவனமாகவே பார்க்கப்பட்டது. அரசாங்கத்தை சமூகவியல் ஒரு சமூக நிறுவனமாக பார்க்கின்றது. சமூகவியலும் அரசியல் விஞ்ஞானமும் இணைந்து அரசியல் விஞ்ஞானம் (Political sociology) எனும் பிரிவு உருவாயிருக்கின்றது.
- ஒரு அரசியல் விஞ்ஞானி ஒரு சமூகவியலாளனாகவும் இருக்கவேண்டும் என்று கூறப்படுகின்றது. அரசாங்கத்தின் சட்டங்கள் விதிகள் சமூகத்தைப் பாதிக்கின்றன. திருமணம் பற்றிய அரசின் சட்டங்கள் குடும்பத்தை ஒழுங்குபடுத்துகின்றன.
- சமூகவியலிலும் அரசியல் விஞ்ஞானம் படிக்கும் சில விடயங்கள் உள்ளடங்கி இருக்கின்றன. யுத்தம், புரட்சி அரசாங்க கட்டுப்பாடு, பொதுமக்கள் கருத்து, தலைமைத்துவம், தேர்தல் மற்றும் வாக்களிப்பு போன்றவை அவற்றுள் சில தலைப்புக்களாகும்.
- சில சமூகப் பிரச்சினைகள் அரசியல் பிரச்சினைகளாகவும் கொள்ளப்படுகின்றன. அவை அரசியல் தீர்வுகளை வேண்டி நிற்கின்றன. இனப்பிரச்சினை, இடப்பெயர்வு மற்றும் இனக்கலவரம் போன்ற பிரச்சினைகளை இதற்கு உதாரணமாகக் கூறலாம்.

**வேறுபாடுகள்**

- சமூகவியல் சமூகத்தின் விஞ்ஞானமாகும். அதேவேளை அரசியல் விஞ்ஞானம் அரசினதும் அரசாங்கத்தினதும் விஞ்ஞானமாகும்.
- ஒழுங்குபடுத்தப்பட்ட மற்றும் ஒழுங்குபடுத்தப்படாத சமூகங்கள் அனைத்தையும் சமூகவியல் படிக்கின்றது. அதேநேரம் அரசியல் ரீதியாக ஒழுங்குபடுத்தப்பட்ட சமூகங்களை அரசியல் படிக்கின்றது.
- அரசியல் விஞ்ஞானத்தின் ஆய்வுப்பரப்பை விட சமூகவியலின் ஆய்வுப்பரப்பு பரந்தது.

- மனிதன் ஒரு சமூகவிலங்கு எனும் அடிப்படையிலேயே மனிதனை சமூகவியல் ஆராய்கின்றது. அரசியல் விஞ்ஞானமோ மனிதனை அரசியல் விலங்காகப் பார்க்கின்றது.
- சமூகவியலின் அணுகுமுறை அரசியல் விஞ்ஞானத்திலிருந்து வேறுபட்டது.

### 3.2 சமூகவியலும் பொருளியலும்

**ஒற்றுமைகள்**

- சமூகவியலும் பொருளியலும் நெருக்கமான உறவைக் கொண்டிருக்கின்றது. சமூகவியல் பொருளியலினதும் பொருளியல் சமூகவியலினதும் கிளைப்பிரிவாகக் காணப்படுகின்றது.
- சமூக உறவு பொருளாதார உறவால் தாக்கமடைகின்றது. பொருளாதார நடவடிக்கைகள் பெரியளவிலான சமூக செயற்பாடுகளாகத்தான் பார்க்கப்படுகின்றன.
- பொருளியல் பூரணமாக விளங்கிக் கொள்ளப்படுவதற்கு சமூகவியலின் தேவை அவசியமாகின்றது.
- பொருளாதார நலன் என்பது சமூக நலனின் ஒரு பகுதிதான். பணவீக்கம், வறுமை மற்றும் வேலையின்மை போன்ற பொருளாதார பிரச்சினைகளுக்கு தீர்வுகாண பொருளாதார வல்லுனர்கள் சமூகவியலின் தேவையை நாடுகின்றார்கள்.
- சமூகவியல் பொருளாதாரத்தின் உதவியையும் நாடுகின்றது. பொருளாதாரக் காரணிகள் சமூக வாழ்வைப் பாதிக்கின்றது. சில நேரங்களில் சமூகவியலை விளங்கிக்கொள்வதற்கு பொருளியலின் உதவி தேவைப்படுகின்றது.
- சமூகவியலாளர்கள் பொருளாதார ஒழுங்கமைப்பின் செழிப்பிற்கு பங்களிப்புச் செய்கின்றனர். சொத்து அமைப்பு, தொழிற்பிரிப்பு, தொழில், கைத்தொழில் மற்றும் ஒழுங்கமைப்புக்கள் குறித்த அறிவு சமூகவியலாளர்கள் பொருளியலாளர்களுக்கு வழங்கிய பங்களிப்புக்களாகும்.

- அதேபோல் தொழிலாளர் உறவு, வாழ்க்கைத்தரம், தொழிலாளர்-முதலாளி உறவு, சமூக வர்க்கங்கள், சமூக பொருளாதார திட்டமிடல் மற்றும் சீர்திருத்தம் போன்ற விடயங்கள் சமூகவியலாளர்களும் பொருளியலாளர்களும் அக்கறை கொள்ளும் விடயங்களாகும்.
- அபிவிருத்தியடையாத நாடுகளில் உள்ள பொருளாதார விருத்திகளுடன் தொடர்புடைய பிரச்சினைகள் சமூகவியலாளர்களின் துணைகளுடன்தான் பொருளியலாளர்களால் படிக்கப்படுகின்றன. வறுமை, பிச்சை எடுத்தல், வேலையின்மை மற்றும் அதிக சனத்தொகை போன்ற பிரச்சினைகள் சமூகவியலாளர்கள் மற்றும் பொருளியலாளர்களால் படிக்கப்படுவதோடு இரு சாராரினதும் பங்களிப்புக்களை வேண்டிநிற்கின்றன.

**வேற்றுமைகள்**

- சமூகத்தினதும் சமூக உறவுகளினதும் விஞ்ஞானம்தான் சமூகவியல். ஆனால் செல்வத்தின் விஞ்ஞானம்தான் பொருளியல்.
- சமூகவியல் இளைய கற்கை. பொருளியல் முதியது.
- சமூகவியல் பொதுவான சமூக விஞ்ஞானம். ஆனால் பொருளியல் சிறப்பான சமூக விஞ்ஞானம்.
- மனிதனின் சமூக செயற்பாடுகளை சமூகவியலும் பொருளாதார செயற்பாடுகளை பொருளியலும் கருத்தில் கொள்கின்றது.
- சமூக மாறிகள் அளவிடப்படவோ அல்லது எண்ணிக் கணக்கிடப்படவோ முடியாதவை. ஆனால் பொருளாதார மாறிகள் (Economic variables) அளவிட முடியுமானவை மற்றும் எண்ணிமுடிக்கக் கூடியவை.

### 3.3 சமூகவியலும் மானிடவியலும்

**ஒற்றுமைகள்**

- சமூகவியலும் மானிடவியலும் நெருங்கிய தொடர்பையும் ஒன்றிலொன்று தங்கியிருக்கும் தன்மையையும் கொண்டிருக்கின்றன. மானிடவியலாளர் குரேபர் இரு விஞ்ஞானங்களையும் 'இரட்டைச் சகோதரிகள்' என வர்ணித்துள்ளார். சமூக மானிடவியல் சமூகவியலின் ஒரு பிரிவாகும். மானிடவியல் ஆய்வுகளால் சமூகவியல் பெரிதும் பயனடைந்துள்ளது. தற்கால நிகழ்வுகளை புரிந்து கொள்வதற்கு சமூகவியலாளர்கள் மானிடவியலாளர்களில் தங்கியுள்ளனர் என இவான்ஸ் பிறிச்சாட் (Evans Pritchard) கருத்துத் தெரிவிக்கின்றார்.
- குடும்பத்தின் தோற்றம், திருமணத்தின் ஆரம்பம், தனியாள் சொத்துடமை மற்றும் சமயம் போன்ற சமூகவியலின் உள்ளடக்கங்கள் மானிடவியல் அறிவின் துணையுடன்தான் புரிந்து கொள்ளப்படுகின்றன.
- பண்பாடு, பண்பாட்டுக் கூறுகள், பண்பாட்டு தேக்கம் மற்றும் பண்பாட்டுப் பாங்கு போன்றவை சமூக பண்பாட்டு மானிடவியலிருந்து சமூகவியல் பெற்றுக் கொண்ட கருத்தியல்கள்தான்.
- சமூகவியலும் மானிடவியலும் சமூக விஞ்ஞானக் குடும்பத்தில் உள்ள இரு கற்கைகள். பங்குபற்றல், விடய ஆய்வு, அவதானம் மற்றும் பரிசோதனை போன்ற முறையியலை சமூகவியல் பயன்படுத்துகின்றது. பங்குபற்றல் மற்றும் அவதானம் போன்றவற்றை பிரச்சினையைக் கண்டறிய மானிடவியல் பயன்படுத்துகின்றது.
- எழுத்தறிவுக்கு முந்திய பண்டைய மனிதனை மானிடவியல் ஆய்வு செய்கின்றது. நவீன மற்றும் சிக்கல்மிக்க சமூகங்களை சமூகவியல் படிக்கின்றது.

**வேற்றுமைகள்**

- சமூகவியல் சமூகத்தின் விஞ்ஞானமாகும். மானிடவியல் மனிதன் மற்றும் அவனது நடத்தை பற்றிய விஞ்ஞானமாகும்.
- சமூகவியலின் ஆய்வுப்பரப்பு பரந்தது. மானிடவியலின் ஆய்வுப்பரப்பு வரையறைக்குட்பட்டது.
- சமூகவியல் சமூகத்தை முழுமையாக படிக்கின்றது. சமூகத்தின் ஒரு பகுதியாக மனிதனை படிக்கின்றது மானிடவியல்.
- சமூகத் திட்டமிடலில் சமூகவியல் கரிசனை கொள்கின்றது. திட்டமிடலின் அடிப்படையில் எதிர்காலத்துக்கான ஆலோசனையை வழங்குகின்றது. மானிடவியல் திட்டமிடுவதுமில்லை. ஆலோசனை வழங்குவதுமில்லை.

## 3.4 சமூகவியலும் வரலாறும்

**ஒற்றுமைகள்**

- சமூகவியலும் வரலாறும் இடைத்தொடர்புகளைக் கொண்டிருக்கின்றன. ஜீ. வான். புல்.ஃப் சமூகவியலையும் வரலாற்றையும் வேறுவேறான விஞ்ஞானமாக கருதாமல் இரண்டும் ஒன்று எனக் குறிப்பிடுகின்றார்.
- வரலாறு என்பது ஆவணக் காப்பகம் மற்றும் அறிவின் கருவூலம் அது சமூகவியல் உட்பட ஏனைய சமூக விஞ்ஞானங்களுக்கு தகவல்களை வழங்குகின்றது. சமூகவியலாளர்கள் தற்காலம் குறித்து அக்கறை கொண்டாலும் வரலாறு கொடுக்கும் தகவல்கள் சமூகவியலுக்கு முக்கியமானவை. சமூகவியலின் பிரிவான வரலாற்று சமூகவியல் (Historical Sociology) முற்றுமுழுதாக வரலாற்று தரவுகளில்தான் தங்கியிருக்கின்றது.
- வரலாற்றாசியர்களும் சமூகவியலைப் பயன்படுத்துகின்றனர். வரலாற்றைப் புரிந்து கொள்வதற்கு சமூகவியல் கொடுக்கும் சமூகப் பின்புலம் அவர்களுக்கு முக்கியமானது. இன்று சமூகவியல் கண்ணோட்டத்தில்தான் வரலாறு எழுதப்படுகின்றது. ஏனெனில்

சமூக ரீதியாக முக்கியமில்லாது எழுதப்படும் வரலாறு அர்த்தமற்றதாகிவிடுகின்றது. சமூக ரீதியாக முக்கியத்துவமற்ற வரலாறு, சதையையும் இரத்தத்தையும் எலும்பையும் கொண்ட ஆனால் உயிரில்லாத உடலைப் போன்றது என சுட்டிக்காட்டப்படுகின்றது (ராஓ சங்கர், 2007). வரலாறு என்பது கடந்தகால சமூகவியல். சமூகவியல் என்பது தற்கால வரலாறு என ஜீ. ஈ. ஹோவாட் குறிப்படுகின்றார்.

**வேறுபாடுகள்**

- சமூகத்தின் விஞ்ஞானமான சமூகவியல் தற்கால சமூகத்தைப் படிக்கின்றது. வரலாறோ கடந்த காலத்தையும் மற்றும் கடந்துபோன சமூகங்களையும் படிக்கின்றது.
- சமூகவியல் நவீன அல்லது புதிய கற்கை. வரலாறு முதிய விஞ்ஞானம்.
- சமூகவியல் ஒரு பகுப்பாய்வு விஞ்ஞானமாகும் (Analytical science). ஆனால் வரலாறு விபரண விஞ்ஞானமாகும் (Descriptive science).
- சமூகவியலின் ஆய்வுப்பரப்பு எல்லை விரிந்தது. வரலாற்றின் ஆய்வுப்பரப்பு எல்லை வரையறைக்குட்பட்டது.
- குறிப்பிட்ட சமூக நிகழ்வுகளை மட்டுமே சமூகவியல் படிக்கின்றது. வரலாறு முழு நிகழ்வுகளையும் ஆராய்கின்றது.
- சமூகவியல் பொதுமைப்படுத்தல் விஞ்ஞானமாகும் (Generalizing science). குறிப்பிட்ட சமூக நிகழ்வை ஆராய்ந்துவிட்டு அதனை பொதுமைப்படுத்த முயல்கின்றது. ஆனால் வரலாறு தனிப்பயனாக்குதல் விஞ்ஞானமாகும் (Individualizing science). வரலாறு குறிப்பிட் நிகழ்வை ஆராய்ந்துவிட்டு அரிதான பொதுமைப்படுத்தல்களையே செய்கின்றது.
- சமூகவியல், சமூகவியல் அணுகுமுறையைப் பயன்படுத்துகின்றது. மானிட நிகழ்வுகளில் இருக்கும் சமூக உறவை அது

ஆராய்கின்றது. வரலாறோ கால ஒழுங்கில் வரலாற்று நிகழ்வுகளைப் படிக்கின்றது.

### 3.5 சமூகவியலும் உளவியலும்

**ஒற்றுமைகள்**

- சமூகவியலும் உளவியலும் இடைத்தொடர்புள்ள மற்றும் ஒன்றிலொன்று தங்கியுள்ள இரு சமூக விஞ்ஞானங்களாகும். இவை இரண்டையும் வெவ்வேறான விஞ்ஞானமாகப் பார்ப்பதற்கு கார்ள் பியேர்சன் (Karl Pearson) மறுக்கின்றார். இவை இரண்டு விஞ்ஞானங்களும் இணைந்து சமூக உளவியலை (Social psychology) உருவாக்கியிருக்கின்றது.
- தனிநபர் ஒழுங்கின்மை (Individual disorganization), குற்றம், சிறுவர் நெறிபிறழ்வு, சமூக ஒழுங்கின்மை, பொதுமக்கள் கருத்து, தலைமைத்துவம், யுத்த முரண்பாட்டுகள் மற்றும் சமூகமயமாக்கம் போன்ற கருத்தியல்களில் சமூகவியலாளர்களும் சமூக உளவியலாளர்களும் கவனமெடுக்கின்றனர்.
- சில சமூகப் பிரச்சினைகள் உளவியல் அடிப்படைகளைக் கொண்டிருக்கின்றன. இச்சந்தர்ப்பங்களில் உளவியல் சமூகவியலுக்குக் கைகொடுக்கின்றது. அதேபோல் மனித மனமும் அவன் நடத்தைகளும் சமூக சூழல், பண்பாடு மற்றும் சமுதாயம் போன்றவற்றின் பாதிப்புக்கு உட்படுவதனால் உளவியல் சமூகவியலை நாடுகின்றது.

**வேறுபாடுகள்**

- சமூகவியல் சமூகத்தின் விஞ்ஞானம். உளவியல் மனத்தின் விஞ்ஞானம் (Science of mind).

- உளவியலின் ஆய்வுப் பரப்பு எல்லையை விட சமூகவியலின் எல்லை விசாலமானது.
- சமூகமே சமூகவியல் படிக்கும் அலகு (Unit of study). தனிநபரே உளவியல் படிக்கும் அலகு.
- சமூகவியலானது சமூக செயன்முறைகளையும் (Social processes), உளவியலானது மனச் செயன்முறைகளையும் (Mental processes) படிக்கின்றது.
- மனித நடத்தையை உளவியல் கண்ணோட்டத்தில் உளவியலும் சமூகவியல் கண்ணோட்டத்தில் சமூகவியலும் நோக்குகின்றது.
- இவை இரண்டினதும் முறையியல்கள் கூட வேறுபடுகின்றன.

### 3.6 சமூகவியலும் கல்வியும்

- அறிவின் இரு கிளைகளான கல்வியும் சமூகவியலும் மிக நெருக்கமான தொடர்பைக் கொண்டுள்ளன. கல்வி மிக முக்கியமான சமூக நிறுவனங்களில் ஒன்றாகும்.
- சமூகவியலுக்கு கல்விக்குமுள்ள தொடர்புதான் கல்வியின் சமூகவியலாகும் (Sociology of education). இது கல்வியோடு தொடர்புடைய நிறுவனங்கள் மற்றும் ஒழுங்கமைப்புக்களை ஆராய்கின்றது. மேலும் இது கல்வி எவ்வாறு பண்பாட்டை பரிமாற்றம் செய்யும் முகவராக தொழிற்படுகின்றது என ஆராய்கின்றது.
- சமூகவியலும் கல்வியும் சில இடங்களில் வேறுபட்டு நிற்கின்றது. சமூகவியல் எல்லா வகையான சமூக உறவுகளையும் படிக்கின்றது. இதனால் சமூகவியலின் ஆய்வுப்பரப்பு எல்லை விசாலமானது. ஆனால் கல்விசார் செயற்பாடுகளை மட்டும் கல்வி பார்க்கின்றது.

### 3.7 சமூகவியலும் குற்றவியலும்

- குற்றங்களையும் குற்றவாளிகளையும் படிக்கும் விஞ்ஞானக் கற்கைதான் குற்றவியலாகும். சமூகவியலும் குற்றவியலும்

பரஸ்பரம் ஒன்றுக்கொன்று உதவுகின்றது. சமூகவியலின் பிரிவான குற்றவியல் சமூக வாழ்வின் ஒரு பகுதியான குற்றவாழ்வு (Criminal life) பற்றி அக்கறை கொள்கின்றது.

- குற்ற ஆய்வாளர்கள் (Criminologist) அடிப்படையில் சமூகவியலாளர்கள். இவர்கள் குற்ற நடத்தையை சமூகவியல் நோக்கில் பார்க்கின்றனர். சமூகவியலில் உள்ள கருத்தியல்களையும் நுட்பங்களையும் தனது விசாரணை (Inquiry)யின் போது பயன்படுத்துகின்றனர். குற்றநடத்தை ஒரு சமூக உற்பத்தி (Criminology is basically a social product) எனும் சமூகவியலாளர்களின் கருத்தை குற்றவியல் ஆய்வுகள் நிரூபித்துள்ளன.

### 3.8 சமூகவியலும் தத்துவமும்

சமூகவியலும் தத்துவமும் மனித நடத்தை, சமூக நியமங்கள், ஒழுக்கம் மற்றும் மனிதனின் செயற்பாடுகள் போன்றவை குறித்து ஆழமான புரிதலை வழங்குகின்றது.

இவை இரண்டும் நெருக்கமான தொடர்பைக் கொண்டுள்ளது. சமூகவியலின் கவனம் சமூக மானிடவியல் நடத்தையில்தான் (Human social behaviour) குவிக்கின்றது. இந்த மானிட நடத்தையானது நெறிமுறைகளால் (Ethics) வழிகாட்டப்படுகின்றது. இந்த நெறிமுறைகள் சமூக தத்துவத்தில் (Social philosophy) உள்ளடக்கப்படுகின்றன.

மனித வாழ்வைச் சுற்றியுள்ள பரந்த கருத்துக்களையும் இருப்பின் (Existence) தன்மைகளையும் தத்துவம் ஆராய்கின்றது. மேலும் யதார்த்தம், அறிவு, ஒழுக்கம், நெறிமுறைகள், உரிமைகள், சட்டபூர்வமான தன்மை (Leagality) மற்றும் அழகியல் பற்றிய கோட்பாடுகளை பற்றிப் பேசுகின்றது. அன்றாட வாழ்க்கையில்

தோன்றும் பல்வேறுபட்ட சமூக இடைவினைகள் மற்றும் தொடர்புகள் குறித்து சமூகவியல் ஆராய்கின்றது.

தத்துவம் முழுப்பிரபஞ்சத்தையும் உள்ளடக்கிய ஒரு கல்வித் துறையாகும். ஆனால் மானிட சமூகம் மற்றும் குடிமை வாழ்வை சமூகவியல் படிக்கின்றது.

**சுருக்கம்**

- ✓ சமூகவியல் சமூகவிஞ்ஞானக் குடும்பத்தில் தோன்றிய இளைய கற்கையாகும். அது ஏனைய சமூகவிஞ்ஞானங்களோடு நெருக்கமான தொடர்புகளையும் சில இடங்களில் வேறுபாடுகளையும் கொண்டுள்ளன.
- ✓ அரசியல் விஞ்ஞானம், பொருளியல், மானிடவியல், வரலாறு, உளவியல், கல்வி, குற்றவியல் மற்றும் தத்துவம் போன்ற சமூகவிஞ்ஞானக் கற்கைகளோடு சமூகவியல் தொடர்புகளையும் வேறுபடும் புள்ளிகளையும் கொண்டுள்ளது.

**பயிற்சி வினாக்கள்**

1. சமூகவிஞ்ஞானங்களோடு சமூகவியல் எத்தகைய உறவைக் கொண்டிருக்கின்றது என தெளிவுபடுத்துக.

2. சமூக விஞ்ஞானங்களில் இளமையான கற்கையான சமூகவியல் அரசியல் விஞ்ஞானம், மானிடவியல், வரலாறு ஆகியவற்றுடன் எத்தகைய ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் கொண்டுள்ளது என விபரிக்குக.

**திறவுச் சொற்கள்**

சமூக விலங்கு, அரசியல் விலங்கு, பகுப்பாய்வு விஞ்ஞானம், குற்றநடத்தை, உளச்செயன்முறை

**உசாத்துணை நூல்கள்**


1. Giddens Anthony. (2005). *Sociology*. Cambridge: Polity Press.
2. Haralambos, M., & Heald R.M. (2004). *Sociology: Themes and perspectives.* London: Harper Collins Publishers Limited.
3. Landis Paul, H. (1990). *Sociology: An introduction*. Massachusetts: Ginn and Company a Xerox Education Company.
4. Rao Shankar. (2002). *Sociology*: *Primary principles.* New Delhi: S. Chand and Company Ltd.

# அத்தியாயம் 04

# சமூகமயமாக்கல்

**உள்ளடக்கம்**

4.1 சமூகமயமாக்கல்

4.2 சமூகமயமாக்கல் வகைகள்

4.3 சமூகமயமாக்கல் படித்தரங்கள்

4.4 சமூகமயமாக்கல் முகவர்கள்

4.5 சமூகமயமாக்கத்தின் முக்கியத்துவம்

4.6 சமூகமயமாக்கல் செயன்முறையின் தோல்வியும், சமூக இன்மைப்படுத்தலின் பிரச்சினைகளும்

**அத்தியாயச் சுருக்கம்**

இவ்வத்தியாயம் சமூகமயமாக்கல் குறித்து தெளிவான விளக்கங்களை முன்வைக்க முனைகின்றது. சமூகமயமாக்கல் வகைகள், சமூகமயமாக்கல் படித்தரங்கள் மற்றும் சமூகமயமாக்கல் முகவர்கள் தொடர்பாகவும் இவ்வத்தியாயம் தெளிவாகப் பேசுகின்றது. தற்கால சூழலில் சமூகமயமாக்கல் செயன்முறையின் தோல்விகளும் சமூக இன்மைப்படுத்தலின் பிரச்சினைகளும் எந்தளவு ஒரு தனியனைப் பாதிக்கின்றன எனவும் இவ்வத்தியாயம் மேலும் பேசுகின்றது.

**அத்தியத்தின் நோக்கம்**

சமூகத்தில் இடம்பெறும் சமூகமயமாக்கல் தொடர்பான அறிவையும் அவற்றின் அவசியத்தினையும் மாணவர்கள் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதே இவ்வத்தியத்தினைக் கற்பதன் மூலம் எதிர்பார்க்கப்படும் நோக்கமாகும்.

**கற்றல் பெறுபேறுகள்**

இவ்வத்தியாயத்தினை கற்பதன் மூலம் மாணவர்கள்,

- ✓ சமூகமயமாக்கல் தொடர்பான ஆரம்ப அறிவினையும் சமூகமயமாக்கலின் வகைகள் மற்றும் சமூகமயமாக்கலின் படித்தரங்கள் குறித்த அறிவினையும் பெற்றுக்கொள்வார்கள்.
- ✓ சமூகமயமாக்கல் முகவர்களையும் அவற்றின் பணிகளையும் கற்றுக்கொள்வார்கள்.
- ✓ சமூகமயமாக்கலின் போது இடம்பெறும் பிரச்சினைகள் மற்றும் தோல்விகள் தொடர்பான அறிவையும் பெற்றுக்கொள்வார்கள்.

## 4.1 அறிமுகம்

மனிதன், சமூகம் சார்ந்தவன் மட்டுமல்லாமல் பண்பாடு சார்ந்தவனாகவும் காணப்படுகின்றான். மனிதன், தனது ஆளுமையை வளர்த்துக் கொள்வதற்கான வாய்ப்புக்களையும் வசதிகளையும் பண்பாடுதான் ஏற்படுத்திக் கொடுக்கின்றது. உண்மையில் ஆளுமை விருத்தி ஒரு தானியங்கிச் செயன்முறை (Autometic process) அல்ல. மாற்றமாக பிறக்கும் ஒவ்வொரு குழந்தையினதும் ஆளுமையை வளர்ப்பதற்கான பயிற்சிகளையும் வழிகாட்டல்களையும் சமூகமே அக்கறையுடன் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அவ்வாறு சமூகம் வழங்கும் இந்தப் பயிற்சிதான் (Social training) சமூகமயமாக்கல் (Socialization) என அழைக்கப்படுகின்றது.

**சமூகமயமாக்கல் : எண்ணக்கரு விளக்கம்**

மனித நடத்தையில் சில பகுதிகள் உள்ளுணர்வுடன் (Instinctive) தொடர்புபட்டவையாக காணப்படினும், பெரும்பாலான நடத்தைகள் அவனால் கற்றுக்கொள்ளப்பட்டவை. பூமிக்கு வரும் எல்லாக் குழந்தைகளும் சாதாரணமாக உடலியல் தேவைகளைக் கொண்ட உயிரிகளாகவே பிறக்கின்றன. சமூக நடைமுறைகளை கற்பதன்

வழியேதான் மெதுமெதுவாக சமூக உயிரிகளாக மாறுகின்றன என சமூகவியலாளர்கள் கூறுகின்றார்கள். இந்த நடைமுறைகளைக் கற்கும் செயன்முறைகள் இல்லாமல் ஒரு சமூகமோ அதன் இருப்போ சாத்தியமற்றது. பண்பாட்டின் இருப்புக்கு கூட இந்தக் கற்றல் செயன்முறை அவசியமானது. இந்தக் கற்றல் செயன்முறைதான் சமூகமயமாக்கல் என அழைக்கப்படுகின்றது.

சமூகத்தில் வாழும் தனிநபர்கள் சமூகத்தின் சட்டதிட்டங்களையும், நடைமுறைகளையும் கற்றுக் கொள்வதன் மூலம் சமூகமயமாக்கப்படுகின்றார்கள். இக் கற்றல் செயற்பாட்டின் மூலம் ஒரு தனிநபர் தனது சொந்த ஆளுமையை விருத்தி செய்து கொள்கின்றார். சமூகவியலாளர்கள் இக் கற்றல் செயன்முறைக்கு அதாவது சமூகமயமாக்கலுக்கு அழுத்தம் கொடுப்பதற்கான காரணம், அது பண்பாட்டுடன் பின்னிப்பிணைந்திருப்பதனாலேயாகும். மனிதன் கூட பண்பாட்டு உயிரி (Cultural being) யாகவே கருதப்படுகின்றான். சமூகமயமாக்கல் கூட பண்பாட்டை பரிமாற்றம் செய்யும் ஒரு ஏற்பாடாகவே கொள்ளப்படுகின்றது.

**சமூகமயமாக்கல்: வரைவிலக்கணங்கள்**

சமூகமயமாக்கல் என்பது குழுக்களின் நியமங்களுக்கு கட்டுப்பட்டு நடக்கும் தன்மையை தனிநபர்கள் கற்றுக் கொள்ளும் செயன்முறையாகும் என ஒக்பேன் (W.F. Ogburn) கூறுகின்றார்.

சமூகமயமாக்கல் என்பது பண்பாட்டை பரிமாற்றம் செய்யும் ஒரு செயன்முறையாகும். இச் செயன்முறையின் மூலம் மனிதர்கள் தம் குழுக்களின் சட்டதிட்டங்களையும் நடைமுறைகளையும் கற்றுக் கொள்கின்றார்கள் என பீட்டர் வேர்ஸ்லி (Peter Worsly) குறிப்பிடுகின்றார்.

சமூகமயமாக்கல் என்பது கற்றல் செயற்பாடாகும். இது கற்கும் நபரை சமூகப் பாத்திரங்களை ஏற்று செய்து முடிப்பதற்கு வழி செய்கின்றது என ஹரி. எம். ஜோன்சன் (Harry M. Johnson) குறிப்பிடுகின்றார்.

சமூகமயமாக்கல் என்பது ஒரு சிக்கலான இடைவினைச் செயற்பாடாகும். இதன் ஊடாகப் பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் மற்றும் நீதிச் சட்டங்கள் (Standards of judgment) போன்றவற்றை ஒரு தனிநபர் கற்றுக்கொள்கின்றார். மேலும் சமூகத்திலும், குழுவிலும் வினைத்திறன்மிக்க பங்குபற்றலை ஒரு தனியனில் ஏற்படுத்துவதற்கு சமூகமயமாக்கல் உதவுகின்றது.

### 4.2 சமூகமயமாக்கல்: வகைகள்

ஈயன் றொபேர்ட்ஸன் (Ian Robertson) எனும் சமூகவியலாளர் சமூகமயமாக்கலின் நான்கு பிரிவுகள் பற்றி பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

### அ) ஆரம்ப சமூகமயமாதல் (Primary socialization)

இது அடிப்படையானதும், மிகவும் அவசியமானதுமான சமூகமயமாக்கல் ஆகும். பூமிக்கு வருகின்ற குழந்தையின் வாழ்வில் ஆரம்ப கட்டங்களில் இது தொழிற்படுகின்றது. இந்த சமூகமயமாக்கல் செயன்முறை மொழியை கற்பிப்பதிலும், அறியும் திறன்களை (Cognitive skills) வளர்ப்பதிலும், பண்பாட்டு நியமங்கள், விழுமியங்கள் போன்றவற்றை அகவயப்படுத்துவதிலும், மனவெழுச்சிப் பிணைப்புக்களை ஸ்திரப்படுத்துவதிலும் (Establishment of emotional ties) மற்றும் வகிபாகங்களை ஊக்குவிப்பதிலும் கவனம் செலுத்துகின்றது.

ஆரம்ப சமூகமயமாக்கலில் நியமங்களை அகவயப்படுத்துதல் (Internalization of norms) முக்கியமான ஒரு செயன்முறையாகும். அதாவது சமூக நியமங்களை ஒரு தனியனின் ஆளுமைக் கூறுகளுடன் இணைத்துவிடும் செயற்பாடு இதுவாகும். சரி - பிழை, நல்லது - கெட்டது, நீதி - அநீதி போன்ற உணர்வுகள் பிறக்கும்போதே குழந்தைகளிடம் இருப்பதில்லை. தவறுதலும், முயலுதலும், நேரடி மற்றும் நேரடியற்ற அவதானங்கள் மற்றும் அனுபவங்கள் போன்ற வழிகளினூடாகவே ஒரு குழந்தை படிப்படியாக

சரியான மற்றும் பிழையான நடத்தை குறித்த நியமங்களை கற்றுக் கொள்வதாக சமூகவியலாளர்கள் சுட்டிக்காட்டுகின்றார்கள். பரிசுகள் அல்லது தண்டனைகள மற்றும் அனுமதி அல்லது அனுமதியின்மை போன்ற வழிகளினூடாக சமூகமயமாக்கல் முகவர்கள் குழந்தையின் இந்தக் கற்றலை மீள வலியுறுத்திக் கொண்டே இருக்கின்றன.

### ஆ) முன்னாயத்த சமூகமயமாக்கல் (Anticipatory socialization)

ஒரு மனிதன் தான் சார்ந்திருக்கும் குழுவின் பண்பாட்டை மட்டுமல்லாது தான் அங்கத்துவம் வகிக்காத அடுத்த சமூகத்தின் பண்பாட்டையும் கற்க வேண்டிய நிலைக்கு பல பொழுதுகளில் உள்ளாக்கப்படுகின்றான். இச்செயற்பாடு மேர்ட்டன் போன்ற சமூகவியலாளர்களால் முன்னாயத்த சமூகமயமாக்கல் என அழைக்கப்படுகின்றது. இராணுவப் படையில் சேர்ந்து கொள்ள விரும்பும் ஒருவர் தனது உடம்பை வலுவாக்குவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவதையும் இராணுவம் தொடர்பான சட்டங்களையும், தகவல்களையும் கற்றுக் கொள்வதையும் இது குறிக்கும். சட்டக்கல்லூரி மாணவர்கள் வக்கில்களைப் போல் எப்படி நடந்துகொள்வது என கற்றுக்கொள்வது முன்னாயத்த சமூகமயமாக்கலுக்கான மற்றுமொரு உதாரணமாகும். மேட்டனே முன்னாயத்த சமூகமயமாக்கல் குறித்து முதலில் பேசியவராக கொள்ளப்படுகின்றார்.

### இ) அபிவிருத்திச் சமூகமயமாக்கல் (Developmental socialization)

இது ஆரம்ப சமூகமயமாக்கலினது அடைவில் தங்கியிருக்கும் ஒரு வகை கற்றல் செயன்முறையாகும். ஏற்கனவே ஒரு தனியனில் காணப்படும் திறன்களையும் அறிவையும் மையமாகக் கொண்டு இது எழுகின்றது. உதாரணமாக திருமணம் மற்றும் தொழில் போன்ற புதிய சூழ்நிலையை ஒருவர் எதிர்கொள்ளும் போது இத்தகைய சமூகமயமாக்கல் நிகழ்கின்றது. இது புதிய எதிர்பார்ப்புக்களையும் கடப்பாடுகளையும் மற்றும் வகிபங்குகளையும் ஒருவரில்

ஏற்படுத்துகின்றது. இங்கு புதிய கற்றல் முயற்ச்சிகள் அதிகம் இடம்பெறும்.

### ஈ) மீள்சமூகமயமாக்கல் (Resocialization)

மீள்சமூகமயமாக்கல் என்பது ஒருவர் ஏற்கனவே கற்றுக் கொண்ட பெறுமானங்களுக்கும் பதிலாக புதிய விடயங்களை நிரப்பும் செயல் இதுவாகும். திடீரென ஒருவரது சமூக வகிபங்கு மாறும்போது இது அதிகம் இடம்பெறும். புதிதாக திருமணம் முடித்த ஒரு பெண் பலாத்காரமாக விபச்சாரத் தொழிலை செய்யும்படி அவளது கணவனால் நிர்ப்பந்திக்கப்படுவதை இதற்கு உதாரணமாக கூறலாம். ஒரு குற்றவாளி புணர்வாழ்வளிக்கப்படும் போது அவர் தனது பாத்திரங்களையும் நடத்தைகளையும் மாற்றிக்கொள்ள வேண்டியேற்படுவதை மற்றுமொரு உதாரணமாகக் கூறலாம்.

## 4.3 சமூகமயமாக்கல்: படித்தரங்கள் (Stages of socialization)

சமூகமயமாக்கல் என்பது கட்டமாக நடைபெறும் ஒரு கற்றல் செயன்முறையாகும். புதிதாக பூமிக்கு வருகின்ற எந்தக் குழந்தையும் சமூக வாழ்வு குறித்த அறிவை மொத்தமாகப் பெற்றுக்கொள்வதில்லை கட்டங்கட்டமாகவே கற்றுக் கொள்கின்றது.

உண்மையில் சமூகமயமாக்கல் என்பது சமூகப் பாத்திரங்களை ஏற்பதற்கு கற்றல் வழியே ஒரு குழந்தையைத் தயார்படுத்தும் செயற்பாட்டையே குறிக்கின்றது. இங்கு சமூகப் பாத்திரங்கள் (Social role) என்பது மிக முக்கியமான ஒன்றாகும். சமூகமயமாக்கலின் ஒவ்வொரு படித்தரத்திலும் ஒரு குழந்தை இந்த சமூகப் பாத்திரங்களை தன்னுள்ளே அகவயப்படுத்திக் கொள்ள முனைகின்றது.

1. **வாய்வழி நிலை (Oral stage)**

இப் பருவம் குழந்தை பிறந்தது முதல் ஒரு வருடம் பூர்த்தியாகும் வரை தொடர்கின்றது. ஒரு குழந்தையானது தாயின் கற்பவறையில்

சௌகரிகமாகவும், பாதுகாப்பாகவும் இருக்கின்றது. அது வெளியே வரும்போது சூடு, குளிர் போன்ற பல்வேறு அசௌகரியங்களில் இருந்து தன்னை பாதுகாத்துக் கொள்ள முயல்வதால் அழுகையை ஒரு வலுவுள்ள ஆயுதமாக, தொடர்பாடலை ஏற்படுத்தும் வழியாக பயன்படுத்துகின்றது. இங்கு அழுகை என்பது குழந்தையின் வாய் வழி தங்கியிருப்புக் (Oral dependency) கட்டமாகும். இக் கட்டத்தில் குழந்தையானது தன்னிலை குறித்தும், தன் தாய் குறித்தும் அதிக ஈடுபாடு காட்டத் தொடங்குகின்றது. சிக்மன் புரய்ட் (Sigmund Freud) போன்றவர்கள் இக்கட்டத்தை ஆரம்ப அடையாளப்படுத்தல் கட்டம் (Stage of primary identification) என வர்ணிக்கின்றார்கள். அதாவது ஒரு குழந்தையானது தனது அடையாளத்தை (Identity) தாயின் அடையாளத்துடன் இணைத்துக் கொள்கின்றது எனக் கூறுகின்றார்கள்.

### 2. குதவழி நிலை (Anal stage)

இக்கட்டம் குழந்தையின் முதல் வருடம் முடிந்ததில் இருந்து தொடங்கி மூன்றாம் வருடம் முடியும் வரை செல்கின்றது. இக்கட்டத்தில் குழந்தையானது தான் முற்றுமுழுதாக தாயின்மீது தங்கியிருக்க முடியாது என உணர்ந்து கொண்டு தனது நலனுக்காக சில முயற்சிகளை மெது மெதுவாக செய்ய தொடங்குகிறது. குறிப்பாக மலம் கழிப்பதற்கும், ஆடையை சுத்தமாக வைத்திருப்பதற்கும் முயல்கின்றது.

இக் கட்டத்தில் குழந்தையானது தனது வகிபங்கையும், தாயின் வகிபங்கையும் அகவயப்படுத்திக் கொள்கின்றது. குழந்தையானது அன்பை தாயிடம் இருந்து பெற்றுக் கொள்ளும் அதேவேளை திருப்பிக் கொடுக்கவும் முயல்கின்றது. அதேபோல் எது சரியான செயல், எது பிழையான செயல் எனப் பிரித்தறியும் முயற்சியிலும் ஈடுபடுகின்றது. இக் கட்டத்தில் தாய்தான் பிரதான சமூகமயமாக்கல் முகவராக தொழிற்படுகின்றார்.

### 3. ஈடிபஸ் நிலை (The oedipal stage)

இப் பருவம் குழந்தையின் நான்காவது பருவத்தில் தொடங்கி பருவவயதை எய்தும் வரை (12 அல்லது 13 வயது) நீள்கின்றது. இக் கட்டத்தில் குழந்தை குடும்பத்தின் உறுப்பினராக மாறுவதோடு பால் வகையை (Sex) அடிப்படையாக் கொண்ட சமூக வகிபங்கையும் புரிந்து கொள்கின்றது. சிக்மன் பிராய்டின் கருத்துப்படி ஒரு சிறுவன் (Boy) தந்தையின் மீது பொறாமையையும் தாய் மீது அன்பையும் (Oedipus complex) வளர்த்துக் கொள்வதாகவும், ஒரு சிறுமியானவள் (Girl) தாய் மீது பொறாமையையும், தந்தையின் மீது அன்பையும் (Electra complex) வளர்த்துக் கொள்வதாகவும் கூறுகின்றார். இங்கு சிறுவனுக்கு தாய்மீதும் சிறுமிக்கு தந்தை மீதும் ஏற்படுவது பாலியல் உணர்வு என அவர் குறிப்பிடுகின்றார். ஆனால் 4, 5, 6 வயதுப் பிள்ளைகளுக்கு பாலியல் சம்பந்தமான அறிவு குறைவாகவே தொழிற்படும் என பிரெய்டின் கருத்தை மறுக்கும் பல ஆய்வாளர்கள் கருத்து தெரிவிக்கின்றார்கள்.

இக் கால கட்டத்தில் தனது பால் (Sex) வகையை அறிந்து கொள்வதற்கான சமூக அழுத்தங்கள் ஒரு பிள்ளைக்கு கொடுக்கப்படுகின்றது. ஆண் ஆணாக நடப்பதற்கும், பெண் பெண்ணாக நடப்பதற்கும் பல பயிற்சிகளும் அவ்வாறு நடக்கும் போது பரிசில்களும் வழங்கப்படுகின்றன.

ஒரு குழந்தை தனது ஆறு வயதில் தனது பால் வகை வேறுபாடுகளை (Sexual differences) அறிந்து கொள்வதாக ஆய்வாளர்க்ள குறிப்பிடுகின்றனர். ஆண் பிள்ளை தன்னை தந்தையுடனும் பெண் பிள்ளை தன்னை தாயுடனும் இணைத்து தன்னை அடையாளப்படுத்திக் கொள்கின்றது. பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்லும் போது அல்லது எங்காவது கூடும்போது ஆண்கள் ஆண் விளையாட்டுக் குழுக்களோடும் பெண்கள் பெண் விளையாட்டுக் குழுக்களோடும் சேர்ந்து கொள்கின்றார்கள். இக் காலத்தில் ஒரு குழந்தையின் பால்வகை அடையாளத்தை

உணர்த்துவதில் பெற்றோரின் பங்கு மகத்தானது. ஒரு தந்தை தனது மகனிற்கு எவ்வாறு ஒரு விடயத்தை செய்வது என கற்றுக் கொடுக்கின்றார். உதாரணமாக எஸ்கிமோ நாட்டில் ஒரு தந்தை தனது குழந்தைக்கு எவ்வாறு சுடுவது எனக் கற்றுக் கொடுக்கின்றார்.

### 4. இளமைப்பருவம் நிலை (The stage of adolescence)

இந்த நான்காவது கட்டம் கட்டிளமைப் பருவத்தின் தொடக்கத்தோடு தொடங்குகின்றது. ஒரு தனியனில் பல்வேறு உடலியல், உளவியல் மாற்றங்கள் தோன்றுவதால் இக் கால கட்டம் மிக முக்கியமான இடத்தை வகிக்கின்றது. இப் பருவத்தை அடைந்த ஆணும் பெண்ணும் பெற்றோரின் கட்டுப்பாட்டில் இருந்து விடுபடவே விரும்புகின்றனர். ஆனால் பல்வேறு தேவைகளின் நிமித்தம் பெற்றோர்களிலேயே தொடர்ந்தும் தங்கியிருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகின்றது. இது அவர்களுக்குள்ளே மன அழுத்தங்களையும் முரண்பாடுகளையும் தோற்றுவிக்கின்றது. இந்நிலை பாரம்பரிய சமூகங்களிலேயே அதிகமாக காணப்படுகின்றது. ஆனால் நவீன சமூகங்களில் பெற்றோர்கள் அதிக சுதந்திரத்தையும் அதிக தெரிவையும் தமது கட்டிளமைப்பருவ பிள்ளைகளுக்கு வழங்குகின்றனர்.

## 4.4 சமூகமயமாக்கல்: முகவர்கள் (Agencies of socialization)

ஆளுமைகள் ஒரு மனிதனிடம் இயல்பாக வருவதில்லை. ஆளுமைகள் சமூகமயமாக்கல் செயன்முறை மூலமே செதுக்கிச் செப்பனிடப்படுகின்றன. சமூகமயமாக்கல் குழந்தை பருவத்தில் மட்டுமல்லாது வாழ்வு முழுவதும் தொடரும் ஒரு செயன்முறையாகும்.

இங்கு எழுப்பப்படுகின்ற முக்கியமான கேள்வி குழந்தைகளை யார் சமூகமயமாக்குகின்றார்கள் என்பதாகும். உணர்வு, நம்பிக்கை மற்றும் பண்பாடு பற்றிய அறிவைப் பிள்ளைகள் இரு வகையான நபர்களிடமிருந்து பெறுவதன் மூலம் சமூகமயமாக்கப்படுகின்றார்கள் என கிங்ஸ்லி டேவிஸ் (Kingsley Davis) குறிப்பிடுகின்றார். முதல் வகையினர் குறிப்பிட்ட பிள்ளையின் மீது அதிகாரம் (Authority over

him) கொண்டவர்கள். உதாரணமாக, பெற்றோர்களைக் குறிப்பிடலாம். இரண்டாம் வகையில் குறிப்பிட்ட பிள்ளையுடன் சமத்துவமாக (Equality with him) நடப்பவர்கள் அடங்குகின்றனர். சகபாடிக் குழுவும் (Peers), ஒத்தவயதுக் குழுவும் (Age mates) இதற்கு உதாரணங்களாகும்.

பொதுவாக சமூகமயமாக்கல் செயன்முறையில் ஈடுபடும் முகவர்களை பின்வருமாறு அடையாளப்படுத்தி விளக்கலாம்.

**அ). குடும்பமும் பெற்றோர்களும் (Family and parents)**

சமூகமயமாக்கல் செயன்முறை குடும்பத்திலிருந்தே முதலில் தொடங்குகின்றது. பெற்றோரின் குறிப்பாகத் தாயின் பங்களிப்பு இங்கு முக்கியமானது. ஒரு குழந்தையின் திறன்களை (Abilities) மற்றும் கொள்திறன்களை (Capacities) வளர்ப்பதில் மற்றும் செப்பனிடுவதில் தாய் - சேய் சமூக உறவு மிகவும் முக்கியமானதொன்றாகும். தான் சார்ந்திருக்கும் சமூகத்தின் பண்பாடுகளைப் பெற்றோர்தாம் முதன்முதலில் குழந்தைக்கு அறிமுகம் செய்து வைக்கின்றார்கள். அதேபோல் குடும்பத்தில் இருக்கும் ஏனைய சகோதர சகோதரிகள் கூட குழந்தையின் சமூகமயமாக்கல் செயற்பாட்டில் பங்கெடுக்கின்றார்கள்.

**ஆ) சகபாடிக் குழு / ஒத்தவயதுக் குழு (Peers or age mates)**

பாடசாலையில், விளையாட்டு மைதானங்களில் மற்றும் வீதிகளில் பிள்ளைகள் தற்சமயம் சேர்ந்திருக்கும் குழு இதுவாகும். வயது, கல்வி, சமூகவிருப்பு போன்றவற்றில் இக்குழு ஏறத்தாள சமமான (Equal) நிலையை கொண்டிருக்கும். குடும்பம் மற்றும் பெற்றோர்களுக்கப்பால் பண்பாடு குறித்த பல விடயங்கள் இக்குழுக்களிடமிருந்து ஒரு பிள்ளை கற்றுக் கொள்கின்றது.

காலப்போக்கில் பெற்றோர் மற்றும் குடும்பத்தை விட ஒருவனுக்கு இக் குழுக்கள் முக்கியமானவையாக மாறுகின்றன. பெற்றோரின்

பண்பாட்டை (Parents culture) விட சகபாடிக் குழுவின் பண்பாடு (Peer cultue) ஒருவனின் கட்டிளமைப் பருவத்தில் ஆதிக்கம் செலுத்தும் ஒன்றாக மாறுகின்றது. தனது ஒத்த வயது நண்பனின் புத்திமதி, ஏனைய எல்லோர் சொல்லையும் விட பெறுமதியானதாகவும், சக்தியுள்ளதாகவும் மாறுகின்றது. பெற்றோர்களிடமிருந்து கற்றுக் கொள்ள முடியாத பாலியல் சம்பந்தமான விபரங்கள் இங்குதான் அதிகம் பரிமாறப்படுகின்றன.

**இ). பாடசாலையும் ஆசிரியர்களும் (School and teachers)**

ஒரு பாடசாலை திறக்கப்படும் போது ஒரு சிறைச்சாலை மூடப்படுகிறது என ஒரு அறிஞர் குறிப்பிடுகின்றார். ஒரு பிள்ளைகளுக்குள் நல்ல பண்புகளை விதைத்து அவனுக்குள் இருக்கும் தீய பண்புகளை அகற்றி நல்ல பிரஜையாக அவனை பாடசாலை மாற்றி விடுகின்றது என்பது இவ்வறிஞரின் கருத்தாகும். பண்பாடு பாடசாலையில்தான் முறைசார் வழியில் பரிமாறப்படுகின்றது. அறிவு, ஞானம், விஞ்ஞானம் மற்றும் கலை ஒரு தலை முறையிலிருந்து அடுத்த தலைமுறைக்கு கட்சிதமாக கொண்டு செல்லும் வாகனமாக பாடசாலை தொழிற்படுவதோடு பிள்ளைகள் அவற்றைச் செவ்வனே உள்வாங்க நடவடிக்கையும் எடுக்கின்றது. இந்த முறைசார் பரிமாற்றலுக்கு அப்பால் ஒழுக்கப் பெறுமானம், அரசியல் மனப்பாங்கு போன்றவையும் முறைசாரா வகையில் பரிமாற்றம் செய்யப்படுகின்றன.

ஒரு பிள்ளையின் ஆளுமையை உருவாக்குவதில் பாசாலைக்கு கணிசமான பங்குண்டு. அதனால்தான் பாடசாலையின் கல்வித் திட்டம் மூலம் ஒரு பிள்ளையின் மனப்பாங்கை தேவைப்படும் வகையில் மாற்ற முடியும் எனப் பல ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றார்கள். பிள்ளைகள் தமது பாடசாலை நாட்களில் தமது ஆசிரியர்களை முன்மாதிரியாகக் கொள்கின்றார்கள். ஆசிரியர்களின் நடை, உடை தலைசீவும் முறை மற்றும் பேசும் பாங்கு போன்றவற்றைப் பிள்ளைகளும் பின்பற்றத் தொடங்குகின்றார்கள். அதனால்தான் ஆயிரம் புத்தகங்களை விட ஒரு நல்ல ஆசானால் ஒரு குழந்தையை

நல்வழிக்கு இலகுவாக இட்டுச் செல்ல முடியும் எனக் கூறப்படுகின்றது.

**ஈ). ஊடகங்கள் (Mass media)**

ஊடகங்கள் பொதுவாக அச்சு ஊடகங்கள் (பத்திரிகை, சஞ்சிகை) மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் (தொலைக்காட்சி, வனொலி, இணையத்தளம்) என இரண்டாகப் பிரிக்கப்படுகின்றது. கட்டிளமைப் பருவத்தினரின் ஆளுமையில் ஊடகங்கள் கனதியான தாக்கத்தைச் செலுத்துகின்றன. ஊடகங்களின் சமூகமயமாக்கல் குறித்து ஆராய்ந்த சமூகவியலாளர்கள் நான்கு கருத்துக்களை முன்வைக்கின்றனர்.

**i. பிள்ளையின் சுயபிம்பத்தில் ஏற்படும் தாக்கம் (Effects on children's self -image)**

தொடராக தொலைக்காட்சி விளம்பரங்களைப் பார்க்கும் ஒரு சிறுவன், காட்சிகளில் வருகின்றவர்களையும் தனது நிலையையும் ஒப்பிட்டுப் பார்க்கின்றான். அதேபோல் விளம்பரங்களில் நடிக்கும் பெண்ணையும் தன்னையும் ஒப்பிட்டுப் பார்க்கின்றாள் ஒரு பெண். இந்த ஒப்பீட்டின் மூலம் தாம் ஒரு கீழ்மட்ட மற்றும் வறுமையான வாழ்க்கை வாழ்கின்றோம் எனக் காணும் சிறுவனும் பெண்ணும் தத்தமது நிலை குறித்து எதிரான சுய விம்பத்தை (Negative self- Image) உருவாக்கிக் கொள்கின்றார்கள். எனினும் நேரிடையான (Positive) விளைவுகள் ஊடகங்கள் மூலம் ஏற்படுவதாகவும், ஆபிரிக்க-அமெரிக்க நடிகர்களை பார்க்கும் ஆபிரிக்க-அமெரிக்க சிறுவர்களிடையே அத்தகைய நேரிடையான விம்பங்கள் உருவாக்கப்படுவதாகவும் சில ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

**ii. அடுத்தவர்கள் பற்றி சிறுவர்களின் மனப்பாங்குகளில் ஏற்படும் தாக்கம் (Effects on children attitude about others)**

தொடராகப் படங்களில், நாடகங்களில் மற்றும் தொலைக்காட்சிகளில் பெண்களைப் பார்க்கும் ஒரு சிறுவன் பெண்கள் உலகம் சிறியது

எனவும் அவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட தொழில்களையே (ஆசிரியர், தாதி) செய்யக்கூடியவர்கள் எனவும் முடிவுகளுக்கு வருகின்றான். மேலும் வீட்டுவேலைகளைச் செய்தல், பிள்ளைகளை வளர்த்தல் மற்றும் கணவனுக்குப் பணிவிடை செய்தல் போன்றவையே அவர்களது தலையாய கடமை எனும் எண்ணப்பாட்டிற்கும் வருகின்றான். இத்தகைய மனப்பாங்குகள் ஊடகங்களால் உருவாக்கப்படுபவை.

அதேபோல் ஊடகங்களில் காட்டப்படும் காட்சிகள் ஒரு சிறுவன் கொண்டிருக்கும் எண்ணங்களை மாற்றி நேரான கருத்துகளை உருவாகக் கூட காரணமாகிவிடுகின்றன. உதாரணமாக இஸ்லாம் பற்றியும் முஸ்லிம்கள் பற்றியும் ஒரு மேலை நாட்டுச் சிறுவன் கொண்டிருக்கும் பிழையான கருத்துக்கள் ஒரு பத்திரிகையின் சிறந்த கட்டுரை அல்லது ஒரு சிறந்த திரைப்படம் மூலமும் மாற்றியமைக்கப்படலாம்.

### iii. சிறுவனின் உள்ளார்ந்த நடத்தைகளில் ஏற்படும் தாக்கம் (Effects on children’s interpersonal behaviors)

ஊடகங்களோடு குறிப்பாக தொலைக்காட்சியோடு அதிகமான தொடர்புகளைக் கொண்டுள்ள சிறுவர்களின் உள்ளார்ந்த நடத்தைக் கோலங்கள் (குறிப்பாக முரண்பாடுகளின் போது) குறித்த ஆய்வுகள் பிள்ளைகள் ஆக்கிரமிப்புத் தன்மையோடு (Aggression) நடந்து கொள்வதாக் சுட்டிக் காட்டுகின்றன.

வன்முறை, சண்டை மற்றும் அடிதடி போன்றவற்றை மையப்படுத்தி கணனியில் விளையாடப்படும் விளையாட்டுக்கள் (Video games) வன்முறையை தூண்டுவதாக பல ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. இந்த விளையாட்டை விளையாடுகின்றவர்கள் மத்தியில் தாங்களே எதிரிகளை சுடுபவர்கள், பந்தாடுபவர்கள் (Active participants) மற்றும் வன்முறையை செய்பவர்கள் (Perpetrators of violence) எனும் மனோநிலையை இவ்விளையாட்டுக்கள் தோற்றுவிக்கின்றன.

அதேபோல் குறைவாக தொலைக்காட்சி பார்ப்பவர்களை விட அதிகமாக தொலைக்காட்சி பார்ப்பவர்கள்தான் பாலியல் சார்ந்த குற்றச் செயல்களில் அதிகம் ஈடுபடுவதாக ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. இணையத்தளங்களோடு அதிகம் தொடர்பு கொண்டிருப்பவர்களும் இதில் அடங்குகின்றனர்.

இதற்கு மாற்றமாக ஊடகங்கள் குழந்தைகளிடத்தில் சிறந்த நடத்தைகளையும் உருவாக்குகின்றன. அனர்த்த சூழலின் போது மனிதாபிமானத்தோடு நடந்து கொள்வதன் அவசியம் பற்றியும், அனுபவங்களை சுமந்திருக்கும் முதியவர்கள் மற்றும் ஆசிரியர்கள் எவ்வாறு மதிக்கப்பட வேண்டும் என்பது பற்றியும், விதவைகள், வன்முறைக்குள்ளாக்கப்பட்டவர்கள் மற்றும் அநாதைகள் போன்ற பலவீனப்பட்டவர்களை எவ்வாறு கையாளவேண்டும் என்பது பற்றியும் ஊடகங்கள் சொல்லிக் கொடுக்கின்றன.

### iv. சிறுவனின் அரசியல் சமூகமயமாக்கலில் ஏற்படும் தாக்கம் (Effects on children's socialization)

ஒரு சிறுவனின் அல்லது இளைஞனின் அரசியல் அறிவை அதிகரிப்பதிலும், அவனை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அரசியலில் ஈடுபட வைப்பதிலும் ஊடகங்களுக்குப் பாரிய பங்கிருக்கின்றது.

ஊடகங்கள் தாம் சார்ந்திருக்கும் இனத்திற்கு 'தொண்டு செய்கின்றோம்' எனும் பெயரில் அடுத்த சமூகம் பற்றிய பிழையான கருத்துக்களை இளைஞர்கள் மத்தியில் விதைப்பதன் காரணமாக பல இன மோதல்கள் நிகழ்ந்திருக்கின்றன. சிறுசிறு விடயங்களைக் கூட ஊதிப் பெருப்பிப்பதன் மூலம் ஊடங்கள் இளைஞர்களை மோதவிடுகின்றன. சிறுவர்களின் உள்ளங்களின் நஞ்சை விதைத்து அவர்களை பிழையான வழிக்கு இட்டுச் செல்கின்றன. யூதர்களின் சைவசம் உள்ள மேற்கத்தேய ஊடகங்கள் தமது இலாபங்களுக்காக உலகமக்களின் குறிப்பாக கிறிஸ்தவ உலகின் உள்ளங்களின் மீது

முஸ்லிம்கள் பயங்கரவாதிகள் மற்றும் தீவிரவாதிகள் எனும் கருத்தினை விதைக்க முயல்கின்றன.

அதேபோல் ஆட்சி செய்யும் அரசாங்கங்களின் ஒடுக்குமுறைகள், ஊழல்கள், அநீதிகள மற்றும் முறையற்ற ஆட்சிகள் குறித்து பேசி அரசியல் விழிப்புணர்வினை ஏற்படுத்தும் ஊடகங்களும் உள்ளன. உள்நாட்டில் திரைக்குப் பின்னால் நடக்கும் அரசியல் வன்முறைகளை உலகின் கண்களுக்கும், காதுகளுக்கும் எட்டச் செய்பவை ஊடகங்களே! அதேபோல் புரட்சிகளை ஊடகங்கங்களின் மறைகரங்கள் தூண்டுகின்றன. ஊரிய தகவல்கள் மூலம் மக்களை ஓரிடத்தில் ஒன்று குவிக்கின்றன. பல்வேறு அதிர்வுகளை ஏற்படுத்திய அரபு வசந்தத்துக்குப் பின்னால் பல ஊடகங்கள் தொழிற்பட்டதனை பல்வேறு ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகின்றார்கள்.

### 4.5 சமூகமயமாக்கல்: முக்கியத்துவம்

பிறக்கும் போது சமூகத்தன்மை அற்றவனாகவும், வெறும் உயிரியல் பிராணியாகவும் பிறக்கும் மனிதன் சமூகமயமாக்கல் செயற்பாட்டின் மூலமே சமூகத்தன்மை பெற்றவனாக மாறுகின்றான் என சமூகவியலாளர்கள் தெரிவிக்கின்றார்கள். இந்தியாவில் ஓநாய்ச் (Wolf child) சிறுவன் இதற்கு உதாரணமாகும். ஓநாய் வளர்த்த இக்குழந்தை ஓநாய் மாதிரியே நடந்து ஓநாய் போலவே சத்தமிட்டது. மானிட சூழலுக்கு கொண்டு வந்த பிறகே மனிதனைப் போல் நடந்து மனிதனைப் போல் பேசியது.

சமூகமயமாக்கல் ஆளுமை விருத்திக்கு உதவுகின்றது. உண்மையில் ஆளுமை என்பது சமூகத்தின் உற்பத்தியே தவிர வேறில்லை. ஒரு மனிதன் தன்னை சமூகத்துடன் அல்லது குழுவுடன் இணைத்துக் கொள்ளாமல் தனது ஆளுமையை வளர்த்துக் கொள்ள முடியாது. புதிதாகப் பிறக்கின்ற குழந்தையின் ஆளுமையை செதுக்கிச் செப்பனிடுவது சமூகமயமாக்கல் செயன்முறைதான்.

சமூகமயமாக்கல் சமூகத்தின் விதிகளையும், கட்டுப்பாடுகளையும் கற்றுக் கொடுப்பதோடு இலக்கையும் அதனை அடைந்து கொள்ளும்

வழிகளையும் தெளிவுபடுத்துகின்றது. இது ஒரு தனியன் சமூகத்தில் ஒழுக்கமுள்ளவனாக வாழ வழி செய்கின்றது.

ஒவ்வொரு தனியனும் பல்வேறு வகிபாகங்களை வாழ்வில் ஏற்கவேண்டி இருக்கின்றது. எனினும் இந்த வகிபாகங்கள் பல்வேறுபட்ட நியமங்களாலும் மனப்பாங்குகளாலும் பின்னப்பட்டு இருப்பதனால் அவற்றை எவ்வாறு கச்சிதமாக செய்யலாம் என சமூகமயமாக்கல் சொல்லிக் கொடுக்கின்றது.

புதிதாக பிறக்கின்ற குழந்தைக்கு சில திறன்கள் குறித்த அறிவினை சமூகமயமாக்கல் வழங்குகின்றது. மனிதன் தனது பிற்பட்டகாலத்தில் பொருளாதாரம், கல்வி மற்றும் சமயம் தொடர்பான பாத்திரங்களை ஏற்பதற்கும் அதனை செவ்வனே செய்வதற்கும் இது உதவுகின்றது.

சமூகமயமாக்கமானது வாழ்விலே சரியான அபிலாசைகளை வகுத்துக் கொள்வதற்கு உதவுகின்றது. சில நேரம் ஒரு தனியனது அபிலாசையும் சமூகத்தின் அபிலாசையும் முரண்படலாம். சமூகமயமாக்கம் சமூகத்தின் விருப்பிற்கு முரண்படாமலேயே தனியனது அபிலாசைகள் அடையப்பட வேண்டும் என்பதனை உணர்த்துகின்றது.

சமூகமயமாக்கச் செயன்முறை புதிய தலைமுறையினருக்கு, அச்சமூகத்தின் பண்பாடு இலக்குகள். கருத்தியல்கள மற்றும் எதிர்பார்க்கைகள் போன்றவற்றின் அடியாக வாழ பயிற்ச்சி கொடுக்கின்றது. இதன் மூலம் சமூக ஒழுங்கு (Social order) சமூகத்தில் நிலைபெறுகின்றது.

வேறு வேறான சாதிகள், சமயங்கள மற்றும் இனங்களைக் கொண்டிருக்கும் சமூக அங்கத்தவர்களிடையே காணப்படும் சமூகத் தொலைவை (Social distance) குறைத்து மக்கள் ஒன்றுபட்டு வாழ சமூகமயமாக்கம் வழி செய்கின்றது. ஆரம்ப வயதுகளிலே பிள்ளைகளுக்கு வழங்கப்படும் உரிய பயிற்சியும சிறந்த வழிகாட்டலும் இதற்கு உதவுகின்றது.

சிறந்த சமூகமயமாக்கல் மூலம் சமூகம் தான் விரும்பும் ஒரு முன்மாதிரியானதொரு சமூகத்தை செதுக்கி எடுக்கலாம். எனவே சமூகமயமாக்கல் ஒளிமயமான எதிர்காலம் ஒன்றை கட்டியெழுப்பக் கைகொடுக்கின்றது எனலாம்.

ஒரு பாண்பாட்டின் தொடர்ச்சிக்கும் பரிமாற்றத்திற்கும் சமூகமயமாக்கலே பிரதான காரணியாய் அமைகின்றது. பண்பாட்டின் அம்சங்களே சமூகமயமாக்கல் செயன்முறை மூலம் பிள்ளைகளில் விதைக்கப்படுகின்றது.

### 4.6 சமூகமயமாக்கல் செயன்முறையின் தோல்வியும் சமூக இன்மைப்படுத்தலின் பிரச்சினைகளும்

சமூக ஒத்துப்போகும் (Social conformity) தன்மையை ஏற்படுத்தும் காரணிகளில் சமூகமயமாக்கல் சக்தி வாய்ந்தது என்பதிலும் எதிர்பார்ப்புடன் கூடிய ஒரு புதிய சமூகத்தை உருவாக்குவதில் சமூகமயமாக்கலுக்கு பாரிய பங்கு இருக்கின்றது என்பதிலும் இரு கருத்திற்கு இடமில்லை. எனினும் ஏனைய சமூகப் பொறிமுறையைப் (Social mechanism) போலவே இதுவும் சில வரையறைகளை கொண்டிருக்கின்றது. சமூகமயமாக்கல் மட்டுமே ஆளுமை தொடர்பான எல்லாப் பிரச்சினைகளுக்குமான தீர்வைக் கொடுப்பதில்லை. அதேபோல் இது எப்போதும் வெற்றிபெற்ற ஒன்றாக மட்டுமே தொழிற்படும் என்றும் இல்லை. சில நேரங்களில் சமூகத்தில் தோல்வியடைந்த செயற்பாடாகவும் மாறிவிடுகின்றது. ஒருபுறம் சமூகமயமாக்கலின் தோல்வியும் மறுபுறம் சமூகமயமாக்கலில் கடைப்பிடிக்கப்படும் பிழையான அணுகுமுறைகளும் ஒன்று சேர்ந்து ஆளுமைச்சிதைவு உட்பட பல மோசமான விளைவுகள் ஏற்பட வாய்ப்புகள் இருக்கின்றன.

#### அ. பண்பாடு முழுமையாக அறியப்படாமை

சமூகமயமாக்கல் என்பது ஒரு தனியனுக்கு அவனது பண்பாட்டை அறிமுகப்படுத்தும் செயற்பாடாகும். எனினும் பண்பாட்டின் முழுமை ஒரு தனியனுக்கு எல்லா நேரங்களிலும் சென்றடைவதில்லை.

இதனால் சமூகத்தின் எல்லா நியமங்களும் ஒரு தனியனுக்கு தெரியாமல் போய் விலகல் (Deviation) ஏற்படுவதற்கு வாய்ப்புக்கள் அதிகம் உண்டு என சமூகவியலாளர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

### ஆ. சுய - பிம்பம் (Self-image) சிதைக்கப்படல்

வெற்றிகரமான சமூகமயமாக்கலுக்கு சுய-விம்பத்தின் விருத்தி இன்றியமையாதது. சுய-பிம்பமானது ஒருவரது அடைவை தீர்மானிப்பதாக நிறைய ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன. கோல்மன் (Coleman) இன் பிரபல்யமான ஆய்வொன்று ஒரு குழந்தையின் சுய-பிம்பத்திற்கும் பாடசாலையின் அடைவுக்கும் தொடர்பிருப்பதாக கூறுகின்றது. குறைவான சுய-பிம்பம் கற்றல் மற்றும் அடைவைப் பாதிக்கின்றது. பாடசாலையில் கறுப்பினச் சிறுவர்கள் வெள்ளை இன சிறுவர்களை விட குறைவான தன்னம்பிக்கையினை கொண்டிருந்ததாகவும் அது கறுப்பின சிறுவர்களின் குறைந்த அடைவிற்கு காரணமாக அமைந்ததாகவும் ஆய்வொன்று சுட்டிக்காட்டுகின்றது.

சமூகமயமாக்கலில் தோன்றும் தோல்விகள் ஒரு பிள்ளையின் சுய – விம்பம் சிதைக்கப்பட காரணமாக அமையலாம். திருப்தியற்ற சுய-பிம்பம் எதிர் சமூக செயற்பாடுகளுக்கு அல்லது விலகல் நடத்தைகளுக்கு காரணமாக அமையலாம்.

### இ. சமூகமயமாக்கத்தின் தோல்வியும் உளநோய்களும்

சமூகமயமாக்கலுக்கும் உளநோய்களுக்குமிடையிலான தொடர்பு குறித்து சமூகவியலாளர்கள் ஆய்வு செய்துள்ளனர். பிள்ளைக்கும் பெற்றோருக்குமிடையே ஏற்படும் அல்லது பிள்ளைக்கும் ஏனையோருக்கும் இடையே ஏற்படும் தொடர்பாடல் தடைகள் (Communication block) உள நோய்க்கு காரணமாக அமைவதாக இவர்கள் தெரிவித்துள்ளனர். லென்னார்ட் (Lennard) எனும் சமூகவியலாளர் மனச்சிதைவு (Schizophrenic) நோயினால்

பாதிக்கப்பட்ட பிள்ளைகள் மோசமான தொடர்பாடல் நிலவும் குடும்பங்களிலிருந்து உருவாவதாக குறிப்பிடுகின்றார்.

**ஈ. அதிக கட்டுப்பாடு**

பிள்ளைகளின் வெற்றிகரமான சமூகமயமாக்கலுக்கு பெற்றோரின் ஆதரவும் (Support) கட்டுப்பாடும் (Control) அவசியமான இரு காரணிகள். இவ்விரு அம்சங்களும் கிடைக்கப் பெற்ற பிள்ளைகளே பாரம்பரிய சமய சடங்குகளையும் நியமங்களையும் பின்பற்றக் கூடியவர்களாக காணப்படுகின்றனர் என ஆய்வொன்று கூறுகின்றது. ஆனால் குறைந்த ஆதரவையும், கூடிய கட்டுப்பாடுகளையும் பெற்றோர்களிடமிருந்து பெற்றுக் கொண்ட குழந்தைகள் சமய சடங்குகளில் இணக்கப்பாடு குறைந்தவர்களாக (Nonconformist) காணப்படுகின்றார்கள் என இவ்வாய்வு மேலும் கூறுகின்றது.

**உ. வாழ்க்கை வட்டத்தில் ஏற்படும் சவால்களுக்கு முகம் கொடுக்க பிள்ளைகளை தயார்படுத்துவதில் ஏற்படும் தோல்விகள்**

நவீன சிக்கல் நிறைந்த சமுதாயங்கள் நாளாந்த வாழ்க்கை வட்டத்தில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பதற்கு தமது பிள்ளைகளைத் தயார்படுத்துவதற்கு தவறி விடுகின்றன. இதனால் கட்டிளமைப் பருவத்தினர் ஆளுமைச் சிக்கல்களுக்கும் தொடர் குழப்பங்களுக்கும் உள்ளாகின்றனர்.

**ஊ. குழப்பங்கள்**

பக்குவமடைந்த கட்டிளமைப் பருவத்தினர் (Mature adulthood) தமது 40 அல்லது 50 வயதின் நடுப்பகுதியில் சில சிக்கல்களை எதிர் கொள்கின்றனர். உதாரணமாக மேற்கு நாட்டுப் பெண்கள் தமது இளமையை, அழகை மற்றும் தாய் என்னும் பாத்திரத்தை பெறுமதியாக கருதும்படி உணர்த்தப்பட்டிருக்கிறார்கள். ஆனால் தமது இளமை மங்கும் போதும் தமது பிள்ளைகள் வீட்டை காலி செய்யும் போதும் அவர்கள் தனிமையை உணர்கிறார்கள். அதேபோல் மேலைநாட்டு ஆண்கள் தொழில் ரீதியான, மனரீதியான, பணரீதியான

வெற்றிகளை பெறுமதி கொண்டதாக கருதும்படி சமூகமயமப்படுத்தப்பட்டிருக்கின்றனர். ஆனால் இந்த இலக்கை நாற்பது வயதிற்குள் அடைந்து கொள்ள முடியாத போது அவர்கள் அசௌகரியங்களைச் சந்திக்கின்றனர். மேற்கு நாடுகளில் தொழில் இழந்த பலர் குடும்பத்தோடு தற்கொலை செய்து கொண்டமை இக்கருத்தை மேலும் உறுதிப்படுத்துகின்றது.

**எ. முதுமையையும், இறப்பையும் எதிர்கொள்ள சமூக உறுப்பினர்களைத் தயார்படுத்த முடியாமல் போதல்.**

வாழ்வில் தோன்றும் முதுமையையும், இறப்பையும் எதிர் கொள்வதற்கு மக்களை தயார்படுத்த முடியாமல் போவதே சமூகமயமாக்கலில் தோன்றும் மிகப் பெரும் தோல்வியாகும். குறைந்த வகிபாகங்குகளையும் மட்டுப்படுத்தப்பட்ட தொடர்புகளையுமே முதியவர்கள் அந்திம காலத்தில் பெற்றுக் கொள்கிறார்கள். சமூகத்தாலும் பிள்ளைகளாலும் பாரமாகவே இவர்கள் கருதப்படுகிறார்கள். குடும்பத்தில் அவர்கள் பல்வேறு நிலைகளில் இருந்து ஓரங்கட்டப்பட்டு தனிமைப்படுத்தப்படுகிறார்கள். யாரும் இவர்களை ஒரு பொருட்டாக கொள்வதில்லை. இதனால் முதுமை பரிசாகக் கொடுக்கும் உடலியல் உபாதைகளைவிட மேலே கூறப்பட்ட காரணிகளால் அதிகம் அவதியடைகிறார்கள்.

நவீன சமூகங்கள் மரணத்தை சமூகமயப்படுத்துவதற்கு (Socialization of death) குறைந்த ஆர்வத்தையே காட்டுகின்றன. கைத்தொழில் புரட்சிக்கு முந்திய சமூகத்தில் மரணம் வீட்டில் இடம் பெற்றது. இதனால் மரணம் குறித்த அறிவும் அனுபவமும் குடும்ப அங்கத்தவர்களுக்கு சாதாரணமாகக் கிடைத்தது. மரணம் குறித்த அச்சமும் குறைவாக இருந்தது. ஆனால் நவீன சமூகங்களில் மரணங்கள் வைத்தியசாலை அல்லது முதியோர் இல்லம் போன்ற ஒழுங்கமைப்புக்களில் இடம்பெறுவதால் ஒரு தனியனுக்கு அது குறித்த அறிவும் அனுபவமும் குன்றிப் போகின்றது. பல பொழுதுகளில் இந்த முறைசார் ஒழுங்கமைப்புக்கள் மரணத்தின் உண்மைக் காரணங்களைக் கூட மறைத்துவிடுகின்றன.

### ஏ. சமூகமயமாக்கல் வழிகளிலுள்ள முரண்பாடு

வேறுபட்ட சமூகமயமாக்கல் முகவர்கள் வேறுபட்ட இலக்குகளை கொண்டிருக்கும் போது அவற்றில் எதைக் கைக்கொள்வது எனும் பிரச்சினை ஒரு தனியனுக்குள் எழுகின்றது. இந்நிலை குழப்பங்களையும் முரண்பாடுகளையும் தோற்றுவிக்கின்றது.

**சுருக்கம்**

- ✓ சமூகத்தின் பண்பாட்டை கற்றுக்கொள்ளும் செயன்முறைதான் சமூகமயமாக்கல் ஆகும். நான்கு வகையான சமூகமயமாக்கம் குறித்து இயன் றொபட்சன் குறிப்பிடுகின்றார்.
- ✓ வாய்வழி, குதவழி, ஈடிபஸ் மற்றும் கட்டிளமைப்பருவம் என நான்கு நிலைகளை அல்லது கட்டங்களை சமூகமயமாக்கல் கொண்டுள்ளது.
- ✓ பல்வேறுபட்ட சமூகமயமாக்கல் முகவர்கள் சமூகமயமாக்கல் செயன்முறையில் ஈடுபடுகின்றன.
- ✓ சமூகமயமாக்கம் எப்போதும் அடைவுகளை மட்டுமல்லாது தோல்விகளையும் கொண்டு வருகின்றது.

**பயிற்சி வினாக்கள்**

01. சமூகமயமாக்கல் தொடர்பான வரைவிலக்கணங்களைத் தந்து ஏன் சமூகமயமாக்கல் அவசியம் என விளக்குக.
02. சமூகமயமாக்கலின் வகைகளையும் கட்டங்கட்டமான படித்தரங்களையும் விளக்குக.
03. சமூகமயமாக்கல் செயன்முறையை தோல்வியை நோக்கி நகர்த்தும் செயற்பாடுகளை தெளிவுபடுத்துக.

**திறவுச் சொற்கள்**

சமூகமயமாக்கம், பண்பாட்டுப் பரிமாற்றம், ஈடிபஸ் சிக்கல், எலக்ரா சிக்கல், சமூக ஒத்துப்போதல்

**உசாத்துணை நூல்கள்**


1. அய்யூப், எஸ்.எம். (2013). *சமூகவியல் அடிப்படை எண்ணக்கருக்கள்*. ஒலுவில்: சமூக விஞ்ஞானங்கள் துறை, இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.
2. Giddens Anthony. (2005). *Sociology*. Cambridge: Polity Press.
3. Haralambos, M., & Heald R.M. (2004). *Sociology: Themes and perspectives.* London: Harper Collins Publishers Limited.
4. Landis Paul, H. (1990). *Sociology: An introduction*. Massachusetts: Ginn and Company a Xerox Education Company.
5. Rao Shankar. (2002). *Sociology*: *Primary principles.* New Delhi: S. Chand and Company Ltd.

# அத்தியாயம் 05

# பண்பாடு

**உள்ளடக்கம்**

4.1 பண்பாடு: அறிமுகம்
4.2 பண்புகள்
4.3 பண்பாட்டின் தொழிற்பாடுகள்
4.4 பண்பாட்டின் உட்கூறுகள்
4.5 பண்பாட்டு அமைப்புகள்
4.6 பண்பாட்டு மாற்றமும் பண்பாட்டு வளர்ச்சியும்

**அத்தியாயச் சுருக்கம்**

சமூக விஞ்ஞானக் கற்கைகளில் மிகவும் முக்கியமானொரு கருத்தியலாக பண்பாடு (Culture) காணப்படுகின்றது. உளவியல், அரசியல் விஞ்ஞானம மற்றும் பொருளியல் போன்ற கற்கைகளில் இதன் பிரயோகம் அதிகமாகும். மானுடவியலில் பிரதானமான எண்ணக்கருவாகவும், சமூகவியலில் அடிப்படையானதொரு விடயமாகவும் பண்பாடு உள்ளது. மானிட சமூகத்தை படிக்க முற்படும் போது பண்பாடு குறித்த அறிவும் அவசியமாகின்றது. சமூகம் பற்றிய ஆய்வு அச்சமூகத்தின் பண்பாடு பற்றிய கச்சிதமான புரிதலின்றி பூரணத்துவமடையாது. பண்பாடும் சமூகமும் ஒன்றை விட்டு ஒன்றைப் பிரிக்க முடியாதபடி பின்னிப் பிணைந்துள்ளது. எனவேதான் இவ்வத்தியாயம் பண்பாடு குறித்து தெளிவுபடுத்துகின்றது.

**அத்தியாய நோக்கம்**

பண்பாடு தொடர்பான அடிப்படை அறிவை வழங்குவதும் பண்பாட்டின் அமைப்பினை விளக்குவதும் மற்றும் பண்பாட்டு மாற்றங்களை தெளிவுபடுத்துவதும் இவ்வத்தியாயத்தின் நோக்கமாகும்.

**கற்றல் பெறுபேறுகள்**

இவ்வத்தியாயத்தைக் கற்கும் மாணவர்கள் பண்பாடு தொடர்பான விளக்கங்களையும் பண்பாட்டின் அமைப்பையும் பண்பாட்டு மாற்றங்களையும், வளர்சியையும் கற்றுக் கொள்வார்கள்.

## 4.1 அறிமுகம்

பண்பாடு மானிட சமூகத்தின் தனித்துவமானதொரு கூறாகும். மனிதன் மட்டுமே பண்பாட்டு சூழலிலே பிறந்து (Cultural environment) அதிலேயே வளர்கின்றான். ஏனைய உயிரினங்கள் இயற்கை சூழலிலேயே (Natural environment) வளர்ந்து வருகின்றன. பண்பாடுதான் மனிதனை விலங்குகளிடமிருந்து வேறுபடுத்தும் தனித்துவமான அம்சமாகும் என பெரும்பாலான அறிஞர்கள் கூறுகின்றார்கள். எனினும் சில கீழ்நிலை விலங்குகளின் வாழ்விலும் பண்பாட்டை காணமுடியும். ஆனால் அதன் தன்மை வேறுபட்டது என பக்தவத்சலபாரதி (1999) கூறுகின்றார்.

பண்பாடு மிகவும் விரிந்த கருத்தை கொடுக்கும் ஒரு சொல்லாகும். நடத்தை வடிவம், தத்துவங்கள், ஒழுக்கம், நன்னெறிகள், வழக்கங்கள், பழக்கங்கள், சமயம், அரசியல மற்றும் பொருளாதாரம் போன்ற வாழ்வின் அனைத்து விடயங்களையும் உள்ளடக்குகின்றது. மனிதன் தனது தனிப்பட்ட மற்றும் சமூக வாழ்வில் பெற்றுக் கொண்ட அனைத்தையும் பண்பாடு குறித்து நிற்கின்றது. இதனையே மெகில்வர் மற்றும் பேச் (MacIver and Page) போன்றோர் ஒரு தனியன் குழுவிலிருந்து பெற்றுக் கொள்ளும் சமூக பாரம்பரியம் (Social heritage) அனைத்தும் பண்பாடு ஆகும் எனக் கூறுகின்றார்கள்.

பண்பாடு எனும் சொல் வேறு வேறு கற்கைகளில் மற்றும் வெவ்வேறு துறைகளில் பல்வேறு கருத்துக்களில் பயன்படுத்தப்படுகின்றது. சமூகவியலாளர்கள் இதனை தனித்துவமான பொருளில் பயன்படுத்துகின்றனர். பண்பாடு குறித்த 160 இற்கு மேற்பட்ட வரையறைகளை குரோபர் மற்றும் குழுக்கான் (Krober and

Kluckhon) ஆகிய இருவரும் தொகுத்துள்ளனர். பண்பாட்டை மனிதனின் ஒன்று குவிக்கப்பட்ட படைப்பாகவும் (Cummulative creation) மனிதன் தன் இலக்குகளை அடைந்து கொள்வதற்கான ஊடகமாகவும் மலினோவஸ்கி கருதுகின்றார்.

நாம் சமூகத்தில் உறுப்பினர்கள் என எண்ணிக் கொண்டு சிந்திக்கும் மற்றும் செயலாற்றும் வழிகள் மொத்தமும் பண்பாடு ஆகும் என றொபட் பியர்ஸ்டெட் (Robert Biestedt) கூறுகின்றார்.

மனிதன் மட்டுமே கொண்டிருக்கின்ற கோட்பாட்டு மற்றும் நடைமுறை ரீதியான (Practical) சிந்தனை (Thoughts) மற்றும் அறிவு (Knowledge) ஆகியவற்றின் தொகுதி பண்பாடாகும் என றொபேர்ட்டீ (E.V.De.Roberty) என்பவர் கூறுகின்றார்.

பண்பாடு மனிதன் தனது வீருப்பங்களை நிறைவேற்றுவதற்காக உருவாக்கிக் கொண்ட கருவிகள் என சீ.நோர்த் (C.North) குறிப்பிடுகின்றார்.

பண்பாட்டை சிந்தனைகள், விழுமியங்கள் மற்றும் நோக்கங்கள் போன்றவற்றின் ஒட்டுமொத்தமாக கிரஹாம் வோல்ஸ் கருதுகின்றார். மேலும் பண்பாட்டை கற்றல் மூலம் பெறப்படும் சமூகப் பாரம்பரியமாகவும் (Social heritage) காண்கிறார். மேலும் இயல்பாக பரம்பரை பரம்பரையாக கடத்தப்படும் உயிரியல் பாரம்பரியத்திலிருந்து (Biological heritage) வேறுபடுவதாகவும் அதனைக் கருதுகின்றார்.

பண்பாடு என்பது மக்கள் அனைவரும் கூட்டாக சேர்ந்து செயல்படும் போது உண்டாகும் நடத்தை முறைகளின் சேர்மமாகும். இது அந்தந்த சமுதாயத்திற்கு மட்டுமே உரியது. இது உயிரியல் நிலையில் (Biological) மரபுரிமையாக வராதது என பொதுவாக பண்பாடு பற்றி சமூகவியலாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

பண்பாடு அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்க நெறிகள் (Morals), சட்டம், வழக்கம் (Custom) முதலானவையும், மனிதன் சமுதாயத்தில் ஓர் உறுப்பினராக இருந்து கற்கும் பிற திறமைகளும், பழக்கங்களும் (Habits) அடங்கிய முழுமைத் தொகுதியாகும் என டைலர் (E.P.Taylor) குறிப்பிடுகின்றார் (பக்தவத்சலபாரதி 1999). இவரது வரைவிலக்கணமே சமூகவியலாளர்களாலும் ஏனைய துறை அறிஞர்களாலும் முழுமையான வரைவிலக்கணமாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

### 4.2 பண்பாடு : பண்புகள்

#### 01. பண்பாடு கற்றுக்கொள்ளப்படுகின்றது (Culture is learnt)

பண்பாடு உயிரியல் நிலையில் பெறப்படாது, கற்றலின் மூலம் தான் பெறப்படுகின்றது. பண்பாடு இயல்பாக பிறப்பதில்லை. எனவேதான் நடத்தைகளை கற்கும் வழிகளே பண்பாடு எனப்படுகின்றது. தூங்கும் போது கண்களை மூடுதல், இமைகளை அசைத்தல் போன்றவை உடலியல்சார் செயற்பாடுகளே தவிர பண்பாட்டு நடத்தைகள் அல்ல. மேலும் இவை கற்கப்படாத நடத்தைகள் (Unlearned Behaviours) ஆகும். ஆனால் கை குலுக்குதல், சலாம் மற்றும் வணக்கம் சொல்லுதல், நன்றி கூறுதல், ஆடை அணிதல், உணவு சமைத்தல் தொழுதல் மற்றும் சலாம் கூறுதல் போன்றவை பண்பாடுசார் நிகழ்வுகளாகும். இவை கற்றல் மூலம் தெரிந்து கொள்ளப்படுகின்றன.

#### 02. பண்பாடு சமூகம் சார்ந்தது (Culture is social)

பண்பாடு தனிமனிதனின் தோற்றப்பாடு இல்லை. அது சமூகத்தின் உற்பத்தி. சமூக இடைவினை மூலமே அது தோன்றி வளர்கின்றது. அது சமூக உறுப்பினர்களால் பரிமாறப்படுகின்றது. மானிட சமூக உறுப்பினர்களுடன் தொடர்பில்லாமல் ஒருவர் பண்பாட்டை கற்றுக் கொள்ள முடியாது. எனவே பண்பாடு சமூகம் சார்ந்தது என சொல்லப்படுகின்றது.

### 03. பண்பாடு பகிர்ந்து கொள்ளப்படுகின்றது (Culture is shared)

பண்பாடு பகிர்ந்து கொள்ளப்படும் ஒன்றாக காணப்படுகின்றது. அது ஒரு தனிமனிதனின் பரிமாறப்படாத சொத்து அல்ல. பழக்கவழக்கங்கள், மரபுகள், நம்பிக்கைகள் மற்றும் ஒழுக்கங்கள் போன்றவை சமூக உறுப்பினர்களால் பகிர்ந்து கொள்ளப்படுகின்றன. அல்பேர்ட் ஐன்ஸ்டைனின் கண்டுபிடிப்புக்கள், சாள்ஸ் டாவினின் கருத்துக்கள், காளிதாசனின் இலக்கியப் படைப்புக்கள், தாவோவின் தத்துவங்கள் மற்றும் ரவிவர்மாவின் கலைப்படைப்புகள் எல்லாம் பல்தொகை மக்களால் பகிர்ந்துகொள்ளப்பட்டவைதான்.

### 04. பண்பாடு பரிமாறக்கூடியது (Cultural is transmissive)

பண்பாடு ஒரு தலைமுறையில் இருந்து அடுத்த தலைமுறைக்கு பரிமாற்றம் செய்யப்படுகின்றது. பெற்றோர் தம் குழந்தைகளுக்கும் குழந்தைகள் பெற்றோரானதும் தமது குழந்தைகளுக்கும் பண்பாட்டுக் கூறுகளை பரிமாறிக் கொள்கிறார்கள். மொழி பண்பாட்டின் முக்கிய பகுதியாக இருப்பதனால் அதன் வழியாகவும் பண்பாடு பரிமாறப்படுகின்றது.

### 05. பண்பாடு தொடரானது மற்றும் திரளானது (Culture is continuous and cumulative)

பண்பாடு ஒரு தொடரான செயற்பாடாக நிலைத்திருக்கின்றது. அதேபோல் பண்பாடு மனித இனத்தின் ஞாபகமாக (Memory) இருப்பதாக றொபர்ட் பியர்ஸ்டெட் (Robert Biersted) எனும் அறிஞரும் சமூகப் பிதுராச்சிதமாக இருப்பதாக லிண்டன் (Linton) எனும் அறிஞரும் குறிப்பிடுகின்றனர். பண்பாட்டின் தொடர்ச்சி பண்பாட்டினுள்ளே பல விடயங்களை ஒன்று சேர்த்து விடுகின்றது. இதனால் பண்பாடு மானிட சமூகத்தின் ஞாபக சின்னமாவும், சமூக பாரம்பரியமாகவும் அமைந்து விடுகின்றது.

### 06. பண்பாடு உறுதியானது மற்றும் ஒருங்கிணைந்தது (Culture is consistent and integrated)

பண்பாடு அதன் வளர்ச்சியில் உறுதியான தன்மையைக் (Consitent) கொண்டுள்ளது. அதே போல் பண்பாட்டின் பகுதிகள் ஒன்றுடன் ஒன்று ஒருங்கிணைந்ததாக காணப்படுகின்றது. உதாரணமாக சமூகத்தின் விழுமிய முறையை (Value system) எடுத்துக் கொண்டால் அது சமயம், மரபுகள், நம்பிக்கைகள் மற்றும் ஒழுக்கம் போன்ற ஏனைய பகுதிகளுடன் தொடர்புள்ளதாக காணப்படுகின்றது.

### 07. பண்பாடு இயக்கம் கொண்டது (Culture is dynamic)

ஒப்பீட்டளவில் பண்பாடு நிலையானதாக (Static) காணப்பட்டாலும் அது எப்போதும் நிலையானது அல்ல. மாற்றமும் வளர்ச்சியும் பண்பாட்டின் பண்புகள். நவீன இலங்கையுடன் பாரம்பரிய இலங்கையை ஒப்பீட்டு நோக்கினால் எத்தகைய மாற்றங்கள் பண்பாட்டிலே உருவெடுத்துள்ளன என்பது தெரியவரும். எனவேதான் பண்பாடு இயக்கம் கொண்டது எனக் கூறப்படுகின்றது.

### 08. பண்பாடு மனநிறைவு கொடுக்கக் கூடியது (Culture is gratifying)

மானிட சமூகத்தின் விருப்புக்களையும் (Desire) தேவைகளையும் நிறைவு செய்து கொள்வதற்கான அரிய சந்தர்ப்பங்களையும் வழிகளையும் பண்பாடு கொடுக்கின்றது. இவை பௌதீக தேவைகளாகவோ, சமூகத் தேவைகளாகவோ இருக்கலாம். உணவு, உடை, உறையுள் போன்ற தேவைகளும் அந்தஸ்து மற்றும் புகழ் போன்றவற்றின் தேவைகளும் பண்பாட்டின் வழியினூடே அடையப்படுகின்றன.

### 09. பண்பாடு சமூகத்துக்கு சமூகம் மாறுபடும் (Culture is varies from society to society)

பண்பாடு சமூகத்திற்கு சமூகம் வேறுபடுகின்றது. ஒவ்வொரு சமூகமும் அதற்கேயுரிய தனித்துவமான பண்பாட்டை கொண்டிருக்கின்றது. பண்பாடும் பண்பாட்டின் கூறுகளான மரபுகள், ஒழுக்கங்கள், நம்பிக்கைகள், கருத்தியல்கள், நடைமுறைகள மற்றும் நிறுவனங்கள் போன்றவையும் எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. சாப்பிடும் முறை, ஆடையணியும் விதம மற்றும் பேசும் பாங்கு போன்றவை கூட சமூகத்திற்கு சமூகம் மாறுபடுகின்றன.

பண்பாடு பற்றி குரோபரும் குழுக்கானும் தொகுத்த வரையறைகள் அனைத்தையும் ஆழ்ந்து நோக்கும் போது அவை இரு வகைகளில் பண்பாட்டை விளக்க முற்படுவதாக பக்தவத்சலபாரதி (1999) கூறுகின்றார். முதல் வகை வரையறைகள் உண்மையியல் வகை (Realistic category) என்றும், இரண்டாம் வகை வரையறைகள் கருத்தியல் வகை (Idealistic category) என்றும் அழைக்கப்படுகின்றன.

முதல் வகையினர் நேரடியாக உற்று நோக்குதல் மூலம் பண்பாட்டை அறிய முடியும் எனக் கூறுகின்றனர். இரண்டாம் வகையினர் மக்கள் அவரவர் பண்பாட்டை பற்றி ஏற்படுத்திக் கொண்டுள்ள விழுமியங்களையும் (Value), நெறிமுறைகளையும மற்றும் பிற கருத்துக்களையும் புரிந்து கொள்வதன் மூலம் பண்பாட்டை புரிந்து கொள்ள முடியும் என்கின்றனர். அதாவது உற்று நோக்கல் மூலம் அல்லாமல் மனதளவில் மட்டுமே பண்பாட்டை புரிந்துகொள்ள முடியும் எனக் கூறுகின்றனர். இந்த இரண்டு வகை அணுகுமுறைகளிலும் குறைபாடுகள் காணப்படுகின்றன. இரண்டாம் வகையினர் கூறுவதுபோல் பண்பாட்டை மனதளவில் மட்டும் புரிய முற்படின் இதனை எப்படி சோதித்துப் பார்ப்பது எனும் பிரச்சினை எழுகின்றது. அதேபோல் முதல்வகையினரை பின்பற்றும்போது ஆய்வாளரின் தவறான உற்று நோக்கல் தவறான முடிவுகளை

கொண்டு வந்துவிடும். இச்சர்ச்சை பண்பாட்டுச் சார்புடைமைக் கொள்கையின் (Cultural relativism) தோற்றம் மூலம் முடிவுக்கு வந்தது.

### 4.3 பண்பாடு : தொழிற்பாடுகள்

மனிதன் சமூகப்பிராணியாக மட்டுமல்லாது பண்பாட்டு உயிரியாகவும் காணப்படுகின்றான். மிருகம் எனும் நிலையிலிருந்து மனிதன் எனும் அந்தஸ்திற்கு உயர்த்துவது அவன் கொண்டிருக்கும் பண்பாடுதான் என சில அறிஞர்கள் கூறுவர். பண்பாடானது பல தொழிற்பாடுகளை ஆற்றுகின்றது.

**01. பண்பாடு அறிவின் கருவூலமாகும் (Culture is treasury of knowledge)**

பண்பாடு, அறிவின் திறைசேரியாக தொழிற்படுகின்றது. பௌதீக, சமூக மற்றும் புத்திஜீவித்துவ இருப்பிற்கு அவசியமான அறிவை பண்பாடு வழங்குகின்றது. பறவைகளும் மிருகங்களும் உள்ளுணர்வின் மூலம் தமது வாழ்வை சூழலிலேயே அமைத்துக் கொள்கின்றன. ஆனால் மனிதனோ புத்திக் கூர்மை, கற்கும் ஆற்றல் போன்றவற்றை பயன்படுத்தி சூழலுக்கு ஏற்றவாறு தன்னை ஒழுங்கமைத்துக் கொள்கின்றான். இதற்கான பயிற்சியையும் அறிவையும் பண்பாடே வழங்குகின்றது. இந்த அறிவைப் பாதுகாத்து அடுத்த பரம்பரைக்கு பரிமாற்றம் செய்வது பண்பாடுதான்.

**02. பண்பாடு நிலமைகளை வரையறுக்கின்றது (Culture define situations)**

பண்பாடானது சமூக சூழலை வரையறை செய்து நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போன்றவற்றையும் சொல்லித் தருகின்றது. எதைச் சாப்பிட வேண்டும், எதைக் குடிக்க வேண்டும், எப்போது சிரிக்க வேண்டும் மற்றும் எப்போது தூங்க வேண்டும் என்பவற்றை பண்பாடு சொல்லித்தருகின்றது. முஸ்லிம்கள் ஹலால் - ஹராம்

பேணி வாழ வேண்டும் என்பது அவர்களின் பண்பாட்டின் வழிகாட்டல்தான்.

### 03. மனப்பான்மை, விழுமியம் மற்றும் இலக்கை பண்பாடு வரையறுக்கின்றது (Culture defines attitudes, values and goals)

சமூகமயமாக்கல் செயன்முறை மூலம் மனப்பான்மை, விழுமியம் மற்றும் இலக்குகள் வரையறுக்கப்படுகின்றன.

### 04. பண்பாடு தொழிலைத் தீர்மானிக்கின்றது (Culture defines career)

ஒருவர் அரசியல்வாதியாக செயற்படுவதிலும் சமூக சேவையாளராக வாழ்வதிலும் வைத்தியர், பொறியியலாளர், விவசாயி, விரிவுரையாளர் மற்றும் சமயத் தலைவர்கள் போன்ற பாத்திரங்களின் தெரிவிலும் பண்பாடு தாக்கத்தைச் செலுத்துகின்றது. ஒருவரது பாத்திரத் தெரிவு பண்பாட்டின் வரையறைகளை மீறிச் செல்லக் கூடாது. அவ்வாறு மீறிச் செல்லும் போது சமூகம் அவரை ஏற்காது ஒதுக்கி வைத்துவிடும். முஸ்லிம் சமூகத்தில் உள்ள ஒருவர் பன்றி வளர்ப்பிலோ அல்லது விற்பனை நடவடிக்கைகளிலோ ஈடுபடமுடியாது.

### 05. பண்பாடு நடத்தைப் பாங்குகளைத் தருகின்றது (Culture provides behavior patterns)

ஒரு தனிநபரின் நடத்தைகளை பண்பாடு நெறிப்படுத்துகின்றது. ஒருவரது நல்ல செயலை பாராட்டுகின்றது. கெட்ட செயலை தூற்றுகின்றது. மனிதன் பண்பாட்டின் கைதியாகவே வாழ்கின்றான்.

**06. பண்பாடு ஆளுமையை செப்பனிடுகின்றது (Culture modules personality)**

ஒரு தனியனது ஆளுமை விருத்திக்கு பண்பாடு இன்றியமையாத ஒன்றாகும். பண்பாட்டுச் சூழல் இல்லாமல் ஒரு குழந்தையின் மானிட பண்புகள் வளராது. ஆளுமை விருத்திக்கான கட்சிதமான சூழலை பண்பாடே ஏற்படுத்திக் கொடுக்கின்றது.

**07. வம்சாவளி (Ancestry)**

முன்னோர்கள் பற்றிய மதிப்புமிக்க மற்றும் பயன்மிக்க தகவல்களை பண்பாடு சொல்லிக் கொடுக்கின்றது. ஒரு வரலாற்றுப் புத்தகத்தின் பக்கங்களைப் போன்றதே பண்பாட்டு மரபுகள். அவற்றை ஆர்வத்துடன் படிக்க வேண்டும். மனிதர்கள் இறந்து போவார்கள். ஆனால் பண்பாடு வாழ்கின்றது. இறந்துபோன முன்னோர்களைப் படிப்பதற்கான வாயில்களை பண்பாடுதான் திறந்து கொடுக்கின்றது.

**08. சுய உணர்தல் (Self-realization)**

பண்பாட்டின் வேர்களை ஒரு தனியன் படிக்கும் போது தனது பண்பாடு அடைந்துள்ள உச்சம், வளர்ச்சி மற்றும் மகிமை குறித்து பெருமிதமடைகின்றான். பெருமைமிக்க பண்பாட்டின் தெடர்ச்சியாக தன்னை அவன் கருதும் போது சுயகௌரவமும் பெருமையும் அவனுக்குள் எழுகின்றது. மேலும் சொந்த பண்பாட்டை மதிக்க வேண்டும் எனும் உணர்வு மேலெழுகின்றது.

**09. பரிணாம அறிவொளி (Evaluationary enlightment)**

பண்பாட்டைத் தெரிந்து கொள்வதன் மூலம் பரிணாம வளர்ச்சியைப் புரிந்து கொள்ளலாம். மனிதர்கள் சமூகமாக வாழத்தொடங்கிய பண்டைக்காலத்திலேயே பண்பாடு தோன்றிவிட்டது. பண்பாட்டைப் படிப்போருக்கு முன்னோர்கள் பற்றிய அறிவொளிளை அது கொடுக்கின்றது.

**10. தார்மீக விழுமியங்கள் (Moral values)**

பண்பாட்டைப் பின்பற்றி வாழ்வோருக்கு அது தார்மீக விழுமியங்களை சொல்லிக்கொடுக்கின்றது. எல்லாப் பண்பாடுகளும் சிறந்த

மனிதர்களை உருவாக்குவதற்கான போதனைகளையும் அறிவையும் மற்றும் நம்பிக்கைகளையும் கொண்டுள்ளன.

**11. ஒழுக்கம் (Disipline)**

பண்பாட்டு மரபுகள் மனிதர்களை ஒழுக்கசீலர்களாக மாற்றுகின்றன. எல்லாப் பண்பாடுகளும் நியமங்களையும் சட்டங்களையும் கொண்டுள்ளன. அவற்றை பின்பற்றுவதன் மூலம் அமைதியான இருப்பும் (Peaceful existence) ஒழுக்கமான சமூதாயமும் உருவாகின்றது.

**12. இரக்கம் (Compassion)**

எல்லாப் பண்பாடுகளும் உலகிலுள்ள ஏனைய பண்பாடுகளுடன் இணங்கி வாழும்படி கற்றுக்கொடுக்கின்றது. பண்பாட்டின் போதனைகள் சமாதானத்தை நோக்காகக் கொண்டவையாகையால் எல்லோரிடமும் இரக்கத்துடன் வாழும்படி போதிக்கின்றது.

**13. எதிர்கால தலைமுறையைப் பாதுகாத்தல்**

பண்பாட்டு மரபுகள் நமது அனுபவமிக்க முன்னோர்களால் உருவாக்கப்பட்டவை. நிகழ்கால மற்றும் எதிர்கால சமூகத்தை சிதைவிலிருந்து பாதுகாப்பதே அதன் நோக்கமாகும்.

**14. பொறுப்பு (Responsibility)**

ஒரு பெறுப்புள்ள மானிடனாக வாழும்படி பண்பாட்டு மரபுகள் போதிக்கின்றன.

### 4.4 பண்பாட்டின் உட்கூறுகள்

பண்பாடு ஒரு கம்யூட்டர் போன்றது. கம்யூட்டர் இயங்க பல உறுப்புக்கள் தேவைப்படுகின்றன. பண்பாடும் அப்படித்தான். கம்யூட்டரின் பகுதிகள் (Parts) கண்களுக்கு இலகுவில் தெரிகின்றன. ஆனால் பண்பாட்டின் கூறுகள் அவ்வாறு தெரிவதில்லை. ஒரு பண்பாட்டிலே மூன்று உட்கூறுகள் உள்ளதாக பக்தவத்சலபாரதி

(1999) கூறுகின்றார். பண்பாட்டுக் கூறு (Cultural trait), பண்பாட்டுக் கலவை (Cultural complex) மற்றும் நிறுவனம் (Institution) என்பவையே அவையாகும்.

பண்பாட்டின் மிகச்சிறிய அலகே பண்பாட்டுக்கூறு எனப்படும். பொருள்சார் பண்பாட்டிற்கு உதாரணமாகக் கூறக்கூடிய கத்தி, கதவு போன்றவையும், பொருள்சாரா பண்பாட்டிற்கு உதாரணமாகக் கூறக்கூடிய தலைவாருதல், கைகுலுக்குதல், முத்தம் கொடுத்தல் போன்றவையும் பண்பாட்டுக் கூறு ஆகும். ஏனெனில் இவற்றை மேலும் பிரிக்க முடியாது.

பலகூறுகள் ஒன்றாக சேரும் போது அவை பண்பாடடுக் கலவையாக மாறுகின்றது. நடனம் பண்பாட்டுக் கலவைக்கு சிறந்த உதாரணம் ஆகும். நடனத்திலே அசைவுகள், பாட்டு மற்றும் இசைக் கருவிகள் என பல கூறுகள் இணைந்திருக்கும். வீடும் ஒரு பண்பாட்டுக் கலவைதான். இங்கு கல், மண், யன்னல் மற்றும் கிணறு என பல கூறுகள் ஒன்றிணைந்து காணப்படும்.

பல பண்பாட்டுக் கலவைகள் ஒன்று சேரும் போது அது நிறுவனமாகிறது. குடும்பம் ஒரு நிறுவனம். அதில் திருமணம், வீடு, தேன்நிலவு, உடலுறவு மற்றும் குழந்தை வளர்ப்பு எனப் பல கலவைகள் உள்ளடங்கியிருக்கின்றன.

**உட்கூறின் தன்மைகள்**

ஒரு பண்பாட்டில் இடம்பெற்றுள்ள உட்கூறுகளின் பண்புகளை அடிப்படையாக வைத்து அது மூன்று வகையாக பிரிக்கப்படுகின்றது.

**அ). பொருள்சார் கூறுகள் (Material components)**

இயந்திரங்கள், வீட்டுப் பொருள்கள், கட்டிடங்கள் மற்றும் சாலைகள் போன்ற மக்கள் அவர்களின் பயன்பாட்டிற்காக ஏற்படுத்திக் கொள்ளும் அனைத்துப் பொருள்களும் இதிலடங்கும்.

### ஆ). அறிதல்சார் கூறுகள் (Cognitive components)

இது அறிதிறனோடு (Cognitive) தொடர்புடையது. மக்கள் அவர்கள் வாழும் உலகத்தைப் பற்றியும் உலகியல் வாழ்வு குறித்தும் எதனைத் தெரிந்துவைத்துள்ளார்கள் என்பதை இது குறிக்கின்றது. நல்லது, கெட்டது போன்றவற்றினை எவ்வாறு தீர்மானிக்கின்றனர்? பருவ காலங்கள், இயற்கை நிகழ்ச்சிகள் போன்றவற்றினை எவ்வாறு மதிப்பிடுகின்றனர்? தாவரம் மற்றும் விலங்குகளை எவ்வாறு பிரிக்கின்றனர்? போன்ற அறிதிறனோடு தொடர்புடைய கூறுகளே அறிதல் சார் கூறுகள் ஆகும். இதனை மொத்தமாக அறிவு (Knowledge) எனக் கூறலாம் (பக்தவதசலபாரதி, 1999).

### இ). நெறியியல் கூறுகள் (Normative components)

சமுதாயத்தில் ஒருவர் எவ்வாறு வாழ வேண்டும், எவற்றைச் செய்யக் கூடாது, ஏன் செய்யக் கூடாது போன்ற விதிமுறைகளுடன் தொடர்புடைய மக்களின் வாழ்வை நெறிப்படுத்தும் கூறுகளே நெறியியல் கூறுகளாகும். விழுமியங்கள் (Values), நெறிமுறைகள் (Norms), விதிகள் (Laws), குடிவழக்கங்கள் (Folkways), வழக்கடிபாடுகள் (Mores), மரபாண்மைகள் (Ethos), அளிப்புக்கள் (Sanctions), வழக்கங்கள் (Customs), பழக்கங்கள் (Habits) போன்வை நெறியியல் கூறுகளில் முதன்மையானவை (பக்தவத்சலபாரதி, 1999).

## 4.5 பண்பாட்டின் அமைப்புகள்

### அ). பொருள்சார் பண்பாடும் பொருள்சாராப் பண்பாடும்

### (Material culture and non-material culture)

மக்கள் அவர்களின் தேவைகளுக்காக செய்து கொள்ளும் அனைத்து வகையான பொருள்களும் பொருள்சார் பண்பாட்டில் அடங்கும். இயந்திரங்கள், கருவிகள், வீட்டுப் பொருட்கள மற்றும் ஆபரணங்கள் போன்றவை இதற்கு உதாரணங்களாகும். பொருள்சாரா பண்பாட்டில்

பொருள் வடிவம் பெறாத அனைத்துக் கூறுகளும் இடம்பெறும். கருத்துக்கள், பழக்கவழக்கங்கள், அழகியல் சிந்தனைகள், கற்பனை, இசை மற்றும் மந்திரங்கள் போன்றவை இதற்கு உதாரணங்களாகும்.

இவை இரண்டும் ஒன்றாக சேர்ந்தும் காணப்படும். கிரிக்கட் விளையாட்டை எடுத்துக் கொண்டால் அதில் பயன்படுத்தப்படும் பந்து, மட்டை மற்றும் சீருடை போன்றவை பொருள்சார் பண்பாடாகவும் அதனை எப்படி விளையாட வேண்டும் எனும் விதிமுறைகள் பொருள்சாரா பண்பாடாகவும் அமைகின்றன (பக்தவத்சலபாரதி, 1999).

### ஆ). கருத்தியல் பண்பாடும் உண்மைப் பண்பாடும் (Ideal culture and real culture)

கருத்தியல் பண்பாடு என்பது சமுதாய வாழ்வில் இதை இதைத்தான் செய்ய வேண்டும் எனும் மக்களின் எதிர்பார்ப்பதைக் குறிக்கின்றது. ஆனால் சட்ட திட்டங்ளை கவனத்திற் கொள்ளாது மக்கள் நடைமுறை வாழ்வில் எவ்வாறு நடந்து கொள்கிறார்கள் என்பதனை உண்மைப் பண்பாடு குறித்து நிற்கின்றது. இலஞ்சம் வாங்கக் கூடாது என்பது கருத்தியல் பண்பாடு. ஆனால் நடைமுறை வாழ்வில் இலஞ்சம் வாங்குவது உண்மைப் பண்பாடு.

### இ). உள்ளார்ந்த பண்பாடும் வெளிப்படைப் பண்பாடும் (Implicit or covert culture and explicit or overt culture)

மக்கள் மனதில் பதியவைத்துள்ள பண்பாட்டு விதிகளின் (Cultural rule) அடிப்படையில் நிகழும் நடத்தைகளின் தொகுப்பே உள்ளார்ந்த பண்பாடாகும். தேசிய கீதம் பாடப்படும் போது எழுந்து அசையாமல் நிற்பதும், பெரியவர்கள் வரும் போது மரியாதை செய்வதும் இதற்கு உதாரணங்களாகும். உள்ளார்ந்த பண்பாட்டை மக்கள் மனதளவில் கொண்டிருப்பார்கள். இவற்றை வெளிப்படையான புற நிகழ்ச்சிகள் மூலமே புரிந்து கொள்ளலாம். உள்ளார்ந்த பண்பாட்டிற்கு நேர் எதிரானது வெளிப்படை பண்பாடு. ஒரு சமுதாயத்தின் நடத்தை

முறைகள் எக்கூறுகளில் வெளிப்படுகின்றதோ அவையே அச்சமுதாயத்தின் வெளிப்படைப் பண்பாடாகும். பெரும்பாலும் இவை பொருள்சார் கூறுகளால் அறியப்படுகின்றது (பக்தவத்சலபாரதி, 1999).

### ஈ). உப பண்பாடும் எதிர்ப்பண்பாடும் (Sub-culture and counter culture)

முழு மானிட சமுதாயத்தினதும் பெரியதொரு சமூக பாரம்பரியமாக (Social heritage) பண்பாடு காணப்படுவதனால் அது தேசிய பண்பாடு (National culture) எனவும் அழைக்கப்படுகின்றது. துணைப்பண்பாடு அல்லது உபபண்பாடு எனப்படுவது தேசிய பண்பாட்டின் ஒரு பிரிவாகும் என டுன்க்கன் மிட்சல் (Duncan mitchell) கூறுகின்றார். ஒரு தேசிய பண்பாட்டில் பல உப பண்பாடுகள் காணப்படும். அவை ஒவ்வொன்றும் தனித்துவமான வாழ்கை முறைகளைக் கொண்டிருக்கும். உதாரணமாக மாணவர் சமுதாயத்தை எடுத்துக் கொண்டால் அவர்களின் நடத்தைகள், செயன்முறைகள் முழு மொத்தப் பண்பாட்டிலிருந்தும் வேறுபடுகின்றது. இராணுவத்தினர் வாழ்க்கை பொதுமக்களின் வாழ்க்கையிலிருந்து மாறுபட்டது. இதனையே உப பண்பாடு என சமூகவியலாளர்கள் அழைக்கின்றனர். அதேபோல் உப பண்பாட்டிற்குள் மேலும் பல உப பண்பாடுகள் (sub-culture within sub-culture) காணப்படுகின்றன. சாதியை இதற்கு உதாரணமாக கூறலாம் (றாஓ சங்கர், 2007).

எந்த உப பண்பாட்டின் விழுமியங்களும் நடத்தை நெறிமுறைகளும் சமூகத்தின் போக்கிலிருந்து விலகி முதன்மைப் பண்பாட்டை (Dominat culture) எதிர்க்கத் தொடங்குகிறதோ அதுவே எதிர்ப் பண்பாடாகும் (Counter culture). ஓர் இளங்குற்ற நடத்தைக் குழுவானது (Delinguent group) தன் சமுதாயத்தின் நெறிமுறைகளையும் விழுமியங்களையும் ஒழுக்க நெறிகளையும் மற்றும் பொதுவான மரபுகளையும் மீறிச் செயல்படும்போது அவர்களின் பண்பாடு எதிர்ப்பண்பாடாக மாறுகின்றது (பக்தவத்சலபாரதி, 1999).

### 4.6 பண்பாட்டு மாற்றமும் வளர்ச்சியும்

கலை, விஞ்ஞானம் மற்றும் தத்துவம் போன்ற பண்பாட்டின் பிரவுகளில் ஏற்படும் மாற்றங்கள் பண்பாட்டு மாற்றங்களாகும். அதேபோல் சமூக ஒழுங்கமைப்பினுடைய வடிவங்கள் மற்றும் சட்டதிட்டங்கள் போன்றவற்றில் நிகழும் மாற்றங்களும் பண்பாட்டு மாற்றங்களாகும் என கிங்ஸ்லி டேவிட் குறிப்பிடுகின்றார்.

பண்பாட்டு ஒன்றியம் (Integration of culture) என்னும் சொற்றொடர்கள் பண்பாட்டுக் கூறுகளுக்கிடையில் நிலவும் பிணைப்பினைக் குறிக்கின்றது. வலிமையான ஒன்றியத்தைக் கொண்ட பண்பாடுகளில் பண்பாட்டு மாற்றம் குறைவாக நிகழும். வலிமையற்ற ஒன்றியத்தைக் கொண்ட பண்பாடுகளில் மாற்றங்கள் வேகமாக இடம்பெறும். மடக்கஸ்கார் மக்களின் மீது கிறிஸ்தவ சமயம் திணிக்கப்பட்டும் அவர்கள் அதனை ஏற்காததற்கு அவர்கள் பண்பாட்டு ஒன்றியம் வலிமையாக இருந்ததே காரணம். ஆனால் அமெரிக்க இந்தியப் பழங்குடியினரான கொமன்சி மக்கள் அப்பகுதிக்கு வந்த மக்களின் தாக்கத்தால் தமது வாழ்வொழுங்கை மாற்றிக் கொள்ள காரணம் அவர்களின் பண்பாட்டு ஒன்றியம் வலிமையற்று காணப்பட்டமையே என ரால்ப் லிண்டன் கூறுகின்றார் (பக்தவதசலபாரதி, 1999).

ஆரம்ப காலங்களில் மெது மெதுவாக நகர்ந்த பண்பாட்டு மாற்றங்கள் அண்மைக் காலங்களில் வேகமெடுக்கத் தொடங்கியுள்ளன. பண்பாட்டு மாற்றத்தை பல காரணிகள் இயக்குகின்றன.

#### அ). பண்பாட்டுப் பரவல் (Cultural diffusion)

பொருள்சார் வடிவங்கள் (Material artifacts) மற்றும் கருத்துக்கள் (Ideas) ஆகிய இரண்டையும் உள்ளடக்கிய பண்பாட்டின் கூறுகள் ஒரு பண்பாட்டிலிருந்து அடுத்த பண்பாட்டிற்கு பரவுவதை (Spread) பண்பாட்டுப் பரவல் எனும் சொல் பொருள் கொள்கிறது. ஒரு

பண்பாட்டின் தொண்ணூறு வீதமான கூறுகள் அடுத்த சமூகத்திடமிருந்து பரவல் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்டவைதான் என ஜோர்ஜ் மேர்டக் குறிப்பிடுகின்றார். சில சமூக விஞ்ஞானிகளும் குரோபர் போன்ற மானுடவியலாளர்களும் பண்பாட்டு மாற்றத்தினதும் மற்றும் சமூக மாற்றத்தினதும் பிரதான மூலமாக பரவலைக் கருதுகின்றனர். சீனர்கள் கண்டுபிடித்த காகித உற்பத்தி உலகின் எல்லா பண்பாட்டிற்கும் பரவியமை பண்பாட்டுப் பரவலுக்கு சிறந்த உதாரணமாகும்.

### ஆ). கண்டுபிடிப்புக்கள் (Invention)

இதற்கு முன் இல்லாத ஒன்றை உருவாக்குவதற்காக ஏற்கனவே இருக்கும் அறிவின் புதிய பயன்பாடு அல்லது ஒன்றுசேர்ப்பு கண்டுபிடிப்பு எனப்படும் என இயன் றொபேட்சன் (Ian Robertson) குறிப்பிடுகின்றார். உலகில் இல்லலாத ஒன்றை அறியச்செய்வது கண்டுபிடிப்பு எனப்படும். தொலைபேசியை கிரகம்பெல் கண்டுபிடித்தமையை இதற்கு உதாரணமாக கூறலாம் (பக்தவத்சலபாரதி, 1999).

கண்டுபிடிப்பானது துப்பாக்கி, அம்பு மற்றும் கம்யூட்டர் போன்ற சடப்பொருள்களாகவோ அல்லது அரசாங்க யாப்பு, எழுத்தமைப்பு, நடனம், நாடகம், இலக்கியம் போன்ற சடப்பொருட்கள் அல்லாததாகவோ அல்லது சமூகம் சார்ந்ததாகவோ இருக்கலாம். ஒரு சமூகம் ஏற்கனவே கொண்டிருக்கும் கண்டுபிடிப்புக்கள், வெளிப்படுத்தல்கள் (Discoveries) மற்றும் அறிவுகள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டே புதிய கண்டுபிடிப்புக்களின் வீதமும், வேகமும் அமைகின்றன. ஐன்ஸ்டின் ஒரு பழங்குடிச்சமுதாயத்தில் பிறந்திருப்பாரேயானால் அவரால் மூன்று எனும் இலக்கத்துக்கு அப்பால் எண்ண முடியாமல் போயிருக்கும் என ரல்ப் லிண்டன் (Ralph Linton) குறிப்பிடுகின்றார். ஐன்ஸ்டைன் பிறந்த சமூகத்தில் ஏற்கனவே இருந்த அறிவு அவரை மேலும் சிந்திக்க வைத்தது என்பது லின்டன் கூற்றின் அர்த்தமாகும்.

ஒரு பண்பாட்டில் அதிக கண்டுபிடிப்புகள் நிறையும் போது இன்னும் அதிக கண்டுபிடுப்புகள் நிகழ அவை தூபமிடுகின்றன. எனவேதான் பண்பாட்டின் மாற்றங்களுக்கும் வளர்ச்சிகளுக்கும் கண்டுபிடிப்புகள் காரணமாகின்றன.

### இ). வெளிப்படுத்தல்கள் (Discoveries)

சமூக-பண்பாடு மாற்றங்களை தூண்டிவிடும் அடுத்த முக்கியமான காரணி வெளிப்படுத்தல்களாகும். வெளிப்படுத்தல் என்பது ஏற்கெனவே இருக்கும் யதார்த்தம் (Reality) குறித்து மனிதர்கள் பகிரும் புதிய பார்வையாகும் என்பது ஹோட்டன் மற்றும் ஹன்ட் (Horton and Hunt) போன்றோர்களின் கருத்துகளாகும். தண்ணீர் மட்டம் பற்றிய கொள்கை, ஒரு புதிய கண்டம், நீராவி சக்தி, வளிமண்டத்தின் கலவை மற்றும் இரத்த ஓட்டம் போன்றவை வெளிப்படுத்தலுக்கு முன்பே இருந்தவைதாம். இருந்தும் சமூகத்தால் பகிர்ந்துகொள்ளப்பட்டால் மட்டுமே புதிய வெளிப்படுத்தல்கள் சமூகத்தின் பண்பாடுக்குள் சேர்க்கப்படும். சமூக பண்பாட்டு மாற்றத்துக்கான கருவியாக வெளிப்படுத்தல்கள் மாறுவதும் அவற்றின் பயன்பாட்டிலேயே தங்கியுள்ளன. உதாரணமாக பண்டைய கிரேக்கர்கள் நீராவி சக்தி பற்றிய கொள்கையை நீண்ட காலத்துக்கு முன்பே கண்டுபிடித்திருத்தனர். கி.பி. 100 இல் அலக்ஸ்ஸாண்டரியாவில் ஒரு பொம்மை நீராவி இயந்திரம் கட்டப்பட்டது. எனினும் இக்கொள்கை கண்டுபிடிக்கப்பட்டு 1700 வருடங்களாகியும் பாவனைக்கு வராமல் இருந்தது.

கற்றுக்கொள்ளப்படும் அல்லது மறுவிளக்கம் கொடுக்கப்படும் ஒரு செயன்முறை (The process by which something is learned or reinterpreted) என வெளிப்படுத்தல் அழைக்கப்படுகின்றது. சமுத்திரம் பற்றிய ஆய்வுகள் பூமி வட்டவடிவானது எனும் உண்மையை புலப்படுத்தியது. இந்த வெளிப்படுதல்கள் கடல் வழிப்பாதைகள் கண்டுபிடிக்கப்படவும் வியாபாரத் தொடர்புகள் விருத்தியடையவும் கால்கோள் செய்தன.

**ஈ). பண்பாட்டுப்பேறு (Acculturation)**

தனிப்பட்ட பண்பாட்டுக் கூறு அல்லது பண்பாட்டுத் தொகுதி (Culture complex) அண்டைய பகுதிக்கோ அல்லது தொலை பகுதிக்கோ சென்றால் அதை பண்பாட்டுப் பரவல் என்கின்றோம். ஆனால் ஒரு பண்பாட்டின் தாக்கத்தால் அண்டைய பண்பாடு முழுவதுமாக மாறத் தொடங்கினால் அது பண்பாட்டுப்பேறு எனக் கூறப்படும்.

இரு பண்பாடுகள் நேருக்கு நேர் சந்தித்துக் கொள்ளும் போது ஒன்று மற்றதன் சிறப்புக் கூறுகளை ஏற்றுக் கொள்ளும் அல்லது இரண்டு பண்பாடுகளும் ஒன்று மற்றதன் பண்புகளை ஏற்றுக் கொள்ளும். இது சம கலப்புப்பண்பாட்டுப்பேறு (Transculturation) என அழைக்கப்படும். இரு பண்பாடுகள் சந்தித்துக்கொள்ளும்போது ஆதிக்கப் பண்பாட்டின் கூறுகளை ஆதிக்கம் குறைந்த பண்பாடு பெற்றுக் கொண்டு தனது தனித்தன்மையை இழக்குமானால் அது ஓரினமாதல் (Assimilation) என அழைக்கப்படும். இரு பண்பாடுகள் நேருக்கு நேர் சந்திக்கும் போது ஒன்று மற்றதன் கூறுகளை தொடக்கத்தில் ஏற்கத்தொடங்கி பின் அக்கலப்பிலிருந்து விடுபட்டு அதன் தனித்தன்மையை கட்டிக்காக்க முனைந்தால் அது எதிர்ப்பண்பாட்டுப்பேறு (Contra-acculturation) என அழைக்கப்படும் (பக்தவத்சலபாரதி, 1999). கிழக்கு மாகாணத்தில் வாழும் முஸ்லிம்களின் திருமணச்சடங்கிலே காணப்படும் தாலி கட்டுதல் எனும் தமிழ்ப் பண்பாட்டின் கூறு இப்போது எதிர்ப்பண்பாடாக கருதப்பட்டு அது நீக்கப்பட வேண்டும் எனும் குரல் எழுந்துள்ளதனை எதிர்ப்பண்பாட்டுப்பேறுக்கான உதாரணமாக கூறலாம்.

**உ). தொழில்நுட்பம் (Technology)**

மக்கள் பயன்படுத்தும் திறமைகளும் (Skills) கருவிகளும் (Tools) தொழிநுட்பத்தில் அடங்குகின்றன. நவீன சமூகங்களில் பாரிய பண்பாட்டு மாற்றங்களை நவீன தொழிநுட்பம் எற்படுத்தி வருகின்றது.

**ஊ). மாறிவரும் சூழல் (Changing environment)**

மக்கள் பெரும்பாலும் அவர்கள் வாழும் சூழலால் ஆதிக்கத்துக்குட்படுவது இயல்பானதொரு விடயமாகும். சமவெளி பூர்வீக அமெரிக்கர்கள் (Plain Native Americans) எருமை மாடுகளை வேட்டையாடி வாழ்பவர்கள். இருந்தும் குடியேற்றவாசிகள் பண்ணை நிலங்களை அமைப்பதற்காக பெரும்பாலான எருமைகளை அழிகக்கத் தொடங்கியபோது வேட்டையாடி வாழ்ந்த சமவெளி பூர்வீக அமெரிக்கர்களின் வாழ்வொழுங்குகளும் மாறத்தொடங்கின.

இவைதவிர உலகமயமாதல், நவீனமயமாதல், தொழில்மயமாதல், நகரமயமாதல மற்றும் மேற்குமயமாதல் (Westernaization) போன்ற காரணிகளும் பண்பாட்டில் மாற்றங்களைத் தோற்றுவிக்கின்றன. அதபோல் ஒரு சமூகத்தில் தோன்றும் புரட்சி, யுத்தம், நெருக்கடிகள், மதமாற்றச் செயற்பாடுகள், புதிய கருத்துக்கள் (New ideas) மற்றும் வர்த்தகத் தொடர்புகள் போன்ற காரணிகளும் பண்பாட்டு மாற்றங்களைத் தூண்டுகின்றன.

**சுருக்கம்**

- ✓ ஒவ்வொரு சமூகமும் தனித்துவமான பண்பாடகளைக் கொண்டிருக்கின்றது. பண்பாடு பல்வேறு தொழிற்பாடுகளை ஆற்றுகின்றது.
- ✓ பண்பாட்டு அமைப்புக்களில் பொருள்சார் பண்பாடும் பொருள்சாரா பண்பாடும் மிக முக்கியமான வகைப்பாடாகும்.
- ✓ பண்பாட்டு மாற்றங்களையும் வளர்ச்சியையும் பல்வேறு காரணிகள் முடுக்கிவிடுகின்றன.

**பயிற்சி வினாக்கள்**

1. பண்பாடு என்பதன் மூலம் நீர் விளங்கிக் கொள்வது யாது?
2. பண்பாட்டின் பண்புகளையும் தொழிற்பாடுகளையும் விளக்குக.

3. பண்பாட்டின் அமைப்புக்கள் குறித்து உதாரணங்களுடன் விளக்குக.
4. பண்பாட்டு மாற்றங்களைத் தூண்டும் காரணிகளை தெளிவுபடுத்துக.

**திறவுச் சொற்கள்**

பொருள்சார் பண்பாடு, பொருள்சாரா பண்பாடு, பண்பாட்டுக்கூறு, பண்பாட்டுஒன்றியம்

**உசாத்துணை நூல்கள்**


1. அய்யூப், எஸ்.எம். (2013). *சமூகவியல் அடிப்படை எண்ணக்கருக்கள்*. ஒலுவில்: சமூக விஞ்ஞானங்கள் துறை, இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.
2. பக்தவத்சலபாரதி. (1999). *பண்பாட்டு மானிடவியல்*. சென்னை: மணிவாசகம் பதிப்பகம்.
3. Giddens Anthony. (2005). *Sociology*. Cambridge: Polity Press.
4. Haralambos, M., & Heald R.M. (2004). *Sociology: Themes and perspectives*. London: Harper Collins Publishers Limited.
5. Landis Paul, H. (1990). *Sociology: An introduction*. Massachusetts: Ginn and Company a Xerox Education Company.
6. Rao Shankar. (2002). *Sociology*: *Primary principles*. New Delhi: S. Chand and Company Ltd.
7. Sullivan, T.J. (2016). *Introduction to social problems*. New York: Pearson.

# அத்தியாயம் 06

## சமூக அந்தஸ்த்தும், சமூக வகிபங்கும்

**உள்ளடக்கம்**

6.1 சமூக அந்தஸ்த்து
6.2 சமூக அந்தஸ்த்தின் வகைகள்
6.3 சமூக வகிபங்கு

**அத்தியாயச் சுருக்கம்**

சமூகத்தில் ஒரு மனிதன் கொண்டுள்ள ஒரு நிலைதான் அந்தஸ்த்தாகும். சமூக அந்தஸ்த்து தொழிற்படும் போது அது வகிபங்காக மாறுகின்றது. பல அந்தஸ்த்துக்களை ஒருவர் கொண்டிருந்தால் அது அந்தஸ்த்து தொகுதி என அழைக்கப்படுகின்றது.

**அத்தியாயத்தின் நோக்கம்**

சமூக அந்தஸ்த்தையும் சமூக வகிபங்கையும் அவற்றின் வகைகளையும் தொழிற்பாடுகளையும் அடையாளம் காண்பதே இவ்வத்தியாயத்தின் நோக்கமாகும்.

**கற்றல் பெறுபேறுகள்**

இவ்வத்தியாயத்தை கற்பதன் மூலம் மாணவர்கள்,

- ✓ சமூக அந்தஸ்த்து மற்றும் சமூக வகிபங்கு தொடர்பான எண்ணக்கரு விளக்கத்தினை அறிந்துகொள்வார்கள்.
- ✓ சமூக அந்தஸ்த்தும் சமூக வகிபங்கும் ஒன்றுடன் ஒன்று எவ்வாறு தொடர்புபடுகின்றன என்பதை விளங்கிக்கொள்வார்கள்.
- ✓ சமூக அந்தஸ்த்தின் வகைகளை அறிந்துகொள்வார்கள்.

### 6.1 சமூக அந்தஸ்த்து (Social status)

சமூகத்தில் ஒரு மனிதன் கொண்டுள்ள ஒரு நிலை (Position) தான் அந்தஸ்த்தாகும். இந்த அந்தஸ்த்து வைத்தியர் என்பது போன்ற ஒரு தொழிலாக (Job) அமையலாம். அல்லது பெற்றோர், உடன்பிறப்புக்கள், அண்டையம் மற்றும் நண்பன் என்பது போன்ற ஒரு சமூக நிலையாக (Social position) அமையலாம். பல்வைத்தியர், தந்தை, மகன், பயிற்றுவிப்பாளர் என பல அந்தஸ்த்துக்களை ஒருவர் ஒரேநேரத்தில் கொண்டிருக்கலாம். இது அந்தஸ்த்துத் தொகுதி (Status set) என அழைக்கப்படுகின்றது.

சமூக இடைவினை, சமூகத்தொடர்பு போன்றவற்றைக் கொண்டு சமூகம் புரிந்து கொள்ளப்படுகின்றது. இந்த இடைவினைச் சூழலில் ஒவ்வொரு தனியனும் ஒரே மாதிரி மறுவினை புரிவார்கள் எனக் கூறமுடியாது. ஏனெனில் ஒரு சமூக நிலைமையில் ஈடுபடும் முன்னரே இத்தகைய தனியாட்களுக்கு தனியான ஒரு அடையாளம் (Identity) உண்டு. ஒரு கணவன், தனது மனைவியிடம் பாலியல் மறுவினையை (Sexual response) எதிர்பார்க்க முடியும். ஆனால் வேறொரு மனிதன் அவளிடம் இத்தகைய மறுவினையை எதிர்பார்க்க முடியாது. ஆகவே ஒவ்வொரு சமூக நிலையிலும் தனியன் ஒரு அடையாளத்துடன் நுழைகின்றான். இந்த அடையாளமே அவனது நிலை (Position) அல்லது சமூக அந்தஸ்த்து (Status) எனப்படுகின்றது.

சமூக அந்தஸ்த்து எனும் சொல்லானது மனிதர்களுக்கு கொடுக்கப்படுகின்ற ஒப்பீட்டளவிலான கௌரவத்தை (Prestige) அல்லது மரியாதையை குறிக்கும் என்று லுண்ஸ் பேர்க் (Lunds Berg) கூறுகின்றார். ஒரு மனிதன் செய்கின்ற வகிபங்கானது அவனது குழு அல்லது சமூகத்தினால் முக்கியமானதாக கருதப்பட்டால் அவனது சமூக அந்தஸ்த்து மிக உயர்வானதாக இருக்கும்.

அப்பங்கானது உயர்வானதாக கருதப்படவில்லை எனின் அவனது சமூக அந்தஸ்த்தும் குறைவானதாகவே இருக்கும். எனவே சமூக அந்தஸ்த்து சமூக மதிப்பீடுகளை (Social evaluations) அடிப்படையாகக் கொண்டுள்ளது எனலாம். எனவே ஒரு மனிதன் சமூகத்தில் பெற்றிருக்கின்ற நிலை (Position) அல்லது படிநிலையே (Rank) சமூக அந்தஸ்த்து எனப்படுகின்றது. அனைத்து சமூகங்களிலும் மற்றும் அனைத்துக் குழுக்களிலும் ஒவ்வொரு உறுப்பினருக்குமுள்ள கௌரவம் அல்லது அதிகாரத்தின் அளவீடு சமூக அந்தஸ்த்து என கிம் போல் யங் (Kimboll Young) எனும் அறிஞர் கூறுகின்றார். ஒரு தனிமனிதன் சமூகத்தில் கொண்டுள்ள நிலை எதுவோ அதுவே சமூக அந்தஸ்த்து எனப்படுவதாக லப்பியர் (Lapiere) என்ற அறிஞர் விளக்குகின்றார்.

ஒரு அந்தஸ்த்தில் இருப்பவர் (Status occupant) சிறப்பான சூழ்நிலையில் சிறப்பான முறையில் நடந்துகொள்ள வேண்டுமென்று அடுத்தவர்களால் எதிர்பார்க்கப்படுகின்றனர். ஒவ்வொரு அந்தஸ்த்தும் சலுகைகள், உரிமைகள் மற்றும் கடமைகளுடன் தொடர்புடையவை.

அந்தஸ்த்து எனும் சொல்லும் சமூக அந்தஸ்த்து எனும் சொல்லும் ஏறத்தாள ஒரே கருத்தில் பாவிக்கப்பட்டாலும் சிறிய வித்தியாசம் காணப்படுகின்றது. ஒரு குழுவில் ஒரு நபர் கொண்டிருக்கும் நிலையை (Position) அந்தஸ்த்து எனும் சொல்லும் சமூதாய உறுப்பினர்களிடமிருந்தும் அடுக்கமைப்பிலுள்ள பெரிய சமூகத்திடமிருந்தும் ஒரு நபர் பெற்றுக்கொள்ளும் மரியாதை (Prestige) மற்றும் கௌரவத்தின் (Honour) அளவை சமூக அந்தஸ்த்து எனும் சொல்லும் குறிக்கின்றது.

சமூக அந்தஸ்த்து பால்நிலை வகிபாகங்கள் (Gender roles) போன்ற மிகவும் பொதுவானதாகவும் இருக்கலாம் அல்லது தொழில் நிலைகள் (Occupational positions) போன்ற விஷேடமாக வரையறுக்கப்பட்டதாகவும் இருக்கலாம்.

ஒரு குறிப்பிட்ட அமைப்பில் (System) ஒரு குறிப்பிட்ட நபர் குறிப்பிட்ட நேரத்தில் ஆக்கிரமித்துள்ள இடமே அந்தஸ்த்தாகும் என்று ரால்ப் லிண்டன் குறிப்பிடுகின்றார்.

பொது நிறுவன அமைப்பில் (General institutional system) உள்ள ஒரு நிலையே அந்தஸ்த்தாகும். இந்நிலை முழுச்சமூகத்தாலும் அங்கீகரிக்கப்பட்டு ஆதரிக்கப்படுகின்றது என கிங்ஸ்லி டேவிஸ் குறிப்பிடுகின்றார்.

வெபரின் கோட்பாட்டில் தனிநபர்கள் அல்லது குழுக்களுக்கு வழங்கப்படும் மதிப்பு (Esteem) அல்லது சமூக மரியாதை (Social honour) அந்தஸ்த்து என அழைக்கப்படுகின்றது.

எளிமையாகச் சொன்னால் அந்தஸ்த்து என்பது பெண், மாணவன், ஆசிரியர், குழந்தை, தாய் மற்றும் தந்தை என ஒரு குழுவில் அல்லது சமூகத்தில் சமூகரீதியாக வரையறுக்கப்பட்ட நிலையாகும்.

**6.2 சமூக அந்தஸ்த்தின் வகைகள்**

ஒரு மனிதனுக்கு அந்தஸ்த்து கிடைக்கும் வழிகளை அடிப்படையாக வைத்து இரு வகைப்படுத்தப்படுகின்றது.

அ). கிடைக்கப்பெறும் அந்தஸ்த்து (Ascribed status)
ஆ). அடைந்து கொள்ளப்படும் அந்தஸ்த்து (Achieved status)

ஒருவனது கட்டுப்பாட்டுக்கு மற்றும் தெரிவுக்கு அப்பாற்பட்ட காரணிகளால் கிடைக்கப்பெறுகின்ற அந்தஸ்த்தே கிடைக்கப்பெறும் அந்தஸ்த்து என அழைக்கப்படுகின்றது. இது ஒருவனது சம்பாத்தியத்தால் அன்றி அவன் மீது திணிக்கப்படுகின்றது. பால் (Sex), வயது (Age), உறவுமுறை (Kinship) போன்ற அடிப்படைகளால் இவ்வந்தஸ்து தரப்படுகின்றது.

கிடைக்கப்பெறும் அந்தஸ்த்து (Ascribed status) பிறக்கும் போதே ஒதுக்கப்படும் சமூக நிலையாகும். இது நிரந்தரமானது. வாழ்வு

முழுவதும் நிலைக்கக்கூடியது. உதாரணமாக ஒரு பிராமணன் தன் பிறப்பின் காரணமாக ஒரு பிராமணன் எனும் தகுதியை அனுபவிக்கின்றான்.

ஒருவனது கட்டுபாட்டுக்கு மற்றும் தெரிவுக்கு உட்பட்ட காரணிகளால் கிடைக்கும் அந்தஸ்த்து அடைந்து கொள்ளப்படும் அந்தஸ்த்து என அழைக்கப்படுகின்றது. இது ஒருவன் மீது சுமத்தப்படாமலும் அவனால் அடைந்து கொள்ளப்படும் ஒன்றாகவும் உழைப்பு, முயற்சி மற்றும் தேடல் போன்றவற்றின் மூலம் கிடைக்கப்பெறும் அந்தஸ்த்தாகவும் காணப்படுகின்றது.

கறுப்பினத்தில் பிறந்து பல்வேறு துயரங்களுடன் வாழ்ந்த ஒபாமா அமரிக்காவின் ஜனாதிபதியாக மாறி அவர் பெறும் அந்தஸ்த்து அடைந்து கொள்ளப்படும் அந்தஸ்த்தாகும். ஆனால் ஒபாமாவின் மனைவி மற்றும் பிள்ளைகள் பெறும் அந்தஸ்த்து கிடைக்கப்பெறும் அந்தஸ்த்தாகும். திருமணமானவர், பெற்றோர், நண்பன், மருத்துவர், பொறியியலாளர், இசையமைப்பாளர், அரசியல்வாதி, விளையாட்டு வீரர் போன்றோர் அடைந்து கொள்ளப்பட்ட அந்தஸ்த்தைக் கொண்டவர்கள். இது தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது அடையப்பட்ட நிலையாகும். ஒருவரின் முயற்சியால் இது பெறப்படுகின்றது.

### 6.3 வகிபங்கு (Role)

அந்தஸ்த்தின் தொழிற்பாடே வகிபங்காகும் (A role is the function of a status) என யங் மற்றும் மெக் (Young and Mack) குறிப்பிடுகின்றனர்.

சமூக நிலமையுடன் (Social position) தொடர்புடையதாக, எதிர்பார்க்கப்பட்ட நடத்தைகளே சமூக வகிபங்காகும் என டுங்கன் மிட்ஷல் (Duncan Mitchel) குறிப்பிடுன்றார். சமூகம் பலவகையான அந்தஸ்த்துக்களின் வலைப்பின்னலாக காணப்படுகின்றது. இவ்வந்தஸ்த்துக்கள் எதிர்பார்ப்புடன் கூடிய நடத்தைகளின்

தொகுதிகளைக் கொண்டிருக்கின்றன. இதுவே வகிபங்குகள் (Roles) என அழைக்கப்படுகின்றன.

அந்தஸ்த்தின் இயக்கம் அல்லது நடத்தைசார் தோற்றம் (Aspect) வகிபங்காகும் என றொபேட் பியர்ஸ்டெட் (Robert Bierstedt) கூறுகின்றார். ஒரு நபர் அவரது அந்தஸ்த்தின் போது என்ன செய்கின்றார் என்பது வகிபங்காகும் என அவர் மேலும் கூறுகின்றார்.

பதவியில் இருப்பவரின் நடத்தை குறித்து ஏனைய உறுப்பினர்களின் எதிர்பார்ப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் (Obligations) வகிபங்கு எனப்படுவதாக ஜோன்சன் குறிப்பிடுகின்றார்.

ஒரு குறிப்பிட்ட குழுவில் ஒரு குறிப்பிட்ட நிலையுடன் தொடர்புடைய கடமைகள் மற்றும் சலுகைகள் இரண்டையும் உள்ளடக்கிய சமூக ரீதியாக எதிர்பார்க்கப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நடத்தை முறைகளின் தொகுப்பாகும் என சமூக வகிபங்கை ஒக்பேர்ன் மற்றும் நிம்கொப் குறிப்பிடுகின்றனர்.

பெரும்பாலான குழுக்கள் அந்தஸ்த்தையும் நிறைவேற்ற வேண்டிய வகிபங்குகளையும் கொண்டிருக்கின்றன. ஒரு குழுவில் ஒருவர் கொண்டிருக்கும் நிலைதான் (Position) அந்தஸ்த்தாகும். தரப்பட்டுள்ள அந்தஸ்த்துக்குள் நின்றுகொண்டு நிறைவேற்ற வேண்டிய எதிர்பார்க்கைகளே வகிபங்காகும். குடும்பத்தில் தந்தையாக இருப்பது ஒரு அந்தஸ்த்தாகும். தந்தை எனும் அந்தஸ்த்தைக் கொண்டவர் பிள்ளைகளை வளர்த்தல், கல்வி புகட்டுதல், வழிகாட்டுதல் மற்றும் பாதுகாத்தல் போன்ற வகிபங்குகளை அவர் செய்யவேண்டியேற்படுகின்றது.

வகிபங்கு எதிர்பார்ப்புக்களில் (Role expectation) செயல்களும், குணங்களும் (Actions and qualities) அடங்கும். ஒரு ஆசிரியர் பாடம் படிப்பித்தல், தேர்வுகளை நடத்துதல், வீட்டுப்பயிற்சிகளைக்

கொடுத்தல் போன்ற செயல்களில் ஈடுபடுவதோடு மட்டுமல்லாது ஒழுக்கசீலன், அர்ப்பணிப்புள்ளவர், கடமையுணர்வு கொண்டவர் எனும் பண்புகளைக் கொண்டவராகவும் இருக்கவேண்டுமென்பது எதிர்பார்க்கப்படுகின்றார்.

சமூகவியலாளர் ரால்ப் லிண்டன் (Ralph Linton, 1939) இன் அழுத்தமான எழுத்துக்குப் பின்னர் சமூக அந்தஸ்த்தும் சமூக வகிபங்கும் சமூகவியலின் தவிர்க்க முடியாத முக்கிய கருத்துக்களாக மாறியிருக்கின்றன. அந்தஸ்த்து என்பது சமூக அமைப்பில் நியமிக்கப்பட்ட உரிமைகள் மற்றும் கடமைகளை உள்ளடக்கிய ஒரு நிலையை (A position is a social system involving designated rights and obligations) குறிப்பதாகவும் வகிபங்கு என்பது மற்றவர்களின் மாதிரியான எதிர்பார்ப்புக்களை நோக்கமாகக் கொண்ட நடத்தையைக் (The behaviour oriented to other's patterned expectations) குறிப்பதாக லிண்டன் குறிப்பிடுகின்றார்.

சமூகத்தில் உள்ளவர்கள் தவிர்க்க முடியாமல் பல்வகையான அந்தஸ்த்துக்களைக் கொண்டிருப்பதாகவும் இவ் ஒவ்வொரு அந்தஸ்த்தும் வகிபங்குகளுடன் தொடர்புபட்டுக் காணப்படுவதாகவும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களை ஒத்தவை இவை என்றும் லிண்டன் கூறுகின்றார்.

அந்தஸ்த்தும் வகிபங்கும் ஒன்றுடன் ஒன்று இடைத்தொடர்புகளைக் கொண்டிருக்கின்றன. நீங்கள் ஒரு அந்தஸ்த்தை வகிக்கின்றீர்கள். ஆனால் ஒரு வகிபங்கை ஆற்றுகின்றீர்கள் (You occupy a status, but you play a role) எனக் கூறி இரண்டுக்குமுள்ள தொடர்பை எளிய முறையில் விளக்குகின்றார் ரால்ப் லிண்டன்.

சமூகத்தில் அல்லது குழுவில் உள்ள ஒரு நிலைதான் (Position) அந்தஸ்த்தாகும். அந்தஸ்த்தின் நடத்தை சார் தோற்றம் (Behavioural

aspect) வகிபங்காகும். அந்தஸ்த்து வகிக்கப்படுகின்றது (Occupied) ஆனால் வகிபாகம் ஆற்றப்படுகின்றது (Played).

அந்தஸ்த்து வேண்டி நிற்கும் கடப்பாடுகளை எவ்வாறு ஒரு தனிநார் நிறைவேற்றுகின்றார் என்பதையும் சலுகைகளையும், சிறப்புரிமைகளையும் (Privileges and Prerogatives) எவ்வாறு அனுபவிக்கிறார் என்பதையும் வகிபங்கு விளக்குகின்றது.

**சுருக்கம்**

- ✓ சமூகத்தில் ஒரு மனிதன் கொண்டுள்ள நிலைதான் அந்தஸ்த்தாகும். அந்தஸ்த்தின் தொழிற்பாடே வகிபங்காகும்.
- ✓ கிடைக்கப்பெறும் அந்தஸ்த்து மற்றும் அடையப்பெறும் அந்தஸ்த்து என அந்தஸ்த்து இரு வகைப்படுகின்றது.
- ✓ அந்தஸ்த்தும் வகிபங்கும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களை ஒத்தவை என லிண்டன் கூறுகின்றார்.

**பயிற்சி வினாக்கள்**

1. அந்தஸ்த்து மற்றும் வகிபங்கு ஆகிய கருத்தியல்களை உதாரணங்களுடன் தெளிவுபடுத்துக.
2. அந்தஸ்த்தின் வகைகளை உதாரணங்களுடன் தெளிவுபடுத்துக.
3. அந்தஸ்த்தின் தொழிற்பாடே வகிபங்காகும் எனும் யங் மற்றும் மெக் இன் கருத்தை உதாரணங்களுடன் விளக்கிக் காட்டுக.

**திறவுச் சொற்கள்**

அந்தஸ்த்து, வகிபங்கு, நிலை, கடப்பாடு, கௌரவம்

## உசாத்துணை நூல்கள்

1. அய்யூப், எஸ்.எம். (2013). *சமூகவியல் அடிப்படை எண்ணக்கருக்கள்*. ஒலுவில்: சமூக விஞ்ஞானங்கள் துறை, இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.
2. Giddens Anthony. (2005). *Sociology*. Cambridge: Polity Press.
3. Haralambos, M., & Heald R.M. (2004). *Sociology: Themes and perspectives.* London: Harper Collins Publishers Limited.
4. Landis Paul, H. (1990). *Sociology: An introduction*. Massachusetts: Ginn and Company a Xerox Education Company.
5. Rao Shankar. (2002). *Sociology*: *Primary principles.* New Delhi: S. Chand and Company Ltd.

# அத்தியாயம் 07

# சமூக குழுக்கள்

**உள்ளடக்கம்**

7.1 சமூகக் குழுக்கள்

7.2 குழு வாழ்வை அவசியப்படுத்தும் காரணிகள்

7.3 சமூகக் குழுக்களின் வகைகள்

7.4 முதலாம்நிலை மற்றும் இரண்டாம்நிலைக் குழுக்களிற்கிடையிலான வேறுபாடுகள்

**அத்தியாயச் சுருக்கம்**

இவ்வத்தியாயமானது சமூகத்தில் காணப்படும் குழுக்களையும் குழுக்களின் வகைகளையும் விலாவாரியாக எடுத்துக்காட்டுவதுடன் சமூகத்தில் குழு வாழ்வினை அவசியப்படுத்தும் காரணிகள் மற்றும் முக்கியத்துவம் போன்றவையும் உதாரணங்களுடன் விளக்க முற்படுகின்றது.

**அத்தியாய நோக்கம்**

சமூகக் குழுக்களையும் அவற்றின் வகைகளையும் குழுவாழ்வினை அவசியப்படுத்தும் காரணிகளையும் கண்டறிவதே இவ்வத்தியாயத்தின் நோக்கமாகும்.

**கற்றல் பெறுபேறுகள்**

இவ்வத்தியாயத்தை கற்பதன் மூலம் மாணவர்கள்,

- ✓ சமூகக் குழுக்கள் மற்றும் அவற்றின் தோற்றம் தொடர்பான அறிவினை பெற்றுக்கொள்வார்கள்.
- ✓ குழுவாழ்வின் அவசியம் குறித்து அறிந்து கொள்ளவார்கள்.

- ✓ சமூகக் குழுக்களின் வகைகளை பொதுவாகவும் முதலாம்நிலை மற்றும் இரண்டாம்நிலைக் குழுக்களிற்கிடையலான வேறுபாடுகளை சிறப்பாகவும் புரிந்துகொள்வார்கள்.

## 7.1 சமூக குழுக்கள்

மானிட சமூகத்தை படித்தல் என்பதன் பொருளே மானிட சமூக குழுக்களைப் படித்தல் என்பதையே குறிக்கின்றது. சமூகமானது அளவிட முடியாதளவு சமூக குழுக்களைக் கொண்டுள்ளது. சமூகம் இல்லாமல் ஒரு தனிமனிதன் வாழ முடியாது. குழுக்கள் இல்லாமல் சமூகம் உருவாக முடியாது. மானிட வாழ்வின் தவிர்க்க முடியாத ஒரு அங்கமாக குழு மாறிவிட்டிருக்கின்றது. இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட மக்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தொடர்புபட்டிருக்கும் போதும் (Contrat) தொடர்பாடலை ஏற்படுத்திக் கொள்ளும் போதும் (Communication) அங்கே சமூகக் குழு (Social group) உருவாகின்றது.

மனிதன் தனியாகத் தீவு போல் வாழ்வதில்லை. அவன் ஒரு சமூக உயிரி. இதனால்தான் அரிஸ்டோட்டில் மனிதனை ஒரு சமூக விலங்கு (Social animal) என அழைத்தார். பெரும்பாலும் மனிதன் குழுக்களோடு சேர்த்தே வாழ்கின்றான். தனியாக ஒதுங்கி வாழும் போது அவனால் தனது பல்வேறுபட்ட தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள முடியாமல் போவது இதற்கான காரணங்களில் ஒன்றாகும்.

### சமூகக் குழு: வரைவிலக்கணங்கள்

சமூகக் குழு என்பது சமூக இடைவினையின் அமைப்பு (System) ஆகும் என ஹறி. எம். ஜோன்சன் (Harry M. Johnson) குறிப்பிடுகின்றார். அதாவது அங்கத்தவர்கள் ஓர் ஒழுங்கு முறையில் பரஸ்பரம் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்கின்றார்கள் என்பது இதன் பொருளாகும்.

குறித்த காலவேளையில் சில உடன்பாடுகளின் அடிப்படையில் இடைவினைத் தாக்கங்களில் ஈடுபடும் இருவர் அல்லது அதற்கு மேற்பட்டவர்களைக் கொண்ட தொகுதியை குழு எனலாம் என சீலாண்டர் (Zlander) குறிப்பிடுகின்றார்.

சமூகக் குழு எவ்வகையான மானிடர்களின் ஒன்றிணைவையும் குறிப்பிடலாம். ஆனால் அவர்களிடையே மானுட உறவு இருக்க வேண்டும் என்பது மகில்வர் மற்றும் பேச் (Maclver and Page) ஆகியோரின் கருத்தாகும்.

ஒருவர் மீது ஒருவர் ஆதிக்கம் செலுத்துகின்ற போதும் இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்டவர்கள் ஒன்றுகூடுகின்ற போதும் அவர்கள் குழுக்களை உருவாக்குகின்றார்கள் என ஒக்பேன் மற்றும் நிம்கொப் (Ogburn and Nimkoff) குறிப்பிடுகின்றனர்.

### 7.2 குழு வாழ்வை அவசியப்படுத்தும் காரணிகள்

மனிதன் குழு சார்ந்தே பெரும்பாலும் வாழுகின்றான். மானிடச் சூழல் ஒன்று இல்லாத போது மனிதனின் மானிடப் பண்பு கூட வளராமல் போகின்றது. மானிடச் சூழலில்தான் மனிதன் மனிதனாக மாறுகின்றான். இதற்கு ஓநாய் வளர்த்த பிள்ளையை உதாரணமாகக் கூறலாம். இந்தப் பிள்ளை நான்கு கால்களில் நடந்து, மொழியின்றி ஊளையிட்டது. மனிதர்களைக் கண்டு ஓடி ஒதுங்கியது. மானிடச் சூழல் கிடைத்த பின்பே மானிடப் பண்பை பெறத் தொடங்கியது. குழு வாழ்வை பல காரணிகள் அவசியப்படுத்துகின்றன. இதனை சமூக ஒட்டும்தன்மை (Social bond) என சமூகவியலாளர்கள் அழைக்கின்றார்கள்.

#### 01. உளவியல் காரணிகள் (Psychological factors)

ஒரு மனிதனது ஆளுமை (Personality) விருத்திக்கு மட்டுமன்றி அவனது தனித்துவம் (Individuality) வெளிப்படுவதற்கு கூட குழு தேவைப்படுகின்றது. குழுநிலைச் சூழலிலே ஒருவன் தனது திறனை

(Capacity) கண்டு கொள்கின்றான். புதிய கருத்தை மற்றும் பழக்கத்தை கற்றுக் கொள்கின்றான். மனோநிலை (Attitudes) கூட மாற்றம் பெறுகின்றது.

இங்கு குறிப்பிட வேண்டிய மற்றொரு முக்கியமான அம்சம் மனிதனின் பயம் குறித்த மறுவினை (Reaction to fear) ஆகும். இந்த பயஉணர்வு தனிமை வாழ்வைத் தவிர்த்து குழு வாழ்வில் மனிதனை கொண்டு சேர்க்கின்றது. ஹேபர்ட் ஸ்பென்சர் கூறுவது போன்று வாழ்வு குறித்த பயம் அரசை (அரசியல் குழு) தோற்றுவித்தது. சாவு குறித்த பயம் சமயத்தை (சமயக் குழு) தோற்றுவித்தது.

### 02. உயிரியல் காரணிகள் (Biological factors)

பாலியல் விருப்பு (Sex desire) மீதும் மற்றும் கருத்தரிப்பு மீதும் மனிதன் தீராத ஆசை கொண்டவனாக இருக்கின்றான். இதற்கு ஆணும் பெண்ணும் இணையும் குடும்பம் எனும் குழு உருவாக வேண்டிய தேவை ஏற்படுகின்றது. அதேபோல் பிறக்கும் குழந்தையின் ஒவ்வொரு வளர்ச்சிக் கட்டத்திலும் எழும் பல்வேறு உயிரியல் தேவைகள் குழுக்களால்தான் நிவர்த்திக்கப்படுகின்றன.

### 03. உறவு முறை (Kinship bond)

இங்கு உறவு முறை என்பது இரத்த உறவைக் (Blood relationship) குறிக்கின்றது. மனிதன் வாழ்வின் மீது தாகம் கொண்டவனாகக் காணப்படுகின்றான். தாய்தந்தையோடு, பிள்ளைகளோடு வாழ அவன் விரும்புகின்றான். நவீன, நாகரீகமடைந்த சமூகத்தை விட பாரம்பரிய சமூகத்தில் உறவு முறையானது மிகவும் கனதிமிக்க கூறாக காணப்படுகின்றது. அங்கத்தவர்களை இணைத்து ஒன்றாக்கும் கருவியாகவும் உறவுமுறை காணப்படுகின்றது. ஒரு மனிதனுக்கான அடையாளம் கூட இந்த உறவு முறை சார்ந்து வாழ்வதிலேயே கிடைக்கின்றது.

### 04. புவியியல் காரணிகள் (Geographical factors)

புவியியல் காரணிகளான காலநிலை, மண், இயற்கை வளங்கள், ஆறுகள் மற்றும் மலைகள் போன்றவை கூட குழு வாழ்வை அவசியப்படுத்துகின்றன. அடர்ந்த காடுகள், வரண்ட பாலைவனம் மற்றும் தரிசு நிலம் போன்றவற்றில் மனித வாழ்வு அரிதாகவே நிலைகொண்டு வந்துள்ளது. இத்தகைய இடங்களில் வாழ்பவர்கள் குழுவாகவே வாழ்கின்றார்கள். காலநிலை மாற்றங்கள் மற்றும் இயற்கை அனர்த்தங்கள் கூட குழு வாழ்வை அவசியப்படுத்துகின்றன. காலநிலையை எதிர்கொள்வதற்கும் இயற்கை அனர்த்தத்திலிருந்து காத்துக் கொள்வதற்கும் குழுவாழ்வு அவசியப்படுகின்றது.

### 05. பண்பாட்டுக் காரணிகள் (Cultural factors)

பண்பாடு கூட குழு வாழ்வை அவசியப்படுத்துகின்றது. பண்பாட்டு பரிமாற்றம் ஒரு சமூகத்தின் நிலையான இருப்பிற்கு அவசியமான ஒன்று. இந்தப் பரிமாற்றம் குழு வாழ்வின் மூலம் இயல்பாக செயல் வடிவம் பெறுகின்றது. பொது மொழி, பொது வரலாறு, பொது இலக்கியம், நம்பிக்கை, மரபு, பழக்கவழக்கம மற்றும் கல்வி போன்ற பண்பாட்டின் கூறுகள் மக்களை ஒன்றுபடுத்தி குழு வாழ்வைத் தோற்றுவிக்கின்றன.

### 06. பொருளாதாரக் காரணிகள் (Economic factors)

உணவு, உடை மற்றும் உறையுள் போன்ற மனிதனது அடிப்படைத் தேவைகள் குழு வாழ்வின் மூலமே கட்சிதமாக நிறைவு செய்யப்படுகின்றன. ஒரு தனியனின் இத்தேவைகள் குழு அங்கத்தவர்கள் மூலமே நிறைவடைகின்றன.

### 07. சமயக் காரணிகள் (Religious factors)

சமய உணர்வு மனிதனது இயல்பான உணர்வுகளில் ஒன்று. அதனால் தான் மனிதன் பாணுடன் மட்டும் வாழமுடியாது என பைபிளும், மனிதன் பிறக்கும் போது சமய உணர்வுடனேயே பிறக்கின்றான் என

இஸ்லாமும் கூறுகின்றது. இறைவனின் பெயரால் மக்கள் ஒன்று கூடுகின்றார்கள். சமய கிரிகைகள் குழு வாழ்வு மூலமே சரியாக செய்து முடிக்கப்படுகின்றன. இளைய தலைமுறைக்கு சமயம் தொடர்பான அறிவும் நடைமுறைகளும் குழுவாழ்வு மூலமே கடத்தப்படுகின்றன.

### 08. அரசியல் காரணிகள் (Political factors)

பாதுகாப்பு, சுதந்திரம், சொத்து மற்றும் சுபீட்சம் போன்றவற்றின் தேவை அரசியல் குழுக்களின் அவசியத்தை வேண்டிநிற்கின்றன.

## 7.3 சமூகக் குழுக்களின் வகைகள்

இனரீதியான அம்சங்கள், சமய நம்பிக்கை, ஆட்புல எல்லை (Territory) அரசின் தன்மை, அளவு, சாதி, பால், வயது, வகுப்பு, தொழில், இரத்த உறவு, சமூக இடைவினை, குழுவிருப்பு மற்றும் அசைவு (Mobility) போன்ற காரணிகளை அடிப்படையாகக் வைத்து குழு பல வகையாக பிரிக்கப்கடுகின்றது.

### 01. உட்குழு, வெளிக்குழு (In-group and out-group)

இது சம்னர் (W.G.Summner) எனும் சமூகவியலாளர் குழுவை பிரிக்கும் முறையாகும். உட்குழு சாதாரணமாக நாம்-குழு (We-Group) எனவும் வெளிக் குழு அவர்கள் குழு (They- Group) எனவும் அழைக்கப்படுகின்றது. ஒரு முஸ்லிமுக்கு ஏனைய முஸ்லிம்கள் உட்குழுவாகவும் ஏனைய சமயத்தவர்கள் வெளிக் குழுவாகவும் அமைகின்றனர்.

**02. நிலைக் குழு, கிடைக் குழு (Horizonal groups and vertical group)**

இவ்வாறு பீ.எ. சொரோக்கின் (P.A.Sorokin) என்பவர் பிரிக்கின்றார். நிலைக் குழுவிற்கு உதாரணமாக சமூக ஒழுங்கமைப்புகள், அரசியல் கட்சிகள் போன்றவற்றினையும் கிடைக் குழுவிற்கு உதாரணமாக பொருளாதார வர்க்கங்களையும் (Economical Classes) குறிப்பிடலாம்.

**03. நிலப்பரப்புசார்ந்த, நிலப்பரப்புசாரா குழு (Territorial group and non-territorial group)**

இவ்வாறு பார்க் (Park) என்பவரும் பேர்கஸ் (Burgess) என்பவரும் பிரிக்கின்றார்கள். நிலப்பரப்பு சார்ந்த குழுவிற்கு உதாரணமாக சமுதாயம், அரசு போன்றவற்றையும், நிலப்பரப்புசாராத குழுவிற்கு உதாரணமாக வர்க்கம், சாதி, சனக்கும்பல மற்றும் பொதுமக்கள் போன்றவற்றையும் குறிப்பிடலாம்.

**04. பரம்பரைக் குழு, கூட்டம் குழு (Genetic groups and congregate groups)**

இவ்வாறு கிடிங்ஸ் (F.Q.Giddings) என்பவர் பிரிக்கின்றார். பரம்பரை குழுவிற்கு உதாரணமாக குடும்பம், இனம், மரபுக் குழு போன்றவற்றையும் கூட்டம் குழுவிற்கு உதாரணமாக அரசியல் கட்சிகள், வியாபார அமைப்புகள் போன்றவற்றையும் குறிப்பிடலாம். முதல்வகையிலேயே அங்கத்தவர்கள் இயற்கையாக பிறக்கின்றார்கள். தெரிவுச் சுதந்திரம் இல்லை. இரண்டாம் வகையிலே அங்கத்தவர்கள் சேர்ந்து கொள்கின்றனர். குழுவில் சேரவும் பிரிந்து செல்லவும் சுதந்திரம் உண்டு. இரண்டாவது குழு தானாக முன்வந்து சேரும் தன்னார்வக் (Voluntarity) குழுவாகும்.

### 05. சிறு குழு, பெரும் குழு (Small group and large group)

இவ்வாறு ஜோர்ஜ் சிம்மல் (George Simmel) என்பவர் பிரிக்கின்றார். சிறு குழுவிற்கு உதாரணமாக இருவர் கொண்ட குழுவையும் (Dyad), மூவர் கொண்ட குழுவையும் (Triad) குறிப்பிடலாம். பெரும் குழுவிற்கு உதாரணமாக அரசியல் கட்சி, இனக் குழு போன்றவற்றை குறிப்பிடலாம். சகோதரர்-சகோதரி, தாய்-சேய் இருவர் குழுவிற்கு உதாரணங்களாகும். தாயும் தந்தையும் அவர்கள் குழந்தையும் மூவர் குழுவிற்கு உதாரணமாகும். அதேபோல் திருமணம் முடித்த ஜேடிகளும் அவர்களின் இணைபிரியா நண்பனும் மூவர் கொண்ட குழுவுக்கு மற்றுமொரு உதாரணமாகும்.

### 06. முதலாம்நிலைக் குழு, இரண்டாம்நிலைக் குழு (Primary group and secondary group)

சீ.எச். கூலி (C.H. Cooley) என்பவர் இவ்வாறு பிரிக்கின்றார். முதல்நிலைக் குழுவிற்கு உதாரணமாக குடும்பத்தினையும் இரண்டாம்நிலைக் குழுவிற்கு உதாரணமாக அரசியல் கட்சிகளையும் குறிப்பிடலாம்.

| **முதலாம்நிலைக் குழு** | **இரண்டாம்நிலைக் குழு** |
|---|---|
| இங்கு முகத்துக்கு முகமான உறவு, பரஸ்பர உதவி மற்றும் ஒற்றுமை காணப்படும். உதாரணம்: குடும்பம் | இவற்றுக்கு மாற்றமாக காணப்படும். உதாரணம்: அரசியல் கட்சிகள் வியாபார அமைப்புக்கள். |
| அளவில் சிறியது | இது ஒப்பீட்டளவில் பெரியது |
| சிறிய புவியியல் எல்லக்குள் மட்டுப்படுத்தப்பட்டிருக்கும். | குறிப்பிட்ட எல்லைக்குள் இருக்க வேண்டும் என்ற வரையறை இல்லை. |

| | |
|---|---|
| இங்கு தொடர்பாடல் நேரடியானதாகவும், வேகமானதாகவும், வினைத்திறன்மிக்கதாகவும் காணப்படும். | இங்கு உறுப்பினர்கள் பிரிந்து வாழும் காரணத்தினால் நேரடி தொடர்பு குறைவாகவே இருக்கும் |
| இங்கு குழு அங்கத்தவர்களுக்கு தனிப்பட்ட விருப்புக் கிடையாது. அங்கத்தவர்களின் விருப்பு பொதுவானதாக காணப்படும். | எல்லோரரின் நலனிலும் அங்கத்தவர்கள் கவனம் எடுப்பர். தனிப்பட்ட மற்றும் விசேட விருப்புக்களுடன் அங்கத்தவர்கள் காணப்படுவர் |
| இங்கு கூட்டுறவு நேரடியானதாக காணப்படும். குழு அங்கத்தவர்கள் ஒன்றாக வேலை செய்வார்கள். ஒன்றாக விளையாடுவார்கள். முரண்பாடு தோன்றும் போது அங்கத்தவர்கள் ஒன்றுகூடித் தீர்த்து விடுவார்கள். | இவற்றுக்கு மாற்றமாக காணப்படும் |
| குழுவின் கட்டமைப்பு, முறைசாராததாக (Informal) காணப்படும். உரிமை, அதிகாரம் மற்றும் அந்தஸ்து போன்றவை குறித்து குழு அங்கத்தவர்கள் அக்கறை கொள்ளமாட்டார்கள். எழுதி வைக்கப்பட்ட சட்டங்களும், விதிகளும் இங்கு காணப்படமாட்டாது. அதிகம் ஒழுங்குபடுத்தப்பட்டதாக இக் குழு காணப்படமாட்டாது. | இவை அனைத்திற்கும் மாற்றமாக காணப்படும். முறைசார் சட்டங்கள் இங்கு காணப்படும். யாருக்கு என்னென்ன உரிமைகள், அதிகாரங்கள் மற்றும் அந்தஸ்துக்கள் வழங்கப்பட வேண்டும் என்பவை குறித்த தெளிவான குறிப்புக்கள் காணப்படும். |
| முதல்நிலைக் குழு ஒப்பீட்டளவில் நிலையானது. | இது நிலையானதாக அல்லது நிலையற்றதாக காணப்படும். |
| குழு அங்கத்தவர்களின் ஆளுமை விருத்தியில் முதல்நிலைக் குழு தாக்கம் செலுத்தும். | வரையறுக்கப்பட்டதாக காணப்படும். |
| குழு அங்கத்தவர்களைக் கட்டுப்படுத்துவதற்கு முறைசாரா வழிமுறைகளே போதுமானதாகும். | அங்கத்தவர்களைக் கட்டுப்படுத்துவதற்கு முறைசார் வழிமுறைகள் அவசியம் தேவையாகும். |

**07. ஒழுங்குபடுத்தப்பட்ட குழு, ஒழுங்குபடுத்தப்படாத குழு**

சமூகக் குழுக்கள் அவற்றின் ஒழுங்கமைப்பின் அளவை (Degree of organization)ப் பொறுத்து ஒழுங்குபடுத்தப்பட்ட குழுக்கள், ஒழுங்குபடுத்தப்படாத குழுக்கள் என இரு வகையாகப் பிரிக்கப்படுகின்றன.

ஒழுங்குபடுத்தப்பட்ட குழுக்கள் முறைசார் அமைப்பில் ஒழுங்குபடுத்தப்பட்டதாக காணப்படும். வியாபார அமைப்புக்கள் (Trade unions), அரசியல் கட்சிகள், சமய ஒழுங்கமைப்புக்கள் (Religious organization) போன்றவை இவற்றிற்கு உதாரணங்களாகும்.

ஒழுங்குபடுத்தப்படாத குழுக்கள், ஒழுங்கமைப்புக்களாக இருப்பதில்லை. அவை வேண்டுமென்றே திட்டமிடப்பட்டு உருவாக்கப்படும் சங்கங்களாகவும் இருப்பதில்லை. நன்கு வரையறுக்கப்பட்ட சமூக இடைவினையும் இங்கு இருப்பதில்லை. இக் குழுக்கள் குறிப்பிட்ட நோக்கோடு திட்டமிடப்பட்டு உருவாக்கப்படுவதுமில்லை. திடீரென சுயேச்சையாக ஒன்று கூடும் இக் குழுக்கள் தற்காலிகமாகத் தோன்றுபவை.

கும்பல் (Crowd), வன்குழு (Mob), பொதுமக்கள் (Public), கேட்போர் (Audience) போன்றவை ஒழுங்குபடுத்தப்படாத குழுவிற்கு உதாரணங்களாகும்.

- **கும்பல் (Crowd)**

குறிப்பிடத்தக்க தனிநபர்கள் வரையறுக்கப்பட்ட ஒரு இடத்தில் சில நோக்கங்களுக்காக ஒன்று கூடுவதை இது குறிக்கின்றது. கும்பல் தற்காலிகமானது. நிலையற்றது. குறுகிய ஆயுள் கொண்டது. ஒரு கும்பல் பின்வரும் பண்புகளைக் கொண்டிருக்கும்.

பொதுமக்களை கும்பல் கொண்டிருக்கும். தனிநபர்கள் ஒரு குறிப்பிட்ட இடத்தில் சில நோக்கங்களுக்காக ஒன்று கூடியிருப்பார்கள். மீன்

சந்தையில் ஒன்று கூடியிருப்பவர்கள், பாதையோரத்தில் இடம்பெறும் சில விளையாட்டுக்களை பார்ப்பதற்காக குழுமியிருக்கும் பெரும் திரளான மக்கள் கும்பலுக்கு உதாரணங்களாகும்.

கும்பலானது தீடீரென தோற்றம் பெறும் ஒரு கூட்டமாகும். இது இயல்பில் தற்காலிகமானது. விளையாட்டுக்களைப் பார்ப்பதற்காக பாதையோரத்தில் ஒன்றுகூடிய மக்கள் விளையாட்டு முடிந்ததும் கலைந்து போய்விடுவார்கள்.

கும்பலுக்கு தலைவரோ, வரையறுக்கப்பட்ட சமூக நியமங்களோ, செயற்பாட்டுக்கான திட்டங்களோ இருப்பதில்லை. அங்கத்தவர்களிடையான இடைவினையும், ஒழுங்குமுறையற்றதாக (Unsystematic) காணப்படும்.

இங்கு கூடுபவர்கள் தற்செயலாகவே சந்திக்கின்றார்கள். கும்பலிலே ஒன்றுசேர்பவர்கள் உணர்ச்சிபூர்வமான முறையில் தொழிற்படுகின்றனர்.

- **பொதுமக்கள் (Public)**

பரந்ததொரு நிலப்பரப்பில் சிதறி வாழும் குழுவே பொது மக்களாகும். பௌதீக எல்லைகள் இங்கு காணப்படாது. இக்குழுவிலுள்ள தனிநபர்களிடையே காணப்படும் உறவானது நேரடியற்றதாக, நெருக்கம் குறைந்ததாக காணப்படும். வானொலி, தொலைக்காட்சி, தொலைபேசி, பத்திரிகை, திரைப்படங்கள் மற்றும் உரைகள் போன்ற நேரடியற்ற, மற்றும் ஊடகவழி தொடர்பாடல்கள் மூலமே அங்கத்தவர்கள் இங்கு தொடர்புபடுகின்றார்கள்.

- **வன்குழு (Mob)**

சட்டத்தை தமது கையிலே எடுத்துக் கொண்டு குறிப்பிட்ட காரணத்திற்காக ஒன்றுகூடுபவர்களையே இது குறிக்கின்றது. ஒரு குறிப்பிட்ட காரணத்திற்காக ஒன்றுகூடும் இவர்கள் வன்முறையில் ஈடுபடுவார்கள். சொத்துக்களுக்கு சேதம் விளைவிப்பார்கள்.

- **கேட்போர் (Audience)**

ஒரு குறிப்பிட்ட காட்சியைப் பார்ப்பதற்காக, ஒரு உரையைக் கேட்பதற்காக ஒன்றுகூடுகின்றவர்களை இது குறிக்கின்றது.

**08. மேற்கோள் குழு (Reference group)**

தனிநபர்கள், தங்கள் நடத்தைகளை தரஅளவீடு செய்வதற்காக (Standard) எடுத்துக் கொள்ளும் எந்தக் குழுவையும் மேற்கோள் குழு என சமூகவியலாளர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

எந்த மக்களது மனப்பான்மை, நடத்தை, நம்பிக்கை, கருத்து, விழுமியங்கள் போன்றவற்றை தனிநபர்கள் தமக்கான அடிப்படைகளாக (Basis) கொள்கின்றாரகளோ அந்த மக்கள் குழு தனிநபர்களுக்கான மேற்கோள் குழுவாக அமைகின்றது. மேற்கோள் குழுவைப் பார்த்து மக்கள் தம்மை ஒப்பீடு செய்து கொள்கின்றார்கள். மேற்கோள் குழுவானது ஓர் உரைகல்லாக, அளவீடு செய்யும் படிக்கல்லாகத் தொழிற்படுகின்றது. அதேபோல் தம்மையும் தமது நடத்தைகளையும் தனிநபர்கள் மேற்கோள் குழுவைப் பார்த்து மதிப்பீடு செய்துகொள்கின்றார்கள்.

அமெரிக்காவில் சகபாடிக் குழுவே (Peer group) மேற்கோள் குழுவாக காணப்படுகின்றது. சிறுவர்களும் வயது வந்தவர்களும் தமது சகபாடிகள் எவற்றை அணிகின்றார்கள், எந்த இசையை விரும்புகின்றார்கள் மற்றும் ஓய்வு நேரத்தில் என்ன செய்கின்றார்கள் என்பதை அவதானித்து தமது செய்கைகளோடு ஒப்பீடு செய்து பின்பற்றுகின்றார்கள். ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட மேற்கோள் குழுவைக் கொண்டிருக்கலாம். மேற்கோள் குழு என்னும் சொற்றொடர் முசா.்.பர் ஷெரிப் (Muzafer Sherif) என்பவராலேயே 1948 இல் அறிமுகம் செய்யப்பட்டது.

## 09. சகபாடிக் குழு (Peer group)

பெரும்பாலான அல்லது அனைத்து உறுப்பினர்களும் வயது, வகுப்பு, கல்வி, அந்தஸ்து மற்றும் தரநிலை (Rank) போன்றவற்றில் ஏறத்தாழ ஒரே பண்புகளைக் கொண்டிருக்கும் போது அவர்கள் சகபாடிக் குழு என அழைக்கப்படுகின்றார்கள்.

கால்பந்து, கிரிக்கட் போன்ற விளையாட்டுக்கழகங்கள் பாடசாலை செஸ் கிளப் விஞ்ஞான கழகங்கள் மற்றும் வாத்தியக் குழுக்கள் போன்றவை சகபாடிக் குழுவுக்கு உதாரணங்களாகும்.

**சுருக்கம்**

- ✓ மானிட சமூகம் குழுக்களாகவே வாழ முற்படுகின்றது. பல்வேறு காரணிகள் குழுவாழ்வை அவசியப்படுத்துகின்றன.
- ✓ வேறுபட்ட சமூகவியலாளர்கள் குழுக்களை பல்வேறு அடிப்படையில் பிரித்து நோக்குகின்றனர்.
- ✓ முதல்நிலைக் குழுவும் இரண்டாம்நிலைக் குழுவும் குழுவகைப்படுத்தலில் முக்கியமானதொரு பிரிவாகும்.

**பயிற்சி வினாக்கள்**

1. குழுக்கள் தொடர்பான வரையறைகளை சுருக்கமாக விளக்கி குழுவாழ்வை அவசியப்படுத்தும் காரணிகளை அடையாளப்படுத்துக.
2. குழுக்களின் வகைகளை உதாரணங்களுடன் தெளிவுபடுத்துக.
3. முதல்நிலைக்குழு மற்றும் இரண்டாம்நிலைக்குழு எத்தகைய புள்ளிகளில் வேறுபடுகின்றன என தெளிவுபடுத்துக.

**திறவுச் சொற்கள்**

தொடர்பு, தொடர்பாடல், இருவர் குழு, மூவர் குழு

**உசாத்துணை நூல்கள்**

1. அய்யூப், எஸ்.எம். (2013). *சமூகவியல் அடிப்படை எண்ணக்கருக்கள்*. ஒலுவில்: சமூக விஞ்ஞானங்கள் துறை, இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.
2. Giddens Anthony. (2005). *Sociology.* Cambridge: Polity Press.
3. Haralambos, M., & Heald R.M. (2004). *Sociology: Themes and perspectives.* London: Harper Collins Publishers Limited.
4. Landis Paul, H. (1990). *Sociology: An introduction*. Massachusetts: Ginn and Company a Xerox Education Company.
5. Rao Shankar. (2002). *Sociology*: *Primary principles.* New Delhi: S. Chand and Company Ltd.

# அத்தியாயம் - 08

# சமூகக்கட்டுப்பாடு

**உள்ளடக்கம்**

8.1 சமூகக் கட்டுப்பாடு
8.2 சமூகக் கட்டுப்பாடடின் வகைகள்
8.3 சமூகக்கட்டுப்பாட்டு முகவர்கள்

**அத்தியாயச் சுருக்கம்**

மனிதன் சுதந்திரமானவனாக பிறந்தாலும் அவன் சமூக நியதிகளை கருத்தில் கொண்டும் சமூகம் வாழும்படி சொன்ன விதிகளைக் கவனத்தில் எடுத்துக்கொண்டுமே வாழ வேண்டும் என்ற கட்டுப்பாட்டிற்குள் உள்வாங்கப்பட்டுள்ளான். இதனையே சமூகக் கட்டுப்பாடு எனும் சொல் குறிக்கின்றது. இவ் அத்தியாயமானது சமூகக் கட்டுப்பாட்டினுடைய நோக்கத்தினை தெளிவாக எடுத்துக்காட்டுவதுடன் சமூகக் கட்டுப்பாட்டின் வகைகளையும் சமூகக் கட்டுப்பாடானது சமூகத்தின் மத்தியில் எவ்வாறு தோற்றம் பெறுகின்றது என்பதையும் சமூகக் கட்டுப்பாட்டு முகவர்களையும் அவர்களது செயற்பாடுகளையும் தெளிவுபடுத்துவதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

**அத்தியாயத்தின் நோக்கம்**

சமூகக் கட்டுப்பாடு, சமூகக் கட்டுப்பாட்டின் வகைகள் மற்றும் சமூகக் கட்டுப்பாடு முகவர்கள் தொடர்பான விளக்கங்களை வழங்குவதே இவ்வத்தியாயத்தின் நோக்கமாகும்.

**கற்றல் பெறுபேறுகள்**

இவ்வத்தியாயத்தை கற்பதன் மூலம் மாணவர்கள்,

- ✓ சமூகக் கட்டுப்பாடு தொடர்பான ஆரம்ப அறிவினைப் பெற்றுக்கொள்வார்கள்.

- ✓ சமூகக் கட்டுப்பாட்டின் வகைகளையும் சமூக கட்டுப்பாட்டு முகவர்களின் தொழிற்பாடுகளையும் புரிந்து கொள்வார்கள்.

## 8.1 சமூக கட்டுப்பாடு

மனிதன் எல்லாத் தளைகளில் இருந்தும் விடுபட்டு சுதந்திரமாக வாழவே விரும்புகின்றான். ஆனால் அவனைக் கண்ணுக்குத் தெரிகின்ற கயிறுகளும், கண்ணுக்குத் தெரியாத பற்றுக்களும் கட்டி விடுகின்றன. அடிமைத்தனத்திலிருந்து விடுபட விரும்புகின்ற மனிதன் தனது பிள்ளையின் அன்பிற்கு முன்னால் அடிமையாகிவிடுகின்றான். அதேபோல் சமூகத்தின் விதிகளுக்கும் மனிதன் கட்டுப்பட்டு நடக்க வேண்டியவனாக உள்ளான். இதனையே ரூசோ (Rousseau) 'மனிதன் சுதந்திரமாகவே பிறக்கின்றான். ஆனால் அவன் எல்லா இடங்களிலும் சங்கிலியிடப்பட்டுள்ளான்' எனக் குறிப்பிடுகின்றார்.

சமூக வாழ்வின் அடிப்படை இலக்கு தனிநபர் உவகையே (Individual happiness) எனினும் இந்த உவகை கட்டற்ற சுதந்திரத்தினால் மட்டும் கிடைப்பதில்லை. சமூகம் விதிக்கும் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டே தனிமனிதனின் வாழ்வும் சந்தோசமும் அமைய வேண்டும். இதுவே சமூக கட்டுப்பாடு எனும் சொல்லால் குறிப்பிடப்படுகின்றது.

ஈ.ஏ.றொஸ் (E.A.Ross) எனும் அமெரிக்க சமூகவியலாளரே சமூக் கட்டுப்பாடு என்னும் எண்ணக்கருவை சமூகவியல் கலந்துரையாடலில் முதன்முதலில் உள்வாங்கியவராகக் கொள்ளப்படுகின்றார்.

**சமூகக் கட்டுபாட்டின் நோக்கம்.**

சமூகக் கட்டுப்பாடானது இயைந்துபோதல் (Conformity) மற்றும் கூட்டுணர்வு (Solidary), தொடர்ச்சி (Continuity) ஆகிய நோக்கங்களைக் கொண்டிருப்பதாக கிம்போல் யங் (Kimball Young) குறிப்பிடுகிறார். இயைந்துபோதல் என்பது சமூகக் கட்டுபாட்டின் பிரதான இலக்குகளில் ஒன்று. நவீன சிக்கல் தன்மையுள்ள சமூகம் பல்வகைக் குழுக்களைக் கொண்டிருப்பதனால் வேறுபட்ட

விழுமியங்களும் வேறுபட்ட நடத்தைகளும் அங்கு காணப்படும். இந்த வேறுபாடு சகிப்புத்தன்மையின் எல்லையை விட அதிகரிக்க அனுமதிக்க முடியாது. இங்கு எல்லோரினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேறுப்பட்ட குழுக்கள் இயைந்துபோவதை ஏற்க வேண்டும். சமூகக் கட்டுப்பாடு அதனைச் செய்கின்றது.

சமூகக் கட்டுபாட்டின் அடுத்த இலக்கு மக்களின் மனங்களில் தனித்துவ உணர்வு மற்றும் கூட்டுணர்வு ஆகியவற்றை ஏற்படுத்துவதாகும். சமூகத்தின் சீரான இயக்கத்திற்காக சமூக அமைப்பில் (Social system) காணப்படும் நிறுவனங்களும் ஒழுங்கமைப்புக்களும் சீராக ஒருங்கிணைக்கப்பட வேண்டும். இல்லாதபோது இன்றைய போட்டித் தன்மையுள்ள உலகிலே பலமான குழுக்கள் பலவீனமான குழுக்களை உதறித் தள்ளிவிடும். அதேபோல் பலமான குழுக்களிடையே மோதல் உருவாகி அமைதியான சூழலை இல்லாமல் செய்துவிடும். அதேபோல் சமூக எதிர்க் குழுக்களும் அதிகரித்துவிடும். எனவே வேறுபட்ட குழுக்களிடையேயும் நிறுவனங்களிடையேயும் நியாயமானதொரு சமநிலையை நிலைநிறுத்த வேண்டும். சமூகக் கட்டுப்பாடு அதனை ஏற்படுத்தும்.

சமூகத் தொடர்ச்சி என்பது சமூகக் கட்டுபாட்டின் மூன்றாவது இலக்காகும். சமூகமானது அதன் தொடர் இருப்பை அதன் அங்கத்தவர்களையும் குழுக்களையும் காத்திரமான முறையில் கட்டுப்படுத்துவதன் மூலமே பேணிக்கொள்கின்றது. ஏனெனில் கட்டுப்பாடு இல்லாத சமூகம் அழிவை நோக்கி எட்டு வைக்கின்றது எனப் பொதுவாகச் சொல்லப்படுகின்றது.

**சமூகக் கட்டுப்பாடு: வரைவிலக்கணங்கள்**

சமூகத்தில் ஒழுங்கையும் (Order) நிர்ணயிக்கப்பட்ட விதிமுறைகளையும் நிருவகிப்பதற்காக ஒரு சமூகம் பிரயோகிக்கும் அழுத்தங்களே சமூகக் கட்டுப்பாடு என ஒக்பேன் மற்றும் நிம்கொப் (Ogburn & Nimkoff) கூறுகின்றனர்.

ஏற்றுக் கொள்ளப்பட்ட நடத்தை முறைகளோடு ஒத்துப்போவதற்கு ஒரு சமூகம் தனது அங்கத்தவர்களைக் கொண்டு வருகின்ற செயற்பாடே சமூகக் கட்டுப்பாடாகும் என ஈ.ஏ.றொஸ் (E.A. Ross) கூறுகின்றார்.

மனிதன் பண்பாட்டின் விதிப்படியும் சமூகத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வழிமுறைகளின்படியும் நடந்து கொள்ள ஊக்குவிக்கும் ஒரு சக்திதான் சமூகக் கட்டுப்பாடு என்கின்றனர் டிரஸ்லர் மற்றும் வில்லிஸ் (Dressler & Willis).

### 8.2 சமூகக் கட்டுப்பாட்டின் வகைகள் (Kinds of social control)

சமூகமானது கால, சூழல் மற்றும் இடத்திற்கு ஏற்ப பல்வேறு வழிவகைகளைச் சமூகக் கட்டுபாட்டிலே பயன்படுத்துகின்றது. பாரம்பரிய சமூகங்ளிலே மாயாஜாலம் (Magic), சமயரீதியான நம்பிக்கைகள் போன்றவை மட்டுமே சமூகக் கட்டுபாட்டை நடைமுறைப்படுத்தப் போதுமானதாக இருந்தது. கிராமிய சமூகத்தின் அங்கத்தவர்களைக் கட்டுப்படுத்துவதற்கு நாட்டார் வழக்குகள், மரபுகள், நம்பிக்கைகள் மற்றும் பழக்கவழக்கங்கள் போதுமானவையாக இருக்கின்றன. ஆனால் நவீன, நாகரீகமடைந்த நகர சமூகங்களிடையே வானொலிப்பெட்டி, தொலைக்காட்சி, பத்திரிகைகள், கல்வி நிறுவனங்கள், பொலிஸ் நிலையம் மற்றும் நீதிமன்றங்கள் போன்ற நிறுவனங்களும் ஊடகங்களும் அங்கத்தவர்களை சமூகக் கட்டுபாட்டின்பால் கொண்டுவர துணைபுரிகின்றன. எனவேதான் காலத்துக்குக் காலம் சமூகம் பல்வேறு வழிவகைகளை அதன் அங்கத்தவர்களைக் கட்டுப்படுத்துவதற்கு விருத்தி செய்கின்றது.

#### அ) அகவயக் கட்டுப்பாடும், புறவயக் கட்டுப்பாடும் (Internal control and external control)

அகவயக் கட்டுப்பாடு என்பது ஒருவன் தனக்குத்தானே வரையறுத்துக்கொள்ளும் கட்டுப்பாடுகளையும், கடப்பாடுகளையும்

குறிக்கின்றது. அதாவது திருட்டைத் தொழிலாகச் செய்யும் ஒருவன் இனி ஒரு போதும் திருடுவதில்லை என்று தனக்குத் தானே அவன் முடிவெடுத்துக்கொள்வதைக் குறிக்கின்றது. இது ஒருவகை தனிமனித சீர்திருத்தமாகும். ஆன்மீக, பண்பாட்டு மற்றும் ஒழுக்க விழுமிய கருத்துக்களின் பிரதிபலிப்பே இதுவாகும்.

அகவயக் கட்டுப்பாடு செயலிழக்கும்போதும் வீரியமற்றதாகும் போதும், தனிமனிதனுள்ளே சிறப்பான முறையில் தொழிற்படாத போதும் புறவயக் கட்டுப்பாடு தேவைப்படுகின்றது. சட்டம், நீதிமன்றம் மற்றும் பொலிஸ் நிலையம் போன்ற நிறுவனங்கள் புறவயக் கட்டுப்பாட்டை ஏற்படுத்தும் நிறுவனங்களாகும்.

## ஆ) முறைசார் கட்டுப்பாடும், முறைசாராக் கட்டுப்பாடும் (Formal control and informal control)

முறைசார் கட்டுபாட்டிலே அரசு உருவாக்கும் சட்டம், இராணுவ அதிகாரம், பொலிஸ் அதிகாரம், நிர்வாக உத்திகள், சிறைத் தண்டணை மற்றும் பதவி இறக்கம் போன்றவை அடங்குகின்றன. அதேபோல் அரசியல், சமய, பொருளாதாரப் பண்பாட்டு அமைப்புக்களும், நிறுவனங்களும் இதற்குள் வருகின்றன. முறைசார் கட்டுப்பாடு வழிமுறைகள் தனிமனிதர்களைக் கட்டுப்படுத்துவதற்கென்றே உருவாக்கப்படுகின்றன. இக்கட்டுப்பாடுகளை மீறுவோர் தண்டிக்கப்படுகின்றார்கள். நவீன சமூக அமைப்பிலே முறைசார் கட்டுப்பாடு மிகவும் அத்தியாவசியமான ஒன்றாகக் கருதப்படுகின்றது.

முறைசாராக் கட்டுபாட்டிலே கிசுகிசு (Gossip), வதந்தி, நக்கல், கிண்டல், அவப்பேச்சு, பொது மக்கள் கருத்து, நாட்டாரியல், வழக்காறு, சமயம், ஒழுக்கம் போன்றவை அடங்கும். இந்த வழிமுறைகள் உண்மையில் முறைசார் கட்டுப்பாடுகளைப் போல தனிமனிதர்களைக் கட்டுப்படுத்துவதற்கென்றே உருவாக்கப்பட்டவை அல்ல. சிலவேளைகளில் முறைசார் கட்டுபாட்டை விட முறைசாராக்

கட்டுப்பாடு வினைத்திறன்மிக்கதாகவும் தனிமனிதர்களை இலகுவாக கட்டுபாட்டுக்குள் கொண்டுவர உதவுவதாகவும் அமைந்து விடுகின்றது.

**இ) நேரடிக்கட்டுப்பாடும், மறைமுகக் கட்டுப்பாடும் (Direct and indirect control)**

கார்ள் மென்ஹிம் (Karl Mannheim) என்பவர் இவ்வாறு பிரிக்கின்றார். குடும்பம் போன்ற முதல்நிலைக் குழுக்கள் அருகில் இருந்து தனிநபர்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதை நேரடிக்கட்டுப்பாடு குறிக்கின்றது. மரபுகள், பழக்கங்கள் போன்றவற்றின் மூலம் நடைமுறைப்படுத்தப்படுபவை மறைமுகக் கட்டுப்பாடு என அழைக்கப்படுகிறது. இந்த வழிமுறைகள் மறைமுகமானவை மற்றும் நுட்பமானவை.

**ஈ). நேர்மறைக் கட்டுப்பாடும், எதிர்மறைக் கட்டுப்பாடும் (Positive and negative control)**

கிம்போல் யங் இவ்வாறு பிரிக்கின்றார். புகழ்தல், பரிசு வழங்குதல், கண்ணியப்படுத்தல் போன்றவை முதல் வகையிலும், விமர்சித்தல், தண்டித்தல் மற்றும் அவமானப்படுத்துதல் போன்றவை இரண்டாவது வகையிலும் அடங்கும் என அவர் கூறுகின்றார்.

**உ) உணரும் வகையிலான கட்டுப்பாடும், உணராத வகையிலான கட்டுப்பாடும் (Conscious and unconscious control)**

பேர்னறோல் (Bernarol) என்பவர் இவ்வாறு பிரிக்கின்றார். சட்டம் முதல் வகையிலும், தாம் பின்பற்றுகின்றோம் எனும் உணர்வின்றி தனிநபர்கள் பின்பற்றும் மரபுகள், பழக்கவழக்கங்கள் இரண்டாம் வகையிலும் அடங்குகின்றன.

## 8.3 சமூகக் கட்டுப்பாட்டு முகவர்கள் (Agencies of social control)

சமூகக் கட்டுபாட்டை ஏற்படுத்தும் பல்வேறு முகவர்களைச் சமூகம் கொண்டிருக்கின்றது. சமூகக் கட்டுப்பாடு இத்தகைய முகவர்கள் ஊடாகவே அமுல்படுத்தப்படுகின்றன.

### 01. குடும்பம்

உண்மையில் குடும்பம் சமூகக் கட்டுப்பாட்டைக் கொண்டுவரும் முறைசாரா முகவராகும். ஆரம்ப சமூகமயமாக்கல் குடும்பத்தில்தான் முதலில் தொடங்குகின்றது. பெற்றோரே முதலாவது ஆசிரியராகத் தொழிற்படுகின்றனர். பண்பாட்டையும் நடத்தைகளையும் வாழும் வழிகளையும் பெற்றோர்களே முதலில் பிள்ளைகளுக்கு ஊட்டிவிடுகின்றனர்.

சமூக சட்டங்களை மதிக்கவும் சமூகக் கட்டுப்பாடுகளுக்கு கட்டுப்பட்டு நடக்கவும் ஒரு மனிதனுக்கு குடும்பம் சொல்லிக் கொடுக்கின்றது. ஆலோசனை, கருத்தோற்றம், பாராட்டுதல், குற்றங்காணல் மற்றும் விமர்சித்தல் போன்றவற்றை செய்து ஒரு தனியனை சமூகக் கட்டுப்பாட்டினுள் குடும்பம் நேரடியாகவே கொண்டு வருகின்றது.

பிள்ளைகள் பெரியவர்களாகும் போது இத்தகைய விடயங்களை தமக்குள்ளே உள்வாங்கிக் கொள்கின்றனர். பெற்றோர் ஆதரவுகளை அள்ளி வழங்கும் மூலவளங்களாகவும் சகபாடிக் குழுக்களின் அழுத்தங்களைக் கட்டுப்படுத்தும் சக்திகளாகவும் தொழிற்படுகின்றனர்.

பெற்றோர் தமது பிள்ளைகளின் நடத்தைகளை ஒழுங்குபடுத்துவதற்கும் வடிவமைப்பதற்கும் வெகுமதி, தண்டனை மற்றும் இரண்டும் கலந்த வழிமுறைகளைப் பிரயோகிக்கின்றனர். வாய்வழி புகழ்தல் அல்லது பொம்மை போன்ற விளையாட்டுப் பொருட்களைக் கொடுத்தல் எனும் நேர்மறை தடைகள் (Positive sanctions) மூலமோ அல்லது ஏசுதல், விமர்சனம் செய்தல் போன்ற

எதிர்மறைத் தடைகள் (Negative sanctions) மூலமோ வீட்டிலே பிள்ளைகள் சமூகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படுகின்றார்கள்.

**02. பாடசாலை (School)**

சமூகக் கட்டுப்பாட்டை ஏற்படுத்துவதில் பாடசாலைக்கு பாரிய பங்கிருக்கின்றது. கல்வி மூலம் இக்கட்டுப்பாட்டை பாடசாலைகள் செய்கின்றன. ஏனைய எந்த மூலங்களிலும் பெற்றுக்கொள்ள முடியாத பல விடயங்களை பாடசாலைகள் பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுக்கின்றன. ஒழுக்கத்திற்கு கட்டுப்பட்டு நடக்கும்படியும் சமூகக் கட்டுப்பாடுகளை மதித்து வாழும்படியும் பாடசாலைகள் ஏவுகின்றன. நவீன சிக்கல் மிகு சமூகத்தில் கல்வியும் பாடசாலையும் மிக முக்கியமான முகவர்களாகத் தொழிற்படுகின்றன.

பாடசாலைகளில் பிள்ளைகள் அறிவார்ந்த திறன்களை (Academic skills) மட்டுமல்லாது சமூக திறன்களையும் (Social skills) பண்பாட்டின் விழுமியங்களையும் கற்றுக் கொள்கின்றார்கள். சமூகத்தில் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதையும் சமூகத்தின் விதிகளை எவ்வாறு பின்பற்ற வேண்டும் என்பதையும் பாடசாலைகள் கற்றுக் கொடுக்கின்றன. நாட்டிற்கும் நிறுவனங்களுக்கும் விசுவாசமாக நடந்துகொள்ள வேண்டியதன் அவசியத்தையும் பாடசாலைகள் போதிக்கின்றன. இவ்வழிகள் ஊடாக சமூகத்தின் ஸ்திரத்தன்மைக்கும் செழிப்பிற்கும் பங்களிப்புச் செய்யும் ஆக்கபூர்வமான குடிமகனாக பிள்ளைகளை உருவாக்க பாடசாலைகள் முனைகின்றன.

பாடசாலை சீருடை, தலைமுடியின் அமைப்பு, வகுப்புகளில் நடந்துகொள்ளும் நடத்தை முறைகள், மாணவ மாணவிகளிடையேயான உறவின் தன்மை, ஆசிரியர்-மாணவர் உறவு போன்ற விடயங்களில் கண்டிப்பான விதிமுறைகளை உருவாக்கி மாணவர்களை கட்டுப்பட்டு நடக்கும் உறுப்பினர்களாக பாடசாலைகள் மாற்ற முனைகின்றன.

### 03. பொலிஸ் நிலையங்கள்

சமூக நியமங்களை (Social norms) அமுல்படுத்துவதில் பொலிஸ் நிலையங்களுக்கு மகத்தான பங்கிருக்கின்றது என எமில் தொர்கைம் கூறுகின்றார். பொலிஸ் நிலையங்கள் சிறந்த சமூகமயமாக்கல் முகவராகவும் முறைசார் வழியில் சமூகக் கட்டுப்பாட்டினை கொண்டுவரும் சக்திவாய்ந்த நிறுவனமாகவும் தொழிற்படுகின்றது.

குற்றச்செயல்களிலிருந்து மக்களைக் காக்கும் நோக்கில் மக்களைக் கண்காணிப்பதோடு குற்றம் நிகழும் இடங்களுக்கு துரிதகதியில் சென்று குற்றச் சூழலை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருகின்றது. சட்டத்தை மீறுபவர்களையும் அடுத்தவர்களுக்கு தீங்கு விளைவிப்பவர்களையும் பலத்தைப் (Force) பிரயோகிப்பதன் மூலம் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருகின்றது பொலிஸ் நிலையம்.

### 04. சமயமும் சமய ஒழுங்கமைப்புக்களும் (Religion and religious organization)

சமூக ஒற்றுமையையும் ஸ்திரத்தன்மையையும் பேணிக்காப்பதில் சமய நிறுவனங்களுக்கு முக்கிய பங்கிருக்கின்றது. சமூகமயமாக்கல் முகவராகத் தொழிற்படுவதன் மூலமாகவும் முறைசாரா சமூகக் கட்டுப்பாட்டை ஏற்படுத்தும் நிறுவனமாக இயங்குவதன் வழியாகவும் இருக்கும் நிலையை அவ்வாறே பேணி (Status quo) சமூகக்கட்டுப்பாட்டை ஏற்படுத்துகின்றன சமயமும் சமய ஒழுங்கமைப்புகளும்.

சமயத்தலைவர்கள் பெரும்பாலும் தார்மீகத்தலைவர்களாக (Moral guides) தொழிற்படுகின்றார்கள். பொதுவாழ்விலும் தனிப்பட்ட வாழ்விலும் மக்களின் நடத்தைப் பாங்குகளில் இவர்கள் ஆதிக்கம் செலுத்தி சமூகவாழ்வில் கட்டுப்பாட்டுடனும் ஒழுக்கமுடனும் வாழ வழிகாட்டுகின்றார்கள். ஒவ்வொரு சமூகத்திற்குமான உணவு நம்பிக்கைகள் (Dietary beliefs) உண்டு. பன்றி இறைச்சியை உண்ணும் சமூகம் மற்றும் உண்ணா சமூகம், அதேபோல்

மாட்டிறைச்சியை உண்ணும் சமூகம் மற்றும் உண்ணா சமூகம் அதேபோல் சைவம் மட்டும் உண்ணும் சமூகம் மற்றும் அசைவம் உண்ணும் சமூகம் என பல வகையான சமூகங்கள் உண்டு. சமயத்தலைவர்கள் இந்த நடைமுறைகள் தொடர்பாக போதனைகளை வழங்கி சமூகக் கட்டுப்பாட்டை பேணுகின்றார்கள்.

சமூகக் கட்டுப்பாட்டைக் கொண்டுவரும் ஏனைய முகவர்களையும் மதிக்கும்படி சொல்கின்றது சமயம். பெரும்பாலான சமயங்கள் அரசாங்கத்திற்கு கட்டுப்பட்டு நடக்கும் படியும் பெற்றோரின் போதனைகளுக்கு இணங்கி நடக்கும் படியும் போதிப்பதை இதற்கு உதாரணமாகக் கூறலாம்.

சமயமானது சமூகம் கொண்டிருக்கும் மரபுகளையும பண்பாட்டையும் இறைவனோடு தொடர்புப்படுத்துவதன் மூலம் கட்டிக்காக்கின்றது. அதேபோல் பள்ளிவாசல், தேவாலயம், கோயில் மற்றும் பன்சலை போன்ற சமூக நிறுவனங்கள் தனிமனிதனைக் கட்டுப்படுத்துவதிலும் அவனது வாழ்வை ஒழுங்குபடுத்துவதிலும் செவ்வனே தொழிற்படுகின்றன. இத்தகைய நிறுவனங்களின் கட்டளைகளை மனிதன் மறுப்பின்றி ஏற்கின்றான்.

**05. அரசாங்கம்**

சமூக மாற்றங்களைக் கூட அரசாங்கத்தின் திட்டமிட்ட செயற்பாடுகள் மூலம் கொண்டுவரலாம். சமூகக் கட்டுப்பாட்டை அரசாங்கமும் அதன் துணை நிறுவனங்களும் நடைமுறைக்கு கொண்டுவருகின்றன. ஒருபுறம் காத்திரமான சட்டங்களை இயற்றி சமூகத்தில் நீதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதன் மூலமும் மறுபுறம் குற்றவாளிகளுக்கு தண்டனைகளை வழங்குவதன் மூலமும் சமூகம் அறவழி தவறாமலும் கட்டுக்கோப்பு சிதையாமலும் பாதுகாக்கின்றது அரசாங்கம். அதேபோல் சமூக நலத்திட்டங்களை உருவாக்கி குற்றமில்லாச் சமூகமொன்றை உருவாக்க முனைகின்றது அரசாங்கம்.

கண்காணிப்பு (Surveillance), தணிக்கை (Censorship), சிறைதண்டனை மற்றும் மரணதண்டனை (Execution) போன்ற வலுவான முறைகளையும் அரசாங்கம் சமூகக் கட்டுப்பாட்டை நிலைநிறுத்த கையாள்கின்றது.

### 06. சகபாடிக் குழு (Peer group)

சம வயதுடையவர்கள், சம அந்தஸ்த்தினைக் கொண்டவர்கள் மற்றும் ஒத்த விருப்புக்களை பகிர்ந்து கொள்பவர்கள் அடங்கிய சமூகக் குழுவே சகபாடிக் குழுவாகும். சகபாடிக் குழு அங்கத்தவர்கள் குழு நியமங்களுக்கு கட்டுப்படும்படி அழுத்தம் கொடுக்கப்படுகின்றார்கள். அவ்வாறல்லாத போது கேலி செய்யப்படுகின்றார்கள் அல்லது குழுவிலிருந்து விலக்கப்படுகின்றார்கள்.

### 07. அண்டையம் (Neighbourhood)

அண்டையங்கள் ஒன்று சேர்ந்து கண்காணிப்புக் குழுக்களை உருவாக்கி தமது பகுதிகளில் நடக்கும் குற்றங்களை அவதானிப்பதன் மூலமும் குற்றவாளிகளை இனங்காண்பதன் மூலமும் சமூக நடத்தையிலிருந்து விலகி நடப்பவர்களை சுட்டிக்காட்டுவதன் மூலமும் சந்தேக நபர்களை கண்டுபிடித்து உரிய இடத்திற்கு அறிவிப்பதன் மூலமும் வினைமையான சமூகக் கட்டுப்பாட்டு முகவராகத் தொழிற்படுகின்றன.

அக்கம் பக்கத்திலுள்ள மூத்தவர்கள் தமது பகுதிகளில் வாழும் இளையவர்களுக்கு போதனைகள் மற்றும் நடத்தைகள் மூலம் சமூக விதிமுறைகளைப் பேணி நடப்பதன் அவசியத்தை உணர்த்துகின்றார்கள்.

### 08. வெகுஜன ஊடகங்கள்

சமூகரீதியாக ஏற்கப்பட்ட நடத்தைகள் எவை, தடுக்கப்பட்ட நடத்தைகள் எவை என்பவை தொடர்பான விளக்கங்களை

ஊடகங்கள் எடுத்தியம்புகின்றன. சமூகங்கள் பின்பற்ற வேண்டிய ஆடைப் பண்பாட்டினை ஊடகங்கள் காட்சிப்படுத்துகின்றன. அதேபோல் போதைப்பொருள் பாவனையின் தீங்குகள் குறித்து விலாவாரியாக பேசுகின்றன.

### 09. வேலை செய்யும் இடங்கள் (Work place)

வேலைத்தளங்களில் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும், நேரத்திற்கு சமூகம் தருவது எப்படி, எத்தகைய வார்த்தைப் பிரயோகங்களை செய்ய வேண்டும், சக ஊழியர்களோடு எவ்வாறு உறவு வைத்துக் கொள்வது என்று பணி நிறுவனங்கள் தமது ஊழியர்களுக்கு வழிகாட்டல்களை வழங்குகின்றன. சிறப்பான உழைப்பிற்கு வெகுமதியும் மாற்றமான நடத்தைகளுக்கு தண்டனையும் வழங்கி சமூகக் கட்டுப்பாட்டைப் பேணுகின்றன பணியிடங்கள்.

இவை தவிர சமூகக் கட்டுப்பாடு சட்டம் (Law), பொதுமக்கள் கருத்து (Public Opinion), பிரச்சாரம் (Propaganda), உடல் வலு (Physical force), வழக்காறுகள் (Folkways and mores), ஒழுக்கம் (Morality), அளிப்புக்கள் (Sanctions), உறவுமுறை (Kinship) மற்றும் சாதி (Caste) போன்றவை மூலமும் நிலைநிறுத்தப்படுகின்றன.

**சுருக்கம்**

- ✓ சமூகத்தின் விதிமுறைகளுக்கேற்ப ஒரு தனியன் தனது நடத்தைகளை அமைத்துக்கொள்வதே சமூகக் கட்டுப்பாடாகும்.
- ✓ சமூகக் கட்டுப்பாடு பலவகையில் காணப்படுகின்றது.
- ✓ குடும்பம், பாடசாலை, பொலிஸ் நிலையங்கள், சமய ஒழுங்கமைப்புக்கள், அரசாங்கம், சகபாடிக்குழு, அண்டையம்,

வெகுஜன ஊடகங்கள் மற்றும் தொழில் நிலையங்கள் சமூகக் கட்டுப்பாட்டை ஏற்படுத்தும் முகவர்களாகும்.

**பயிற்சி வினாக்கள்**

1. சமூகக் கட்டுப்பாடு எனும் எண்ணக்கரு தொடர்பாகவும் சமூகக் கட்டுப்பாடு வகைகளையும் விளக்குக.
2. சமூகத்தில் சமூகக் கட்டுப்பாட்டை நிலைறுத்தும் முகவர்களை அடையாளங்கண்டு விளக்குக.
3. 'கட்டுப்பாடு இல்லாத சமூகம் சிதைந்துவிடும்' எனும் கூற்றை ஏற்பீரா? உமது விடையை நியாயப்படுத்துக.

**திறவுச் சொற்கள்**

இயைந்துபோதல், கூட்டுணர்வு, அறிவார்ந்த திறன்கள், சமூகத்திறன்

**உசாத்துணை நூல்கள்**


1. அய்யூப், எஸ்.எம். (2013). *சமூகவியல் அடிப்படை எண்ணக்கருக்கள்*. ஒலுவில்: சமூக விஞ்ஞானங்கள் துறை, இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.
2. Giddens Anthony. (2005). *Sociology*. Cambridge: Polity Press.
3. Haralambos, M., & Heald R.M. (2004). *Sociology: Themes and perspectives.* London: Harper Collins Publishers Limited.
4. Landis Paul, H. (1990). *Sociology: An introduction*. Massachusetts: Ginn and Company a Xerox Education Company.
5. Rao Shankar. (2002). *Sociology*: *Primary principles.* New Delhi: S. Chand and Company Ltd.

# அத்தியாயம் - 09

# சமூக வேறுபாடு மற்றும் சமூக அடுக்கமைப்பு

**பொருளடக்கம்**

9.1 சமூக வேறுபாடு
9.2 சமூக வேறுபாடுகளின் அடிப்படைகள்
9.3 சமூக அடுக்கமைப்பு
9.4 சமூக அடுக்கமைப்பின் வடிவங்கள்
9.5 சமூக அடுக்கமைப்பு கோட்பாடுகள்
9.6 சமூக அடுக்கமைப்பும் சமூக அசைவும்

**அத்தியாயச் சுருக்கம்**

எல்லா சமூகங்களும் வேறுபாடுகளையும் சமமின்மைகளையும் கொண்டிருக்கின்றன. இவை சமூகத்தில் சமூக வேறுபாடுகளையும் சமூக அடுக்கமைவுகளையும் தோற்றுவிக்கின்றன.

**அத்தியாயத்தின் நோக்கம்**

சமூக வேறுபாடுகள், அவற்றுக்கான காரணிகள் சமூக வேறுபாடுகளின் அடிப்படைகள் போன்ற கருத்தியல்கள் குறித்தும் சமூக அடுக்கமைப்பு வடிவங்கள், கோட்பாடுகள் மற்றும் சமூக அசைவு குறித்தும் மாணவர்களுக்கு விளக்குவதே இவ்வத்தியாயத்தின் நோக்கமாகும்.

**கற்றல் பெறுபேறுகள்**

இவ்வத்தியாயத்தைக் கற்கும் மாணவர்கள் சமூகத்தில் நிலவும் வேறுபாடுகள் குறித்தும் சமூக அடுக்கமைப்பு குறித்தும் பூரண விளக்கங்களைப் பெற்றுக் கொள்வார்கள். மேலும் சமூக அடுக்கமைப்பில் கீழ்நிலையில் உள்ளவர்கள் மேல் நோக்கி செல்வதற்கான உந்துதல்களை எவ்வாறு பெற்றுக்கொள்ள முடியும் என கற்றுக் கொள்வார்கள்.

## 9.1 சமூக வேறுபாடு (Social differentiation)

தனிமனிதர்களிடையேயும் சமூகங்களிடையேயும் வேறுபாடுகள் தவிர்க்க முடியாதவை. வேறுபாடு எனும் தத்துவத்திலேயே சமூகங்கள் இருத்திவைக்கப்படுவதாக அறிஞர்கள் கூறுகின்றனர். வயது, பால், தொழில் மற்றும் தனிநபர் பண்புகள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்ட சமூக வேறுபாடுகள் எல்லா சமூகங்களிலும் காணப்படவே செய்கின்றன.

தல்கொட் பார்சனஸ் (Talcott Parsons) சமூக வேறுபாட்டிற்கான மூன்று காரணங்களை அடையாளப்படுத்துகின்றார்.

**01. உடைமை (Possession):**

பணம், செல்வம், சொத்து மற்றும் ஏனைய பெறுமதி வாய்ந்த சடரீதியான உடமைகளையே இப்பதம் குறிக்கின்றது. இந்த உடைமையில் வேறுபட்ட மக்கள் வேறுபட்ட அளவினையே கொண்டிருப்பதனால் சமத்துவமின்மையும் வேறுபாடும் சமூகத்திலே தோன்றுகின்றன.

**02. தரம் (Quality):**

உடல்பலம், புத்திகூர்மை, அழகு, தைரியம் (Caurage), நற்பண்பு, சுறுசுறுப்பு, சுயநலமின்மை மற்றும் அர்ப்பணம் போன்ற பண்புகளில் தனிமனிதர்கள் வேறுபட்ட அளவுகளைக் கொண்டு காணப்படுவதால் சமூக வேறுபாடு தவிர்க்க முடியாததாகின்றது.

**03. அடைவு மட்டம் (Performance):**

ஒரு குறிப்பிட்ட நிலைமையில் வழங்கப்பட்ட நேரத்திற்குள் செய்துமுடிக்கப்பட்ட காரியங்களையே இது குறிக்கின்றது. இந்த அடைவுகளின் அடிப்படையிலும் சமூக உறுப்பினர்கள் வேறுபடுகின்றார்கள்.

சமூக வேறுபாட்டிற்கான மூன்று காரணங்களும் ஒன்றுடன் ஒன்று உள்ளார்ந்த தொடர்புடையவை. ஒருவரின் உடைமையைக் கொண்டு தரத்தை வளர்த்துக் கொள்ளலாம். உடைமையையும் தரத்தையும் கொண்டு சிறந்த பெறுபேறுகளை சாதித்துக் கொள்ளலாம்.

## 9.2 சமூக வேறுபாடுகளின் அடிப்படைகள்

### அ. பால்வகையை அடிப்படையாகக் கொண்ட வேறுபாடு (Differentiation based on sex)

பால்வகையை அடிப்படையாகக் கொண்ட சமூக வேறுபாடு என்பது மானிட சமூகம் முழுவதும் காணப்படும் ஒரு அடிப்படையான பண்பாகும். ஆணும் பெண்ணும் ஒரே பாத்திரத்தை ஒரே தொழிலை மற்றும் ஒரே அந்தஸ்த்தை சமூகத்தில் கொண்டிருப்பதில்லை. உடையில், உணர்வில், உடல் கட்டமைப்பில் மாறுபடுகின்றார்கள். சமூகம் ஆணையும் பெண்ணையும் ஒரே மாதிரி நடத்துவதில்லை. ஆண்-பெண் இருவரிடையே காணப்படும் உடலியல் வேறுபாடுகள் மாறுபட்ட சமூக வேறுபாடுகளுக்குக் காரணமாகின்றன. அதேபோல் பண்பாட்டுப் பின்புலங்களும் ஆண்-பெண் வேறுபாடுகளைத் தீர்மானிக்கின்றன. பொதுவாக உலகம் முழுவதும் ஆண்கள் ஆதிக்கமுள்ள பால்வகையாகவும் (Dominant sex) பெண்கள் பலவீனமான பால்வகையாகவும் (Weaker sex) கருதப்படுகின்றார்கள். இக்கருத்துகள் பாரிய எதிர்வினைகளையும் விவாதங்களையும் தோற்றுவித்திருக்கின்றன.

### ஆ. வயதை அடிப்படையாகக் கொண்ட வேறுபாடு (Age differentiation)

வயதை அடிப்படையாகக் கொண்டும் சமூகங்கள் தமது அங்கத்தவர்களை வேறுபடுத்துகின்றன. சிறுவர்கள், இளையவர்கள்

மற்றும் முதியவர்கள் போன்றோர்களுக்கு அவர்களின் வயதை அடிப்படையாகக் கொண்ட நியமங்களையே சமூகங்கள் கொடுக்கின்றன. வயது எனும் உயிரியல் காரணி சமூக வேறுபாடுகளுக்கு அடிப்படையாய் அமைகின்றன. பாடசாலைக்குச் செல்வதற்கும், சட்டத்தின் பிடிக்குள் உள்ளாவதற்கும், ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கும், வாக்களிப்பதற்கும், குற்றவாளியாகக் கருதப்படுவதற்கும் இன்னும் பலவற்றிக்கும் குறிப்பிட்ட வயதை அடைந்திருப்பது அவசியமாகின்றது. ஒவ்வொன்றையும் செய்வதற்கு அது வேண்டிநிற்கும் வயதும் அதன் நியமங்களும் அவசியமாகின்றன. மிக வயது முதிர்ந்த ஒருவர் மிக இளமையான பெண் ஒருவரை திருமணம் செய்யும் போது சமூகம் விமர்சனங்களையும் கட்டுக்கதைகளையும் பரப்பி விடுவதற்கு காரணமாகி விடுகின்றது. அதேபோல் வயதை அடிப்படையாகக் கொண்டு சமூக உறுப்பினர்களிடமிருந்து பல்வேறு பணிகளையும் (Services) வகிபங்குகளையும் சமூகம் எதிர்பார்க்கின்றது.

### இ. தொழிலை அடிப்படையாகக் கொண்ட வேறுபாடு (Occupational differentiation)

தொழில் என்பது பணம் சம்பாதிக்க வழியாகவும் ஒருவரது அந்தஸ்த்தை (Status) அளக்கும் சுட்டியாகவும் காணப்படுகின்றது. வேறுபட்ட தொழில்கள் வேறுபட்ட தராதரத்தை அதனைச் செய்வோருக்கு வழங்கி விடுகின்றன.

## 9.3 சமூக அடுக்கமைப்பு (Social stratification)

ஏற்றத்தாழ்வு இல்லாத ஒரு சமத்துவ சமூகத்தை உருவாக்க வேண்டும் என்பதுதான் பல சீர்திருத்தவாதிகள், அறிவியலாளர்கள் மற்றும் செயற்பாட்டுவாதிகள் கண்டுவந்த கனவாகும். சோவியத் யூனியன் மாக்சியத்தை கொள்கையாக ஏற்று அதனை நடைமுறைப்படுத்தி வர்க்கமயற்ற சமூதாயமொன்றை (Classless

society) உருவாக்க வேண்டுமென்பதற்காக வரிந்துகட்டிக்கொண்டு செயற்பட்டது. ஆனால் அது வெறும் கனவாகவே போய்விட்டது. இதனைத்தான் பீ.ஏ.சொரோகின் ‘அடுக்கமைவு இல்லாத, உண்மையான சமத்துவத்தை உணரக்கூடிய சமூகம் என்பது மானிட வரலாற்றில் சாத்தியமற்ற ஒன்று’ எனக் கூறுகின்றார். ஒவ்வொரு சமூகமும் தமது உறுப்பினர்களின் நிலையைப் பொறுத்து (Position) அவர்களை எத்தகைய இடத்தில் வைத்து நோக்க வேண்டும் என்பதற்கான அமைப்பை (System) கொண்டிருக்கின்றது. உண்மையில் சமூக அடுக்கமைப்பு என்பது (Social stratification) சமூகத்திலுள்ள மக்களை வகைப்படுத்தி தரம்பிரித்து அவர்களது இடம் (Placement) எத்தகையது என இனங்காணும் ஒரு ஏற்பாடாகும். சமூக அடுக்கமைப்பின் முக்கிய வடிவங்களாக சாதி (Caste) பண்ணை, சாதி அமைப்பு வர்க்கம் ஆகிய நான்கும் காணப்படுகின்றன. சாதி அமைப்பு ஆங்காங்கு சிதறிக் காணப்பட்டாலும் இந்தியாவில்தான் அதன் சகல பரிமாணமங்களோடும் கிளைவிட்டுக் காணப்படுகின்றது. நிலவுடைமை முறை ஐரோப்பாவில் மத்திய காலப் பிரிவில் காணப்பட்ட ஒரு அடுக்கமைப்பு முறையாகும். வர்க்கமே உலகின் எல்லாப் பாகங்களிலும் நிலவுகின்றது.

வேறுபாடு என்பது இயற்கையின் மாறாத ஒரு விதி. மானிட சமூகமும் இதற்கு விதிவிலக்கல்ல. உடலியல் தோற்றப்பாடுகள், புத்திமட்டம், ஒழுக்கம், பொருளாதாரம் மற்றும் சமய உணர்வு போன்ற பல்வேறு விடயங்களில் மானிட சமூக உறுப்பினர்கள் ஒருவரிலிருந்து ஒருவர் வேறுபடுகின்றனர். ஏன் இரு மனிதர்களை எடுத்துக்கொண்டால் கூட குணத்திலும் சரி உடலியல் கட்டமைப்பிலும் சரி அவர்கள் ஒரேமாதிரியாகப் பெரும்பாலும் இருப்பதில்லை. எனவே பல்வகைத்தன்மையும் (Diversity) சமத்துவமின்மையும் (Inequality) சமூகத்தில் இயல்பாகக் காணப்படும் இரு அம்சங்களாகும். ஆகையால்தான் மானிட சமூகம் எல்லா இடங்களிலும்

அடுக்கமைவிற்குட்பட்டு காணப்படுகின்றது என சமூகவியலாளர்கள் குறிப்பிடுகின்றார்கள். எல்லா சமூகங்களும் தனிநபர்களையும் குழுக்களையும் ஒப்பீடு செய்து பின்னர் தரப்படுத்தும் (Rank) வேலையை பெரும்பாலும் செய்யும். குழு அங்கத்தவர்கள் கூட தமக்கான நண்பனை, தொழிலாளியை மற்றும் மனைவியை அடுத்தவர்களோடு ஒப்பீடு செய்துதான் தெரிவு செய்கின்றார்கள். இந்த ஒப்பீடு எல்லாத் துறைகளிலும் இடம்பெறுகின்றது. உண்மையில் இந்த ஒப்பீடு ஒருவகைத் தரமதிப்பீடாகும்.

சமூகங்கள் தமது அங்கத்தவர்களை அவர்களது வகிபங்கின் (Roles) அடிப்படையில் ஒப்பீடு செய்து வேறுபடுத்தி தரமதிப்பீடு செய்கின்றது. இதன்போது சில வகிபங்குகள் உன்னதமானவையாகவும் சில வகிபங்குகள் குறைந்த மதிப்புக் கொண்டவையாகவும் கொள்ளப்படுகின்றன. உன்னதமான வகிபாகங்களை வகிப்பவர்கள் ஏனையோரைவிட உயர்ந்து காணப்படுகின்றார்கள். இவ்வாறு ஒப்பீடு செய்து, வகைப்படுத்தி, தரம்பிரிக்கும் செயன்முறையைத்தான் சமூக அடுக்கமைவு என சமூகவியலாளர்கள் அழைக்கின்றார்கள்.

சமூக அடுக்கமைப்பு பெரும்பாலும் எல்லாச் சமூகங்களுக்கும் பொதுவான ஒன்றாகும். சில அறிஞர்கள் இதனைப் பொருளாதாரத்துடனும் சிலர் சமூக அங்கீகாரத்துடனும் தொடர்புபடுத்தி விளக்குகின்றனர். சமூகவியலைப் பொறுத்தவரை சமூக அடுக்கமைவு என்பது சமூகப் பொருளாதார நிலமைகளை அடிப்படையாக வைத்து மக்களை வகைப்படுத்துவதை குறிக்கின்றது. உண்மையில் இது ஒரு ஒழுங்குமுறையாகும். அதனைக் கொண்டு சமூகம் எந்தக்குழுவை எந்த தரவரிசையில் எங்கு வைக்க வேண்டும் எனப் புரிந்துகொள்கின்றது. இதே கருத்தையே எம்.எம்.டியூமின் (M.M.Tumin) என்பவரும் குறிப்பிடுகின்றார். சமூகம் இருக்கும் இந்த இடங்கள் (Positions), வலு (Power), சொத்து (Property) மற்றும் சமூக மதிப்பீடுகள் (Social evaluation) போன்றவற்றில் சமத்துவமற்று வேறு வேறு தராதரங்களில் காணப்படுவதாக இவர் குறிப்பிடுகின்றார்.

மக்கள் குழுக்களிடையே நிலவும் அமைப்பாக்கப்பட்ட சமத்துவமின்மையே சமூக அடுக்கமைப்பு என அன்ரனி கிட்டிங்ஸ் (Antony Giddens) குறிப்பிடுகின்றார்.

சமூகக் குழுவொன்றினைச் சொத்துரிமை, வருமானம், சமூக நிலைமை, அதிகாரம் மற்றும் இனத்துவம் போன்ற அடிப்படைகளில் வகைப்படுத்துவது சமூக அடுக்கமைப்பாகும். அவற்றுள் ஒன்றோ பலதோ சேர்ந்து தனியாள் ஒருவருடைய அல்லது குழுவுடைய அடுக்கமைப்பினைத் தீர்மானிக்கின்றது.

எல்லா வகையான மானிட சமூகத்திலும் சமமின்மைகள் (Inequalities) காணப்படவே செய்கின்றன. தனிநபர்கள், ஆண்கள், பெண்கள், இளைஞர்கள் மற்றும் பெரியவர்கள் எனும் வேறுபாடின்றி ஏற்றத்தாழ்வுகள் நிலவுகின்றன. சமூகமானது தரவரிசை (Hierarchy) அடிப்படையில் பிரிக்கப்படும் சூழ்நிலையே சமூக அடுக்கமைப்பு என்பதன் மூலம் நாடப்படுகின்றது.

சமூக ரீதியாக அடுக்கமைக்கப்பட்ட ஒரு சமூகத்தில் குழுக்கள் கொண்டிருக்கும் சக்தி (Power) மற்றும் செல்வத்தின் (Wealth) அளவைப் பொறுத்து அவர்களது அடுக்கிற்கேற்ப (Stratum) வைக்கப்படுகின்றார்கள். செல்வத்தை அடிப்படையாகக் கொண்டு பெரும்பாலான சமூகங்கள் அடுக்கமைக்கப்படுகின்றன.

அதிக செல்வமுடையவர்கள் அதிக சக்தியைக் கொண்டவர்களாகவும் சமூகத்தில் அதியுயர் இடத்தை வகிப்பவர்களாகவும் காணப்படுகின்றார்கள். அதேபோல் குறைந்த செல்வமுடையவர்கள் குறைந்த சக்தியுடையவர்களாகவும் சமூகத்தில் கீழ்நிலையில் வைத்து மதிக்கப்படுபவர்களாகவும் காணப்படுகின்றார்கள்.

உயர் அல்லது தாழ் சமூக அலகுகளாக சமூகத்தை கிடையாக பிரித்தல் சமூக அடுக்கமைப்பாகும் என ஆர். டுபிள்யு முர்ரே குறிப்பிடுகின்றார்.

அதிகாரம், சொத்து, சமூக மதிப்பீடு மற்றும் மனத்திருப்தி ஆகியவற்றில் சமத்துவமற்ற தரவரிசையில் சமூகக் குழுக்கள் அல்லது சமூகம் வைக்கப்படுவதை சமூக அடுக்கமைப்பு குறிப்பதாக மெல்வின் எம். டுமின் (Melvin M. Tumin) குறிப்பிடுகின்றார்.

அதிகமாகவோ அல்லது குறைவாகவோ நீடித்திருக்கும் அந்தஸ்த்தின் தரவரிசையில் (Enduring hierarchy of status) தனிநபர்கள் அல்லது சமூகக் குழுக்கள் தரப்படுத்தப்படுவதை (Rank) சமூக அடுக்கமைப்பு குறிப்பதாக ஒக்போர்ன் மற்றும் நிம்கொப் குறிப்பிடுகின்றனர்.

கொடுக்கப்பட்ட சனத்தொகையை தரநிலையாக வகுப்புகளாக வேறுபடுத்துவதை சமூக அடுக்கமைப்பு குறிப்பதாக சொரோகின் குறிப்பிடுகின்றார். இது மேல் அல்லது கீழ் சமூக அடுக்குகளில் (Social layers) வெளிப்படுகின்றது என மேலும் அவர் குறிப்பிடுகின்றார்.

### 9.4 சமூக அடுக்கமைப்பின் அடிப்படைகள் அல்லது வடிவங்கள்

ஒரு சமூகத்தில் பலவகையான அடுக்குகள் அல்லது படைகள் (Layers) கொண்ட மக்கள் வேறுபாடுடனான அந்தஸ்த்தைக் கொண்டிருக்கும் போது அங்கு இயல்பாக சமூக அடுக்கமைப்பு தோற்றம் பெறுகின்றது. வேறு வார்த்தையில் சொன்னால் சக்தி, கௌரவம் மற்றும் செல்வம் போன்றவற்றை வேறுபட்ட அளவில் கொண்ட மக்கள் உருவாகும் போது அங்கு அடுக்கமைப்பு தோற்றம் பெறுகின்றது. சமூகவியலாளர்கள் அடுக்கமைப்பின் நான்கு நிலைகளை அடையாளங் காண்கிறார்கள்

#### 01. அடிமைத்தனம் (Slavery)

சமத்துவமின்மையின் தீவிர வடிவம்தான் அடிமைத்தனமாகும். இங்கு சில மனிதர்கள் மற்றொரு தனிநபரின் அல்லது சமூகக் குழுவின் சொத்தாக (Property) கொள்ளப்படுகின்றார்கள். அடிமைகளுக்கு

சிவில் அந்தஸ்த்தோ அல்லது சொத்துரிமையோ கிடையாது. இரண்டு அடிமைகளின் திருமணம் கூட சட்டபூர்வமானதாகக் கருதப்படவில்லை. ஒரு அடிமையை வாங்கவும் விற்கவும் முடியும்.

பண்டைய கிரேக்கத்தில் அடிமைகள் முதலீட்டு வடிவங்களாக கொள்ளப்பட்டார்கள். பணம் படைத்த ஏதென்ஸ் வாசிகளின் தொழிற்சாலைகளில் அவர்கள் முக்கிய உழைப்பாளர்களாக இருந்தார்கள். 19ம் நூற்றாண்டில் காலணித்துவவாதிகள் அடிமைகள் வியாபாரத்தில் ஈடுபட்டார்கள்.

### 02. பண்ணை (Estate)

மத்தியகாலத்திலும் அதற்கு அப்பாலும் ஐரோப்பாவில் காணப்பட்ட தற்போது நடைமுறையில் இல்லாத அமைப்புதான் இந்த பண்ணை முறையாகும். இந்த அடுக்கமைப்பு முறையின் அகோரம்தான் பிரஞ்சுப் புரட்சிக்கு கூட இட்டுச்சென்றது.

பண்ணை அமைப்பு நீண்ட வரலாற்றைக் கொண்டது. பண்டைய ரோம சாம்ராஜ்சியத்தில் இவ்வமைப்பு தோற்றம்பெற்று அண்மைக்காலம் வரை நீடித்து நின்றது. பண்ணை அமைப்பில் மூன்று பிரிவுகள் உள்ளன.

அ. மதகுருக்கள் (The clergy)

ஆ. பிரபுக்கள் (The nobility)

இ. சாமானியர்கள் (Commoners or ordinary people)

இங்கிலாந்து, பிரான்ஸ் போன்ற நாடுகளில் இம்மூன்று பிரிவுகளும் காணப்பட்டன. சுவீடன் போன்ற ஐரோப்பவின் ஏனைய பகுதிகளில் 1866 வரை பின்வரும் நான்கு பிரிவுகள் காணப்பட்டன.

அ. பிரபுக்கள்

ஆ. மதகுருக்கள்

இ. குடிமக்கள் (Citizens)

ஈ. விவசாயிகள் (Peasants)

இந்த தரவரிசை முறையில் மதகுருக்கள் உச்சியிலும் (Top) சாமானியர்கள் அடிமட்டத்திலும் (Bottom) வைத்து நோக்கப்பட்டார்கள். பிரபுக்கள் தரவரிசையில் இடைநிலையில் (Intermediate) வைக்கப்பட்டனர்.

இங்கு ஒவ்வொரு பண்ணைப் பிரிவிற்கும் ஒவ்வொரு அந்தஸ்த்து கொடுக்கப்பட்டது. பண்ணைத்துவத்தின் அங்கத்துவம் பிறப்பினால் தீர்மானிக்கப்பட்டது.

சாமானியர்கள் எனும் மூன்றாவது பிரிவு வணிகர்கள், கைவினைஞர்கள் மற்றும் விவசாயிகள் மற்றும் அடிமைகளால் கட்டமைக்கப்பட்டு காணப்பட்டது. அடிமைகள் மிக மோசமாக சுரண்டப்பட்டார்கள். மற்றும் தமது எஜமானர்களின் நிலங்களில் இலவசமாக வேலைசெய்யும்படி நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.

'தேவாலயம் உச்சமானது; அரசு அதற்கு அடிபணிந்துள்ளது' எனும் கருத்து நிலவிய மத்தியகாலத்தில்தான் மதகுருமார்கள் பண்ணை அமைப்பில் முன்னிலையில் வைத்து நோக்கப்பட்டார்கள். ஏனைய சந்தப்பங்களில் பிரபுக்கள் முதலிடம் பெற்றார்கள்.

சட்டரீதியான சமத்துவம் பண்ணை அமைப்பில் காணப்படவில்லை. உயர் பண்ணைத்துவத்துக்கு அதிக சட்ட உரிமைகளும், சலுகைகளும் வழங்கப்பட்டன. அவர்களுக்கு செய்ய வேண்டிய கடமைகளும் கடப்பாடுகளும் கீழ்நிலை பண்ணை அமைப்பினருக்கு விதிக்கப்பட்டன.

### 03. சாதி (Caste)

சாதியமைப்பில் உள்ள குழுக்களுக்கு குறிப்பிட்டளவு அந்தஸ்த்து சமூகத்தாலும் அக்குழுவில் உள்ள ஏனைய அங்கத்தவர்களாலும் வழங்கப்படுகின்றது. இங்கு மக்கள் தமக்கான அந்தஸ்த்தை தெரிவு செய்யவோ அல்லது ஈட்டிக்கொள்ளவோ முடியாது. பிறக்கும் போது ஒருவரது சாதி தீர்மானிக்கப்படுகின்றது.

சாதி முறையின் இறுக்கமான வடிவம் இந்தியாவில் காணப்படுகின்றது. பாரம்பரிய இந்து சமூகம் ஐந்து முக்கிய அடுக்ககளாக சாதியைப் பிரிக்கின்றது.

I. பிராமணர் : பூசாரிகள்
II. ஷத்திரியர் : ஆட்சியாளர்கள், நிர்வாகிகள்
III. வைசியர் : வணிகர்கள், விவசாயிகள்
IV. சூத்திரர் : உடல் உழைப்பாளர்கள்
V. தீண்டத்தகாதவர்கள் : துப்பரவு பணியாளர்கள், பன்றி மேய்ப்பவர்கள்

இவையல்லாத துணை சாதிகளும் காணப்படுகின்றன. 3000 க்கு மேற்பட்ட சாதிகள் இந்தியாவில் உள்ளதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

### 04. வர்க்க அமைப்பு (Class system)

இன்று நடைமுறையில் உள்ள சமூக அடுக்கமைப்பின் வடிவம்தான் வர்க்க அமைப்பாகும். மக்கள் எந்தளவு பொருட் செல்வம் (Material wealth) வைத்திருக்கிறார்கள் என்பதைப் பொறுத்து அடுக்கமைப்படுகின்றார்கள். அதிக சக்தியும், அதிக கௌரவமும் அதிக பணத்தையும் அதிக செல்வத்தையும் சொந்தமாக்கியிருப்பவர்களுக்கு கொடுக்கப்படுகின்றன. நவீன நாகரீகமடைந்த கைத்தொழில் சமூகத்தில் நிலவும் சமூக அடுக்கமைப்பில் வர்க்கம் முக்கியமானது. சாதி இந்தியாவில் காணப்படும் அதேவேளை வர்க்கம் உலகம் முழுக்க காணப்படுகின்றது. சமூகவியலில் சமூக வர்க்கம் எனும் பதம் சமூக அடுக்கமைப்பின் ஒரு வகையை விளக்கப்படுத்துகின்றது. செல்வமும், தொழிலும் வர்க்க வேறுபாட்டின் முதன்மைக் காரணங்களாகும்.

மேற்கு நாடுகளில் காணப்படும் முதன்மையான வர்க்கங்கள் பின்வருமாறு:

I. உயர்வர்க்கம்/ மேல்தட்டு வர்க்கம் : செல்வந்தர்கள், முதலாளிகள், தொழிலதிபர்கள், உயர் அதிகாரிகள்.

II. நடுத்தர வர்க்கம் : சட்டத்தரணிகள், கணக்காளர்கள், நிதி மற்றும் காப்புறுதி தொழில்கள். இவர்கள் பெரும்பாலும் காரியாலயத்தில் வெள்ளை கலர் வேலை (White-collar jobs) செய்பவர்கள்.

III. உழைக்கும் வர்க்கம் : மின்னியல் வல்லுனர், இயந்திர வல்லுனர் போன்றவர்கள்.

IV. விவசாயிகள்: சில கைத்தொழில் நாடுகளில் இப்பிரிவு காணப்படுகின்றது. பாரம்பரிய முறையிலான விவசாய நடவடிக்கைளில் ஈடுபடுவோர் இப்பிரிவினுள் அடங்குகிறார்கள்.

### 9.5 சமூக அடுக்கமைவின் தோற்றம் பற்றிய கோட்பாடுகள்

சமூக அடுக்கமைப்புத் தொடர்பாக பிரதானமாக மூன்று கோட்பாடுகள் காணப்படுகின்றன.

#### அ. முரண்பாட்டுக் கோட்பாடு

சமூகத்தில் வேறுபட்ட சமூக அடுக்குகள் அல்லது சமூக வர்க்கங்கள் தோன்றுவதற்குப் பொருளாதாரக் காரணிகளே பின்புலங்களாய் அமைகின்றன எனவும் சமூக வர்க்கங்களை உற்பத்திக் காரணிகளின் உடைமை தீர்மானிக்கின்றன எனவும் கார்ல் மாக்ஸ் கூறுகின்றார். மேலும் முதலாளிகள் மற்றும் தொழிலாளிகள் என்னும் இரு வர்க்கங்கள் சமூகத்தில் உருவாகும் எனவும் இந்த இரு வர்க்கங்களும் எப்போதும் முரண்பட்டுக்கொண்டே இருக்கும் எனவும் கார்ல் மாக்ஸ் மேலும் குறிப்பிடுகின்றார்.

இரு குழுக்கள் மோதுகின்றபோது அடக்கப்பட்ட குழுவானது கீழ் அந்தஸ்த்தையும் (Lower status) கீழ் வர்க்கத்தையும் ஏற்கும்படி அடக்கிய குழுவால் நிர்ப்பந்திக்கப்படுகின்றார்கள். இதன்மூலமே சமூதாயத்தில் சமூக அடுக்கமைப்பு தோற்றம் பெறுகின்றது என கும்ளோவிக்ஸ் மற்றும் ஒபன்ஹீமர் (Gumplowicz & Oppenheimer) குறிப்பிடுகின்றனர்.

**ஆ. தொழிற்பாட்டுவாதக் கோட்பாடு**

கார்ல் மாக்ஸினால் முன்வைக்கப்பட்ட முரண்பாட்டுக் கோட்பாட்டை கிங்ஸ்லி டேவிஸ் (Kingsly Devis), சொரோகின் (P.A.Sorokin) மற்றும் மகில்வர் (MacIver) போன்றோர் ஏற்றுக்கொள்ளவில்லை. அடுக்கமைப்பை முரண்பாடு வளர்த்துவிடுமே தவிர உருவாக்காது என சொரோகின் கூறுகின்றார்.

அடுக்கமைவு உலகளாவியது. இதன் மூலம் உரிய பதவிகள் தகுதியான வர்க்கங்களுக்கு வழங்கப்படுகின்றன என கிங்ஸ்லி டேவிஸ் கூறுகின்றார். இக்கோட்பாடு சமூக அடுக்கமைப்பின் ஒருங்கிணைக்கும் தொழிற்பாட்டை (Integrating function) விளக்குகின்றது.

**இ. மெக்ஸ் வெபர்**

அடுக்கமைப்பு பற்றிய கார்ல் மாக்ஸின் கருத்தை விமர்சனம் செய்த மெக்ஸ் வெபர் சமூக அடுக்கமைப்பு பொருளாதாரக் காரணிகளால் மட்டுமன்றி வர்க்கம் (Class) அந்தஸ்த்து (Status) மற்றும் வலு (Power) போன்றவற்றாலும் உருவாகின்றது எனக் கூறுகின்றார்.

## 9.6 சமூக அடுக்கமைப்பும் சமூக அசைவும் (Social stratification and social mobility)

இயக்கம் என்பது பொதுவானது. இயங்குவதே வாழ்க்கை. நிற்பது மரணம். சமூகம் மட்டுமல்ல தனிமனிதன்கூட இயக்கம் (Dynamic)

கொண்டவனாகவே காணப்படுகின்றான். தனது அந்தஸ்த்தை (Status) உயர்த்திக் கொள்வதற்காகவும் மேல்நிலையை அடைந்து கொள்வதற்காகவும் எண்ணற்ற கைங்கரியங்களில் மனிதன் ஈடுபடுகின்றான். இந்த இடையறாத இயக்கமே சமூக அசைவு என அழைக்கப்படுகின்றது. ஒரு ஏழை பணக்காரனாவதும், ஒரு விவசாயி அமைச்சராவதும், ஒரு பணக்காரன் ஏழையாவதும், ஆட்சிசெய்த வர்க்கம் தூக்கி வீசப்படுவதும் சமூக அசைவை விளக்கும் உதாரணங்களாகும். இது சமூக தரவரிசை (Social hierarchy) அல்லது சமூக அடுக்கமைப்பில் ஏற்படும் ஒரு மாற்றமாகும். சமூக அசைவு இரு வகைப்படும்.

அ. செங்குத்தான சமூக அசைவு (Vertical social mobility)
ஆ. கிடையான சமூக அசைவு (Horizontal social mobility)

ஒரு அந்தஸ்த்தில் இருந்து வேறொரு அந்தஸ்திற்கு குழு அங்கத்தவர்கள் மாறிச் செல்வதையே செங்குத்து சமூக அசைவு குறிக்கின்றது. கீழ் வர்க்கத்திலிருந்து உயர் வர்கத்திற்கும், ஊழியன் என்னும் நிலையிலிருந்து எழுதுவினைஞன் என்னும் நிலைக்கும், எதிர்க்கட்சி அந்தஸ்த்திலிருந்து ஆளும் கட்சிக்கும் நகரும் நிலை செங்குத்து அசைவிற்கான உதாரணங்களாகும். இங்கு வர்க்கம், தொழில் மற்றும் அதிகாரம் போன்றவற்றில் மாற்றம் தோன்றுகின்றது. செங்குத்து சமூக அசைவு மேல்நோக்கிய சமூக அசைவு (Upward mobility) கீழ்நோக்கிய சமூக அசைவு (Downward mobility) என இரு நிலமைகளில் நிகழலாம். சாதாரண ஒரு ஊழியன் செல்வந்தனாக மாறுவது மேல்நோக்கிய அசைவாகும். ஒரு பணக்காரன் செல்வத்தை இழந்துவிடுவது கீழ்நோக்கிய அசைவாகும்.

அந்தஸ்த்து மாறாமல் நிலை (Position) மாறுவதையே கிடைமட்ட சமூக அசைவு என்பது குறிக்கின்றது. ஒரு தொழிற்சாலையில் வேலை செய்த பொறியியலாளர் தனது பதவியை ராஜினாமா

செய்துவிட்டு வேறொரு தொழிற்சாலையில் அதே பொறியியலாளர் பதவியில் சேர்ந்துகொள்வதை இது குறிக்கும்.

வர்க்கமும் (Class), சாதியும் (Caste) சமூக அடுக்கமைவின் முக்கிய இரு வடிவங்களாகும். சாதிய அமைப்பைப் பொறுத்தவரை அங்கு அந்தஸ்த்து (Status) பிறப்பினால் தீர்மானிக்கப்படுகின்றது. பிறப்பினால் அடையப்பெறும் அந்தஸ்த்து மாற்றப்பட முடியாதது. தாழ் சாதியில் பிறக்கும் ஒருவன் உயர் சாதியின் அந்தஸ்த்தைப் பெற முடியாது. பிராமணனாகப் பிறப்பவன் பிராமணனாகவே இறக்கின்றான். சாதி வழி கிடைக்கும் அந்தஸ்த்து மாற்றப்பட முடியாதது. இதனால் சமூக அடுக்கமைவின் வடிவங்களில் ஒன்றான சாதி நிலைக்குத்து சமூக அசைவை நோக்கி தனது அங்கத்தவர்களை நகர்த்துவதில்லை. இதனால் மூடுண்ட அமைப்பு (Closed system) அல்லது அசையாத சமூகம் (Immobile society) என சாதி அழைக்கப்படுகின்றது.

வர்க்க அமைப்பிலே (Class system) சமூக அசைவிற்கான சந்தர்ப்பங்கள் பெருவாரியாக வழங்கப்படுகின்றன. இங்கு ஒருவரது அந்தஸ்த்து அவரது திறமை, புத்தி மட்டம் மற்றும் செல்வம் போன்றவற்றால் தீர்மானிக்கப்படுகின்றது. பிறப்பினால் இவை தீர்மானிக்கப்படுவதில்லை. உதாரணமாக சாதாரண ஊழியனாக தொழில்புரியும் ஒருவர் அயராத உழைப்பால் தொழிற்சாலையின் உரிமையாளராக மாறலாம். எனவேதான் வர்க்க அமைப்பை திறந்த அமைப்பு (Open system) எனவும் அசையும் சமூகம் (Mobility society) எனவும் அழைக்கப்படுகின்றது. ஆனால் தற்காலத்தில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இந்திய சமூகமொன்றில் ஹரிஜனாக (Harijan) பிறந்தவன் தனது சாதிவழி அந்தஸ்த்தை (Caste-status) மாற்ற முடியாதுதான். ஆனால் அவன் தனது கல்வியை, பொருளாதாரத்தை, தொழிலை மற்றும் அரசியல் அந்தஸ்த்தை மாற்ற முடியும். எனவே முழுமையான திறந்த அசையும் சமூகமோ (வர்க்கம்)

அல்லது முழுமையாக மூடிய அசையா சமூகமோ (சாதி) இன்று இல்லை என சுட்டிக்காட்டப்படுகின்றது.

**சுருக்கம்**

- ✓ சமூக வேறுபாடுகள் தவிர்க்க முடியாதவை. தல்கொட் பார்ஸன்ஸ் சமூக வேறுபாட்டிற்கான மூன்று காரணங்களை அடையாளப்படுத்துகின்றார்.
- ✓ அடிமைத்தனம், பண்ணை முறை, வர்க்க அமைப்பு, சாதி எனும் நான்கு வடிவங்களில் சமூக அடுக்கமைப்பு காணப்படுகின்றது.
- ✓ சமூக அடுக்கமைப்பு தொடர்பாக கார்ல் மாக்ஸ், தொழிற்பாட்டுவாதிகள் மற்றும் மக்ஸ் வெபரின் கோட்பாடுகள் முக்கியமானவை.

**பயிற்சி வினாக்கள்**

01. சமூக வேறுபாட்டிற்கான காரணிகளையும் சமூக வேறுபாடுகளின் அடிப்படைகளையும் விளக்குக.
02. சமூக அடுக்கமைப்பு என்றால் என்னவென்று விபரிக்குக.
03. சமூக அடுக்கமைப்பு தொடர்பான கோட்பாடுகளை தெளிவுபடுத்துக.

**திறவுச் சொற்கள்**

பால்வகை, வலு, செல்வம், தரப்படுத்தல், சமூக அசைவு

**உசாத்துணை நூல்கள்**

1. அய்யூப், எஸ்.எம். (2013). *சமூகவியல் அடிப்படை எண்ணக்கருக்கள்.* ஒலுவில்: சமூக விஞ்ஞானங்கள் துறை, இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.
2. கருணாநிதி, மா. (2008). கல்விச் சமூகவியல். கொழும்பு-சென்னை: குமரன் புத்தக இல்லம்.
3. Giddens Anthony. (2005). *Sociology*. Cambridge: Polity Press.
4. Haralambos, M., & Heald R.M. (2004). *Sociology: Themes and perspectives.* London: Harper Collins Publishers Limited.
5. Landis Paul, H. (1990). *Sociology: An introduction*. Massachusetts: Ginn and Company a Xerox Education Company.
6. Rao Shankar. (2002). *Sociology*: *Primary principles.* New Delhi: S. Chand and Company Ltd.

# அத்தியாயம் - 10

# சமூக நிறுவனங்கள்

**உள்ளடக்கம்**

10.1 சமூக நிறுவனங்கள்
10.2 சமூக நிறுவனங்களின் வகைகள்
10.3 சமூக நிறுவனங்களின் தொழிற்பாடுகள்
10.4 சமூகத்தில் காணப்படும் சமூக நிறுவனங்கள்

**அத்தியாயச் சுருக்கம்**

சமூக நிறுவனங்கள் மற்றும் அவற்றின் தொழிற்பாடுகள் பற்றிய ஆராய்ச்சியே சமூகவியல் என எமில் தொர்கைம் குறிப்பிடுகின்றார். ஒரு சமூகம் சிறப்பாக தொழிற்படுவதற்கு அதன் துணை நிறுவனங்களின் கட்சிதமாக தொழிற்பாடுகள் அவசியமானவை என சமூகவியலாளர்கள் சுட்டிக்காட்டுகின்றார்கள்.

**அத்தியாய நோக்கம்**

சமூக நிறுவனங்கள், அவற்றின் வகைகள், அவை சமூக இயக்கத்திற்கு ஆற்றும் அளப்பரிய பணிகள் குறித்து ஆராய்வதே இவ்வத்தியாயத்தின் நோக்கமாகும்.

**கற்றல் பேறுகள்**

இவ்வத்தியாயத்தைக் கற்பதன் மூலம் மாணவர்கள்

- ✓ சமூக நிறுவனங்கள் குறித்த தெளிவையும் அவற்றின் வகைகளையும் தெரிந்து கொள்வார்கள்.
- ✓ சமூகத்தின் சீரான இயக்கத்திற்கு சமூக நிறுவனங்கள் எவ்வாறு துணைபுரிகின்றன என அறிந்து கொள்வார்கள்.

### 10.1 சமூக நிறுவனங்கள் (Institutions)

சமூக நிறுவனங்கள் பற்றிய அறிவு சமூகத்தைப் புரிந்து கொள்வதற்கான அடிப்படையான மூலங்களில் ஒன்றாகும். சமூக நிறுவனங்கள் பற்றிய விஞ்ஞானமே சமூகவியல் என எமில் துர்கைம் கூறுவது இதன் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கப் போனதுமானது.

### 10.2 சமூக நிறுவனங்களின் வகைகள்

பொதுவாக நிறுவனங்கள், முதல்நிலை நிறுவனம் (Primary institution), இரண்டாம்நிலை நிறுவனம் (Secondary institution) என இரு வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன. அடிப்படை நிறுவனங்களான சமயம், குடும்பம், திருமணம் மற்றும் அரசியல் அமைப்புகள் போன்றவை முதல்நிலை நிறுவனங்கள் என அழைக்கப்படுகின்றன. இத்தகைய நிறுவனங்கள் பூர்வீக குடிகளில் கூட காணப்படுகின்றன. சமூகம் வளர்ந்து, சிக்கல் தன்மை அடைந்து சகல விடயங்களிலும் பல்வகைத் தன்மையடைந்த போது மக்களின் தேவைகளை நிறைவு செய்ய இரண்டாம்நிலை நிறுவனங்கள் தோற்றம் பெற்றன. கல்வி, சட்டம், அரசியலமைப்புச் சட்டம் போன்றவை இரண்டாம்நிலை நிறுவனங்களுக்கு உதாரணங்களாகும்.

சம்னர் (Sumner) என்பவர் நிறுவனங்களை இயற்கையாய் அமைந்த நிறுவனங்கள் மற்றும் திட்டமிடப்பட்டு உருவாக்கப்பட்ட நிறுவனங்கள் என இரு வகையாகப் பிரிக்கின்றார். இயல்பாக திட்டமிடப்படாமல், உணர்வுக்கு தெரியாத வண்ணம் உருவான நிறுவனங்கள் முதலாம் வகையிலும், திட்டமிடப்பட்டு, இலக்கு வைக்கப்பட்டு, பிரக்ஞைபூர்வமாக உருவான நிறுவனங்கள் இரண்டாம் வகையிலும் அடங்குகின்றன. முதன்நிலை, இரண்டாம்நிலை நிறுவனங்களை ஒத்ததாகவே சம்னரின் பிரிப்பும் அமைந்துள்ளது (அய்யூப் 2013).

திருமணம், குடும்பம், உறவு முறை, சமயம் போன்ற நிறுவனங்களை பாரம்பரிய (Traditional) சமூக நிறுவனங்களாகவும், கல்வி,

விளையாட்டு, ஊடகம், அரசு, சட்டம் போன்றவற்றை நவீன (Modern) சமூக நிறுவனங்களாகவும் சில சமூகவியலாளர்கள் பிரிக்கின்றனர்.

அதேபோல் குடும்பம், திருமணம், உறவுமுறை போன்றவற்றை முறைசாரா (Informal) நிறுவனங்களாகவும் சட்டம், கல்வி, சமயம் போன்றவற்றை முறைசார் (Formal) நிறுவனங்களாகவும் சில சமூகவியலாளர்கள் குறிப்பிடுகின்றனர் (அய்யூப் 2020).

குடும்பம், அரசாங்கம், பொருளாதாரம், கல்வி, சமயம் ஆகிய ஐந்துமே முதன்மை சமூக நிறுவனங்களாக (Primary social institution) பொதுவாகக் கொள்ளப்படுகின்றன. இந்த முதன்மையான ஐந்து சமூக நிறுவனங்களிலிருந்து இரண்டாம்நிலை சமூக நிறுவனங்கள் கிளைக்கின்றன என சமூகவியலாளர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

### 10.3 சமூக நிறுவனங்களின் தொழிற்பாடுகள்

சமூக நிறுவனங்கள் மானிட சமூகத்தின் வேறுபட்ட தேவைகளை நிறைவு செய்வதோடு நிறைவு செய்யும் வழிகளையும் மற்றும் சாதனங்களையும் கொடுக்கின்றன. குடும்பம் எனும் நிறுவனத்தை உதாரணமாக எடுத்துக் கொண்டால் அது அதன் உறுப்பினர்களுக்கு பொருளாதார மற்றும் மனோரீதியான ஆதரவை வழங்குவதோடு கல்வியையும் மற்றும் அடையாளத்தையும் (Identity) வழங்குகிறது. சமூக உறுப்பினர்களை சமூகமயப்படுத்தி, முதியவர்கள் மற்றும் நோயாளிகள் போன்றோரை உபாதைகளிலிருந்து காக்கின்றது. பாலியல் நடத்தையை (Sexual behavior) ஒழுங்குபடுத்துவதோடு, இனப்பெருக்கம், பிள்ளை வளர்ப்பு போன்றவற்றில் ஈடுபடுகின்றது. இதே போன்று ஏனைய சமூக நிறுவனங்களும் சமூகத்தின் தேவைகளை நிறைவு செய்கின்றன (அய்யூப், 2013).

சமூக நிறுவனங்கள் மனித நடத்தைகளைக் கட்டுப்படுத்துகின்றன. சமூக நிறுவனங்கள் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் சமூகத்தில் ஏற்படுத்துகின்றன. புதிதாக சமூகத்தில் இணைந்து கொள்வோருக்கு பண்பாடு தொடர்பாக கற்றுக்கொடுக்கின்றது.

பொருட்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்வதோடு பரிமாற்றமும் செய்கின்றது. சமூகத்தின் ஒழுங்கையும் (Order), பாதுகாப்பையும் (Security) நிலைநாட்டுகின்றது.

சமூகமயமாக்கல் முகவராக தொழிற்பட்டு உறுப்பினர்களை சமூகத்தின் பண்பாடுகளையும், விழுமியங்களையும் ஏற்கச் செய்கின்றது.

பொதுவாக எல்லா சமூக நிறுவனங்களும் இரு வகையான தொழிற்பாடுகளைக் கொண்டிருக்கின்றன. இலக்குகளை அடைதலும் அக ஒற்றுமையைப் பாதுகாத்தலுமே அவையாகும். அரசாங்கம் எனும் நிறுவனத்தை எடுத்துக்கொண்டால் குடிமக்களைப் பாதுகாப்பதும் எல்லைகளைக் காப்பதும் அதன் கடமைகளாகும். அதே போன்று உள்ளூர்ப் புரட்சியைத் தடுப்பதும், வெளிப்படையெடுப்பைக் கட்டுப்படுத்துவதும் அதன் பணிகளாகும் (அய்யூப் 2013).

### 10.4 சமூகத்தில் காணப்படும் சில நிறுவனங்கள்

#### 01. குடும்பம்

காத்திரமான மற்றும் முக்கியமான சமூக நிறுவனங்களில் ஒன்றாக குடும்பம் கருதப்படுகின்றது. உலகில் பெரும்பாலான மக்கள் குடும்பம் என்னும் நிறுவனத்தின் வழியேதான் பிறந்து வளர்ந்து இறந்து போகின்றார்கள். தனிநபர்களை சமூகமயமாக்குவதில் கூட குடும்பத்தின் பங்களிப்பு அளப்பெரியது. மனிதன் பிறந்ததுமுதல் குடும்பத்தோடு உணர்வு ரீதியான பிணைப்பை வளர்த்துக் கொள்கின்றான். குடும்பமே சமூக கட்டமைப்பின் அடிநாதமாகவும் தொழிற்படுகின்றது. ஒரு பரந்த பார்வையில் நோக்கின்

பெற்றோரையும் பிள்ளைகளையும் கொண்ட குழுவே குடும்பமாகும். இவற்றோடு உறவினர்கள், சார்ந்தவர்கள் போன்றோரையும் குடும்பம் உள்ளடக்குகின்றது. குடும்பமே அடிப்படையான முதன்நிலைக் குழு என்பது மெக் மற்றும் யங் போன்றோரின் கருத்தாகும் (அய்யூப், 2020).

**02. சமயம்**

மனிதன் ஒரு சமூக விலங்காக மட்டுமல்லாமல் ஆன்மீக உயிரியாகவும் காணப்படுகின்றான். வரலாறு தொடங்கியது முதல் இன்று வரை மனிதனின் அக்கறையான விவகாரங்களில் ஒன்றாக சமயமும் இருந்து வந்துள்ளது. மனிதன் உயிரியல், பொருளியல், சமூகவியல் தேவை கொண்டவன் மட்டுமல்லாமல் ஆன்மீகத் தேவை கொண்டவனாகவும் காணப்படுகின்றான். பௌதீக தேவைகள் நிறைவடைந்த பின்பும் அவனுக்குள் சமயத் தாகம் பெருக்கெடுத்துக் கொண்டே இருக்கின்றது. இதனையே பைபிள் ‘‘மனிதன் பாணோடு மட்டும் வாழ்வதில்லை’’ எனக் கூறுகின்றது. அதாவது உடலியல் தேவைகளுக்கு அப்பால் சமய, ஆன்மீகத் தேவையும் மனிதனுக்கு உண்டு என்பது இதன் பொருளாகும். இஸ்லாமிய சமயமும், ‘‘ஒவ்வொரு மனிதனும் பிறக்கும் போதே சமய உணர்வு கொண்டவனாக பிறக்கின்றான்’’ எனக் கூறுகின்றது (அய்யூப், 2020). சமூக இயக்கத்துக்கும் சமூக அங்கத்தவர்களிடையே ஒற்றுமை மற்றும் ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதற்கும் சமயம் பாரிய பங்களிக்கின்றது.

**03. கல்வி**

ஒரு சமூகத்தின் இருப்பு அச்சமூகத்தின் பண்பாடுகளை இளையோருக்கு கடத்துவதிலேயே தங்கியுள்ளது. எல்லா சமூகங்களும் இத்தகைய தேவையினை பூர்த்தி செய்வதற்கான வழிவகைகளை கொண்டுள்ளன. அதில் ஒரு வழிமுறை கல்வியாகும். கல்வி என்னும் எண்ணக்கருவானது வெறுமனே மாணவர்களுக்கு சில பாடங்கள் தொடர்பான அறிவினை புகட்டுவதை மாத்திரம்

குறிக்காமல் வாழ்வை மாணவர்கள் வெற்றிகரமாக முகம்கொடுப்பதற்கு தயார்படுத்துவதையும் குறிக்கின்றது. கல்வியினை இளைய சமூதாயத்தின் சமூகமயமாக்கல் செயற்பாடு என துர்ஹைம் (Durkheim) கூறுகின்றார் (அய்யூப், 2020).

**04. அரசாங்கம் (Government)**

அரசாங்கம் என்பது குறிப்பிட்ட நிலப்பரப்பில் வாழும் மக்களின் நலன்களைப் பேணவும் பாதுகாக்கவும் அரசின் (State) பெயரால் தொழிற்படும் ஒரு முகவராகும். அரசின் ஒரு கருவியே அரசாங்கமாகும். அரசின் செயற்பாடு அரசாங்கம் வாயிலாகவே அடையப்பெறுகின்றது. அரசு நிலையானது; ஆனால் அரசாங்கம் மாறக் கூடியது (யோதிலிங்கம், 2007).

சட்டமியற்றும் அமைப்பு (Legislature) நிருவாக அமைப்பு (Executive), நீதித்துறை அமைப்பு (Judiciary) என மூன்று அமைப்புகளில் அரசாங்கம் ஆட்சி செலுத்துகின்றது. அரசாங்கம் சமூகத்தில் ஒழுங்கை நிலைநாட்டுகின்றது, சட்டங்களை இயற்றி மக்கள் எவற்றைச் செய்யலாம், எவற்றைச் செய்யக் கூடாது என்று நிருணயிக்கின்றது. இந்தச் சட்டங்களை கடைப்பிடித்து அவற்றின்படி நடந்து கொள்ள வேண்டும் என்று மக்களை கட்டாயப்படுத்துகின்றது. மீறினால் அதற்கேற்ற தண்டனையும் தருகின்றது (வாழ்வியற் களஞ்சியம் தொகுதி-08, 1991).

**05. உறவுமுறை**

சமயத்தை விடுத்து எல்லா சமூகங்களிலும் உத்தியோகபூர்வ முறையில் உருவாக்கப்பட்ட ஒரே சமூக நிறுவனம் உறவு முறையைத் தவிர வேறில்லை என்பது எரிக்ஸனின் (2001) கருத்தாகும். உறவு முறை எனும் மைய நிறுவனத்தை அடிப்படையாகக் கொண்டே பெரும்பாலான சமூகங்கள் உருவாகுகின்றன எனவும் ஒரு மனிதனின் வாழ்வாதாரம், தொழில், திருமணம், பாதுகாப்பு, சமூக அடையாளம் போன்றவற்றை உறவுக் குழுக்களே (Kin group) கொடுக்கின்றன

எனவும் எரிக்ஸன் மேலும் கூறுகின்றார். அடிப்படையான சமூக நிறுவனங்களுள் உறவுமுறையும் ஒன்றாகும். உலகம் முழுவதும் வியாபித்துக் காணப்படும் உறவுமுறை தனிநபர்களை சமூகமயமாக்குவதிலும் குழு ஒற்றுமையை (Group solidarities) பேணுவதிலும் பாரிய பங்கைச் செய்கின்றது (ராஓ, 2007).

### 06. பொருளாதார நிறுவனங்கள்

ஒரு சமூகத்தின் தொடரான இருப்புக்கு பொருளாதார நிறுவனங்களின் வினைத்திறன்மிக்க செயற்பாடு இன்றியமையாதவை. உற்பத்தியும் அதனைப் பங்கிடுதலும் செவ்வனே ஒரு சமூகத்தில் நடைபெற வேண்டும். இவை இரண்டும் தடைபட்டுப்போனால் சமூகம் தேக்கநிலையை அடைந்துவிடும் என்பது ஆய்வாளர்கள் கருத்தாகும். பாரம்பரிய சமூகங்களில் குடும்பங்கள் தமது தேவைகளை ஓரளவு தாமே நிறைவேற்றிக் கொள்கின்றன. எனினும் சிக்கலடைந்த நவீன சமூகத்தில் பொருளாதார நிறுவனங்களின் தேவை இன்றிமையாதவை. பொருட்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்தல், பகிர்தல் மற்றும் பயன்படுத்துதல் ஆகியவை பொருளாதார நிறுவனங்களின் முக்கிய செயல்களாகும் (அய்யூப், 2020).

### சுருக்கம்

- ✓ சமூகமானது சமூக நிறுவனங்களின் வழியேதான் சிறப்பாக இயங்குகின்றது.
- ✓ பல வகையான சமூக நிறுவனங்கள் சமூகத்தில் காணப்படுகின்றன.
- ✓ சமூக நிறுவனங்கள் மானிட சமூகத்தின் எண்ணிலடங்கா தேவைகளை நிறைவு செய்கின்றன.

### பயிற்சி வினாக்கள்

1. சமூக நிறுவனங்கள் என்பதால் நீர் விளங்கிக் கொள்வது யாது?

2. சமூக நிறுவனங்களின் வகைகளையும் அவற்றின் தொழிற்பாடுகளையும் உதாரணங்களுடன் விளக்குக.
3. சமூகத்தில் காணப்படும் சமூக நிறுவனங்களையும் அவற்றின் பணிகளையும் சுருக்கமாக விளக்குக.

**திறவுச் சொற்கள்**

சமூக நிறுவனங்கள், முதன்மை நிறுவனம், இரண்டாம்நிலை நிறுவனம், உறவுமுறை

**உசாத்துணை நூல்கள்**


1. அய்யூப், எஸ்.எம். (2013). *சமூகவியல் அடிப்படை எண்ணக்கருக்கள்*. ஒலுவில்: சமூக விஞ்ஞானங்கள் துறை, இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.
2. அய்யூப், எஸ். எம். (2020). *சமூக நிறுவனங்கள்.* ஒலுவில்: சிடிபிஎல், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.
3. தமிழ் பல்கலைக்கழகம். (1991). *வாழ்வியற் களஞ்சியம் தொகுதி-08.* தஞ்சாவூர்: தமிழ் பல்கலைக்கழகம்.
4. யோதிலிங்கம், சி. அ. (2007). *அரசறிவியல் ஓர் அறிமுகம்.* கொழும்பு- சென்னை: குமரன் புத்தக இல்லம்.
5. Erikson, T.H. (2001). *Small places, large issues. An introduction to social and cultural anthropology*. London: Pluto Press.
6. Giddens Anthony. (2005). *Sociology.* Cambridge: Polity Press.
7. Haralambos, M., & Heald R.M. (2004). *Sociology: Themes and perspectives.* London: Harper Collins Publishers Limited.
8. Landis Paul, H. (1990). *Sociology: An introduction*. Massachusetts: Ginn and Company a Xerox Education Company.
9. Rao Shankar. (2002). *Sociology*: *Primary principles.* New Delhi: S. Chand and Company Ltd.

# அத்தியாயம் 11

# சமூக இடைவினை

**பொருளடக்கம்**

11.1 சமூக இடைவினை
11.2 சமூக இடைவினையின் வடிவங்கள்
அ. கூட்டுறவு
ஆ. போட்டி
இ. முரண்பாடு
ஈ. இணக்கம்
உ. ஓரினமாதல்

**அத்தியாயச் சுருக்கம்**

எண்ணிலடங்காத சமூக உறவுகளின் அமைப்பாகவே சமூகம் காணப்படுகின்றது. இந்த சமூக உறவுகள்தான் சமூக இடைவினையைத் தோற்றுவிக்கின்றன. பல்வேறுபட்ட சமூக இடைவினையின் வடிவங்களை இவ்வத்தியாயம் பேசுகின்றது.

**அத்தியாய நோக்கம்**

இடைவினையும் அதன் வடிவங்களையும் மாணவர்களுக்கு விளக்கிக் காட்டுவதே இவ்வத்தியாயத்தின் நோக்கமாகும்.

**கற்றல் பெறுபேறுகள்**


இவ்வத்தியாயத்தினைக் கற்பதன் மூலம் மாணவர்கள்

01. சமூக உறவு சமூகத்தில் எவ்வாறு தொழிற்படுகின்றது என்பதனைப் புரிந்து கொள்வார்கள்.
02. சமூக இடைவினையையும் அதன் வடிவங்களையும் தெரிந்து கொள்வார்கள்.

## 11.1 அறிமுகம்

சமூக உறவுகளின் அமைப்பாகவே (System) சமூகம் காணப்படுகின்றது. தந்தை-மகன் உறவு, முதலாளி-தொழிலாளி உறவு, ஆசிரியர்-மாணவன் உறவு, தலைவன்-தொண்டன் உறவு என பல்வேறுபட்ட சமூக உறவுகளின் அமைப்பு சமூகத்தில் காணப்படுகின்றது. சமூக உறவுகள் சமூகத்தின் தொழிற்பாட்டு நிலையைக் காட்டுகின்றது. இந்த சமூக உறவுகள்தான் சமூக இடைவினையின் வடிவங்களாகும். இந்த இடைவினைகள்தான் சமூக செயன்முறை (Social processes) என அழைக்கப்படுகின்றது. சமூக செயன்முறை எனும் அடிப்படையான கருவி மூலமே மனிதர்கள் இடைவினை புரிகின்றார்கள் மற்றும் உறவுகளை உருவாக்கிக் கொள்கின்றார்கள்.

நூற்றுக்கணக்கான அல்லது ஆயிரக்கணக்கான உறவுகளை சமூகம் கொண்டிருக்கின்றது. இவற்றை அளவிடுவது இலகுவான பணியல்ல. எனவேதான் இந்த உறவுகள் சமூக இடைவினையின் வடிவங்களாக அடையாளப்படுத்தப்படுகின்றன. இதுவே சமூக செயன்முறை என அழைக்கப்படுகின்றது.



சமூக இடைவினை சமூகத்தின் அத்திவாரமாகும். இடைவினை இல்லாமல் சமூக வாழ்வு சாத்தியமற்றது. அந்தஸ்த்தும், நியமங்களும் நிலையான கூறாகும் (Static element) அதேநேரம் சமூக இடைவினை இயங்கும் கூறாகும் (Dymanic element). மக்கள் சதா இயங்கிக்கொண்டிருக்கின்றார்கள். மேலும் அவர்கள் முயற்சித்துக் கொண்டும், போட்டிபோட்டுக் கொண்டும், முரண்பட்டுக் கொண்டும், ஒத்துழைத்துக் கொண்டும், மகிழ்ந்து கொண்டும், சமரசம் செய்துகொண்டும் மற்றும் சவால் விட்டுக்கொண்டும் இருக்கின்றார்கள். இந்த செயல் கூறுகள் (Action element) அல்லது தொழிற்பாட்டுக் கூறுகள் (Functional element) சமூக இடைவினையையே பிரதிபலிக்கின்றன.

பார்க் மற்றும் பேர்கஸ் (Park and Burgess) தொடர்பும் (Contact) தொடர்பாடலும் (Communication) சமூக இடைவினையின் இரு பிரதான நிபந்தனைகளாகும் எனக் குறிப்பிடுகின்றார்.

இடைவினையானது தள்ளுதல், சண்டைபிடித்தல், இழுத்தல், ஆரத்தழுவுதல் போன்ற உடல் ரீதியாக அடுத்தவருடன் தொடர்புபடுவதாக இருக்கலாம். இது நேரடி இடைவினை (Direct interaction) என அழைக்கப்படுகின்றது. அதேபோல் இடைவினை குரல், சத்தம், சைகை, மொழி, பேச்சு, எழுத்து எனும் வகையிலும் அமையலாம். இது குறியீட்டு இடைவினை (Symbolic interaction) என அழைக்கப்படுகின்றது.

## 11.2 இடைவினையின் வகைகள்

### 01. கூட்டுறவு

ஒரு பொது இலக்கை அடைந்து கொள்ளுவதற்காக ஒன்றாக செயற்படுவதை கூட்டுறவு குறிக்கின்றது. கூட்டுறவு என்பது சமூக இடைவினையின் ஒரு வடிவமாகும். கூட்டுறவில் ஒருவர் அல்லது பலர் ஒரு பொது இலக்கை அடைந்து கொள்வதற்காக அங்கே ஒன்றாக

தொழிற்படுகின்றார்கள் என மெரில் மற்றும் எல்ரேஜ் (Meril and Eldredge) குறிப்பிடுகின்றார்கள்.

**கூட்டுறவின் வடிவங்கள்**

**அ. நேரடி கூட்டுறவு (Direct coorperation)**

ஒன்றாக விளையாடுதல், ஒன்றாக வணங்குதல், சேற்றில் புதைந்த ஒரு வண்டியை வெளியே கொண்டுவருவதற்காக பலர் ஒன்றுகூடி இழுத்தல் போன்றவை நேரடி கூட்டுறவுக்கு உதாரணங்களாகும். இங்கு மக்கள் அடுத்தவர்களுடன் சேர்ந்து கூட்டாக தொழிற்படுகின்றார்கள்.

**ஆ. மறைமுக கூட்டுறவு (Indirect coorperation)**

இங்கு பொது இலக்கை அடைந்து கொள்வதற்காக தனிநபர்கள் தனித்தனியாக தொழிற்படுவார்கள். இது ஒரு வகை தொழிற்பிரிப்பும் சிறப்புத் தேர்ச்சியுமாகும். ஒரு ஆடை உற்பத்தியில் எத்தனையோ நபர்கள் தொழிற்படுகின்றார்கள். இவர்கள் ஆடையைத் தயாரித்தல் எனும் பொது இலக்கில் தொழிற்படுகின்றார்கள். இதுவும் கூட்டுறவாகும். ஆனால் தனித்தனியாக தொழிற்படுகின்றார்கள்.

**இ. முதல்நிலை கூட்டுறவு (Primary coorperation)**

குடும்பம், அண்டையம், நண்பர்குழு, சிறுவர்கள், விளையாட்டுக்குழு போன்ற முதல்நிலை குழுக்களில் முதல்நிலை கூட்டுறவு இடம்பெறுகின்றது. இங்கு அங்கத்தவர்கள் எல்லோரின் நலனுக்காகவும் தொழிற்படுகின்றார்கள்.

**ஈ. இரண்டாம்நிலை கூட்டுறவு (Secondary coorperation)**

நவீன நாகரீகமடைந்த சமூகங்களில் பிரதானமாக இரண்டாம்நிலைக் குழுக்களில் இரண்டாம்நிலைக் கூட்டுறவு காணப்படுகின்றது. இங்கு ஒவ்வெருவரும் தத்தமது நலனுக்காக, கூலிக்காக, சம்பளத்துக்காக,

பதவி உயர்வுக்காக, அந்தஸ்துக்காக, அதிகாரத்துக்காக அடுத்தவர்களோடு இணைந்து கூட்டுறவுடன் தொழிற்படுகின்றார்கள். இத்தகைய கூட்டுறவு அரசியல், பொருளாதார, சமய, வியாபார, கல்விக் குழுக்களில் காணப்படுகின்றது.

**உ. மூன்றாம் நிலைக் குழு (Tertiary coorperation)**

பெரிய குழுக்களிடையே காணப்படும் கூட்டுறவு இதுவாகும். இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட அரசியல் கட்சிகள், சாதிகள், பழங்குடிகள், சமயக்குழுக்கள் போன்றவற்றிடையே இத்தகைய கூட்டுறவு காணப்படுகின்றுது. அரசியல் கட்சிகள் கூட்டிணைந்து மூன்றாவது கட்சியை தோற்கடிக்கும் நோக்கில் தொழிற்படுவதை இதற்கு உதாரணமாகக் கூறலாம்.

**02. போட்டி (Competition)**

கூட்டுறவும் எதிர்ப்பும் (Opposition) எல்லா சமூகத்திலும் காணப்படவே செய்கின்றது. எதிர்ப்பானது போட்டி (Competition) மற்றும் முரண்பாடு (Conflict) எனும் இருவடிவில் இடம்பெறுகின்றது. போட்டி என்பது வன்முறை குறைந்த (Less violent form) எதிர்ப்பின் வடிவமாகும். போட்டியில் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட நபர்கள் அல்லது குழுக்கள் சில இலக்கை அடைந்து கொள்வதற்காக போராடுகின்றார்கள். வளங்கள் போதாமையாக இருக்கும் போது அவற்றைப் பெற்றுக்கொள்வதற்காக மனிதர்கள் போட்டி போடுகின்றார்கள்.

விநியோகம் (Supply), பொருட்கள், அதிகாரம், அன்பு போன்றவற்றில் வரையறைக்குட்பட்ட வெகுமதிகளைப் பெறுவதற்கான போராட்டமே போட்டியாகும் என ஹார்டன் மற்றும் ஹன்ட் குறிப்பிடுகின்றார்கள். அனைத்துப் போட்டியாளர்களையும் விஞ்சி ஒரு வெகுமதியை (Reward) ஏகபோகமாக்க முயலும் செயல்முறைதான் போட்டியாகும் என பொதுவாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

**போட்டியின் வகைகள்**

**அ. அரசியல் போட்டி (Political competition)**

தேசிய அளவிலும் சர்வதேச அளவிலும் காணப்படும் போட்டி இதுவாகும். தேர்தலின் போது ஒவ்வொரு கட்சியும் பெரும்பான்மையைப் பெறுவதற்காக போட்டி போடுவதை இதற்கு உதாரணமாகக் கூறலாம். அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையே காணப்படும் கருத்தியல் போட்டியும் இதற்கு மற்றுமொரு உதாரணமாகும்.

**ஆ. சமூகப் போட்டி (Social competition)**

உயர் அந்தஸ்த்தைப் பெறுவதற்காக திறந்த சமூகங்களில் இடம்பெறும் போட்டி இதுவாகும்.

**இ. பொருளாதாரப் போட்டி (Economic competition)**

பொருட்களின் உற்பத்தி, விநியோகம் மற்றும் நுகர்வில் இப்போட்டியைக் காணலாம். ஆண்கள் சம்பளம், தொழில், பதவியுயர்வு போன்றவற்றுக்காக போட்டியிடுவதும் இதனுள் அடங்கும்.

**ஈ. பண்பாட்டுப் போட்டி (Cultural competition)**

இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட பண்பாடுகள் தமது மேன்மையைக் காட்ட முனையும் போது இத்தகைய போட்டி உருவாகின்றது. பூர்வீகக்குடிகள் மற்றும் படையெடுப்பாளர்களிடையே காணப்படும் போட்டி, ஆரியர் மற்றும் திராவிடரிடையே நிலவும் போட்டி இதற்கு உதாரணங்களாகும்.

**உ. இனரீதியான போட்டி (Racial competition)**

வெள்ளையர்-கருப்பரிடையேயான போட்டி இனரீதியான போட்டிக்கான தெளிவான உதாரணங்களாகும்.

### 03. முரண்பாடு (Conflict)

மானிட உறவுகளில் முரண்பாடு எப்போதும் தலைகாட்டிக் கொண்டே இருக்கும். முரண்பாட்டிலே தனியன்கள் அல்லது குழுக்கள் நாசவேலை, காயப்படுத்தல், அழித்தல் போன்றவற்றை எதிரிக்குச் செய்து இலக்கை அடைந்துகொள்ள அல்லது வெகுமதியைப் பெற்றுக்கொள்ள முயல்கின்றார்கள்.

போட்டியாளரை நீக்குதல் அல்லது பலவீனப்படுத்தல் மூலம் வெகுமதிகளைப் பெற முயலும் முறை இதுவாகும். முரண்பாடு என்பது மற்றவரின் அல்லது பிறரின் விருப்பத்தை எதிர்ப்பதற்கும் அல்லது வற்புறுத்துவதற்கும் வேண்டுமென்றே செய்யப்படும் முயற்சியாகும் என கிறீன் (A.W. Green) கூறுகின்றார்.

**முரண்பாட்டின் வகைகள்**

**அ. வெளிப்படையான மற்றும் இரகசியமான முரண்பாடு (Overt and covert conflict)**

முதலாவது கண்ணுக்குப் புலப்படும். இரண்டாவது புலப்படாது.

**ஆ. தனிப்பட்ட முரண்பாடு மற்றும் கூட்டிணைக்கப்பட்ட முரண்பாடு (Personal and corporate conflict)**

தனிப்பட்ட முரண்பாடு குழுக்களிடையே தோன்றுகின்றது. கணவன்-மனைவியோடு முரண்படுவது இதற்கு உதாரணமாகும். சமூகத்தில் காணப்படும் குழுக்களிடையே கூட்டிணைக்கப்பட்ட முரண்பாடு தோன்றுகின்றது. இன முரண்பாடு இதற்கு உதாரணமாகும்.

**இ. தற்காலிக மற்றும் நிரந்தர முரண்பாடு (Temporary and perpetual conflict)**

சாலையில் இடம்பெறும் முரண்பாடு தற்காலிக முரண்பாடாகும். மறுபுறம் இரண்டு போட்டிக் குழுக்களிடையே தோன்றுவது நிரந்தர முரண்பாடாகும்.

முரண்பாட்டை மகில்வர் மற்றும் பேஜ் பின்வருமாறு பிரிக்கின்றார்கள்.

**அ. நேரடி முரண்பாடு (Direct conflict)**

முரண்பாட்டில் ஈடுபடுவோர் தமது எதிரிகளுக்கு நேரடியாகவே தீங்கிழைக்க முயல்கின்றார்கள். இது குறைவான வன்முறை (Less violent) மற்றும் அதிக வன்முறை (More violent) எனும் இரு அமைப்பில் இடம்பெறக் கூடும். வழக்கு, பிரச்சார நடவடிக்கைகள் குறைவான வன்முறைக்கும் போர், கலவரம், புரட்சி அதிக வன்முறைக்கும் உதாரணங்களாகும்.

**ஆ. மறைமுக முரண்பாடு (Indirect conflict)**

முரண்படும் குழுக்கள் தங்கள் எதிரிகளின் முயற்சிகளை மறைமுகமாக முறியடிப்பதை மறைமுக முரண்பாடு என்பது குறிப்பிடுகின்றது.

முரண்பாட்டை கில்லினும் கில்லனும் ஐந்து வகையாகப் பிரிக்கின்றார்கள்.

**அ. தனிப்பட்ட முரண்பாடு (Personal conflict)** ஒரு பொதுவான பதவிக்கு இரு தனிப்பட்ட நபர்களிடையே ஏற்படும் மோதல் இதுவாகும்.

**ஆ. இன முரண்பாடு (Racial conflict)** வெள்ளையர்களுக்கும் கறுப்பினத்தவர்களுக்கும் இடையே இடம்பெறும் மோதலை இதற்கு உதாரணமாக சுட்டிக்காட்டலாம்.

**இ. அரசியல் முரண்பாடு (Political conflict)** அதிகாரத்தைப் பெறுவதற்காக கட்சிகளிடையே இடம்பெறும் மோதல் இதுவாகும்.

**ஈ. வர்க்க முரண்பாடு (Class conflict)** முதலாளி-தொழிலாளி வர்க்கங்களிடையே தோன்றும் முரண்பாடு இதுவாகும்.

**உ. சர்வதேச முரண்பாடு (International conflict)** நாடுகளிடையே தோன்றும் பிரச்சினை இதுவாகும். காஷ்மீர் பிரச்சினை தொடர்பாக இந்தியா மற்றும் பாக்கிஸ்தான் நாடுகளுக்கடையிலான முரண்பாடு இதற்கு உதாரணமாகும்.

ஜோர்ஜ் சிம்மல் முரண்பாட்டை பின்வருமாறு பிரிக்கின்றார்கள்.

**அ. போர் (War)** முரண்பாட்டை தீர்ப்பதற்கான ஏனைய வாயில்கள் பயனளிக்காத போது போர் இடம்பெறுகின்றது.

**ஆ. பகை (Fed**) இது உள் குழு மோதல் (Inter-group conflict) எனவும் அழைக்கப்படுகின்றது. சில சந்தர்ப்பங்களில் இது கோஷ்டி மோதல் (Factional strife) எனவும் அழைக்கப்படுகின்றது. இது சமூக உறுப்பினர்களிடையே இடம்பெறுகின்றது.

**இ. வழக்கு (Legislation)** உரிமையைப் பெறுவதற்கு அல்லது பாதுகாப்பதற்கு தனிநபர்கள் அல்லது குழுக்கள் தேடும் நீதிப் போராட்டம் (Judicial struggle) இதுவாகும்.

**ஈ. ஆட்சார்பற்ற கருத்தியல்களுக்கான முரண்பாடு (Conflict of impersonal ideals)** தனிநபர்கள் தங்களுக்காகவன்றி தமது கொள்கைக்காகப் போராடுவதை இது குறிக்கின்றது. கம்யூனிசமும் முதலாளித்துவமும் தத்தமது கொள்கைகளே உலகை உன்னத நிலைக்கு இட்டுச் செல்லும் என எண்ணி முரண்படுவதை இதற்கு உதாரணமாகக் கூறலாம்.

**04. இணக்கம் (Accommodation)**

இணக்கம் என்பது புரிதல் (Understanding), சரிசெய்தல் (Adjustment), உடன்பாடு (Agreement) எனும் பொருளைக் கொடுக்கின்றது. வேறுபாடுகள் இருந்தபோதும் இணைந்துபோகும் செயல்முறை இதுவாகும்.

தொழிலாளர்கள் சில கோரிக்கைகளை முன்வைத்து வேலை நிறுத்தலில் ஈடுபடலாம். ஆனால் நிர்வாகத்துடன் சில பேச்சுவார்த்தைகளை நடத்தி மீண்டும் வேலைக்கு வருவார்கள். கணவனும் மனைவியும் முரண்படுவார்கள். பின் மீண்டும் இணைந்து விடுவார்கள். இதுவே சமூகவியலாளர்களால் இணக்கம் என அழைக்கப்படுகின்றது.

விரோதமான தனிநபர்கள் அல்லது குழுக்கள் சரிசெய்து கொள்வதையே (Adjustment) இணக்கம் என்பது விளக்குவதாக ஒக்போன் மற்றும் நிம்கொப் கூறுகின்றார்கள்.

போட்டியிடும் மற்றும் முரண்படும் தனிநபர்களும் குழுக்களும் போட்டி, மீறுதல் மற்றும் முரண்பாட்டில் ஏற்படும் சிரமங்களைச் சமாளிக்க ஒருவருக்கொருவர் தங்கள் உறவை சரிசெய்யும் செயல்முறை இணக்கமாகும் என கில்லின் மற்றும் கில்லன் கூறுகின்றார்கள்.

**இணக்கத்தின் வகைகள்**

கில்லின் மற்றும் கில்லின் இணக்கத்தின் ஏழு வடிவங்களை சுட்டிக் காட்டுகின்றார்கள்.

**அ. வற்புறுத்தலுக்கு இணங்குதல் (Yielding to coercion)**

நிபந்தனைகளை ஏற்கும்படி பலவீனமான குழு பலாத்காரப்படுத்தப்படுவது அல்லது அச்சுறுத்தப்படுவது இதற்கு உதாரணமாகும்.

**ஆ. சமரசம் (Compromise)**

ஏறத்தாள சமமான வலுவைக் கொண்ட முரண்பட்ட குழுக்களின் பிணக்குகள் சமரசம் மூலம் முடிவுக்கு வருகின்றன.

**இ. மூன்றாம் தரப்பின் பங்கு**

**i. நடுவர் (Arbitration)**

சம பலத்திலுள்ள முரண்படும் இரு குழுக்களும் தமது நிலைப்பாட்டில் நிலையாக இருக்கும் போது மூன்றாம் தரப்பு தேவைப்படுகின்றது.

**ii. மத்தியஸ்தம் (Mediation)**

முரண்படும் குழுக்களை சமாதானத்தை நோக்கி வழிப்படுத்தல் மத்தியஸ்தமாகும். மத்தியஸ்தத்தின் வேலை ஆலோசனை வழங்குவது மட்டுமே.

**iii. உடன்பாடு செய்தல் (Conciliation)**

முரண்பாட்டை முடிவுக்கு கொண்டுவருவதற்கான ஆலோசனை இங்கு சொல்லப்படுகின்றது.

**ஈ. சகிப்புத்தன்மை (Tolerance)**

முரண்படும் குழுக்கள் அனுதாபத்துடன் ஒருவரை ஒருவர் பொறுத்துக்கொள்ளும் நிலை இதுவாகும். முரண்பாடுகள் தீர்க்கப்படுவதை விட இங்கு தவிர்ந்து கொள்ளப்படுகின்றன. ஒவ்வொரு குழுவும் அடுத்தவரை சகித்துக் கொண்டு வாழ முயல்கின்றது.

**உ. மாற்றம் (Conversion)**

ஒருவர் தனது நம்பிக்கைகள், விசுவாசங்கள் போன்றவற்றை கைவிட்டு பிறரை ஏற்றுக்கொள்வதை இது குறிக்கின்றது.

**ஊ. உணர்ச்சி மடைமாற்றம் (Sublimation)**

ஆக்கிரமிப்பு நடத்தைக்குப் பதிலாக ஆக்கிரமிப்பற்ற நடத்தையை வெளிப்படுத்தல் இதுவாகும். முஹம்மது நபி, ஏசுநாதர் போன்ற இறைதூதர்கள் ஆக்கிரமிப்புடன் நடந்து கொண்டோரை அன்பால் அரவணைத்தமை இதற்கு உதாரணங்களாகும்.

**எ. பகுத்தறிவுமயப்படல் (Rationalization)**

இது ஒரு வகை போலியான விளக்கங்கள் மற்றும் சாட்டுகள் சொல்வதாகும். பரீட்சைக்காக நன்றாக தயார்படுத்தாத மாணவன் வேறு வேறு காரணங்களை தனது தோல்விக்கு முன்வைப்பது இதற்கு உதாரணமாகும்.

**05. ஓரினமாதல் (Assimilation)**

இதுவும் ஒருவகை இடைவினையாகும். இணக்கத்தைப் போல் இதுவும் ஒருவகை சரிசெய்தலாகும். எனினும் இது ஒப்பீட்டளவில் நிரந்தரமானது. ஓரினமாதல் பண்பாட்டை மற்றொருவரால் உள்வாங்கல் மற்றும் இணைத்தல் ஆகியவற்றுடன் தொடர்புடையது. இணக்கத்தில் (Accomodation) இடம்பெறுவதை விட ஓரினமாதலின் போது அடிப்படையான மாற்றங்கள் இடம்பெறுகின்றன.

ஓரினமாதல் செயன்முறை இடம்பெறும்போது இரண்டு தனித்தனிக் குழுக்களும் சமரசம் செய்து கொள்வதில்லை. அவர்கள் கிட்டத்தட்ட பிரித்தறிய முடியாதபடி ஒன்றாகிவிடுகின்றார்கள்.

யங் மற்றும் மெக் (Young and Mack) ஏற்கனவே தனித்துவமாக இருந்த இரு குழுக்கள் ஒன்றாக இணைவதே ஓரினமாதல் எனக் கூறுகின்றார்கள்.

தனிநபர்களும் குழுக்களும் மற்றொரு குழுவின் பண்பாட்டை எடுத்துக்கொள்ளும் செயன்முறையே ஓரினமாதலாகும் என சாமுவேல் கோனிக் (Samuel Koenig) கூறுகின்றர்.

ஆதிக்க பண்பாட்டினை ஏனைய இனக்குழுக்கள் உள்வாங்கிக் கொள்ளும் செயற்பாட்டினையே ஓரினமாதல் குறிக்கின்றது. சிறுபாண்மை இனக்குழுக்கள் ஓரினமாதலை தாமாக விரும்பி ஏற்றுக்கொள்வதும் உண்டு; நிர்ப்பந்திக்கப்படுவதும் உண்டு. பூர்வீக அமெரிக்கர்கள் வெள்ளையர்களின் வழிகளை (White ways) கற்பிப்பதற்காக தங்குமிட பாடசாலைகளுக்கு சமூகமளிக்கும்படி

கட்டாயப்படுத்தப்பட்டமை நிர்ப்பந்திக்கப்பட்ட ஓரினமாதலாகும். அதேபோல் அமெரிக்காவுக்கு இடம்பெயர்ந்தவர்கள் தமது சொந்த மொழியைக் கைவிட்டுவிட்டு ஆங்கிலம் கற்க முனைகின்றமை விரும்பி ஏற்கும் ஓரினமாதலாகும்.

**சுருக்கம்**

- ✓ சமூக உறவுகள்தான் சமூக இடைவினை என்றும் சமூக செயன்முறை என்றும் அர்த்தம் கொள்ளப்படுகின்றது.
- ✓ கூட்டுறவு, போட்டி, முரண்பாடு, இணக்கம், ஓரினமாதல் போன்றவை சமூக இடைவினையின் வடிவங்களாகும்.
- ✓ கூட்டுறவு, இணக்கம், ஓரினமாதல் ஆகியவை ஒருங்கிணைக்கும் சமூக செயன்முறையாக (Integrative social processes) காணப்படுகின்றது.
- ✓ போட்டியும் முரண்பாடும் சிதைவடையச் செய்யும் சமூக செயன்முறை (Disintegration social processes) என அழைக்கப்படுகின்றது.

**பயிற்சி வினாக்கள்**

01. சமூக இடைவினை என்றால் என்னவென்று விளக்கி சமூக இடைவினையின் வடிவங்களை சுருக்கமாக விளக்குக.
02. கூட்டுறவு, இணக்கம், ஓரினமாதல் ஏன் ஒருங்கிணைக்கும் சமூக செயன்முறை என அழைக்கப்படுகின்றது.
03. போட்டியும் முரண்பாடும் சமூகத்தில் எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்துகின்றன என ஆராய்க.

**திறவுச்சொற்கள்** : சமூக செயன்முறை, தொடர்பு, தொடர்பாடல், போர், சமரசம்

**உசாத்துணை நூல்கள்**


1. Haralambos, M., & Heald R.M. (2004). *Sociology: Themes and perspectives.* London: Harper Collins Publishers Limited.
2. Landis Paul, H. (1990). *Sociology: An introduction*. Massachusetts: Ginn and Company a Xerox Education Company.
3. Rao Shankar. (2002). *Sociology*: *Primary principles.* New Delhi: S. Chand and Company Ltd.

# அத்தியாயம் 12

# சமூகம், சமுதாயம்

**உள்ளடக்கம்**

12.1 சமூகம் (Society)

12.2 சமுதாயம் (Community)

12.3 சமூகம் மற்றும் சமுதாயம்: வேறுபாடுகள்

**அத்தியாயச் சுருக்கம்**

சமூகவியல் தொடர்பான அறிவை வளர்த்துக்கொள்ளும் ஒருவர் சமூகம் மற்றும் சமதாயம் தொடர்பான அறிவையும் விருத்தி செய்துகொள்ள வேண்டும். சமூகம் என்பது அனேக உறவுகளைக் கொண்ட ஒரு வலைப்பின்னல். ஆனால் சமுதாயம் என்பது 'நாம்' எனும் உணர்வுடன் ஒரு குறிப்பிட்ட இடத்தில் வாழ்பவர்களைக் குறிக்கின்றது. சமூகம் மற்றும் சமுதாயம் என்பவற்றை தெளிவுபடுத்துவதாக இவ்வத்தியாயம் அமையப்பெற்றுள்ளது.

**அத்தியாயத்தின் நோக்கம்**

சமூகவியல் கற்கையில் காணப்படும் சமூகம் மற்றும் சமுதாயம் குறித்த எண்ணக்கருக்களை மாணவர்களுக்கு தெளிவுபடுத்துவதே இக்கற்கையின் நோக்கமாகும்.

**கற்றல் பெறுபேறுகள்**

இவ்வத்தியாயத்தினை கற்பதன் மூலம் மாணவர்கள்,

- ✓ சமூகம் மற்றும் சமுதாயம் குறித்த எண்ணக்கருக்களை புரிந்துகொள்வார்கள்.

- ✓ சமூகம் மற்றும் சமுதாயத்தின் பண்புகளை விளங்கிக் கொள்வார்கள்.
- ✓ சமூகம் மற்றும் சமுதாயங்களுக்கிடையிலான வேறுபாடுகளை அறிந்து கொள்வார்கள்.

## 12.1 சமூகம் (Society)

சமூகவியல் புலத்திலே சமூகம் எனும் சொல் மிகவும் அடிப்படையான ஒன்றாகக் கருதப்படுகின்றது. சமூகவியல் அகராதியில் இச்சொல் கருத்து வரையறுக்கப்படாத பொதுவானதொன்றாகவே இன்றும் காணப்படுகின்றது. விவசாய சமூகம் (The agricultural society), சினேக சமூகம் (The friendly society) என்று கூறப்படும் இடங்களில் சமூகம் என்னும் சொல் சங்கம் (Association) என்னும் கருத்திலேயே பாவிக்கப்படுகின்றது. அதேபோல் தோழமை (Company) சகவாசம் (Fellowship) என்னும் கருத்திலும் இச்சொல் பாவிக்கப்படுகின்றது.

சமூக உறவுகளின் வலைப்பின்னல் என சமூகத்தை மெகில்வர் (Maclver) வரையறுக்கின்றார். சமுதாயத்துடன் இருக்கும் ஒழுங்குபடுத்தப்பட்ட அங்கங்கள் மற்றும் நிறுவனங்களின் தொகுதியே சமூகமாகும் என கோல் (G.D.M. Cole) குறிப்பிடுகின்றார்.

**சமூகத்தின் பண்புகள்**

சமூகமானது பின்வரும் பண்புகளைக் கொண்டதாகக் காணப்படுகின்றது.

- சமூகமானது பல மக்களைத் தன்னகத்தே கொண்டிருக்கும்.
- பரஸ்பர இடைவினையும், பரஸ்பர விழிப்புணர்வும் அங்கு காணப்படும்.
- இலக்கு, தேவை, வேலை போன்ற விடயங்களில் ஒத்ததன்மை காணப்படும்.
- ஒத்ததன்மையைப்போலவே வேறுபாடுகளும் அங்கு காணப்படும்.

- சமூக அங்கத்தவர்களிடையே கூட்டுறவும், தொழிற்பிரிப்பும் காணப்படும். ஆடையை உற்பத்தி செய்தல் என்பது பொது இலக்காக இருந்தால் ஒவ்வொரு குழுவும் ஒரு பிரிவை எடுத்துக் கொண்டு செயற்படுவர். விவசாயி பருத்தியை உற்பத்தி செய்தால் தையல்காரன் அதை ஆடையாகத் தைத்தால் வியாபாரி அதனை விற்பனை செய்வார். இங்கு கூட்டுறவு செவ்வனே தொழிற்படுகின்றது.
- பரஸ்பர தங்கியிருப்பு இங்கு காணப்படும். குடும்பத்தை எடுத்துக்கொண்டால் அங்கு ஆணானவன் பெண்ணிலும், பெண்ணானவள் ஆணிலும் பரஸ்பரம் தங்கியிருக்கும் நிலை காணப்படும்.
- சமூகத்தில் மாற்றம் எப்போதும் தோன்றிக் கொண்டியிருப்பதால் சமூகம் இயக்கம் (Dynamic) கொண்டதாகக் காணப்படும்.
- தனது அங்கத்தவர்களை ஒழுங்குப்படுத்துவதற்கான சமூகக் கட்டுப்பாட்டுச் சாதனங்களை சமூகம் கொண்டிருக்கும்.
- பொதுவாக எல்லா சமூகங்களிலும் குடும்பக்குழு, கல்விக்குழுக்கள், பொருளாதாரக் குழுக்கள், அரசியல் குழுக்கள், சமயக் குழுக்கள், பொழுதுபோக்குக் குழுக்கள் எனும் ஆறுவகையான குழுக்களைக் கொண்டிருக்கும். இக்குழுக்களின் இயக்கத்தால் சமூகம் ஒரு அமைப்பாக இயங்குகின்றது (வாழ்வியற் களஞ்சியம் தொகுதி-08, 1991).
- எந்த சமூகமும் பண்பாடு இல்லாமல் வாழாது. ஒவ்வொரு சமூகமும் தனித்துவமான பண்புகளைக் கொண்டிருக்கும்.
- சமூக அங்கத்தவர்கள் எப்போதும் சேர்ந்து வாழவே விரும்புவர். தனித்து, பிரிந்து வாழ விரும்புவதில்லை. இது மனிதனிடம் இருக்கும் இயல்பான பண்பாகும்.

## 12.2 சமுதாயம் (Community)

சமுதாயம் என்னும் சொல் பொதுவாக பயன்படுத்தப்படும் ஒரு சொல்லாகும். இன சமுதாயம் (Racial Community), சமயச் சமுதாயம் (Religious Community) போன்ற சொல்லாடல்கள் மக்களின் நாளாந்த வாழ்வில் பயன்படுத்தப்படுகின்றன. சங்கம் (Association), குழு (Group) மற்றும் முழு மானிட சமூகம் எனும் கருத்திலும் சமுதாயம் எனும் சொல் பயன்படுத்தப்படுகின்றது.

குறிப்பிட்டளவு 'நாம்' எனும் உணர்வுடன் குறிப்பிட்ட எல்லைக்குள் வாழும் சமூகக் குழுவே சமுதாயமாகும் என போகாடஸ் (Bogardus) குறிப்பிடுகின்றார். ஒரு குறிப்பிட்ட இடத்தில் வசிக்கும் ஒரு குழு அல்லது பல குழுக்களை சமுதாயம் என அழைக்கலாம் என ஒக்பேன் மற்றும் நிம்கொப் (Ogburn and Nimkoff) ஆகியோர் குறிப்பிடுகின்றனர்.

ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பில் ஒரு பொதுவாழ்க்கை முறையைப் பின்பற்றி கூட்டாக வாழும் மக்கள் தொகுதி சமுதாயம் எனப்படும். இது மக்கள் ஒன்றுபட்ட எண்ணத்துடன் ஒரு இடத்தில் ஒன்றுகூடி வாழும் அமைப்பைக் குறிக்கின்றது.

ஒரு சமுதாயம் (i) இடம் (Locality), (ii) சமுதாய உணர்வு (Community sentiment) என்னும் இரு அடிப்படைகளைக் கொண்டிருக்க வேண்டும் என 'மெகில்வர்' குறிப்பிடுகின்றார்.

### இடம்

சமுதாயம் என்பது ஒரு ஆள்புல எல்லைக் குழுவாகும். சமுதாயத்தின் பௌதீக அடிப்படையே இடத்தில்தான் தங்கியிருக்கின்றது. வரையறுக்கப்பட்ட இடத்தில் குடியமர்கின்ற பொழுதுதான் ஒரு குழு சமுதாயமாக வடிவமாற்றம் பெறுகின்றது. மக்கள் ஒன்றாக ஒரு இடத்தில் குழுமி வாழ்கின்றபோதுதான் சமூகத் தொடர்பு வளர்கின்றது. பரஸ்பர பாதுகாப்பு கிடைக்கின்றது.

வளமான நிலம், காடு, கனிப்பொருள், மீன்வளம், நீர்நிலைகள், காலநிலை போன்றவையும் இடம் என்னும் பதத்தினுள் உள்ளடக்கப்படுகின்றன. இந்த பௌதீகக் காரணிகள் மக்களின் மனோநிலைகளையும், வாழ்வொழுங்கையும் பாதிக்கின்றன. எனினும் இன்றைய நவீன சமூகத்தில் போக்குவரத்து விருத்தி மற்றும் தொடர்பாடல் முன்னேற்றம் போன்ற காரணங்களால் நிலம் என்பது சமுதாயத்தின் அடிப்படையாகக் கொள்ளத் தேவையில்லை என்னும் கருத்தும் நிலவுகின்றது.

**சமுதாய உணர்வு**

ஒரே பகுதியில் வாழும் நாம் அனைவரும் ஒன்று என்னும் 'நாம் உணர்வு' (The we feeling), இந்தச் சமுதாயம் நமக்குரியது என்னும் 'பங்கு உணர்வு' (Role feeling), நமது சமுதாயத்தில் தங்கியே நாம் வாழ வேண்டும் என்னும் 'சார்பு உணர்வு' (Dependancy feeling) ஆகிய மூன்று சமுதாய உணர்வுகள் ஒரு சமுதாயத்திற்கு இருக்க வேண்டும் என மெகில்வர் குறிப்பிடுகின்றார் (வாழ்வியல் களஞ்சியம் தொகுதி-08, 1991).

இடம், சமுதாய உணர்வு போன்றவற்றுடன் நிலைத்ததன்மை (Sability)யும், சமுதாயத்தின் மற்றுமொரு பண்பாக கொள்ளப்படுகின்றது. ஒரு நிலையான இடத்தில் தற்காலிகமாக இல்லாது சமுதாயம் நிரந்தரமாக (Permenant) இருக்க வேண்டும். அதேபோல் சமுதாயம் இயற்கையாய் (Naturalness) அமைந்ததாக இருக்க வேண்டும் என்பது சமுதாயத்தின் மற்றுமொரு பண்பாகும்.

சமுதாயம் அளவில் (Size of the community) சிறிதாகவோ, பெரிதாகவோ இருக்கலாம். பெரிய சமுதாயத்தினுள் சிறிய சமுதாயங்கள் ஒன்று சேர்கின்றன. கிராமம், நகரம் போன்ற சிறிய சமுதாயங்கள் மாவட்டம் என்னும் பெரிய சமுதாயத்தினுள் உள்வாங்கப்படுகின்றன. தனது அங்கத்தவர்களின் உறவை ஒழுங்குபடுத்துவதற்காக (Regulation of relations) சமுதாயமானது

மரபுகள், வழக்காறுகள், ஒழுங்குகள், நடைமுறைகள் போன்வற்றைக் கொண்டிருக்கின்றன.

| **சமூகம்** | **சமுதாயம்** |
|---|---|
| சமூக உறவுகளையும் தன்னகத்தே உள்ளடக்கிய ஒரு வலைப்பின்னல் | 'நாம் என்னும் உணர்வுடன்' ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் வாழும் தனிநபர்களைக் கொண்ட குழு |
| வரையறுக்கப்பட்ட புவியியல் எல்லை அவசியமில்லை | வரையறுக்கப்பட்ட நிலம் அல்லது புவியியல் எல்லை அவசியம் |
| கண்ணுக்குப் புலனாகாது. (Abstract) | கண்ணுக்குப் புலனாகக் கூடியது. (Concrete) |
| 'சமுதாய உணர்வு', 'நாம் என்னும் உணர்வு' சமூகத்தில் காணப்படலாம். அல்லாமலும் போகலாம். | 'சமுதாய உணர்வு' அவசியம். |
| இது விரிந்தது. ஒன்றுக்கு மேற்பட்ட சமுதாயம் ஒரு சமூகத்தில் இருக்கலாம். | சமூகத்தைவிட சமுதாயம் சிறியது. |
| சமூகத்தினுள் ஒற்றுமையும் இருக்கலாம். வேற்றுமையும் இருக்கலாம். பொதுவிருப்பும் இருக்கலாம். தனிப்பட்ட விருப்பும் இருக்கலாம். | வேற்றுமையை விட ஒற்றுமை மிக முக்கியமானது. |

**அத்தியாயச் சுருக்கம்**

- ✓ உறவுகளின் மொத்த வலைப்பின்னலே சமூகமாகும். 'நாம்' எனும் உணர்வுடன் குறிப்பிட்ட எல்லைப்பரப்பில் வாழுபவர்களே சமுதாயமாகும்.
- ✓ சமூகமும் சமுதாயமும் பல்வேறு அடிப்படைகளில் வேறுபடுகின்றன.

**பயிற்சி வினாக்கள்**

01. சமூகம் மற்றும் சமுதாயம் ஆகிய எண்ணக்கருக்களை விளக்குக.
02. சமூகமும் சமுதாயமும் வேறுபடும் விதங்களை ஒரு அட்டவணை மூலம் விளக்கிக் காட்டுக.

**திறவுச் சொற்கள்**

சமூகம், சமுதாயம், 'நாம் உணர்வு', 'சமுதாய உணர்வு', இடம்

**உசாத்துணை நூல்கள்**


1. அய்யூப், எஸ்.எம். (2013). *சமூகவியல் அடிப்படை எண்ணக்கருக்கள்*. ஒலுவில்: சமூக விஞ்ஞானங்கள் துறை, இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.
2. தமிழ் பல்கலைக்கழகம். (1991). *வாழ்வியற் களஞ்சியம் தொகுதி-08*. தஞ்சாவூர்: தமிழ் பல்கலைக்கழகம்.
3. Giddens Anthony. (2005). *Sociology*. Cambridge: Polity Press.
4. Haralambos, M., & Heald R.M. (2004). *Sociology: Themes and perspectives.* London: Harper Collins Publishers Limited.
5. Landis Paul, H. (1990). *Sociology: An introduction*. Massachusetts: Ginn and Company a Xerox Education Company.
6. Rao Shankar. (2002). *Sociology*: *Primary principles.* New Delhi: S. Chand and Company Ltd.

# அத்தியாயம் 13

# சமூக அமைப்பு, சமூக செயல்

**உள்ளடக்கம்**

13.1 சமூக அமைப்பு (Social system)
13.2 சமூக அமைப்பின் பொறிமுறை
13.3 சமூக செயல் (Social action)
13.4 சமூக செயலின் வகைகள்

**அத்தியாயச் சுருக்கம்**

அமைப்பு (System) என்பது ஒழுங்கான உறவுடன் ஒன்றாக இயங்கும் ஒரு தொகுதி விடயங்களை அல்லது பகுதிகளைக் குறிக்கின்றது. சமூக அமைப்பு என்பது அடிப்படையில் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட தனியன்கள் நேரடியாகவோ, மறைமுகமாகவோ வரையறுக்கப்பட்ட இடத்தில் இடைவினைச் செயற்பாடுகளில் ஈடுபடுவதைக் குறிக்கின்றது. சமூக அமைப்பானது சமூகமயமாக்கல் பொறிமுறை, சமூகக் கட்டுப்பாட்டுப் பொறிமுறை எனும் இருவகையில் தொழிற்படுகின்றது. மேலும் இந்த அத்தியாயம் சமூக செயல் தொடர்பாகவும் விளக்குகிறது. ஓர் இலக்குடன் கூடிய மனிதனின் நடத்தையே சமூக செயலாகும். சமூக செயலின் அடிப்படைக் கூறுகள் மற்றும் சமூக செயலின் வகைகள் தொடர்பாகவும் இவ்வத்தியாயம் பேசுகின்றது.

**அத்தியாயத்தின் நோக்கம்**

சமூக அமைப்பை மாணவர்களுக்கு தெளிவுபடுத்துவதும் சமூக செயலையும் அதன் வகைகளை அவர்களுக்கு அடையாளங்காட்டுவதுமே இவ்வத்தியாயத்தின் நோக்கமாகும்.

**கற்றல் பெறுபேறுகள்**

இவ்வத்தியாயத்தை கற்பதன்மூலம் மாணவர்கள்,

- ✓ சமூக அமைப்பு மற்றும் சமூக செயல் தொடர்பான எண்ணக்கருக்களை விளங்கிக்கொள்வார்கள்.
- ✓ சமூகவியல் கற்கையில் சமூக செயல் மற்றும் சமூக அமைப்பு தொடர்பான கற்கையின் முக்கியத்துவத்தினை விளங்கிக்கொள்வார்கள்.
- ✓ சமூக அமைப்பு முறையின் பொறிமுறைகளையும் அவற்றின் செயற்பாடுகளையும் தெளிவாக விளங்கிக்கொள்வார்கள்.
- ✓ சமூக செயலியின் வகைகளை விளங்கிக்கொள்வார்கள்.

## 13.1 சமூக அமைப்பு ( Social System)

சமூகவியல் புலத்தில் சமூக அமைப்பு இன்று பரவலாக பாவிக்கப்படும் சொல்லாடலாக காணப்படுகின்றது. இதில் அமைப்பு (System) என்பது ஒழுங்கான உறவுடன் ஒன்றாக இயங்கும் ஒரு தொகுதி விடயங்களை அல்லது பகுதிகளைக் குறிக்கின்றது.

மானிட உடலமைப்பானது, சமூக அமைப்பை விளக்க சிறந்த உதாரணமாகும். உணவைச் சாப்பிட, சுவாசத்தை உள்ளே, வெளியே கொண்டு செல்ல பல உறுப்புக்கள் உடலில் காணப்படுகின்றன. மேலும் சமிபாட்டுத் தொகுதி, நரம்புத் தொகுதி எனப் பல உறுப்புக்கள் உடலிலே தொழிற்படுகின்றன. இந்த உறுப்புக்கள் சுயமாக இயங்குகின்றன. பரஸ்பரம் ஒன்றிலொன்று தங்கியிருக்கின்றன. எல்லா உறுப்புக்களும் மொத்தமாக சேர்த்து உடலை முறையாக இயக்குகின்றன. இந்த உறவுகளே அமைப்பு என அழைக்கப்படுகின்றது. இத்தகைய மானிட உயிரியின் உறுப்புக்களின் பரஸ்பர தங்கியிருப்பு, உறவு மற்றும் தொழிற்பாடு குறித்த விஞ்ஞானிகளின் ஆராய்ச்சிகளே சமூகவியலாளர்களையும், சமூக அமைப்பு குறித்து சிந்திக்க தூண்டியது.

சமூகம் அதன் உறுப்புக்களுடன் (Parts) எவ்வாறு ஒழுங்கான முறையில் தொழிற்படுகின்றது என்பதை சமூக அமைப்பு விளக்குகின்றது. வரையறுக்கப்பட்ட சூழலுக்குள் இரண்டு இல்லது இரண்டுக்கு மேற்பட்ட சமூக செயற்பாட்டாளர்கள் (Social actors) அதிகளவு அல்லது குறைந்தளவு நிலையான இடைவினைச் செயற்பாட்டினுள் ஈடுபடுவதை சமூக அமைப்பு என்னும் பதம் குறிப்பதாக சமூகவியலாளர்கள் குறிப்பிடுகின்றனர். சமூக அமைப்பு என்பது அடிப்படையில் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட தனியன்களைக் குறிக்கின்றது. இவர்கள் நேரடியாகவே, மறைமுகமாகவோ வரையறுக்கப்பட்ட இடத்தில் இடைவினைச் செயற்பாடுகளில் ஈடுபடுவார்கள் என டங்கன் மிட்செல் (Duncan Mitchell) குறிப்பிடுகின்றார்.

சமூக அமைப்பு சமூகத் துண்டுகள் ஒன்றாக இணைந்து ஒரு முழுச் சமூகமாக உள்ளதையும், சமூக இடைவினையின் அனைத்து வடிவங்களுக்கும் இடையிலான ஒற்றுமைகளையும் காண்பிக்கின்றது (வாழ்வியற் களஞ்சியம் தொகுதி-08, 1991).

மொன்டஸ்க் (Montesquieu) என்னும் அறிஞரே 18 ஆம் நூற்றாண்டில் முதன் முதலாக சமூக அமைப்பு குறித்து பேசியவராக கொள்ளப்படுகின்றார். சட்டமானது (Law) எவ்வாறு அரசியல் யாப்பு, பொருளியல் வாழ்வு, சமயம், காலநிலை, சனத்தொகையின பருமன், பண்பாடு போன்றவற்றுடன் பரஸ்பரம் தொடர்பு கொண்டுள்ளது என அவர் விளக்கிக் காட்டினார்.

19ஆம் நூற்றாண்டில் கொம்டே, கார்ல்மார்கஸ், ஹேர்பர்ட் ஸ்பென்சர், எமில் டேர்க்ஹைம் போன்றோர் சமூக அமைப்பு குறித்தும், சமூக கூறுகளிடையே (Social units) காணப்படும் உறவு குறித்தும் தத்தமது பார்வைகளை வெளிப்படுத்தினார்கள்.

சார்ள்ஸ் டார்வினுடைய கருத்துக்களால் கவரப்பட்டு உயிரியல் ஒப்புவமை (Organic analogy) என்னும் சமூக அமைப்பு தொடர்பான

கோட்பாட்டை ஹேர்பட் ஸ்பென்சர் முன்வைத்தார். தல்கொட் பார்சன் சமூக அமைப்பு முறைமைக்கு விஞ்ஞான மற்றும் அறிவு பூர்வமான விளக்கத்தை வழங்கினார்.

### 13.2 சமூக அமைப்பின் பொறிமுறை (Mechanism of social system)

சில பொழுதுகளில் தனியன்களின் செயற்பாடுகள் சமூக அமைப்பைப் பாதிக்கும் போது மீண்டும் சமநிலையைப் பேண ஒரு பொறிமுறையின் அவசியம் உணரப்படும். இந்தப் பொறிமுறை இரு வகைப்படுகின்றது.

அ. சமூகமயமாக்கல் பொறிமுறை (Mechanism of socialization)

சமூகமயமாக்கல் மூலம் ஒரு தனியன் சமூக நடத்தையின் வடிவங்களைக் கற்றுக் கொள்கிறான். இது சிறு வயதில் தொடங்கி வாழ்வு முழுவதும் தொடர்கின்றது. அதனால் சமூக அமைப்பு பேணப்படுகின்றது.

ஆ. சமூகக் கட்டுப்பாட்டுப் பொறிமுறை (Mechanism of social control)

சமூக நடத்தையின் ஏற்கப்பட்ட விடயங்களை ஒரு தனியன் ஏற்கும்படி செய்வதற்கு சமூகத்திற்கு கைகொடுப்பது சமூகக் கட்டுப்பாடுதான். இதன் மூலமும் சமூக அமைப்பு பேணப்படுகின்றது.

### 13.3 சமூக செயல் (Social action)

செயல் (Action) மற்றும் நடத்தை (Behaviour) ஆகிய இரு எண்ணக்கருக்களில் உளவியலாளர்கள் தமது கவனத்தை குவிக்கிறார்கள். சமூக செயல் (Social action) எனும் சொல் மீது சமூக உளவியலாளர்கள் அதிகம் கவனமெடுக்கின்றார்கள். சமூக செயல் குறித்து மெக்ஸ்வெபர் அதிகம் பேசியுள்ளார். தல்கொட் பார்சன் இது குறித்து விலாவாரியாக ஆய்வு செய்துள்ளார். சமூக செயல் தொடர்பாக பார்சனின் விருத்தியாக்கப்பட்ட பார்வை குறித்து கிங்ஸ்லி டேவிட்ஸ் (Kingsly Davis) இன் விளக்கம் கருத்தூன்றி கவனிக்கத்தக்கது.

ஓர் இலக்குடன் கூடிய மனிதனின் நடத்தையே சமூக செயல் ஆகும். இது மக்களின் சிந்தனை நிலை, முயற்சிச் செயற்பாங்கு ஆகியவற்றுக்கு உட்பட்டு நடக்கின்றது. பாடுதல், சிரித்தல், அழுதல், உண்ணுதல், படித்தல், விளையாடுதல், உரையாடுதல் போன்ற மனிதனின் அனைத்து செயற்பாடுகளும் செயல்கள் (Action) எனப்படும். ஆனால் மனிதன் சமூகத்தில் ஓர் உறுப்பினராக வாழ அவனுடைய செயல்கள் அனைத்தும் சமூக சூழ்நிலை சார்ந்து இருக்க வேண்டும். எனவே ஒரு சமூக சூழ்நிலையில் மனிதன் செய்கின்ற செயல்கள் அனைத்தும் சமூக செல்கள் (Social action) எனப்படும்.

ஒரு மனிதன் பிறரிடம் பொதுவான குறியீடுகளின் (Symbols) மூலம் கருத்துடன் சூழ்நிலைக்குக் தக்கபடி செய்கின்ற செயல்கள் சமூக செயல்களாகின்றன என அண்டேர்சன் (Anderson) பார்க்கர் (Parker) ஆகிய அறிஞர்கள் கூறுகின்றார்கள்.

தல்கொட் பார்சன் சமூக செயலின் நான்கு அடிப்படைக் கூறுகள் பற்றி விளக்குகிறார்.

**அ. செயலாளி (Actor)**

செயல்களின் முகவராக செயலைச் செய்பவரே இருக்கிறார். செயலைச் செய்பவரின் உடலை விட (Body) அவரின் தன்முனைப்பு (Ego) சுயம் (Self) போன்ற அகப் பண்புகளே அதிகம் பார்க்கப்படுகின்றன. ஒரு மனிதனின் செயலை அறிய அவனது நடத்தையின் வெளிப்பண்பினை மட்டும் பாராது உள்மன உணர்வினையும் கவனத்திற் கொள்ள வேண்டும்.

**ஆ. இலக்கு (End)**

செயலைத் தூண்டும் ஊக்கியாக இலக்குகளே பின்னணியில் அமைகின்றன. இலக்கு அடையப்படும் பொழுது செயல் முடிவிற்கு

வருகின்றது. சில நேரம் புதிய இலக்கும், புதிய செயலும் தோற்றம் பெறலாம்.

**இ. சூழ்நிலைகள் (Conditions)**

மனிதனின் வெற்றியையும், தோல்வியையும் சூழ்நிலைகள் தீர்மானிக்கின்றன. வெளிரீதியான (External), உள்ரீதியான (Internal) எனும் இருவகை சூழ்நிலைகள் காணப்படுகின்றன. பௌதீக சூழலும், சமூக சட்டங்களும் வெளிச் சூழலாகவும், ஒரு மனிதனின் உள் திறன் (Inter capacity) உள் சூழலாகவும் தல்கொட் பார்சனால் விளக்கப்படுகின்றது.

**ஈ. வழிவகைகள் (Means)**

ஒரு இலக்கை எவ்வாறு அடைந்து கொள்ளலாம் என்பதற்கான சாதனங்களை ஒருவர் தயார் செய்து கொள்ள வேண்டும். வித்தியாசமான சூழல் வேறுபட்ட வழிவகைகளை வேண்டி நிற்கும். எளிமையான பேச்சு (Speech) சிலபோது போதுமானதாக இருக்கும். பேச்சு மட்டும் சிலபோது போதாது. மக்களுக்கு கல்வியூட்ட வேண்டிய தேவை ஏற்படும் போது தொடர் செயற்பாடுகள் அங்கு தேவைப்படும்.

**13.4 சமூக செயலின் வகைகள்**

மெக்ஸ் வெபர் சமூக செயலின் நான்கு வகைகள் குறித்து விளக்குகிறார்.

**அ. இலக்குடனான தர்க்க ரீதியான செயல் ( Zweck rational action or rational action in relation to goal)**

இது இலக்குடன் கூடிய தர்க்க ரீதியான செயலாகும். இதனை பரடோவின் (Pareto) தர்க்க செயலுடன் (Logical action) ஒப்பிடலாம். இச் செயலை செய்பவர் இலக்கையும், அதனை அடையும் வழிகளையும் கொண்டிருப்பார். சத்திர சிகிச்சை செய்யும் ஒரு சேர்ஜனின் செயல், ஆற்றை கடப்பதற்காக பாலம் கட்டும் ஒரு

பொறியியலாளனின் செயல் போன்றவை இதற்கு உதாரணங்களாகும்.

### ஆ. விழுமியத்துடன் கூடிய பகுத்தறிவு ரீதியான செயல் (Wert rational action or rational action in relation to value)

இங்கு அடைய விரும்பும் இலக்கிற்கு பின்னால் ஒரு விழுமியம் காணப்படும். மூழ்கும் கப்பலிலே உள்ள ஒரு மாலுமி தன்னைக் காப்பாற்றிக் கொள்ள சந்தர்ப்பம் இருந்தும் எல்லோருடனும் சேர்ந்து அவனும் மூழ்கின்றான். அடுத்தவர் பார்வைக்கு இது பகுத்தறிவற்ற செயலாக தோன்றலாம். ஆனால் அவனது விழுமியம் அவ்வாறு செய்யும் படி அவனைத் தூண்டுகின்றது.

### இ. உணர்வு சார் செயல்கள் (Affective or emotional action)

மனதின் ஆட்கொள்ளலுக்கு அகப்பட்டு உடனடியாக தோற்றம் பெறும் செயல் இதுவாகும். பகுத்தறிவை விட மனவெழுச்சிகளே இச் செயல்களில் ஆதிக்கம் பெற்றிருக்கும். கோபத்தின் காரணமாக தனது பிள்ளைக்கு அடிக்கும் தாயின் செயலையும், பரீட்சை தோல்வி காரணமாக தற்கொலை செய்ய முயலும் ஒரு மாணவனின் செயலையும் இதற்கு உதாரணங்களாக கூறலாம்.

### ஈ. மரபார்ந்த செயல் (Traditional action)

இங்கு இலக்கு, விழுமியம், மனவெழுச்சி போன்றவற்றினால் செயல்கள் தோன்றாமல் வழக்காறுகள், நம்பிக்கைகள் போன்றவை காரணமாக தோற்றம் பெறும். வகுப்பறையினுள் நுழையும் ஆசிரியரைக் கண்டு எழுந்து நிற்கும் மாணவனின் செயல் இதற்கு உதாரணமாகும்.

**சுருக்கம்**

- ✓ இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட செயற்பாட்டாளர்கள் ஈடுபாடுவதனையே சமூக அமைப்பு எனும் பதம் குறிக்கின்றது.
- ✓ இலக்குடன் கூடிய மனித நடத்தையே சமூக செயலாகும்.

**பயிற்சி வினாக்கள்**

01. சமூக அமைப்பு எனும் எண்ணக்கருவை வரையறை செய்க.
02. சமூக செயலையும் அதன் வகைகளையும் உதாரணங்களுடன் விளக்குக.

**திறவுச் சொற்கள்**

சமூக அமைப்பு, சமூக செயல், செயலி, இலக்கு, வழிவகைகள், பொறிமுறை

**உசாத்துணை நூல்கள்**


1. அய்யூப், எஸ்.எம். (2013). *சமூகவியல் அடிப்படை எண்ணக்கருக்கள்*. ஒலுவில்: சமூக விஞ்ஞானங்கள் துறை, இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.
2. தமிழ் பல்கலைக்கழகம். (1991). *வாழ்வியற் களஞ்சியம் தொகுதி-08.* தஞ்சாவூர்: தமிழ் பல்கலைக்கழகம்.
3. Giddens Anthony. (2005). *Sociology*. Cambridge: Polity Press.
4. Haralambos, M., & Heald R.M. (2004). *Sociology: Themes and perspectives.* London: Harper Collins Publishers Limited.
5. Landis Paul, H. (1990). *Sociology: An introduction*. Massachusetts: Ginn and Company a Xerox Education Company.
6. Rao Shankar. (2002). *Sociology*: *Primary principles.* New Delhi: S. Chand and Company Ltd.

# அத்தியாயம் - 14

# சமூகமாற்றம்

**உள்ளடக்கம்**

14.1 சமூக மாற்றம்
14.2 சமூகமாற்றம்: பண்புகள், இயல்புகள்
14.3 பண்பாட்டுமாற்றமும் சமூகமாற்றமும்
14.4 சமூக மாற்றத்தின் வகைகள்
14.5 சமூகமாற்றம்: காரணிகள்
14.6 சமூகமாற்றத் தடைகள்

**அத்தியாயச் சுருக்கம்**

மாற்றம் என்பது உலகம் முழுவதும் காணப்படும் ஒரு தோற்றப்பாடாகும். மாற்றம் என்பது இயற்கையின் விதி (Law of nature). சமூகமும் கூட இயக்கம் கொண்டதாக காணப்படுவதால் எல்லா நேரங்களிலும் எல்லா சமூகங்களிலும் சமூக மாற்றம் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றது. இவ்வத்தியாயம் சமூகமாற்றம், சமூகமாற்றக் காரணிகள் மற்றும் சமூகமாற்றத் தடைகள் குறித்துப் பேசுகின்றது.

**அத்தியாய நோக்கம்**

சமூகமாற்றத்தையும் சமூகமாற்றத்தை தூண்டும் மற்றும் தடுக்கும் காரணிகளையும் மாணவர்களுக்கு விளக்கிக்காட்டுவதே இவ்வத்தியாயத்தின் பிரதான நோக்கமாகும். மேலும் சமூகத்தில் காணப்படும் சமூக மாற்றங்களை அடையாளம் காட்டுவதும் இவ்வத்தியாயத்தின் துணை நோக்கமாகும்.

**கற்றல் பெறுபேறுகள்**

இவ்வத்தியாயத்தை கற்பதன் மூலம் மாணவர்கள்,

- ✓ சமூகமாற்றம் தொடர்பான அடிப்படை அறிவினை பெற்றுக்கொள்வார்கள்.
- ✓ சமூக மாற்றத்தினுடைய பண்புகள் மற்றும் இயல்புகள் குறித்து அறிந்துகொள்வார்கள்.
- ✓ சமூக மாற்றக் காரணிகள் மற்றும் சமூக மாற்றத்திற்கான தடைகள் தொடர்பாக அறிவை விருத்தி செய்து கொள்வார்கள்.


**14.1 அறிமுகம்**

மாற்றம் என்பது எல்லா இடங்களிலும் இடம்பெறும் ஒரு தோற்றப்பாடாகும். பழங்கால கிரேக்க தத்துவஞானி ஹெராக்ளிட்டஸ் ஒரு மனிதன் ஒரே நதியில் இரண்டுமுறை அடியெடுத்து வைப்பது சாத்தியமில்லை. ஒரு பாதத்தை நதியில் வைத்து விட்டு மறு பாதத்தை வைப்பதற்கிடையிலான இடைவெளியில் மனிதனும் மாறிவிடுகின்றான்; நதியும் மாறிவிடுகின்றது எனக் கூறுகின்றார். முதல் பாதத்தை வைக்கும் போது ஆற்றில் இருந்த நீர் மறு பாதத்தை வைக்கும் போது வேறு எங்கே ஓடிப்போய்விடுகின்றது. அதேபோல்தான் முதல் எட்டை வைக்கும் போது இருந்த மனிதன் மறு எட்டை வைக்கும்போது முதுமையை நோக்கி சற்று பயணித்திருப்பான். ஹேராக்ளிட்டனின் இந்தத் தத்துவம் மாற்றத்தின் யதார்த்தத்தை (Reality of change), நிலையற்ற இருப்பை (Impermanence of being) மற்றும் அனைத்தும் மாறிக்கொண்டிருக்கின்றது எனும் கருத்தை வெளிப்படுத்துகின்றது.

ஒரு சூழ்நிலையில் (Situation) அல்லது பொருளில் (Object) காலப்போக்கில் ஏற்படும் எந்த திருத்தமும் (Alternation) வேறுபடும் (Difference) அல்லது மாற்றியமைத்தலும் (Modification) மாற்றம் எனப்படும்.

சமூகமாற்றம் எனும் சொல் மனித இடைவினைகள் (Human interactions) மற்றும் பரஸ்பர உறவுகளில் ஏற்படும் மாற்றங்களைக் குறிப்பிடப் பயன்படுத்தப்படுகின்றது.

சமூகம் என்பது சமூக உறவுகளின் ஒரு வலைப்பின்னலாகும். எனவே சமூகமாற்றம் என்பது சமூக உறவுகளின் அமைப்பில் ஏற்படும் மாற்றத்தை வெளிப்படையாகவே குறிக்கின்றது. சமூக செயன்முறைகள், சமூக இடைவினைகள் மற்றும் சமூக ஒழுங்கமைப்பு (Social process, social interaction and social organizations) ஆகியவற்றின் அடிப்படையிலேயே சமூக உறவுகள் புரிந்து கொள்ளப்படுகின்றன. இதனால் சமூக மாற்றம் எனும் சொல் சமூக இடைவினை, சமூக செயன்முறை மற்றும் சமூக ஒழுங்கமைப்பு ஆகியவற்றில் ஏற்படும் விருமபத்தக்க மாறுபாடுகளை (Desirable variations) விபரிக்கப் பயன்படுத்தப்படுகின்றது.



**வரைவிலக்கணங்கள்**

01. சமூக செயன்முறைகள், சமூக பாங்கு (Social pattern), சமூக இடைவினை அல்லது சமூக ஒழுங்கமைப்பின் எந்தவொரு அம்சத்திலுமுள்ள மாறுபாடுகள் (Variations) அல்லது மாற்றியமைத்தலை (Modification) விபரிக்க சமூக மாற்றம் எனும் சொல் பயன்படுத்தப்படுவதாக எம். ஈ. ஜோன்ஸ் குறிப்பிடுகின்றார்.

02. சமூக ஒழுங்கமைப்பில் அதாவது சமூகத்தின் கட்டமைப்பிலும் தொழிற்பாடுகளிலும் ஏற்படும் திருத்தங்களே சமூக மாற்றம் என்பதன் மூலம் நாடப்படுவதாக கிங்ஸ்லி டேவிஸ் குறிப்பிடுகின்றார்.

03. புதியதொரு நாகரீக உணர்வு (Fashion) அல்லது பாணி (Mode) என சமூகமாற்றம் வரையறுக்கப்படலாம். இது மக்களின் வாழ்வை அல்லது சமூகத்தின் செயல்பாட்டை உருமாற்றம் (Modification) செய்கின்றது. அல்லது பழையதை இடமாற்றம் செய்கின்றது என எச். ரீ. முஜும்தார் குறிப்பிடுகின்றார்.

04. மனிதனால் உருவாக்கப்பட்ட வாழ்க்கை நிலமைகளில் ஏற்படும் மாற்றங்கள், மனிதர்களின் மனப்பான்மைகள் மற்றும் நம்பிக்கைகளில் ஏற்படும் மாற்றங்கள் மனித கட்டுப்பாடுகளுக்கு அப்பால் பொருட்களின் உயிரியல் மற்றும் பௌதீக இயல்புகளுக்கு கொண்டு செல்லும் மாற்றங்கள் பேச் மற்றும் மகில்வரால் சமூக மாற்றமாக விளக்கப்படுத்தப்படுகின்றன.

05. சமூக மாற்றத்தை பண்பாட்டு மாற்றமாக மானிடவியல் அறிஞர்களும் மனப்பான்மையில் ஏற்படும் மாற்றமாக

உளவியல் அறிஞர்களும் பார்க்கின்றனர். எனினும் சமூகமாற்றம் என்பது சமூக உறவில் ஏற்படும் மாற்றமே என சில அறிஞர்கள் கூறுகின்றனர் (வாழ்வியல் களஞ்சியம், தொகுதி - 08, 1991).

### 14.2 சமூக மாற்றம்: பண்புகள், இயல்புகள்

சமூகமாற்றம் தொடர்ந்தேச்சியான ஒரு நிகழ்வாகும். சமூகத்தில் எண்ணிலடங்காத மாற்றங்கள் இடம்பெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. இந்த மாற்றங்கள் தவிர்க்க முடியாதவை. சமூக மாற்றம் வெற்று வெளியில் (Vacum) இடம்பெறுவதில்லை. அது ஒரு புவியியல் அல்லது பௌதீக மற்றும் பண்பாட்டு நிலைமைகளில்தான் இடம்பெறுகின்றது. எனவே சமூக மாற்றம் சூழலுடன் (Environmental) சம்மந்தப்பட்டது எனலாம்.

பல காரணிகளின் இடைவினையின் விளைவாகவே சமூக மாற்றம் இடம் பெறுகின்றது. பௌதீக, உயிரியல், தொழிநுட்ப மற்றும் பண்பாட்டுக் காரணிகள் பல சேர்ந்து மாற்றத்தை தூண்டுகின்றது.

வாழ்வின் ஒரு கோணத்தில் தோன்றும் ஒரு மாற்றம் தொடராக பல மாற்றங்களை தோற்றுவிக்கின்றது. பெண்களின் உரிமை, அந்தஸ்த்து போன்றவற்றில் தோன்றிய மாற்றங்கள் தொடரான பல மாற்றங்களை வீடு, குடும்ப உறவு மற்றும் பொருளாதாரம் போன்றவற்றில் ஏற்படுத்தி இருக்கின்றன.

சமூகமாற்றம் திட்டமிடப்பட்டதாகவோ (உதாரணமாக மகாவலி அபிவிருத்தி திட்டம்), திட்டமிடப்படாததாகவோ (உதாரணமாக இயற்கை அனர்த்தங்களான பஞ்சம், புவி நடுக்கம், சுனாமி போன்றவற்றால் ஏற்படும் மாற்றம்) இருக்கலாம்.

சமூகமாற்றங்கள் உடனடியான விளைவை கொடுக்கும் அதேவேளை வேறு சில சமூக மாற்றங்கள் ஆண்டுகள் பலதை அல்லது தசாப்தங்களை விளைவுகளை தோற்றுவிக்க எடுக்கின்றன.

### 14.3 பண்பாட்டு மாற்றமும் சமூகமாற்றமும்

சமூகத்தின் கட்டமைப்பிலும், தொழிற்பாட்டிலும் இடம்பெறும் மாற்றம் சமூக மாற்றமாக கொள்ளப்படுவதனால் பண்பாட்டு மாற்றத்தின் (Cultural change) ஒரு பகுதியாக சமூகமாற்றம் கொள்ளப்படுகின்றது. பண்பாட்டின் பகுதிகளான கலை, விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் தத்துவம் போன்றவற்றுள் தோன்றும் மாற்றங்களையும் சமூக ஒழுங்கமைப்பில் தோன்றும் மாற்றங்களையும் பண்பாட்டு மாற்றம் எனும் சொல் குறித்து நிற்கின்றது என கிங்ஸ்லி டேவிஸ் குறிப்பிடுகின்றார். மேலும் அவர் பண்பாட்டு மாற்றம் மிகவும் விரிவானது அதன் ஒரு பகுதிதான் சமூக மாற்றம் எனவும் கூறுகிறார்.

அனைத்து சமூக மாற்றமும் பண்பாட்டு மாற்றமாகும். ஆனால் அனைத்து பண்பாட்டு மாற்றமும் சமூக மாற்றமாக இருக்க வேண்டும் எனும் அவசியமில்லை. பண்பாட்டு மாற்றமானது சமூக மாற்றமாக கொள்ளப்பட வேண்டுமானால் அது மானிட உறவுகள் மற்றும் சமூக ஒழுங்கமைப்புக்களை பாதிக்க வேண்டும். அதன் விளைவாக சில மாறுதல்களும் அவற்றிலே நிகழ வேண்டும். இசை, ஓவியம், கவிதை மற்றும் நாடகம் போன்றவற்றில் தோன்றும் புதிய போக்குகள் தூய பண்பாட்டு மாற்றத்திற்கான உதாரணங்களாகும். இவை சமூகமாற்றங்கள் என அழைக்கப்படுவதில்லை. காரணம் அவை இருக்கும் மானிட இடைவினைகள், சமூக அமைப்பு மற்றும் சமூக ஒழுங்கமைப்புக்கள் போன்றவற்றில் தாக்கங்களை எவ்வகையிலும் ஏற்படுத்துவதில்லை.

ஆனால் முதலாளித்துவ சமூகத்தில் தோற்றம் பெற்ற தொழிலாளர் சங்கம் மற்றும் பொதுவுடமையின் தோற்றம் ஆகிய இரண்டும் சமூக மாற்றமாக கொள்ளப்படுகின்றன. ஏனெனில் மானிட உறவுகள் மற்றும் சமூக ஒழுங்கமைப்புக்கள் ஆகியவற்றில் தொடரான பல மாற்றங்களை இவை ஏற்படுத்தின. முதாலாளி–தொழிலாளி, ஆட்சியாளர்-ஆளப்படுவோர் போன்றோர் உறவில் சடுதியான மாற்றங்கள் பலதை இவை ஏற்படுத்தின. பொருளாதார ஒழுங்கமைப்புக்கள், நிர்வாக முறை, சட்ட யாப்பு, பொருளாதார

கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சிநிரல்கள் பலவற்றிலும் எண்ணற்ற மாற்றங்களை ஏற்படுத்தின. நாளாவட்டத்தில் இவை மக்களின் வாழ்வு முறையிலும் மாற்றங்களை ஏற்படுத்தின. இதனால் இவை பண்பாட்டு மாற்றம் எனவும் அழைக்கப்படுகின்றன. ஏனெனில் எல்லா சமூக மாற்றங்களும் பண்பாட்டு மாற்றங்கள்தான்.

**14.4 சமூக மாற்றத்தின் வகைகள்**

பண்பாட்டு மானிடவியலாளர்கள் டேவிட் எ.ஃப் அபெர்லின் நான்கு வகையான சமூக மாற்றம் குறித்து கருத்துத் தெரிவிக்கின்றனர்.

**01. மாற்று சமூக மாற்றம் (Alternative social change)**

இது தனிப்பட்ட நடத்தையின் சிறிய அம்சங்களை மாற்ற முனைகின்றது. வாகனம் ஓட்டும் போது குறுஞ்செய்தி அனுப்புவதை எதிர்த்து செய்யப்படும் பிரச்சாரத்தை இதற்கு உதாரணமாக கூறலாம்.

**02. மீட்டுக்கொள்கின்ற சமூக மாற்றம் (Redemptive social change)**

தனிப்பட்ட நபருக்குள் வியத்தகு மாற்றங்களைக் கொண்டுவர இது முயல்கின்றது. சமயத்தின் பரவல் இதற்கு உதாரணமாகும். அதேபோல் போதைவஸ்த்துக்கு ஆட்பட்டவரை மீட்டெடுக்கும் நிகழ்ச்சிகள் இதற்கு மற்றுமொரு உதாரணமாகும்.

**03. சீர்திருத்த மாற்றம் (Reformative social change)**

இது குறிப்பிட்ட மாற்றத்தை பரந்த அளவில் ஏற்படுத்த முயல்கின்றது. ஒரே பாலின தம்பதிகளுக்கான (Same-sex couples) திருமண உரிமைகளை பெறுவதற்கான இயக்கம் அதற்கு உதாரணமாகும்.

**04. புரட்சிகர சமூக மாற்றம் (Revolutionary social change)**

இது பெரிய அளவில் வியத்தகு மாற்றங்களை ஏற்படுத்த முயல்கின்றது. பிரெஞ்சுப் புரட்சி இதற்கு உதாரணமாகும்.

### 14.5 சமூகமாற்றம்: காரணிகள்

சமூகமாற்றம் ஒரு சிக்கலான தோற்றப்பாடாகும். காரண - காரிய தொடர்பு சமூகமாற்றத்தில் எப்போதும் தெளிவாக இருக்கும் எனக் கூற முடியாது. சமூக உலகில் ஒற்றைக் காரணம் ஒற்றை விளைவை ஏற்படுத்துவதில்லை. ஒரு விளைவை பல காரணிகள் சேர்ந்து ஏற்படுத்திவிடலாம்.

**01. சமூகமாற்றத்தை தூண்டும் உள்ரீதியான காரணிகள் (Internal causes of social changes)**

**அ. பிளவுகளும் முரண்பாடுகளும் (Strain and conflicts)**

விருப்புக்களின் முரண்பாடு (Conflict of interests) எல்லா சமூக அமைப்புகளிலும் ஓரளவு காணப்படுகின்றது. முரண்பாடு இல்லாத சமூகம் என்பது கனவாகவே இருக்கும். முரண்பாட்டை தீர்த்து வைக்கும் முயற்சியில் ஈடுபடும் போது சில மாற்றங்கள் தோன்றுவது தவிர்க்க முடியாத ஒன்று.

**ஆ. சமூகப் பிரச்சினை (Social problems)**

சிறுவர் நெறிபிறழ்வு, வேலையின்மை, விபச்சாரம், அதிக சனத்தொகை மற்றும் வறுமை போன்ற சமூகப் பிரச்சினைகள் சில உள்ரீதியான குறைபாடுகளால் (Internal deficiencies) தோன்றுகின்றன. இப் பிரச்சினைகளை தீர்த்து வைக்கும் போது நிலவும் சமூக ஒழுங்கை மாற்ற வேண்டிய தேவை ஏற்படுவதால் சில சமூக மாற்றங்கள் தவிர்க்க முடியாமல் தோன்றுகினறன. உதாரணமாக சனத்தொகை வளர்ச்சியை கட்டுப்படுத்த வேண்டும் எனில் குடும்ப கட்டுப்பாடு குறித்து மக்களுக்கு அறிவுறுத்த வேண்டும். இது குடும்பம், திருமணம், விழுமியம் மற்றும் ஒழுக்கம் போன்றவற்றில் தாக்கங்களை ஏற்படுத்துகின்றன.

### இ. புரட்சியும், எழுச்சியும் (Revolution and upheavals)

அமெரிக்க புரட்சி, பிரஞ்சுப் புரட்சி மற்றும் ரஸ்யப் புரட்சி போன்றவை ஆழ ஊடுருவிப் பாயும் பல மாற்றங்களை சமூகத்தில் ஏற்படுத்தி இருக்கின்றன. அதேபோல் அரபு வசந்தம் பாரிய பல மாற்றங்களை தேசிய அளவிலும் சர்வதேச அளவிலும் ஏற்படுத்தியிருக்கின்றன.

### ஈ. பண்பாட்டு மாற்றம் (Cultural Change)

பண்பாட்டிலே தோன்றும் கண்டுபிடிப்புக்கள் (innovations) சமூகமாற்றத்தை தூண்டிவிடுகின்றன.

## 02. சமூகமாற்றத்தை தூண்டும் சமூக சூழல், மற்றும் சமூகம் அல்லாத சூழல் ஆகியவற்றின் தாக்கம் (The impact of social and non-social environment)

### அ. சமூக சூழலின் தாக்கம்

அரசியல் கட்டமைப்பில் தோன்றும் மாற்றங்களாலும் இராணுவப் படையெடுப்புக்கள், குடிவரவு மற்றும் குடியகழ்வு போன்ற சமூக சூழல்களாலும் சமூக கட்டமைப்பில் பல அதிர்வுகள் ஏற்பட்டு சமூக மாற்றங்கள் ஏற்படுகின்றன.

### ஆ. சமூகம் அல்லாத சூழலின் தாக்கம்

மண்ணரிப்பு, காடழிப்பு மற்றும் இயற்கை வளங்கள் மீதான அபரிமிதமான அத்துமீறல் போன்ற மானிட நடவடிக்கைகளால் தோன்றும் விளைவுகளும் வெள்ளம், பஞ்சம், புவியதிர்ச்சி, சூறாவளி, எரிமலை, சுனாமி போன்ற இயற்கை அழிவுகளால் தோன்றும் விளைவுகளும் கூட சமூக மாற்றங்களைக் கொண்டு வந்துவிடுகின்றன.

### 14.6 சமூக மாற்றத் தடைகள்

சமூக மாற்றத்திற்கு தடைபோடும் காரணிகள் எல்லா சமூகங்களிலும் காணப்படுகின்றன. தோன்றும் மாற்றங்களை கேள்வியின்றி தடைபோடாமல் எந்த சமூகமும் எடுத்த எடுப்பில் ஏற்றுக் கொள்வதில்லை. சிறுவயதுத் திருமணம், உடன்கட்டை ஏறுதல் மற்றும் தீண்டாமை போன்ற விடயங்களில் இந்தியாவில் தோற்றம் பெற்ற மாற்றங்கள் பல போராட்டங்களின் பின்பே அமுலுக்கு வந்தன. பெண் குழந்தைகளை உயிரோடு புதைத்தல், கட்டுப்பாடற்ற பாலியல் சுதந்திரம் மற்றும் பெண்களை வன்முறைக்குட்படுத்தல் போன்ற அரேபியாவில் நிலவிய சமூகத் தீங்குகள் முஹம்மது நபியின் பல போராட்டங்களின் பின்பே மாறத் தொடங்கின. 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில்தான் பிரித்தானியாவில் பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமை கிடைத்தது. தொடரான போராட்டங்கள் பல இதற்கு தேவைப்பட்டன. சமூக மாற்றத்தை பல காரணிகள் தடுக்கின்றன. அவற்றுள் முக்கியமானவை பின்வருமாறு.

**அ) புதிய கண்டுபிடிப்புக்களின் பற்றாக்குறை (Lack of new inventions)**

புதிய கருவிகள், புதிய தொழில்நுட்பங்கள், புதிய கருத்தியல்கள் மற்றும் திட்டங்கள் போன்றவற்றின் கண்டுபிடிப்புக்கள் சமூகமாற்றத்தை கொண்டு வருகின்றன. எனினும் கண்டுபிடிப்புக்களின் தோற்றம் மெதுவாக இருக்கும் போதும் கண்டுபிடிப்பின் மீதான ஆர்வம் குன்றிக் காணப்படும் போதும் மாற்றங்கள் குறைவாகவே நிகழும்.

**ஆ) புதிய கண்டுபிடிப்புக்களை ஏற்பதில் காணப்படும் தயக்கம் (Rejection or non-acceptance of new inventions)**

புதிய கண்டுபிடிப்புக்களுக்கு எதிரானதொரு மனோநிலையை மக்கள் ஏற்படுத்திக் கொள்ள முனையும் போது மாற்றங்கள் தோன்றும் வேகம் தடைப்படும். வில்லியம் ஹார்வேயின் குருதியோட்டக் கோட்பாடு, கலிலியோவின் கோள்களின் அமைப்பு மற்றும் புவியின்

அசைவு குறித்த கோட்பாடுகள் ஆரம்பத்தில் எதிர்க்கப்பட்டமையை இதற்கு உதாரணங்களாகக் கூறலாம்.

**இ) புதிய கண்டுபிடிப்புக்களின் பூரணமற்ற தன்மை (Imperfection of new inventions)**

உடைந்துவிடும் மற்றும் பழுது பார்க்க முடியாது போய்விடும் என்பது போன்ற எண்ணமும், ஒரு பொருள் புதிதாக கண்டுபிடிக்கப்படும் போது அதில் காணப்பட்ட இயல்பாக தோன்றும் பூரணமின்மையும் அவற்றை ஏற்கும் மனோநிலையிலிருந்து மக்களை தூரப்படுத்துகின்றன.

**ஈ) புதியவை மீதான அச்சம் (Fear towards the new)**

பழமை மீதுள்ள காதலும் புதுமை மீதுள்ள பயமும் கூட மாற்றத்தை தள்ளி வைக்கின்றன. ஆங்கில மருத்துவம் மற்றும் கல்வி போன்றவற்றை கீழைத்தேய மக்கள் இலகுவில் ஏற்கவில்லை. காலங்கள் பல கடந்த பின்பே மெதுவாக ஏற்கத் தொடங்கினர்.

**உ) மரபுகள் மற்றும் பழமை மீதுள்ள பக்தி (Traditions and reverence for the past)**

உணர்வு ரீதியாகவும் மனோரீதியாகவும் மக்கள் பழமை பேணுபவர்களாகவும் அதன் மீது மரியாதை கொண்டவர்களாகவும் காணப்படும் போது மாற்றங்களுக்கு அங்கே இடமில்லாமல் போகின்றன.

**ஊ) அறிவின்மை (Ignorance)**

மாற்றங்களையும் புதியனவற்றையும் மக்கள் தங்களது அறியாமையின் காரணமாக எதிர்க்கின்றனர். இரும்புக்கலப்பை (Iron plough) ஆரம்பத்தில் அமெரிக்காவிலே ஏற்கப்படவில்லை. நோய்க்கிருமிகள் குறித்த கோட்பாடு ஆரம்பத்தில் முற்றாக நிராகரிக்கப்பட்டது. சமூகக் கண்டுபிடிப்புக்கள் (Social inventions)

ஏற்கப்பட இன்னும் நீண்ட காலம் தேவைப்படுகின்றன. இவை மாற்றங்களை தூர வைக்கின்றன.

**எ) பழக்கங்கள் (Habits)**

பழக்கங்களும் சமூக மாற்றத்தை தடுக்கும் காரணங்களுள் முக்கியமான ஒன்று. பழக்கங்கள் மற்றும் வழக்கங்களால் (Customs) கட்டுண்டவர்களாக மக்கள் இருக்கும் போது அவற்றில் தோன்றும் மாற்றங்களை அவர்கள் ஏற்கமாட்டார்கள்.

**ஏ) பொருளாதார சமமின்மையும் தடங்கல்களும் (Economic disparities and difficulty)**

ஏழை - பணக்காரன் இடையே காணப்படும் பாரிய இடைவெளியும் பொருளாதார போதாமைகளும் சமூக மாற்றத்திலே குறுக்கறுக்கின்றன. பொருளாதார பிரச்சினைகளால் அவதிப்படும் மக்கள் சமூக மாற்றத்தை ஏற்காமல் இருப்பதோடு அதனை ஏற்பதற்கு பொருளாதார ரீதியாக தகைமையற்றவர்களாகவும் காணப்படுவார்கள்.

**ஐ) புத்திஜீவித்துவ சோம்பேறித்தனமும் நிர்வாக ரீதியான குறைபாடுகளும் (Intellectual laziness and administrative defects)**

புத்தாக்கம் (Creativities), இயங்கியல் (Dynamic), தர்க்கம் (Rationalization) போன்ற பண்புகள் குறிப்பிட்டளவு காணப்படும் போதுதான் பழைமை கைவிடலும் புதியவற்றை ஏற்றலும் ஒரு சமூகத்தில் நடைபெறும். ஆனால் மக்கள் அப்படி இருப்பதில்லை என்பதனாலும், நிர்வாகத்தினர் பழைமை பேண விரும்புவதாலும் சமூக மாற்றங்கள் தோன்றும் வீதம் குறைவாகக் காணப்படும்.

**ஒ) சுயநலமிகள் வலு (Power of vested interests)**

தமது சுய இருப்புக்கு மற்றும் விருப்புக்கு எதிராக அமையும் என எண்ணும் தனிநபர்கள் சமூக மாற்றங்களை எதிர்க்கின்றனர்.

தொழிலாளிகளின் உரிமைகள் சட்டமாக்கப்படுவதை முதலாளிகள் எதிர்த்து நிற்பதனை இதற்கு உதாரணமாகக் கூறலாம்.

எனினும் எல்லா தடைகளும் தீங்கானவை என ஒரே தடவையில் சொல்லிவிடவும் முடியாது. மாற்றத்தை தடுக்கும் தடைகளில் சில சாதகமான பக்கங்களையும் கொண்டிருக்கின்றன. மானிட சமூகத்துக்கு நன்மையை அள்ளிக் குவிக்கும் கண்டுபிடிப்புகள் ஏற்கப்படவேண்டியவைதான் ஆனால் அநீதியையும், தீங்கையும் ஏற்படுத்தும் அணுஆயுதங்கள் கைவிடப்பட வேண்டியவை என்பதில் இரு கருத்துக்கு இடமில்லை.

**சுருக்கம்**

- ✓ எல்லா இடங்களிலும் எல்லா நேரங்களிலும் மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன. சமூக மாற்றம் குறித்து வேறுபட்ட வரையறைகள் காணப்படுகின்றன. சமூக உறவில் ஏற்படும் மாற்றம் சமூக மாற்றம் என சமூகவியலாளர்கள் வரையறுக்கின்றார்கள்.
- ✓ சமூக மாற்றத்தை தூண்டுகின்ற உள்ரீதியான காரணங்கள் காணப்படுகின்றன. அதேபோல் சமூக மாற்றத்தை தூண்டும் சமூக சூழல் மற்றும் சமூகம் அல்லாத சூழல்களும் காணப்படுகின்றன.

**பயிற்சி வினாக்கள்**

01. சமூக மாற்றம் எனும் பதத்தை வரையறை செய்வதோடு சமூக மாற்றமும் பண்பாட்டு மாற்றமும் எவ்வாறு வேறுபடுகின்றது என விளக்குக.
02. சமூக மாற்றத்தைத் தூண்டுகின்ற காரணிகளை தெளிவுபடுத்துக.
03. எக்காரணங்களால் சமூக மாற்றம் தடைப்படுகின்றது என ஆராய்க.
04. இலங்கை சமூகத்தில் அவதானிக்கக் கூடிய சமூக மாற்றங்களை ஆராய்க.

**திறவுச் சொற்கள்**

சமூக பாங்கு, மாறுபாடுகள், மாற்றியமைத்தல், நாகரீக உணர்வு

**உசாத்துணை நூல்கள்**


1. அய்யூப், எஸ்.எம். (2013). *சமூகவியல் அடிப்படை எண்ணக்கருக்கள்*. ஒலுவில்: சமூக விஞ்ஞானங்கள் துறை, இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.
2. தமிழ் பல்கலைக்கழகம். (1991). *வாழ்வியற் களஞ்சியம் தொகுதி-08*. தஞ்சாவூர்: தமிழ் பல்கலைக்கழகம்.
3. Giddens Anthony. (2005). *Sociology*. Cambridge: Polity Press.
4. Haralambos, M., & Heald R.M. (2004). *Sociology: Themes and perspectives*. London: Harper Collins Publishers Limited.
5. Landis Paul, H. (1990). *Sociology: An introduction*. Massachusetts: Ginn and Company a Xerox Education Company.
6. Rao Shankar. (2002). *Sociology*: *Primary principles*. New Delhi: S. Chand and Company Ltd.

**உசாத்துணை நூல்கள்**


1. அய்யூப், எஸ்.எம். (2013). *சமூகவியல் அடிப்படை எண்ணக்கருக்கள்*. ஒலுவில்: சமூக விஞ்ஞானங்கள் துறை, இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.
2. அய்யூப், எஸ். எம். (2020). *சமூக நிறுவனங்கள்*. ஒலுவில்: சிடிபிஎல், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.
3. பக்தவத்சலபாரதி. (1999). *பண்பாட்டு மானிடவியல்*. சென்னை: மணிவாசகம் பதிப்பகம்.
4. கருணாநிதி, மா. (2008). கல்விச் சமூகவியல். கொழும்பு- சென்னை: குமரன் புத்தக இல்லம்.
5. தமிழ் பல்கலைக்கழகம். (1991). *வாழ்வியற் களஞ்சியம் தொகுதி-08*. தஞ்சாவூர்: தமிழ் பல்கலைக்கழகம்.
6. யோதிலிங்கம், சி. அ. (2007). *அரசறிவியல் ஓர் அறிமுகம்.* கொழும்பு- சென்னை: குமரன் புத்தக இல்லம்.
7. Baron, A. Robert., & Byrne Donn. (1995). *Social Psychology: Understanding Human Behavior* (7th ed). New Delhi: Prentice, Hall of India Private.
8. Baron, R. A., & Byrne, D. (1995). *Social Psychology: Understanding Human Interaction*. New Delhi: India Private Limited.
9. Bert, N., & Adams Sydie, R.A. (2000). *Classical sociological theory.* London: Pin Forge Press.
10. Bottomore Tom., & Rubel. (1963). *Karl Marx: selected writings in sociology and social philosophy*. Harmondsworth: Penguin.
11. Erikson, T.H. (2001). *Small places, large issues. An introduction to social and cultural anthropology*. London: Pluto Press.

12. Erikson, T.H. (2001). *Small places, large issues. An introduction to social and cultural anthropology*. London: Pluto Press.
13. Gells Richard Levince Ann. 1999s. *Sociology: An Introduction*. New York. McGraw Hill Inc.
14. Giddens Anthony. (2005). *Sociology*. Cambridge: Polity Press.
15. Haralambos, M., & Heald R.M. (2004). *Sociology: Themes and perspectives.* London: Harper Collins Publishers Limited.
16. Hess, B.B., Markson, E.W., & Stein. (PJ 2000). *Sociology*. New York. Macmillan Publishing Company.
17. Johnson, Harry. (1999). *Sociology: A systematic introduction*. New Delhi: India, Aliede Publishers.
18. Landis Paul, H. (1990). *Sociology: An introduction*. Massachusetts: Ginn and Company a Xerox Education Company.
19. Patrric Mc Neill., & Charles Townley. (1989). *Fundamental Sociology*. Cheltenham: Stanley Tomas Publication.
20. Rao Shankar. (2002). *Sociology*: *Primary principles.* New Delhi: S. Chand and Company Ltd.
21. Ritzer, George. (2003). *Contemporary social theory and its classical roots.* New York: McGraw- Hill Higer education.
22. Uberoi Patrice. (1998). *Family, Kinship and Marriages.* Delhi: Oxford University press Culcutta.